105/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள்

7, ஏப்ரல் 2000 தொகுதி 94
எண் 2

VR11,31 P00
200.94.2
[illegible] 781

வெளியீடு 10-1-2001 Issued 10-1-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 7, 2000 – தொகுதி 94– எண் 2

**Friday the 7th April, 2000 – Volume 94 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

*விலை ரூ. 3.00*] [**Price Rs. 3.00**

D
V211,31 'P00
P00.94.2

222781

105 -
2002

**7-4-2000**

## உள்ளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 305-345

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 346-452

(ஏழாவது மற்றும் எட்டாவது பட்டியல்)

2. தகவல் கோரல்— 452-453

(அ) உறுப்பினர் கொடுத்த அறிவிப்பு 452

(ஆ) அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் தொழில் கல்லூரிகளுக்கான நுழைவுத் தேர்வு நாட்கள் 452-453

3. கவன ஈர்ப்பு—

கன்னியாகுமரி மாவட்ட மீனவர் கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுக்க தூண்டில் வளைவு அமைத்தல் 454-458

4. அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு 458

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி — 459-554

(அ) கோரிக்கை எண் 38—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

(ஆ) கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் | 459, 466, 472, 475, 476-477, 480-482, 485, 492, 493, 494, 495, 496, 504-505, 510-511, 525-547 |
| திரு. க. அழகிரி | 472-483 |
| *திரு. சுப. தங்கவேலன் | 483-489 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 490-496 |
| *திரு. வீ. தமிழ்மணி | 496-500 |
| *திரு. லா. சந்தானம் | 500-504 |
| திரு. கு. மனோகரன் | 505-508 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 508-513 |
| *திரு. சி. அன்பரசன் | 513-516 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 517-521 |
| *திரு. ந. கருப்பண்ண உடையார் | 521-525 |

6. அறிவிப்பு—

உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்குதல் — 521

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— — 555

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 25, பிரமாதி–திருவள்ளுவர் ஆண்டு 2031**
**2000 ஏப்ரல் 7, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்"

ஒருவருக்குக் கிடைக்கும் துணைவர்களால் வலிமை பெருகும்; அவர்களுடன் கூடி ஆற்றிடும் நற்செயல்களால் எல்லா நலன்களும் கிட்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 241. திரு. கே. சுப்பராயன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**241—**

**காவல் நிலையம்**

***23128—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலம் புறக்காவல் நிலையத்தை முழுக் காவல் நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2000 ஏப்ரல் 7

(அ) திருப்பூர் மங்கலத்தில் புறக்காவல் நிலையம் எதுவும் தற்பொழுது செயல்பட வில்லை. ஆனால், கோவையில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் பிறகு, வாகனப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான சோதனைச் சாவடி ஒன்று மட்டும் அங்கு 29-8-1998 முதல் இயங்கி வருகின்றது.

(ஆ) எனவே, இக்கேள்வி எழாது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மங்கலம் பகுதி என்பது ஒரு sensitive place. அதாவது இந்துக்கள், இஸ்லாமியர்கள் அதிகம் உள்ள ஒரு பகுதி. அடிக்கடி பதற்றம் நிறைந்த சமூகச் சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிற பகுதி. அத்தகைய நேரங்களில் திருப்பூரிலிருந்து காவல் துறையினர் வந்து தலையிடுவதற்குள் பல்வேறு விளைவுகள் தோன்றிவிடுகின்றன. எனவே, நீண்டகாலக் கோரிக்கையான திருப்பூர் மங்கலத்தில் ஒரு முழு நேரக் காவல் நிலையம் வேண்டும் என்பது, அவசரமானது, அவசியமானது, தேவையானது. எனவே, இதை மறுபரிசீலனை செய்து, திருப்பூர் மங்கலத்தில் முழு நேரக் காவல் நிலையம் அமைக்க மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்போது சோதனைச் சாவடி என்ற அளவிலே இருந்தாலும்கூட, அது உள்ளூரிலே இருக்கின்ற எல்லோராலும் புறக்காவல் நிலையம் என்றே கருதப்படுகின்றது. அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர்கூட தனது கேள்வியில் சோதனைச் சாவடி என்று குறிப்பிடாமல், புறக்காவல் நிலையம் என்றே குறிப்பிட்டிருக்கின்றார். புறக்காவல் நிலையங்களை காவல் நிலையங்களாக மாற்றுகின்ற அந்தக் கோட்பாடு இந்த அரசால் பின்பற்றப்பட்டு, பல காவல் நிலையங்கள், ஏற்கெனவே புறக்காவல் நிலையங்களாக இருந்தவை, இப்பொழுது மாற்றப்பட்டுள்ளன. புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்படும்பொழுது திருப்பூர் மங்கலத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதையொட்டி ஒரு துணை வினா. திருப்பூர் ஒரு மிகப் பெரிய வணிக மையம் என்கின்ற காரணத்தினாலும், வளர்ந்தும், விரிவடைந்தும்விட்ட ஒரு தொழில் மையம் என்கின்ற காரணத்தினாலும், குற்ற நடவடிக்கைகள் பல்வேறு வழிமுறைகளில் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றன. பல்வேறு மாவட்டங்களிலிருந்து வேலை தேடி வருகின்றவர்கள் அங்கே குவிந்து கிடக்கின்[illegible]த்தினாலும், திருப்பூர் நகரத்தினுடைய infrastructure



2000 ஏப்ரல் 7]

நடைமுறையில் நிலைகுலைந்து போய்விட்ட காரணத்தினாலும் குற்றச் செயல்கள் பாதுகாப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. அவற்றைத் தடுப்பதற்குரிய போதுமான காவலர்கள் எண்ணிக்கை அங்கே இல்லை. எனவே, அந்த நகரத்தினுடைய பிரத்தியேகச் சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு, மாநில அரசு police force-ஐ அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பிரத்தியேகச் சூழ்நிலையை நிச்சயமாகக் கருத்தில்கொண்டு, புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்படும்போது, திருப்பூர் மங்கலத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று சொன்னேன். அதை ஒரு சிறப்புரிமையாகவே எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 242, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**242—**

**உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

***23431—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலையில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உயர்த்தப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலையில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த, துறையிலிருந்து கருத்துரு எதுவும் பெறப்படவில்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தொகுதி, சிறுமலை என்பது ஒரு மலைக் கிராமம். திண்டுக்கல் நகரத்திலிருந்து ஏறத்தாழ 20 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிற இந்த மலைக்

கிராமத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள், தங்களுடைய கல்வியைத் தொடருவதற்கு உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி எதுவும் அங்கே தனியார் அல்லது அரசுத் துறையில் இல்லாத சூழ்நிலையில், இடவசதியும் இல்லாத சூழ்நிலையில், மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய பட்டு வளர்ச்சித் துறை மூலமாக இடம் கேட்கப்பட்டு அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிந்துரை செய்து, அந்த இடம் கொடுப்பதற்கான சூழ்நிலையில், அங்கே இருக்கக்கூடிய அந்தப் பகுதி மக்கள் அந்த வேண்டுகோளை முன்வைத்து, அதற்கான சூழ்நிலையை உருவாக்குவார்களேயானால், மலைக் கிராமம் என்ற அடிப்படையில் அந்தப் பகுதிக்கு ஓர் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டாரத்திலேயும் உள்ள பள்ளிகளுடைய தேவைகளை அந்தந்த வட்டார சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்துவது அவர்களுடைய உரிமை. ஆனால் நிலை உயர்த்தப்படுகிறபோது குறைந்தபட்ச அவசியம் இருக்கிறது என்பதைக் கண்டுகொண்டுதான் நிலை உயர்த்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் பகுத்துத்தான் வழங்க வேண்டியிருக்கிறது. அங்கே, எட்டாவது வகுப்பிலே 18 மாணவர்கள்தான் பயில்கிறார்கள். ஆண்கள் 7 பேர், பெண்கள் 11 பேர். 50 பேர் படிக்கிற இடங்களுக்குத்தான் இப்போது நிலை உயர்த்தி வழங்க முடிகிறது. மேலும், ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் இங்கே செலுத்தப்படவில்லை. பின்னர், தேவைப்படக்கூடிய கட்டடங்களைக் கட்டுவதற்கும் அந்த வட்டாரத்திலே உள்ளவர்களுக்கு வாய்ப்பு இல்லை. எனவே, ஒரு பள்ளிக்கூடத்தை நிலை உயர்த்துகிறபோது, ஆகின்ற செலவுக்கு அது பயனுடையதாக இருக்க வேண்டும் என்கிற நோக்கத்தில் இது ஏற்கப்படக்கூடியதாக தற்போது இல்லை. வருகிற காலத்தில் உருவாகலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 243, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



**243—**

## நடுநிலைப் பள்ளியாக்குதல்

***32900—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, நன்மங்கலம் கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்பப் பள்ளியினை இவ்வாண்டு நடுநிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2000-2001 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்த விதிகளின்படியும், முன்னுரிமையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு என்னென்ன விதிமுறைகளை எதிர்பார்க்கிறது; அப்படி மாற்றுகின்றபோது 6-வது வகுப்பு நடத்தக்கூடிய ஆசிரியர்களைச் சேர்த்தும் அனுமதி வழங்கப்படுகிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி உயர்த்தப்பட்டால் அங்கு உயர்த்தப்பட்ட முதல் வகுப்புக்குத் தேவையான ஆசிரியர் உடனே நியமிக்கப்பட வேண்டும். இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் 55 மாணவர்கள் 5 ஆம் வகுப்பில் பயில்கிறார்கள். எனவே வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது; மக்கள் தொகையும் இருக்கிறது. இதனை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துவதை விதிகளின்படியும், முன்னுரிமையின் அடிப்படையிலும் குழு தீர்மானித்து அந்த அடிப்படையிலே வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 244, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 7

244—

## ஆரம்ப சுகாதார நிலையம்

***29331—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கோனேரிராஜபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் பல்வேறு வசதிகளுடன் விரிவுபடுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கோனேரிராஜபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஆகும். தற்போது 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்படுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 10 இலட்சம் செலவில் புதிய கட்டடமும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 6 படுக்கை வசதிகளுடன்கூடிய மகப்பேறு பிரிவு ரூபாய் 2 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. மின் இணைப்பு கொடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் புதிய கட்டடம், படுக்கை வசதிகள், ஆய்வக வசதிகள், பிரசவ வசதிகள் முதலிய அனைத்து வசதிகளும் கொண்டதாகும். இம்மாத இறுதியில் கோனேரிராஜபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படும்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு மிக்க நன்றி. அந்த மருத்துவமனையிலே Ambulance Driver இன்னும் நியமிக்கப்படாமல் இருக்கிறார். அங்கே மொத்தம் 4 மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும். ஒரு மருத்துவர் வெளியூரிலிருந்து deputation என்ற முறையிலே வந்து பணியாற்றிவிட்டுச் செல்கிறார். அவசியம் ஒரு பெண் மருத்துவரும் தேவை. இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கி அது முழுமையான மருத்துவமனையாக இயங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இந்த



2000 ஏப்ரல் 7]

மருத்துவமனையைத் திறப்பதற்கு தேதி குறிப்பிடப்படுவதாகவும், அதிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள இருப்பதாகவும் இலாகாவிற்குத் தெரிவித்திருக்கிறார். அவர்கள் திறப்பு விழா செய்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. ஆனால் துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டும் அங்கே தேவையான மருத்துவர்கள் இல்லாத காரணத்தாலும், மருந்துகள் இல்லாத காரணத்தாலும் அவை மூடப்பட்டு வேறு உபயோகத்திற்கு அவற்றைப் பயன்படுத்துகிறார்களே, இதனை நிவர்த்தி செய்கிற அளவில் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் 8400 இருக்கின்றன. அங்கே மருத்துவர்கள் தங்குவதில்லை. செவிலியர்கள்தான் தங்குவார்கள். ஒவ்வொரு செவிலியரும் 5 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட அந்தக் கிராமங்களில் உள்ள நோயாளிகளை அழைத்துக் கொண்டுபோய் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கக்கூடிய மருத்துவர்களைச் சந்தித்து, தேவையான மருத்துவ வசதிகளைப் பெற்று, மருந்துகளையும் அங்கேயேதான் பெற்றுக்கொள்வார்கள். 8400 துணை ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏறக்குறைய 2 ஆயிரம் துணை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத்தான் கட்டடங்கள் இருந்தன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996-லிருந்து தொடர்ந்து அந்தக் கட்டடங்களையும் கட்டவேண்டுமென்று சொன்னதன் அடிப்படையிலும், டானிடா திட்டத்தின்கீழும் ஏறக்குறைய 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் கட்ட வேண்டிய கட்டடங்களுக்கு டானிடா திட்டத்தின்மூலம் நிதியுதவி கேட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு 24 மணி நேர மருத்துவமனை என்று

நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத்தொடரிலே அறிவித்தார்கள். சீர்காழி ஊராட்சி ஒன்றியத்திலே திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பு வாய்ந்த நிலையமாக பணி செய்துகொண்டிருக்கிறது. அதை 24 மணி நேர மருத்துவமனையாக ஆக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 380 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அந்த 380 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய திட்டம். முதற்கட்டமாக 250 இடங்களிலே 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்கி இருக்கிறோம். நிதிநிலை காரணமாக மீதி இடங்களிலே இப்பொழுது 24 மணி நேர நிலையங்களாக உயர்த்த முடியவில்லை. எதிர்காலத்திலே அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் முழு நேரமும் பணிபுரிகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு அரசு ஏதேனும் விதிமுறைகளை வைத்திருக்கிறதா? அப்படி வராத மருத்துவர்கள்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் மாதத்திற்கு குறைந்தது இரண்டு முறையாவது போய் சோதனை செய்ய வேண்டுமென்று இணை சுகாதார இயக்குநர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்போலவே, Director of Public Health மாதத்திற்கு குறைந்தது நூறு இடங்களிலே ஒரு முறை பரிசோதிக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு அவரும் அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார். இவையன்னியில், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஆங்காங்கே பரிசோதனை செய்கிறார்கள். ஏன், சட்டமன்ற உறுப்பினர்களும்





அப்போதைக்கப்போது பரிசோதித்து, குறைபாடுகள் இருக்குமேயானால் அதை அரசுக்குத் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் 36 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவு கட்டப்பட்டு, பொதுப் பணித் துறையிலிருந்து துறைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மருத்துவர்களையும், செவிலியர்களையும் நியமித்து உடனடியாக அது இயங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்ததைப்போல பொதுப் பணித் துறை கட்டடம் கட்டி முடித்தவுடன், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரியில் அரசு பொது மருத்துவமனையாக இருந்த மருத்துவமனை ஆரம்ப் சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதால், இப்பொழுது அந்தப் பகுதிகளில் நடக்கக்கூடிய உயிரிழப்புகளுக்கு Post-mortem செய்ய வேண்டுமென்று சொன்னால், சிதம்பரத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அது அங்கிருந்து 10 கி.மீ. தூரம் இருக்கிற காரணத்தால், காலதாமதமும் ஆகிறது. எனவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் அரசு பொது மருத்துவமனையாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா, அதற்கு வழிவகை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் தமிழகத்திலே ஏறக்குறைய 20-க்கும் மேற்பட்ட இடங்களில் அரசு மருத்துவமனைகளாக இருந்தவற்றை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றியிருக்கிறார்கள். அதிலே ஏறக்குறைய 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்போது மீண்டும் அரசு மருத்துவமனைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. படிப்படியாக மாண்புமிகு

[2000 ஏப்ரல் 7

உறுப்பினர் தொகுதியிலே இருக்கக்கூடிய அந்த மருத்துவமனை பற்றியும் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கின்றன. அதற்குரிய நிலங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசு நிதி ஒதுக்கீடும் செய்து இருக்கிறது. ஆனால் பல்வேறு இடங்களிலே அதற்குரிய கட்டடங்கள் கட்டுவதற்கான முயற்சியை அந்தத் துறை எடுத்துக் கொள்ளவில்லையே. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தக் கட்டடங்களையெல்லாம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா எனத் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 652 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே கட்டடங்கள் இல்லாமல் இருந்தன. இந்த ஆட்சி—நம்முடைய முதலமைச்சர் நான்காவது முறையாகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இரண்டாண்டு காலத்திலே அத்தனைக் கட்டடங்களும் கட்டி முடிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக இதுவரையில் 590 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஓரிரு மாதங்களிலே கட்டி முடிக்கப்படும். ஏறக்குறைய இருபதுக்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு இடங்களைத் தேர்வு செய்வதிலே பிரச்சினைகள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகிக்கொண்டிருக்கிறோம். பொதுப் பணித் துறை, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்புகொண்டு, அந்தக் கட்டடங்களையும் கட்டி முடிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 245, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 7]

**245—**

**செவிலியர் படிப்பு**

***30963—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்த மருத்துவமனையில் செவிலியர் படிப்பு (Nursing) ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சித்த மருத்துவமனையில் செவிலியர் படிப்பு (Nursing) ஏற்படுத்துவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையில் சித்த மருத்துவக் கல்லூரி இருக்கிறது. சித்த பட்டப் படிப்பு 1965-லே தொடங்கப்பட்டு, 35 ஆண்டு காலம் ஆகின்றது. அதோடுமட்டுமல்லாமல், பாளையங்கோட்டையில் உள்ள சித்த மருத்துவமனையில் உள் நோயாளிகள் ஏராளம் பேர் தினந்தோறும் அனுமதிக்கப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மருத்துவர் இருந்தாலும், நோயாளிகளுக்குப் பணிவிடை செய்வதற்கு வாய்ப்பாக செவிலியர் (Nursing) பட்டப் படிப்பை அல்லது பட்டயப் படிப்பைத் தொடங்குகின்ற முயற்சியை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத் துறைக்கென தனிப்பட்ட முறையில் செவிலியர்கள் நியமனம் செய்யப்படுவது இல்லை. அலோபதி முறையிலேதான் அவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆனால், சித்த மருத்துவம், இன்னும் இந்திய மருத்துவத்திலே இருக்கக்கூடிய யுனானி, அலோபதி போன்ற அந்தத் துறைகளிலேயும் செவிலியர்களை நியமனம் செய்கின்ற நேரத்தில் அவர்களுக்குத் தனியாகப் பயிற்சி அளிக்க வேண்டுமென்பதற்காக இந்த அரசு 1999 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாள் வெளியிட்ட அரசாணை நிலை எண் 2211-ன்படி, இந்திய மருத்துவத்

[2000 ஏப்ரல் 7

துறையிலே பணியாற்றக்கூடிய செவிலியர்களுக்கு ஆறு மாதம் தனியாகப் பயிற்சி அளித்தால் போதும் என்று ஒரு முடிவெடுத்து, அவர்களை நியமிக்கின்ற நேரத்திலே ஆறு மாத பயிற்சி அளிக்கப்படுகிறது. எனவேதான் தனியாக இவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லும்போது அலோபதி என்று சொன்னீர்கள். ஆயுர்வேதம் என்று...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலோபதி முறையிலே இருக்கக்கூடிய இந்தத் துறைக்குத்தான் இப்போது Nursing training கொடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சரி. ஆனால் இந்திய மருத்துவத் துறையிலே உதாரணமாகச் சொல்கிறபோது, அலோபதி என்று சொன்னீர்கள். அது இல்லை. ஆயுர்வேதம் என்று சொல்லியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆயுர்வேதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியருக்குப் பதிலாக பதிலியர் என்று ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் நம்முடைய அரசு மருத்துவமனைகளில் நீண்டகாலமாக, 10 ஆண்டு, 20 ஆண்டு காலமாக தொகுப்பூதியத்தில் பணியாற்றுகிறார்கள். இறந்தால் அவர்களுக்கு அரசு கொடுக்கின்ற மற்ற சலுகைகள் கிடைப்பதில்லை. அவர்களை நிரந்தரமாக்க முடியுமா என்று நம்முடைய அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்த பதிலியர் தற்காலிகமாக சில நேரங்களிலே ஆங்காங்கே நிலைமைக்கேற்ப அரசாங்க மருத்துவமனைகளிலே நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஏறக்குறைய பத்தாண்டு காலமாகவே பல மருத்துவமனைகளிலே பணியாற்றி வருகிறார்கள். ஆனால் அவர்களை நிரந்தரமாக்குவதற்கான எந்தவிதமான அடிப்படையும் இல்லாமல் அவர்களுடைய Service இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் அரசாங்கத்திடம் கொடுத்த அந்த மனுவை நிதித் துறையோடு கலந்து பேசி, மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரும்



2000 ஏப்ரல் 7]

கலந்துபேசி, அவர்களுக்கு ஏதாவது பரிகாரம் காண முடியுமா என்று பரிசீலித்தது. ஆனால், இப்போதுள்ள நிதிநிலைமையைக் கணக்கில் எடுக்கும்போது, அதை உடனடியாக நிறைவேற்றக்கூடிய நிலையிலே அரசு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலே சித்த மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, அது சில ஆண்டு காலமாக அங்கே நடந்தது. ஆனால் இப்போது அந்தக் கல்லூரி எங்கே இருக்கிறது, எங்கே போனது என்றுகூடத் தெரியவில்லை. அதற்குக் கட்டடம் கட்டுவதற்காக நிலம்கூட வாங்கப்பட்டதே. அந்த விஷயம் அமைச்சர் அவர்களுடைய கவனத்தில் இருந்தால், தயவுசெய்து பதில் அளிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை சார்பில் அந்தக் கல்லூரியை நடத்த வேண்டுமென்று அனுமதி கேட்டார்கள். அவர்களை நடத்தும்படி நாங்களும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதுபற்றி அறநிலையத் துறை பரிசீலித்து வருகிறது.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய முறை மருத்துவத் துறையில் பொதுவாக மருந்தாளுநர் பட்டயப் படிப்பு (Pharmacist) நடைபெற்று வந்தது. அது கடந்த 3, 4 ஆண்டுகளாக ஒட்டுமொத்தமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. மருந்தாளுநர் பட்டயப் படிப்பு மிகவும் தேவையாக இருக்கிறது. வளர்ந்து வருகிற இந்திய முறை மருத்துவத் துறைக்கு அவர்களுடைய தேவை அதிகமாக இருக்கிற காரணத்தினாலே நிறுத்தப்பட்ட மருந்தாளுநர் பட்டயப் படிப்பை மீண்டும் இந்திய முறையிலே தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்தாளுநர்கள் இந்திய மருத்துவ முறையிலே பட்டயப் படிப்பு படித்து வந்தது உண்மை. அதிலே படித்தவர்களே இப்போது பல பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். எனவேதான், மேலும் அந்தக் கல்லூரியை

நடத்தி பல பட்டதாரிகள் வெளியே வந்தால் அவர்களுக்கு வேலையில்லாமல் இருக்குமே என்பதை எண்ணிப்பார்த்து அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தேவைப்படுகின்ற நேரத்தில் அதுபற்றி அரசு மீண்டும் பரிசீலித்து அந்தக் கல்லூரியை நடத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. பூவேந்தன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சித்த மருத்துவத்துக்கு உகந்த இடம், அதற்குத் தேவையான மூலப் பொருள்கள் எல்லாம் பழனி பகுதியிலேதான் கிடைக்கிறது என்ற காரணத்தினால், சித்த மருத்துவக் கல்லூரி பழனியிலே தொடங்கப்பட்டது. சென்ற ஆட்சிக் காலத்தில் ஆண்டவர்கள், அதை சென்னை மாநகருக்கு மாற்றிவிட்டார்கள். சித்த மருத்துவக் கல்லூரி கட்டப்படுவதற்காக இந்து அறநிலையத் துறை மூலமாக 40 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. இப்போதும் சித்த மருத்துவக் கல்லூரிக்கு என்று அந்த நிலத்தில் Board-ம் வைக்கப்பட்டிருக்கிறது. பழனியிலே சித்தர்கள், போகர்கள் அதிகமாக இருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான பொருள்கள் அங்கேதான் அதிகமாகக் கிடைக்கின்றன. ஆகவே, செவிலியர் படிப்புகளுக்காவது அந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கும், அதைப்போல சித்த மருத்துவமனை ஒன்று தனியாக அந்த இடத்திலே ஆரம்பிப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவர்களை உருவாக்குவதற்காகத்தான் அந்தக் கல்லூரி அங்கே தொடங்கப்பட்டது. அதைத்தான் இந்து அறநிலையத் துறை இப்போது பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், அந்த இடத்திலே போய் சித்த மருத்துவத்திற்கு என்று இருக்கக்கூடிய செவிலியர்களுக்கு பயிற்சி அளிப்பது என்பது இயலாத ஒன்று. ஏற்கெனவே நான் என்னுடைய முதல் வினாவிற்கான விடையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். சித்த மருத்துவம் அல்லது இந்திய மருத்துவத்திற்கு என்று தனியாக செவிலியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்திருக்கிறேன். எனவே, அதுபற்றி இப்போது எந்தவிதமாகவும் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்தை நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும்





மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் ஊக்கப்படுத்தி அதற்கான எல்லா உதவிகளையும் செய்து வருகிறார்கள். ஆனால், இப்போது ஹோமியோபதி வைத்திய முறையிலே மக்களுக்கு அதிகமாக நாட்டம் வந்திருக்கிறது. அதற்குச் சொல்லப்படுகிற காரணம், சித்த வைத்தியத்திலே பல பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. ஹோமியோபதி வைத்தியத்தில் பக்க விளைவுகள் இல்லையென்று புதிய கருத்து வந்திருக்கிறதே, அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரோ மாண்புமிகு உறுப்பினருக்குத் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் சித்த மருத்துவத்தைப் பயன்படுத்துவதன்மூலம் பக்க விளைவுகள் வருவதில்லை. அவர் ஹோமியோபதி மருத்துவத்தைப்பற்றிச் சொன்னார். அதுகுறித்தும் இந்த அரசாங்கம் ஊக்குவித்துக்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேம்பு, துளசி, தூதுவளை, மஞ்சள், கரிசலாங்கண்ணி போன்ற சித்த மருத்துவ மூலிகைப் பொருள்களை மேலை நாடுகளில் உள்ளவர்கள் இப்போதும் கையாளுகிறார்கள். எனவே, அவற்றினுடைய உரிமை நம்முடைய தமிழகத்திற்கு, இந்தியாவிற்கே இருக்கிறமாதிரி Patent Right செய்வதற்கு, தமிழகத்தினுடைய மூலிகைகளை Patent Right செய்வதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுவதைப் போல, துளசி போன்ற அந்த இலைகள் நல்ல Anti-biotics என்று சொல்கிறார்கள். அவற்றிற்கு எல்லாம் நாம் Patent Right வாங்குவதற்கு, நம்முடைய தமிழகத்திலேயே இருக்க வேண்டும் என்பதற்கான முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் செய்யாருக்கு அருகில் எரும்பூர் என்ற கிராமத்தில் நீதிபதி பலரா அவர்கள் சித்த மருத்துவமனை அமைத்து ரத்த புற்றுநோய் எல்லாவிதமான நோய்களுக்கும் ராஜ வைத்தியம் செய்தார்.

[2000 ஏப்ரல் 7

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு அவரைப் பற்றி நன்றாகத் தெரியும். அவர் மறைந்துவிட்டாலும் அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் சென்னை மற்றும் எரும்பூரில் இப்போதும் மருத்துவமனை [illegible] வருகிறார்கள். எனவே, அவருடைய ஆராய்ச்சிகளை சித்த மருத்துவப் படிப்பில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அரசு அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலராமய்யா மட்டும் அல்ல. சித்த மருத்துவத்தில் இப்போது புற்று நோய்க்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு. சில இடங்களிலே அந்த மருந்துகளும் கொடுக்கப்பட்டு, சில நோயாளிகள் குணமடைகிறார்கள் என்ற தகவலும் அரசுக்கு வந்திருக்கிறது. இதையெல்லாம் சேர்த்து இந்திய மருத்துவத் துறையினுடைய இயக்குநர் அவர்கள், சம்பந்தப்பட்ட நிபுணர்களை அழைத்துப்பேசி அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, உண்மையிலேயே புற்று நோயைத் தீர்க்கக்கூடிய நல்ல மருந்து இருக்குமானால் அதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சித்த மருத்துவத்திற்கு என்று தனியாக செவிலியர் படிப்புத் தேவையில்லை என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். பொதுவாக ஆங்கில மருத்துவ முறைக்கும் (Allopathy), சித்த மருத்துவத்திற்கும் எப்போதுமே போட்டி உண்டு. ஆங்கில மருத்துவம் படித்த மருத்துவர்கள் நம்முடைய சட்டமன்றத்திலேகூட நிறைய பேர் இருக்கிறார்கள். ஆங்கில மருத்துவர்கள் சித்த மருத்துவர்களை மதிப்பதில்லை. ஒரு superiority complex அவர்களுக்கு உண்டு. அதைப்போல செவிலியர்கள் ஆங்கில முறையில் படித்த காரணத்தால், அவர்களுக்கும் ஒரு superiority complex இருக்கின்ற காரணத்தால், இந்திய மருத்துவர்களின்கீழ் பணிபுரியும்போதுகூட அவர்களிடையே ஒரு இணக்கமான சூழ்நிலை இல்லை. ஆகவே, இந்த இரண்டையும் கருத்தில் கொண்டு வெவ்வேறு மருத்துவமுறைகள் என்கின்ற நிலையிலும், இத்தகையதொரு friction-ஐ தவிர்க்கின்ற முறையிலேயும், சித்த மருத்துவத்திற்குத் தனி செவிலியர் பட்டப் படிப்பைத் தொடங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.*



2000 ஏப்ரல் 7]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது செவிலியர்கள் நியமனம் எப்படி நடைபெறுகிறது என்பதைத் தெரிந்துகொண்டால் மாண்புமிகு உறுப்பினருக்கு இந்தச் சந்தேகம் வராது. செவிலியர்கள் படிப்பில் யார், யார் தேர்ச்சி பெறுகிறார்களோ அவர்களெல்லாம் Directorate of Medical Services-ல் உடனடியாகப் பதிவு செய்துகொண்டு, மூப்பு அடிப்படையிலேதான் அவர்களுக்குப் பணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அப்படி பணிகள் வழங்கப்படுகின்ற நேரத்திலே அவர்களை சித்த மருத்துவப் பிரிவுக்கு அனுப்புவதாக இருந்தால் 6 மாத காலம், அவர்களுக்கு சித்த மருத்துவத்திலே எப்படியெல்லாம் மருந்துகள் வழங்கப்பட வேண்டும், என்னென்ன மருந்துகள் இருக்கின்றன என்றெல்லாம் சொல்லித் தரப்படுகிறது. பொதுவாக செவிலியர்கள் என்று சொன்னாலே அவர்கள் நோயாளிகளை எப்படி கவனிக்க வேண்டும், எப்படி அவர்களிடத்திலே அன்பு செலுத்த வேண்டும், எந்த அளவிற்கு அவர்களிடத்திலே பரிவு காட்ட வேண்டும் என்று அந்தப் பயிற்சிதான் முதன்மையான பயிற்சி. எனவே, அதிலே சித்த மருத்துவ நோயாளி அல்லது அலோபதி மருத்துவ நோயாளி என்று அல்ல. அவர்கள் பயிற்சி பெற்று முடித்தவுடனே பதிவு செய்து மூப்பு அடிப்படையில் பணி கிடைக்கின்ற நேரத்திலே யார், யார் சித்த மருத்துவத்திற்குப் போக வேண்டும் என்று நினைக்கிறார்களோ அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதிலே எந்தவிதமான inferiority complex-ம் இருப்பதாக இதுவரையிலே அரசுக்குத் தகவல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 246, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**246—**

**பறவைகள் சரணாலயம்**

***26372—திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி பெரிய ஏரியில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 ஏப்ரல் 7

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி பெரிய ஏரி, பறவைகள் சரணாலயம் அமைக்க ஏற்றதாக இல்லாததால் அங்கு சரணாலயம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதியிலே, எடப்பாடி பெரிய ஏரி, இரண்டு மலைகளுக்கு நடுவிலே மிக அழகாக கிட்டத்தட்ட 390 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட மிகப் பெரிய ஏரி. சூரியன்கரடு மற்றும் வெள்ளூத்துமலை ஆகிய மலைகளுக்கு நடுவிலே மிக நேர்த்தியாக இருக்கக்கூடிய அந்த ஏரியிலே, மழைக்காலங்களிலே ஆயிரக்கணக்கான பறவைகள் அங்கு வந்து தங்கி, இனப்பெருக்கம் செய்துகொண்டு இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதன்மீது தனிக் கவனம் செலுத்தி வேடந்தாங்கலிலே இருப்பதுபோல அந்த ஏரியினுடைய கரைகளை உயர்த்தி, நல்ல மரங்களை உருவாக்கி, அந்தப் பறவைகளுக்கு சரணாலயம் ஏற்படுத்திக் கொடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரணாலயம் அமைப்பதற்கு இந்த ஏரியில் முதலாவதாக வற்றாத நீர் இருக்க வேண்டும். ஆனால் இந்த ஏரியிலே 3 மாதத்திற்குத்தான் தண்ணீர் இருக்கும். மற்ற நேரங்களிலே காய்ந்து விடும். அங்கு இருக்கின்ற மரங்கள் கருவேல மரங்கள். அதுவும் காய்ந்து போன மரங்கள், பச்சையாக இல்லாத மரங்கள். இரண்டாவது, உலகத்திலிருந்து பலவிதமான பறவைகள் வர வேண்டும். இதுவரையிலே அந்த ஏரிக்கு வந்தப் பறவைகள் எல்லாம் நீர்க்காகம், நாரை, கொக்கு மட்டும்தான். (சிரிப்பு) எனவே இவற்றை வைத்து சரணாலயம் அமைக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே வேறு என்ன கேள்வி இருக்கிறது?



2000 ஏப்ரல் 7]

முற்பகல் 10-00

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சருடைய பதில் எனக்கு ஒரு விசித்திரமான பதிலாக இருக்கிறது. அவருக்கு அரசு அதிகாரிகள் கோப்பை அனுப்பி இருக்கிறார்கள். அதைப்பார்த்து இங்கு படித்துச் சொல்கிறார் என்று நினைக்கிறேன். நான் நேரடியாக அந்த ஊரிலே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருப்பவன். நம்முடைய முதல்வர் அவர்களும் அந்த ஏரியைக் கடந்து பலமுறை சென்று இருக்கிறார்கள். அது ஒரு மிக அழகான ஏரி. பலவகையான பறவைகள் மழைக்காலத்திலே அங்கு வந்து செல்வதை நம்முடைய அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தால் தெரியும். அந்த ஏரியின் கரையை அகலப்படுத்தி, உயரப்படுத்தி, நீர் அளவினுடைய கொள்ளளவை அதிகமாக்கி, மழைக்காலத்திலே நீரைச் சேகரிக்க வேண்டும். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சருக்கு, 4 ஆண்டு காலமாக அந்த ஏரி மூலம் குடிநீர் கிடைப்பதற்காக, காவிரி நீர் கிடைப்பதற்காக பல மனுக்களையும் அனுப்பி இருக்கிறேன். இதையெல்லாம் மனதிலேகொண்டு, ஒரு நல்ல பதிலை அளிக்க வேண்டும் என்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சரணாலயத்தில் இருந்து குடிநீருக்கு வந்து இருக்கிறார். ஆனால், ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் ஏரியை ஆழப்படுத்தி நீரை நிரப்பினால் வெளிநாட்டுப் பறவைகள் வராது. அவற்றிற்கென்று சில இடங்களைத் தேர்ந்தெடுத்துதான் அவை வரும். அவை வருகிற இடமாகப் பார்த்து அதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய வேண்டும். (சிரிப்பு) ஆனால், உங்கள் ஊருக்குப் பக்கம் எந்த வெளிநாட்டுப் பறவையையும் காணவில்லை. (சிரிப்பு) மிஞ்சிமிஞ்சிப் போனால், இராமநாடு, ஒரத்தநாடு பறவைகள்கூட அந்தப் பக்கம் வராத நிலைமை இருக்கிறது. (சிரிப்பு) ஆகவே, காக்கா, குருவி வருவதை விடுத்து, அழகான பறவை எப்போது வருகிறதோ, அப்போது சொல்லி அனுப்புங்கள், நானும் வந்து பார்த்துவிட்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 247, திரு. கு. மனோகரன்; மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 7

**247—**

**கறுப்புப் பகுதி**

***35369—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்திலுள்ள ஐந்து ஒன்றியங்கள் கறுப்புப் பகுதி என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் படும் அவதியைப் போக்கிட மாற்று Survey செய்து கறுப்புப் பகுதி என்பதை மாற்றி அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

(ஆ) மத்திய அரசு 1997 ஆம் ஆண்டு நிலத்தடி நீர்வளக் கணக்கீடு குழு அமைத்து அதன் கோட்பாடுகளின்படி நிலநீர் வளக் கணக்கீடு செய்யும்படி அறிவுரை அளித்ததன்பேரில் புதிய முறையில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள 18 ஒன்றியங்களுக்கும், புதிய நிலநீர் கணக்கீடு செய்யப்பட்டு, மத்திய நிலநீர் வாரியம், சென்னைக்கு அனுப்பப்பட்டது. மத்திய நிலநீர் வாரியம் அதன் பரிந்துரைகளுடன் டெல்லியில் உள்ள மத்திய நிலநீர் வாரிய தலைமை அலுவலகத்திற்கு புதிய கணக்கீடுகளை அனுப்பி உள்ளது. இதற்கிடையில் அதிகமான—ஒன்றிய வாரியாகவும் மற்றும் பயிர் வாரியாகவும்—புள்ளிவிவரங்கள் தேவைப்பட்டதால், மீண்டும் ஒரு முறை அந்தப் புதிய கணக்கீடு செய்யப்பட்டு சமீபத்தில் மத்திய நிலநீர் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் ஒப்புதல் கிடைத்தபிறகு புதிய நிலைமை தெரியவரும்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே தருமபுரி, பர்கூர், பாப்பிரெட்டிப்பட்டி உட்பட 5 ஒன்றியங்கள் கடந்த 1992 ஆம் ஆண்டிலிருந்து நிலத்தடிநீர் மட்டம் குறைவு என்ற காரணத்தால் கறுப்புப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டு, அந்த 5 ஒன்றியங்களிலும் புதிய கிணறு வெட்டக் கடன் கிடையாது; கிணற்றை



2000 ஏப்ரல் 7]

ஆழப்படுத்தக் கடன் கிடையாது; அதேபோல, ஆழ்துளைக் கிணறு அமைக்கவும் அங்கு கடன் கிடையாது என்ற நிலையில், கடந்த டிசம்பர் மாதம் தமிழக அரசு அந்த 5 ஒன்றியங்களுக்கும் புதிய மின்சார இணைப்பு வழங்கக் கூடாது என்று ஓர் உத்தரவையும் அனுப்பியுள்ளது. விவசாயிகள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ள நிலையில், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதனை மறுஆய்வு செய்து, இப்போது தமிழக அரசின் மூலமாக மத்தியில் இருக்கும் நிலத்தடிநீர் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அந்தக் கோப்பின்மீது விரைந்து அனுமதி பெற்று, தருமபுரி மாவட்ட விவசாயிகளின், அந்த 5 ஒன்றியங்களிலுள்ள விவசாயிகளின் அவல நிலையைப் போக்கி, கறுப்புப் பகுதியை சாம்பல் பகுதியாக மாற்றிட உடனடியாக ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை. ஒரு Block-ல் தண்ணீர் 85 per cent-லிருந்து 100 per cent-வரை நிலத்தடிநீர் உபயோகப்படுத்தப்பட்டு இருக்குமானால், அது கறுப்புப் பகுதி என்று அறிவிக்கிறார்கள். 65 per cent-ல் இருந்து 85 per cent வரையில் நிலத்தடிநீர் எடுக்கப்பட்டிருந்தால் அதை சாம்பல் நிறப் பகுதி என்று அறிவிக்கிறார்கள். 65 per cent-க்கு கீழே இருந்தால் அதை வெண்மைப் பகுதி என்று அறிவிக்கிறார்கள். இது இன்றைக்கு நேற்றல்ல. ஒரு Public Litigation Case மூலம் ஒருவர் Supreme Court-ல் Case போட்டார். Supreme Court என்ன சொன்னது என்றால், மத்திய சர்க்கார் உடனடியாக பார்த்து Central Ground Water Authority என்ற ஓர் அமைப்பை அமைத்து, அந்த Ground Water-ஐ பாதுகாக்க வேண்டியது கடமை என்று சொன்னது. அப்படி ஓர் அமைப்பு அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த அமைப்பு இந்தியா முழுவதும் இருக்கிற மாநிலங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் மாநிலத்தில் இருக்கிற நிலத்தடி நீரை பாதுகாக்கிற நடவடிக்கையை நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்களா அல்லது நாங்களே அந்த அதிகாரத்தை எடுத்துக்கொள்ளட்டுமா என்று கேட்டது. இந்தப் பிரச்சினை 1990-க்கு முன்னாலேயிருந்து, அதாவது 1976, 1977-ல் இருந்தே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்த அரசு வந்த பிறகு 1998-லே ஒரு கூட்டம் டெல்லியிலே நடந்தபோது, இந்த அரசின் சார்பிலே நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு எங்களுக்கும் அக்கறை உண்டு; ஆனால் இது நீர்ப் பிரச்சினை; இது எங்கள் மாநிலத்திற்குரிய பிரச்சினை; இது முழுவதையும்

[2000 ஏப்ரல் 7

மத்திய அரசு எடுத்துக்கொள்வதற்கு நாங்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று நான் திட்டவட்டமாக அங்கு தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். ஆனால் அவர்கள், ஒரு Act-ஐத் தயார்செய்து அதைப்போல நீங்களும் போடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதை வேறு ஒரு குழுவிற்கு அனுப்பியிருக்கிறோம். ஆனால், பொதுவாக என்ன பிரச்சினை என்றால், 1992 ஆம் ஆண்டுதான், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, ஒரு G.O.-முன்பு இருந்த ஆட்சியால் பிறப்பிக்கப்பட்டது. அவர்கள்தான் அந்தக் கறுப்புப் பகுதியிலே கிணறு வெட்டுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும், மின்சாரத்திற்குக் connection கொடுக்கக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஐந்து வருடத்திற்கு ஒரு முறை நிலத்தடி நீர் மாறுகிறதா என்று கணக்கிடுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மனோகரன் அவர்கள் கேட்ட பாலக்கோடு, பர்கூர், தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, மத்தூர் இவையெல்லாம் கறுப்புப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. 1992 ஆம் ஆண்டு கணக்குப்படி, 5 வருடத்திற்கு ஒரு முறை கணக்கு எடுக்கிறார்கள்; 1997-ல் கணக்கு எடுத்தார்கள். இப்போது, ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதுபோல, ஐந்தாக இருந்த பகுதியிலே கிருஷ்ணகிரி, அரூர் சேர்ந்து, ஏழாக ஆகிவிட்டன. எனவே, இதற்கு ஒரு நிலை இரண்டு பக்கம்தான், விவசாயிகளின் பிரச்சினையையும் போக்க வேண்டும். அதேநேரத்தில் நிலத்தடி நீரையும் பாதுகாக்க வேண்டும். அதற்குத்தான் இந்த அரசு, தக்க வகையிலே ஒரு குழுவிடம் ஒப்படைத்து அதை மீண்டும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 248, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**248—**

**அரசுப் பேருந்துகள்**

***30390—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் அரசுப் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவை இலாபத்தில் இயங்குகின்றனவா?



2000 ஏப்ரல் 7]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை 968.

(ஆ) இல்லை.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு 968 பேருந்துகள் ஓடுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியிருந்தும் எங்களுடைய அரியலூர் நகருக்கும், தொகுதிக்கும் பேருந்துகள் பற்றாக்குறை நிறைய இருக்கிறது. ஆகவே, 5 நகரப் பேருந்துகளும், main road-லே செல்வதற்கு 10 பேருந்துகளும் புதியதாக இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அப்படி அரசுப் பேருந்துகளை இயக்க முடியாத நிலை என்றால், தனியார் பேருந்துகளை இயக்க அரசு அனுமதி அளிக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு 1996-ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, கடந்த 4 ஆண்டுகளில், திருச்சி போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக மட்டும் 55 புதிய வழித்தடங்களில், 83 கிராமங்கள் பயன் அடைகிற வகையிலே புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு இருக்கின்றன. பெரும்பாலான பேருந்துகள் நட்டத்திலே இயங்கிக் கொண்டு இருந்தாலும்கூட கிராம மக்களின் நலனைக் கருதியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், எந்தப் பேருந்தும் நிறுத்தப்படக் கூடாது என்று உத்தரவிடப்பட்டு இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர், 5, 10 என்று, ஒரு தொகுதிக்குக் கேட்காமல், ஏதேனும் இடர்பாடுகள் இருக்கும் பகுதிகள் பற்றி சொன்னால், அரசு அதுகுறித்துப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 249, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 7

**249—**

**பேருந்து வசதி**

***32702—திரு. மு. அப்பாவு:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இருக்கன்துறை ஊராட்சி, கொத்தங்குளம் கிராமத்திற்கு இதுநாள் வரை பேருந்து வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பேருந்து வசதி செய்யப்படுகிறது.

(ஆ) கொத்தங்குளம் கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 300 ஆகும். எனவே, இக்கிராமத்திற்குத் தற்போது பேருந்து வசதி ஏற்படுத்த சாத்தியமில்லை.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொத்தங்குளம் கிராமமானது, 1998-99ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, அந்த ஊருக்குக் குடிநீர் வசதி வழங்கப்பட்டு விட்டது. ஆனால், பேருந்து போக்குவரத்து இல்லை. அது தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக, முழுமையாக வாழ்கின்ற கிராமமாகும். ஆகவே, நாங்கள் இதுவரை பேருந்தையே பார்க்கவில்லை. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாகவாவது பேருந்து வசதி செய்து தருவீர்களா என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் நிறைவு நாளின்போது, அந்த ஊர்ப் பொதுமக்கள் முழுவதுமாக வந்து கோரிக்கையாக வைத்தார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் முழுமையாக வாழ்கின்ற கொத்தங்குளம் கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்து தருவதோடு, நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, 1997 ஆம் ஆண்டு கன்னியாகுமரியில் இருந்து சென்னைக்கு, செட்டிகுளம், கூடங்குளம், பரமேஸ்வரபுரம், தாராபுரம், சீலாத்திகுளம், சமூகரங்கபுரம், கள்ளிகுளம், வள்ளியூர் வழியாக விரைவுப் பேருந்து இயக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தப் பேருந்து தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் இயக்குவதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 7]

முற்பகல் 10-10

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கொத்தங்குளம் கிராமத்தில் 60 வீடுகள் மட்டுமே இருப்பதாக எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில் இருக்கிறது. உறுப்பினர் வினாவில் 300 பேர்கள் கொண்ட மக்கள்தொகை இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே சிறிய குக்கிராமங்களுக்கு, பேருந்துகளை இயக்குவது கடினமாக இருக்கும். இந்தக் கிராமம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதால், குக்கிராமமாகத்தான் இருக்க முடியும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சாலை வசதி போன்றவை இருக்குமானால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இக்கிராமத்தினை எடுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் வாய்ப்புகள் வருகிறபோது பேருந்து விடுவதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 250, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**250—**

**தமிழ்க் கீர்த்தனைகள்**

***11566—திரு. வி.கே. லட்சுமணன் :**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேவாரப் பண்கள் எல்லாம் ஒரே இசை வடிவில் இருப்பதாலும், பாடகர்களின் கற்பனைக்கு வாய்ப்புகள் குறைவாக இருப்பதாலும், புதிய தமிழ்க் கீர்த்தனைகளை இயற்றவும் அவற்றை ஸ்வரப்படுத்தவும் அரசு ஊக்கம் அளிக்குமா?

[2000 ஏப்ரல் 7

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேவாரப் பண்கள் எல்லாம் பல இசை வடிவில் உள்ளன. இது தவிர மரபு இசைப் பாடல்கள், எடுத்துக்காட்டாக, அருணகிரிநாதர், முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தா பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதி, மயிலாடுதுறை வேதநாயகம் பிள்ளை, இராமசாமி சிவன், பாபவிநாச முதலியார் போன்றோர் இயற்றிய நூற்றுக்கணக்கான இசைச் செறிவு மிக்க தமிழ்க் கீர்த்தனைகள் புத்தக வடிவில் வந்துள்ளன. இவை தவிர, திருவாளர்கள் சுத்தானந்த பாரதி, தண்டபாணி தேசிகர், பெரியசாமி தூரன், கீழ்வரூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, இலட்சுமணப்பிள்ளை போன்றோரும் தமிழில் கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறில் ஆண்டுதோறும் ஒரு சர்ச்சை நடந்துகொண்டே இருக்கிறது. தியாகராஜ சுவாமி பாடல்களைத் தமிழிலே பாட வேண்டுமென்று போட்டியாக, ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இதனுடைய நோக்கம் என்னவென்று சொன்னால், தமிழிலே கீர்த்தனைகளைப் பாட வேண்டுமென்பதுதான். அமைச்சர் அவர்கள் முத்துத்தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை போன்றவர்களைப் பற்றிச் சொன்னார்கள். பெரியசாமி தூரன், சுத்தானந்த பாரதி போன்ற மிகச் சிறந்த கவிஞர்கள்கூட பாடல்களை இயற்றியிருக்கிறார்கள். ஆனால், அதற்குப் பின்னாலே யாரும் நல்ல கீர்த்தனைகளை இயற்றி, அவற்றை ஸ்வரப்படுத்தி, அதை மேடைகளில் பாடுகின்ற அளவிற்குக் கொண்டு வரவில்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, அவர்களுக்குப் பின்னாலே நல்ல கீர்த்தனைகள் இயற்றுபவர்களை ஊக்கப்படுத்தி, அவற்றை ஸ்வரப்படுத்த அரசு ஊக்கம் அளிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவையாறு பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், அமைச்சரால் ஒன்றும் செய்ய முடியாது. அந்த



2000 ஏப்ரல் 7]

திருவையாறு சமாஜத்தினுடைய தலைவர் யார் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் மனது வைத்தால் செய்யலாம்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் தெரிவித்த கருத்தில், திருவையாறைப் பொறுத்தவரையிலும் ஏற்கெனவே தெலுங்குக் கீர்த்தனைகளை, தியாகராயருடைய கீர்த்தனைகளைத் தொடர்ந்து பாடுவது என்பதுதான் மரபாக இருக்கிறது. அதேநேரத்தில், திருவையாறில் தமிழிசை மன்றம் என்று ஒன்று தொடங்கப்பட்டு, நீண்டகாலமாக, 3, 4 நாட்கள் முற்றிலும் தேவாரப் பண்களும், தமிழிசைப் பாடல்களும் பாடப்படுகின்றன. இன்றைக்குக்கூட, இங்கே நான் சொல்லும்போது குறிப்பிட்ட பண்களுக்கு உரியவர்களைத்தவிர, நம்முடைய பாவேந்தர் அவர்களே இசையமுது என்ற பெயரில் முறையான இசைப் பாடல்களைப் பாடியுள்ளார். பாரதியார்கூடத் தன்னுடைய பாடல்கள் பலவற்றில் முறையான பண், தாளம் போன்றவற்றை எல்லாம் இணைத்தே பாடியுள்ளார். அவை முறையாக மேடைகளில் அரங்கேற்றப்படுகின்றன. அதுபோக, கவிஞர் சுரதா போன்றவர்கள்கூட, தித்திக்கும் தமிழிலே முத்துமுத்தாய் எண்ணம் தந்த திருவள்ளுவர் என்பது போன்ற இசைப் பாடல்களை இயற்றியுள்ளார்கள். அதைப்போல தண்டபாணி தேசிகர் போன்றவர்கள் பிற்காலத்திலே தாமரை பூத்த தடாகமடி போன்ற பாடல்களையெல்லாம் இயற்றி, ஏராளமாக மேடையேற்றப்பட்டிருக்கின்றன.. சீர்காழி கோவிந்தராஜன் 3 மணி நேரமும் தமிழிசைப் பாடல்களைப் பாடியிருக்கிறார். அதைப்போல சிதம்பரம் ஜெயராமன் 3 மணி நேரம் தமிழிசைப் பாடல்களைப் பாடியிருக்கிறார். தொடர்ந்து இப்போதும்கூட பலபேர்-குறிப்பாக டி.கே.எஸ். கலைவாணன், டி.கே. சண்முகம் அவர்களின் புதல்வர், இதுபோன்று பலரும் ஏராளமான கீர்த்தனைகளை அமைப்பாகக் கொண்டு வருகிறார்கள். எல்லாமே தேவாரக் கீர்த்தனைகளாக மட்டுமல்லாமல், தனிப்பட்ட வகையில் தமிழைப் பற்றிய பாடல்களும், வேறு சில சமுதாயச் சீர்திருத்தப் பாடல்களும் இப்போது, பாடப்படுகின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 251, திரு கோ. மோகனதாசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 7

**251—**

**தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அமைத்தல்**

*** 27607—திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பனார்கோவிலில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செம்பனார்கோவிலில் புதியதாக ஒரு கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 10-15

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்ப்பில்லை என்று சொன்னார்கள். ஒரு வட்டத்திற்கு ஒரு தொடக்க ஊரக வளர்ச்சி வங்கி என்று அறிவித்து இருந்தார்கள். செம்பனார்கோவிலில் முதலில் நிலவள வங்கி என்ற பெயரில் இயங்கி வந்தது. அதைக் கலைத்துவிட்டு மயிலாடுதுறையுடன் சேர்த்து ஒன்றாக்கிவிட்டார்கள். அதற்குப் பிறகு அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் கடன் வாங்குவதற்கு முடியாமல், tractor போன்ற வாகனங்கள் வாங்குவதற்கு சிரமப்படுகிற நிலை இருக்கிறது. எனவே, வட்டத்திற்கு ஓர் ஊரக வளர்ச்சி வங்கி என்று அறிவித்ததன் பயனாக நானும் அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே எழுதிக் கொடுத்திருக்கிறேன். மீண்டும் அவர்கள் மறுபரிசீலனை செய்து விவசாயிகளுடைய நலனுக்காக அங்கே ஊரக வளர்ச்சி வங்கி அமைத்துத் தருவதற்கு மறுபரிசீலனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 7]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சட்டமன்றத்திலே மானியக் கோரிக்கை விவாதத்தின்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற வட்டங்கள் அனைத்திலும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மயிலாடுதுறை தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 3 ஆண்டுகளில் எய்தியுள்ள இலாப நட்டக் கணக்கைப் பார்க்கின்றபோது, 170.61 இலட்ச ரூபாய் நட்டமாக இருக்கிற காரணத்தாலும், அதனுடைய பணியாளர்களுடைய செலவு 2 சதவிகிதத்திற்கும் மேலாக இருக்கிற காரணத்தாலும் தாய் வங்கியிலிருந்து பிரித்து ஒரு பகுதியை எடுத்து நடத்துவோமேயானால் இந்த வங்கி மேலும் பாதிக்கப்படும் என்று அதிகாரிகள் சொல்லி இருக்கிறார்கள். ஏற்கெனவே சட்டமன்றத்திலே அறிவித்த அந்த அறிவிப்புக்கு இணங்க தமிழ்நாட்டிலே 39 இடங்களில் புதிய வங்கிகள் தொடங்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. அப்படி முடிவு எடுக்கப்பட்டு 11 இடங்களிலிருந்து முழுமையாக அரசுக்கு முன்மொழிவுகள் வந்திருக்கின்றன. 3 இடங்களில் நாமும் நபார்டின் அனுமதிக்காக அனுப்பியிருக்கிறோம். விரைவிலே அனுமதி கிடைத்துவிடும். மீதம் இருக்கிற இடங்களிலிருந்து ஆங்காங்கே இருக்கின்ற இணைப் பதிவாளர்கள் முன்மொழிவுகளை அனுப்புவார்களானால் தொடர்ந்து அந்த இடங்களில் ஆரம்பிப்பதற்குரிய முயற்சி எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கிணங்க எப்படி இன்னும் இருக்கிற பகுதியிலே அதை இணைத்து இலாபகரமாக நடத்த முடியுமா என்பதை மீண்டும் ஆய்ந்து, அங்கே தொடங்க வாய்ப்பு இருக்குமானால் நிச்சயமாகத் தொடங்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 252, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**252—**

**பால் சாவடிகள்**

*** 29381—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் நகராட்சிப் பகுதிகளில் ஆவின் பால் நிறுவனம் மூலம் பால் சாவடிகள் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2000 ஏப்ரல் 7

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் நகராட்சிப் பகுதிகளில் ஆவின் நிறுவனம் மூலம் பால் சாவடிகள் திறக்க அரசு செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடையநல்லூர் தொகுதியில், கடையநல்லூர் வளர்ந்து வருகின்ற நகரம். அங்கு வாழ்கின்ற மக்கட்தொகைக்கு ஏற்றவாறு மக்களுக்குப் பால் கிடைப்பது என்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. எனவே, கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் ஆவின் பால் நிறுவனம் மூலம் பால் சாவடிகள் திறக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய எந்த முகவரும் முன்வரவில்லை. சிலர் முன்வந்தும் சரியாக நடத்த இயலாததால் விட்டுவிட்டனர். ஆகையினால், விற்பனை முகவர்கள் முன்வந்தால் கடையநல்லூர் நகராட்சியிலே பால் விற்பனைச் சாவடி அமைக்க அரசு ஏற்பாடு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 253, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**253—**

### வேலைவாய்ப்பு

***29318—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் படித்து வேலை இல்லாமல் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து வைத்துள்ள ஆண், பெண் இருபாலருக்கும் வேலைவாய்ப்பு



2000 ஏப்ரல் 7]

அளிக்கும் வகையில் 3 ஆண்டுத் திட்டம் வகுத்து வேலைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தமிழகத்தில் வேலைவாய்ப்புக் கோரி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உயிர்ப் பதிவேடுகளில் காத்திருக்கும் படித்த இளைஞர்களின் (educated unemployed) விவரம் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் மனுதாரர்கள், அவர்களது வயது, கல்வித் தகுதி, பதிவு மூப்பு, இடஒதுக்கீடு, முன்னுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகம், வேலை தேடுவோருக்கும் வேலையளிப்பவருக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்பட்டு வருகிறது. வேலைவாய்ப்புகள் ஏதும் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் உருவாக்கப்படுவதில்லை. மேலும், வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்படும் வேலைவாய்ப்புகள் தற்பொழுது பெருமளவில் குறைந்து விட்டன. பெரும்பாலான வேலைவாய்ப்புகள், மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மத்திய வங்கிப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம் போன்ற தேர்வாணையங்களால் போட்டித் தேர்வுகள் நடத்தி நிரப்பப்படுகின்றன. பொதுத் துறை அலுவலகங்களில் பணியிலிருக்கும்போது இறந்த பணியாளர்களுடைய வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கலந்து ஆலோசிக்காமலேயே நேரடி நியமனம் வழங்க விதிமுறைகள் உள்ளன.

தமிழ்நாடு அரசுப் பணிகளைப் பொறுத்தவரை, இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் போன்ற பதவிகளுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களிடம் மனுதாரர்களின் பட்டியல்கள் பெற்று தற்காலிகமாக நியமனம் செய்வது அரசாணை எண் 185, பணியாளர் மற்றும் நிர்வாகச்

சீர்திருத்தத் துறை (Per-J), நாள் 15-5-1991-ன் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது. அதேபோல், அலுவலக உதவியாளர்கள் பணிகாலியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் நிரப்புவதற்கு அரசாணை எண் 746, நாள் 22-9-1995, நிதித் துறை (Zero-Bag) வாயிலாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், சிக்கன நடவடிக்கையாக புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதும் அரசால் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பொதுத் துறையில் பணியிடங்கள் நிரப்பப்படுவது பெருமளவில் குறைந்துவிட்டது. ஓட்டுநர், நடத்துநர், ஆசிரியர்கள் மற்றும் தொழில் நுட்பப் பணியிடங்கள் மட்டுமே வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் நிரப்பப்படுகின்றன. இத்தகைய நிலையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள அனைத்து படித்த ஆண்/பெண் இருபாலரையும் ஊதியம்/வருமானம் பெற்று பயனடையும் வகையில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அவர்களைச் சுய தொழிலில் ஈடுபட ஊக்குவிக்கும் பணிகளைச் செய்து வருகின்றன. பணியாளர் தேர்வாணையங்களால் நடத்தப்பெறும் போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு பணி வாய்ப்புகளைப்பெற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மனுதாரர்களுக்கு முன்பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றன. மேலும், விரைவில் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு உதவிடும் வகையில் தொழில்நெறி வழிகாட்டும் பேச்சுகளை மாணவர்களுக்கு அளித்தல், தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகளை கல்வி நிலையங்களில் நடத்துதல், போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்க தன்னார்வப்பயிலும் வட்டங்களை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தொடங்கி செயல்படுத்துதல் போன்ற தொழில்முறை வழிகாட்டிப் பணிகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தவிர்த்து படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 3 ஆண்டுத் திட்டம் வகுத்து வேலைவாய்ப்புகள் உருவாக்குவதற்கான நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## இணைப்பு

30-6-1999 அன்றுள்ளபடி தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற பதிவுதாரர்களின் விவரம்:



| | கல்வித் தகுதி | தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் பதிவுதாரர் களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | (1) | (2) |
| (1) | உயர்நிலைப் பள்ளிக் கல்வி (S.S.L.C) | 13,76,035 |
| (2) | மேல்நிலைக் கல்வி (H.S.C) | 8,52,759 |
| (3) | பட்டதாரிகள் | |
| | (அ) கலை | 1,29,201 |
| | (ஆ) அறிவியல் | 1,14,910 |
| | (இ) வணிகவியல் | 92,616 |
| (4) | முதுநிலைப் பட்டதாரிகள் | |
| | (அ) கலை | 18,236 |
| | (ஆ) அறிவியல் | 21,416 |
| | (இ) வணிகவியல் | 7,315 |
| (5) | தொழிற் கல்வியில் பட்டதாரிகள் | |
| | (அ) பொறியியல் | 38,816 |
| | (ஆ) மருத்துவம் | 4,118 |
| | (இ) கால்நடை மருத்துவம் | 1,126 |
| | (ஈ) சட்டம் | 11 |
| | (உ) வேளாண்மை | 2,436 |
| (6) | தொழில் கல்வியில் முதுநிலைப் பட்டதாரிகள் | |
| | (அ) பொறியியல் | 2,418 |
| | (ஆ) மருத்துவம் | 418 |
| | (இ) கால்நடை மருத்துவம் | 68 |
| | (ஈ) சட்டம் | 34 |
| | (உ) வேளாண்மை | 1,012 |
| (7) | பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் | 1,62,113 |
| (8) | தேசிய தொழிற் கல்வி சான்றிதழ் பெற்றவர்கள் | 1,69,725 |
| (9) | தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் பெற்றவர்கள் | 35,945 |
| | மொத்தம் .. .. | **30,30,628** |

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னித்துக்கொள்ள வேண்டும். அந்த விவர அறிக்கையை நான் பார்க்கவில்லை. ஆனால், ஒன்றை மட்டும் கேட்பதற்கு அனுமதி

[2000 ஏப்ரல் 7

வழங்க வேண்டும். 1958 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சியிலே 12 அம்சத் திட்டம் என்று, ஒவ்வொரு ஊராட்சியிலும் 10 பேருக்கு வேலைவாய்ப்பு, 356 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் ஒவ்வொன்றிலும் 100 பேருக்கு வேலைவாய்ப்பு என்று கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, மத்திய அரசின் உதவியை வைத்து திருச்சியிலே BHEL தொழிற்சாலை, பெரம்பூரில் Integral Coach Factory என்று ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால் பல இலட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஆகையினால், இப்போது படித்து வேலையில்லாமல் அலைகின்ற இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் அரசாங்கம் ஒரு மூன்றாண்டுத் திட்டம் போட்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தயவுசெய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புகள் தருவது குறித்து அரசு பல்வேறு திட்டங்களின் மூலம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால், வேலைவாய்ப்பு அலுவலகத்தைப் பொறுத்தவரையில், அது வேலை தரும் அலுவலகமல்ல. வேலை அளிப்போருக்கும், வேலை வேண்டும் என்று இருப்போருக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து, தகவல்களைப் பெற்று, வயது, கல்வித் தகுதி, பதிவு மூப்பு, இட ஒதுக்கீடு ஆகியவற்றின் அடிப்படையிலே நேர்முகக் காணலுக்கு பட்டியல் கேட்டால் அனுப்பி வைக்கும் பணியைச் செய்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 254, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**254—**

**நீதிமன்றத்திற்குக் கட்டடம்**

***24762—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 7]

(அ) போடிநாயக்கனூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் Munsif Court-க்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போடிநாயக்கனூரில் உள்ள மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில் இயங்கி வருவதால், அதற்கான கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 255, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**255—**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

***29953—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி நகரிலுள்ள அரசினர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் சிவகிரி நகரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. எனினும், வாசுதேவநல்லூரில் சீர்மரபினர் மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அவ்விடுதிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள சிவகிரியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக அந்த மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டுவதற்கு பல்வேறு நேரங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு

[2000 ஏப்ரல் 7

மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த இடத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரடியாக வந்து இதுவரை நிலத்தைத் தேர்வு செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, மீண்டும் மறுபரிசீலனை செய்து சிவகிரியிலுள்ள மாணவர்களுக்கு விடுதியைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கு ஏற்பவும், அரசினுடைய நிதிநிலைமைக்கு உட்பட்டும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 256, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

வினா எண் 257, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**257—**

### நிழற்படம்

***28064—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரப் பதிவின்போது, பத்திரத்தில் நிழற்படம் ஒட்டப்பட்டுப் பதிவு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பத்திரப் பதிவின்போது பத்திரத்தில் நிழற்படம் ஒட்டப்பட்டு பதிவு செய்யும் செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்தது. நிழற்படம் ஒட்டப்பட்டு பதிவு செய்யும் முறை பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கு இடையூறுகளையும், அசௌகரியத்தையும் ஏற்படுத்தும் என்பதால் இச்செயற்குறிப்பு தேவையற்றது என முடிவு செய்யப்பட்டு கைவிடப்பட்டது.



2000 ஏப்ரல் 7]

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பத்திரப் பதிவுகளின்போது, சில பத்திரப் பதிவுகளிலே, போலியாக பத்திரங்களைத் தயார் செய்து, அந்தச் சொத்துகளை பல பேரிடம் விற்றுவிடக்கூடிய அவலமான சூழ்நிலைகள் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, real estate போன்ற வியாபாரங்களில் ஒரே இடத்தை, 10, 15 பேர்களுக்கு விற்று ஏமாற்றிவிடுகிறார்கள். அதேபோல, மோசடிப் பத்திரங்களையும் தயாரித்து விற்றுவிடுகிறார்கள். எனவே, பத்திரப் பதிவிலே நடைபெறுகின்ற முறைகேடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு, பத்திரப் பதிவின்போது, உரிமையாளருடைய புகைப்படம் ஒட்டி அதை அமல்படுத்தினால் இத்தகைய தவறுகள் நடப்பது தவிர்க்கப்படும் என்கிற காரணத்தினாலே, அதை விரைந்து பரிசீலித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஒரு பத்திரம் பதிவு செய்யப்படுகின்றபோது அதற்கான பத்திர ஆவண எழுத்தர் ஒருவர் இருக்கின்றார். நம்முடைய தமிழ்நாடு ஆவண எழுத்தர் சட்டத்திட்டத்திலே அப்படி தவறாக அவர் எழுதினால், அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், அதைக் cancel செய்வதற்கும் உரிய நடைமுறைகள் இருக்கின்றன. ஆனால், அதேசமயத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நிழற்படம் ஒட்டினால் அப்படிப்பட்ட தவறுகள் நடக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். நிர்வாக சீர்திருத்தம் மற்றும் ஊழல் ஒழிப்புக்காக நியமிக்கப்பட்ட இராமானுஜம் குழுவிலே இதற்கான பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இந்தியாவிலே பஞ்சாபிலேயும் காஷ்மீரத்திலேயும்தான் தீவிரவாதிகள் அதிமாக இருக்கின்ற காரணத்தினால், இது மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் இந்த நடைமுறை இல்லை. இருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்த அளவில் வாங்குவோரும் கையெழுத்திட வேண்டும் என்று நம்முடைய பதிவுச் சட்டத்தில் 34-வது பிரிவிலே ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டுவரவிருக்கிறோம். முன்பு வாங்குவோர் கையெழுத்திடுவதில்லை. எங்கிருந்து வேண்டுமானாலும் சொத்தை வாங்கிக்கொள்ளலாம். அமெரிக்காவிலிருந்தோ அல்லது எந்தவொரு வெளிநாட்டிலிருந்தோ எந்த ஊரிலிருந்தோ வாங்கிக்கொள்ளலாம். விற்பவர் மட்டும்தான் கையெழுத்து போட வேண்டுமென்ற நிலை இருந்தது. இப்பொழுது, பினாமியாகப் பதிவு செய்வதைத் தடுப்பதற்காக, வாங்குபவரும் பத்திரப் பதிவாளர்

[2000 ஏப்ரல் 7

அலுவலகத்திற்கு வந்து கையெழுத்து இடவேண்டுமென்ற முறை குறித்து தற்சமயம் சட்டத் துறையினுடைய ஆய்விலே இருக்கின்றது. விரைவிலே அந்தச் சட்டம் இந்த மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டு, நம்முடைய குடியரசுத் தலைவருடைய அனுமதிக்காக அனுப்பப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 258, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**258—**

## இளைஞர்களுக்கு வாரியம்

***25504—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக இளைஞர்களை நல்வழிப்படுத்தி சமுதாயச் சீர்கேடுகளைக் குறைக்க இளைஞர்களுக்காக ஒரு வாரியம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இளைஞர்களுக்காக தனி வாரியம் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சமுதாயத்திலே இளைஞர்களெல்லாம் ஒரு சீரழிவான சூழ்நிலையிலே போய்க்கொண்டிருக்கின்ற காட்சிகளையெல்லாம் பார்க்கிறோம். குறிப்பாக, நேற்றைக்கு முன்தினம்கூட, சில கல்லூரி இளைஞர்கள் Bus Day என்று சொல்லி, bus-லே ஏறி, பல இடங்களிலே பொது ஜனங்களுக்கு இடைஞ்சல் செய்து கொண்டிருந்ததையெல்லாம் நாம் பத்திரிகையிலே படித்தோம். இந்தச் சூழ்நிலையிலே இதுபோன்ற இளைஞர்களுக்கு ஒரு வாரியம் ஏற்படுத்தி, அவர்களை ஒழுங்குபடுத்தி, அவர்களுக்கு வேலைவாய்ப்பு போன்ற வேண்டிய உதவிகளைச் செய்தால், அவர்களை நல்ல இளைஞர்களாக மாற்ற முடியும் என்ற எண்ணத்திலேதான் இந்த இளைஞர் நல வாரியம் வேண்டுமென்று கேட்டேன். அதை மறுபரிசீலனை செய்ய அமைச்சர் ஆவன செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களுடைய நல வாரியமாகத்தான் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், தொழிற் பள்ளிகள், தொழிற் கல்லூரிகள் இவையெல்லாம் செயல்பட வேண்டுமென்பது அரசினுடைய விருப்பம்; சமுதாய நோக்கமும்கூட. அந்த இளைஞர்கள் கோடிக்கணக்கிலே இருக்கிற காரணத்தால், ஒரு வாரியத்தின் மூலமாக அவர்களை எந்தவகையிலேயும் திருத்துவது என்பது இயலாது. சாரணர் இயக்கம், தேசிய நலத் திட்ட இயக்கம், N.C.C. இயக்கம், Red Cross அமைப்பு இன்னும் சொல்லப்போனால், பள்ளிக்கூடங்களிலே நடைபெறுகிற மன்றங்கள், அவைதவிர, பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலமாக அந்த மாணவர்களோடு கொள்கிற உறவு, இப்படி இவையெல்லாம் சேர்ந்து சமுதாயத்தினுடைய ஒட்டுமொத்தமான உணர்வுதான் இளைஞர்களுக்கு வாரியமாக அமையமுடியுமே தவிர, எந்தவொரு தனி அமைப்பும் இதனை நிறைவேற்ற முடியாது. இன்னும் சொல்லப்போனால், மோகன் கந்தசாமி, அன்பழகன், பாலகிருஷ்ணன் போன்ற மூத்தவர்களேதான் வாரியமாகத் தங்களைக் கருதிக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 259, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**259—**

## தொடக்கப் பள்ளி தொடங்குதல்

***24243—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, ஆலடிநத்தம் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக தொடக்கப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 ஏப்ரல் 7

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியிலுள்ள ஆலடிநத்தம் கிராமம் முழுமையாக ஆதிதிராவிட மக்களைக் கொண்டது. கல்வி வசதி பெறுவதற்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அந்தக் கிராமத்திலே இல்லாத ஒரு நிலையில், ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக தொடக்கப்பள்ளி தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா? அப்படி இல்லையென்றால், கல்வித் துறையின் மூலமாகவாவது அதற்கான நடவடிக்கை எடுப்பதற்குப் பரிந்துரை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாகப் புதிதாகப் பள்ளிகள் தொடங்குவது இல்லை. கல்வித் துறையின் மூலமாக ஒவ்வோர் ஆண்டும் ஆதிதிராவிடர் நலக் குடியிருப்புகளுக்குப் பள்ளிக்கூடங்கள் ஒதுக்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் நலக் குடியிருப்புகளில் 18 விழுக்காடு ஒதுக்க வேண்டும் என்பது, அரசின் கொள்கையாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இது கல்வித் துறை சம்பந்தப்பட்ட ஒன்று என்பதால், கல்வித் துறையை அணுகினால், சாத்தியக்கூறுகள் இருப்பின், பள்ளி தொடங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 260, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**260—**

### மீன் பண்ணை

***29422—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 7]

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலுள்ள மீன்பண்ணை செயல்படாததால் அதை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலே மீன் பண்ணை ஒன்றை அமைத்து, ஏராளமான, விதவிதமான மீன்களை வளர்த்து, வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் விற்பனை செய்துகொண்டு வந்தார்கள். ஆனால், அது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே, பல ரகமான மீன்கள், விரால் மீன்கள், ரோகு, கட்லா போன்ற மீன்கள் எல்லாம் இனவிருத்தி செய்யப்பட்டு, அவற்றை விற்பனை செய்ததன் பயனாக, நல்ல லாப நோக்கத்தோடு இயங்கி வந்த அந்த மீன் பண்ணை, தற்போது இயங்காமல், வெறும் தொட்டிகளாக இருக்கிறது. அதனால், அரசுக்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஆகிறது. அதை விரைவில் செயல்படுத்த, அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பண்ணையானது, தரைமட்டத்திற்குக் கீழே இருப்பதால், அது நெடுநாட்களாக இயங்காத சூழ்நிலை இருந்ததன் காரணமாக பழுதடைந்திருக்கிறது. வருங்காலங்களில், மத்திய, மாநில அரசுகளின் நிதியைப்பெற்றுப் பகுதிப் பகுதியாக அதைச் சீரமைக்க அரசு பரிசீலிக்கும்.

[2000 ஏப்ரல் 7

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (ஏழாவது மற்றும் எட்டாவது பட்டியல்கள்*)

### ஏழாவது பட்டியல்

1—

**காவல் துறை அதிகாரிகள்**

**வினா 22284—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிகார அத்துமீறல் மற்றும் பொய் வழக்குகள் பதியும் காவல் துறை அதிகாரிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அதிகார அத்துமீறல்கள் செய்யும் அல்லது பொய் வழக்குகள் போடும் காவல் துறை அலுவலர்கள்மீது காவல் ஆணை எண் 145-ன்படி கோட்டாட்சியரின் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், அவர்கள்மீது கடுமையான துறை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தகுந்த தண்டனையும் அளிக்கப்படுகிறது.

2—

**நல்லிணக்கம்**

**வினா 23169—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறை—பொதுமக்களுக்கிடையே உணர்வுபூர்வமான நல்லிணக்கத்தை உருவாக்கும் அரசின் திட்டமென்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் துறை—பொதுமக்களிடையே உணர்வுபூர்வமான நல்லிணக்கத்தை உருவாக்குவதில் அரசு தீவிரமாக உள்ளது. அதற்காக கீழ்க்கண்ட முயற்சிகளை எடுத்துள்ளது:

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2000 ஏப்ரல் 7]

(1) காவல் நிலையத்தில் பொதுமக்கள் அளிக்கும் புகார்களைப் பதிவு செய்து புகார்களைப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகைச் சீட்டை அவர்களிடம் கொடுக்க வேண்டும் என அரசாணை (நிலை) எண் 865. நாள் 9-6-1997-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(2) காவலர்கள் பொதுமக்களை மனிதநேயத்துடன் நடத்த வேண்டும் என்று அரசு பலமுறை அறிவுரைகள் வழங்கியுள்ளது. மனித உரிமைகளைப் பற்றிய ஒரு பாடத்தையும், காவலர்கள் பயிற்சியில் அரசு ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து மாவட்டந்தோறும் கருத்தரங்குகளை நடத்துவதற்காக ரூ.10 இலட்சம் நிதியையும் அரசாணை (நிலை) எண் 857. நாள் 2-7-1998-ல் அரசு வழங்கியுள்ளது.

(3) தமிழ்நாட்டிலுள்ள காவல் நிலையங்களில் பொதுமக்கள் உட்காருவதற்காக நாற்காலிகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக அரசு ரூ.2,45,60,000/- செலவினம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 870. நாள் 6-7-1998-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

(4) காவலர்கள் பயிற்சியின்போது அவர்களுக்கு இதுகுறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

3—

**மொபெட் திருட்டு விவரம்**

**வினா 23884—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997-98ஆம் ஆண்டு ஜூன் 1998 வரை மொபெட் வண்டிகள் திருட்டுப்போயின என்று எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

(ஆ) எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(இ) எவ்வளவு வண்டிகள் திரும்ப உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன?

[2000 ஏப்ரல் 7

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 5409 வழக்குகள்

(ஆ) 3574 பேர்கள் கைது

(இ) 2775 வண்டிகள்

4—

## தீயணைப்பு நிலையங்கள்

**வினா 29549ஏ—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம், தொப்பூர் ஆகிய ஊர்களில் தீயணைப்பு நிலையங்களை அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஓரிடத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டுமானால் அவ்விடத்தில் மக்கட்தொகை 50,000 இருக்க வேண்டுமென்பது, தீயணைப்பு நிலையம் அமைக்க வரையறுக்கப்பட்ட முக்கிய அளவுகோல்களில் ஒன்றாகும். தொப்பூர் மற்றும் கிருஷ்ணாபுரம் ஆகிய இடங்களில் மக்கள்தொகை 50,000-க்கு குறைவாக உள்ளதாலும், தீயணைப்பு மற்றும் மீட்பு அழைப்புகள் மிகக் குறைவாக உள்ளதாலும் அங்கு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியநிலை தற்போது எழவில்லை.

5—

## பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

**வினா 23239—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2000 ஏப்ரல் 7]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்த அரசின் நெறிமுறைகளை நிறைவு செய்து எந்தப் பள்ளிகளிலிருந்தும் கருத்துரு பெறப்படவில்லை.

6—

## மாணவ, மாணவியர்களுக்குப் பாடநூல்கள்

**வினா 24136—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில் இலவசப் பாட நூல் வழங்கும் திட்டத்தின்படி 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்ட பாடநூல்களின் ரூபாய் மதிப்பு எவ்வளவு?

(ஆ) இதனால் எவ்வளவு மாணவ, மாணவியர்கள் பயன் அடைந்தார்கள்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்படி 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு ரூ.2232.95 இலட்சம் மதிப்புடைய பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

(ஆ) 61.65 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைந்து உள்ளனர்.

[2000 ஏப்ரல் 7

7—

### உயர்நிலைப் பள்ளி

**வினா 30168—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், தொறவலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தகுதி உயர்த்தப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க.அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம் திருப்பூர், தொறவலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரி கருத்துரு எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

8—

### குடிநீர் வசதி

**வினா 31430—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், பூலாங் குடியிருப்பு அரசினர் தொடக்கப் பள்ளியில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே குழாய் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 7]

9—

### கட்டடம் கட்டுதல்

**வினா 31460—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் கிளை நூலகத்தை விரிவுப்படுத்தி சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் கிளை நூலகம் 720 சதுர அடியில் மேற்கூரை ஓடுகளால் அமைந்த சிறிய சொந்தக் கட்டடத்தில் செயல்படுகிறது. இதனை விரிவுப்படுத்த காலி நிலம், கூடுதலாக இல்லாததால் விரிவுபடுத்த இயலாத நிலை உள்ளது.

10—

### நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா 31475—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி நல்லம்பள்ளி ஒன்றியம், நாகூர் கூடல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நாகூர்கூடல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி 1999-2000 ஆம் கல்வி ஆண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 7

11—

**ஆசிரியர் பணியிடம்**

**வினா 31721—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், கற்குடி, தெற்குமேடு ஆகிய கிராமங்களில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் காலியாக உள்ள தலைமை ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இரு பள்ளிகளிலும் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு 3-8-1999 முதல் பணி புரிந்து வருகின்றனர்.

12—

**பள்ளிக்கு வசதி**

**வினா 31850—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், தவணை அரசு தொடக்கப் பள்ளியில் கழிப்பறை வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், தவணை அரசு தொடக்கப் பள்ளியில் கழிப்பறை வசதி செய்து கொடுக்க போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர்/



2000 ஏப்ரல் 7]

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து இதனை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

13—

**இலவசப் பாடநூல்**

**வினா 33018—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் கல்வியாண்டில் தமிழக அரசு 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு எவ்வளவு இலவசப் பாடநூல்கள் வழங்கியது?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு ரூபாய்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் கல்வி ஆண்டில் தமிழக அரசால் 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு 3,21,96,447 புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) வழங்கப்பட்ட புத்தகங்களின் மதிப்பு ரூ. 39,60,81,902/- ஆகும்.

14—

**படுக்கை வசதி**

**வினா 14896—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மற்றும் ஒன்றியம், சித்தூரில் இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள உள்நோயாளி படுக்கை வசதியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையம், ஒரு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஆகும். இதில் ஒப்பளிக்கப்பட்டுள்ள படுக்கைகள் 6 ஆகும். சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பயன்பெறும் உள்நோயாளிகள் மற்றும் பிரசவங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான படுக்கை வசதிகள் உள்ளதால் தற்போது உள்நோயாளிகள் படுக்கை வசதியை அதிகரிக்கும் திட்டம் ஏதுமில்லை.

**15—**

### மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா 23771—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மாவட்டத் தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் கட்டப்பட்டு வரும் புறநோயாளிப் பிரிவு கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மாவட்டத் தலைமையிட மருத்துவமனை புதிய வளாகத்தில் கட்டப்பட்டு வந்த வெளி நோயாளி பிரிவு கட்டடம் 2-12-1999 அன்று பொதுப் பணித் துறையினரிடமிருந்து மருத்துவத் துறை பெற்றுக்கொண்டுவிட்டது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



**16—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 24716—திரு. கோ. தளபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரையூரில் செயல்பட்டு வந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மேலப்பட்டிக்கு மாற்றித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், பேரையூரில் செயல்பட்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையம் வட்டார மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டது. எனவே, பேரையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேலப்பட்டி கிராமத்திற்கு மாற்ற இயலாது. மேலப்பட்டி கிராம மக்கள்தொகை 3,300 ஆகும். இக்கிராமத்திற்கு 10.கி.மீ. தொலைவில் பேரையூர் அரசு மருத்துவமனை செயல்படுகிறது. மேலும் மேலப்பட்டி கிராமம் அடங்கிய தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்குப் போதுமான அளவில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மேலப்பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**17—**

### மருத்துவமனையில் கூடுதல் வசதிகள்

**வினா 26960—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியிலுள்ள சத்தியமங்கலம் தலைமை அரசு மருத்துவமனையில் குடிநீர், விளக்கு,

[2000 ஏப்ரல் 7

படுக்கைகள் போன்ற தேவையான அடிப்படை வசதிகள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சத்தியமங்கலம் அரசு மருத்துவமனை தற்சமயம் 76 படுக்கைகள் வசதியுடன் செயல்பட்டு வருகின்றது. இம்மருத்துவமனைக்குத் தேவையான குடிநீர், ஆழ்குழாய் மற்றும் நகராட்சிக் குழாய் மூலம் பெறப்படுகிறது. தற்போது தேவையான குடிநீர் கிடைக்கப் பெறுகின்றது. 76 படுக்கைகளுக்குத் தேவையான கட்டில், மெத்தை மற்றும் விரிப்புகள் அனைத்தும் வழங்கடபட்டுள்ளன. 1999-2000-ஆம் நிதி ஆண்டில் மின் பணிகளுக்காக ரூ.40,000 ஒதுக்கப்பட்டு மின் பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டு, தற்போது போதுமான விளக்கு வசதிகள் உள்ளன.

(ஆ) இக்கேள்வி எழவில்லை

**18—**

**மருத்துவமனையை விஸ்தரித்தல்**

**வினா 27135—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அகற்றி மருத்துவமனைகளை விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அகற்றி மருத்துவமனையை விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அகற்றுவதற்குத் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களைத் தொடர்புகொண்டு உரிய உடனடி நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து நலப்பணிகள் இணை இயக்குநர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற, ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலத்தில் உள்ள வீடுகளின் மின் இணைப்புகளைத் துண்டிக்க எடப்பாடி மின் வாரிய துணைக் கோட்டப் பொறியாளர் கோரப்பட்டுள்ளார். மருத்துவமனைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தை அளந்து "எப்லைன்" குறித்துவிட்டு, ஆக்கிரமிப்பை அகற்ற எடப்பாடி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**19—**

**துணை சுகாதார நிலையம்**

**வினா 28367—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட மாங்கரை ஊராட்சியைச் சேர்ந்த நல்லாம்பட்டி, ஆதனூர், ரங்காபுரம், வண்ணாத்திப்பட்டி, தாசம்பட்டி, மஞ்சநாயக்கன்அள்ளி ஆகிய கிராமங்களுக்குத் நல்லாம்பட்டியைத் தலைமையிடமாகக்கொண்டு துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 ஏப்ரல் 7

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சியைச் சேர்ந்த நல்லாம்பட்டி, ஆதனூர் மற்றும் இதர 4 கிராமங்கள், நல்லாம்பட்டி துணை சுகாதார நிலையத்தால் பயன்பெறுகின்றன. ரங்காபுரம் மற்றும் இதர 3 கிராமங்கள், ரங்காபுரம் துணை சுகாதார நிலையத்தாலும், தாசம்பட்டி மற்றும் இதர 10 கிராமங்கள், தாசம்பட்டி துணை சுகாதார நிலையத்தாலும், மஞ்சநாயக்கன்அள்ளி மற்றும் இதர 4 கிராமங்கள், காடமடை துணை சுகாதார நிலையத்தாலும் பயன்பெறுகின்றன. மத்திய அரசின் வரையறையின்படி 5000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, மீண்டும் நல்லாம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**20—**

**நோயாளிகளுக்குப் படுக்கை வசதி**

**வினா 28773—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் இராசாமிராசுதார் மருத்துவமனை, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் நோயாளிகளுக்குப் படுக்கை வசதி போதுமானதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் படுக்கை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் அரசு இராசாமிராசுதார் மருத்துவமனையில் 632 படுக்கைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவை இம் மருத்துவமனையின் தேவைக்குப் போதுமானவை என்று



2000 ஏப்ரல் 7]

கருதப்படுவதால் கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**21—**

**மருத்துவமனைகளில் காலிப்பணியிடங்களை நிரப்புதல்**

**வினா 28774—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், இராசாமிராசுதார் மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய இரண்டிலும் மருத்துவர், மருந்தாளுநர், செவிலியர் ஆகிய காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் இராசாமிராசுதார் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய இரண்டிலும் உதவி மருத்துவர் பணியிடங்கள் ஏதும் காலியாக இல்லை. எல்லாப் பணியிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன. தஞ்சாவூர் இராசாமிராசுதார் மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் மருந்தாளுநர்கள் பணியிடம் எதுவும் காலியாக இல்லை. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மொத்தம் 7 செவிலியர் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை-6 அவர்களிடமிருந்து செவிலியர்கள் விடுவிக்கப்பட்டவுடன் மேற்கண்ட காலியிடங்கள் நிரப்பப்படும்.

[2000 ஏப்ரல் 7

22—

**மின் பரிசோதனை அறையை நவீனப்படுத்துதல்**

**வினா 28896—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையிலுள்ள மின் பரிசோதனை அறையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையில் மின் பரிசோதனை அறை என்று தனியாக ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

23—

**சுற்றுச்சுவர் உயர்த்துதல்**

**வினா 29593—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் அரசு மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவரை உயர்த்திக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு மருத்துவமனையின் சுற்றுச் சுவரை உயர்த்திக் கட்டித்தர ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

24—

**பிணவறைக்குக் குளிர்சாதன வசதி**

**வினா 29619—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி அரசு வட்ட மருத்துவமனையில் உள்ள பிணவறைக்குக் குளிர் சாதன வசதி செய்துதரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்சமயம் இல்லை. மாநிலத்திலுள்ள அனைத்து வட்ட மருத்துவமனைகளிலும் பிணவறைகளுக்குப் படிப்படியாக குளிர்சாதன வசதி செய்துதருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசின் நிதி ஆதாரத்தைக் கருத்திற்கொண்டு பரமக்குடி அரசு மருத்துவமனையில் உள்ள பிணவறைக்குக் குளிர்சாதன வசதி செய்துதரும் செயற்குறிப்பு எதிர்காலத்தில் பகுதி-II திட்டமாகக் கொண்டுவரப்படும்.

25—

**கட்டடம் கட்டுதல்**

**வினா 29644—திரு. உ. திசைவீரன்:** மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி வட்ட மருத்துவமனையில் குழந்தைகள் நல சிகிச்சைப் பிரிவிற்குத் தனிக் கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2000 ஏப்ரல் 7

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பரமக்குடி வட்ட மருத்துவமனையில் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் மற்றும் சிசு சிகிச்சைப் பிரிவிற்கான கட்டடம் ரூ. 12.00 இலட்சம் செலவில் கட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டடப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

26—

**கழிவுப் பொருள் எரிக்கும் சாதனம் பொருத்துதல்**

**வினா 31548—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் அரசு மருத்துவமனையில் கழிவுப்பொருள் எரிக்கும் சாதனம் பொருத்தும் பணி முடிந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் செயல்பாடுகளின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் அரசு தலைமை மருத்துவமனையில் கழிவுப்பொருள் எரிக்கும் சாதனம் பொருத்தும் பணி முடிந்து தற்போது உபயோகத்தில் உள்ளது.

27—

**வீட்டுமனைப்பட்டா**

**வினா 19312—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 7]

(அ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், பம்மதுகுளம் ஊராட்சியில் அடங்கிய இந்திரா நகர், பம்மதுகுளம் காலனி, பெருமாள் நகர், எல்லம்மன்கோட்டை, இலட்சுமிபுரம், பம்மதுகுளம், மேட்டுப்பாளையம், சரத்துகண்டிகை, ஏர்ராங்குப்பம் ஆகிய கிராம மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், பம்மதுகுளம் ஊராட்சியில் அடங்கிய மேற்கண்ட கிராமங்கள், சென்னை நகரிலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ளன. சென்னையிலிருந்து 32 கிலோமீட்டர் தூரத்திற்குள் உள்ள இனங்களில் வீட்டுமனை வழங்க தடை உள்ளது. எனவே வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது.

28—

**இலவச மனைப்பட்டா**

**வினா 20105—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கண்ணந்தேரி பஞ்சாயத்திலுள்ள ஒண்டிக்கடை பகுதியில் குடியிருப்பவர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், எடப்பாடி தொகுதி, கண்ணந்தேரி கிராமம், ஒண்டிக்கடை பகுதியில் புல எண் 102/5-ல் உள்ள நிலம் லோக்கல் பண்டு சாலை புறம்போக்கு என்ற வகைப்பாடு உடையது. இந்த நிலத்தை ஒப்படை செய்ய நெடுஞ்சாலைத் துறை ஆட்சேபனை செய்வதால் ஆக்கிரமதாரர்களுக்குப் பட்டா வழங்க இயலவில்லை.

29—

### நிலப் பட்டா

**வினா 22033—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் தொகுதி, மூக்கணாம் பள்ளி ஊராட்சி, சின்ன ஏலகிரி கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் வசிப்பவர்களுக்கு நிலப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், மூக்கணாம் பள்ளி தரப்பு, சின்ன ஏலகிரி கிராமம், புல எண் 714-ல் உள்ள 1.94.0 எக்டேர் நிலம் மேய்ச்சல் தரை புறம்போக்கு ஆகும். இந்நிலத்தில் வீடுகட்டி வசித்துவரும் நபர்களுக்கு இந்நிலத்தை கிராம நத்தமாக நிலவகை மாற்றம் செய்து பட்டா வழங்க தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

30—

### பட்டா வழங்குதல்

**வினா 24865அ—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டி ஒன்றியம், ஜாரி விராலிப்பட்டி பஞ்சாயத்து, சிறுமலை மீனாட்சிபுரம் கிராமத்தில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டி வட்டம், விராலிப்பட்டி கிராமம், புல எண் 1/1, தீர்வை ஏற்படாத தரிசு என்று முந்தைய கிராமக் கணக்குகளில் இருந்தது. அந்நிலம்



தற்போது ஒதுக்கப்பட்ட வகைக் காடுகளாக மாற்றப்பட்டு வனத் துறையின் பொறுப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே பட்டா வழங்க இயலாது.

31—

### கிராமச் சாவடிகளைப் புதுப்பித்தல்

**வினா 25451—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்திலுள்ள பழுதடைந்த கிராமச் சாவடிகளைப் புதுப்பித்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முழுவதிலும் செப்பனிடப்பட வேண்டிய நிலையிலுள்ள கிராமச் சாவடிகளை தற்போதுள்ள நிதிநிலையில ஒட்டுமொத்தமாக செப்பனிட இயலாத நிலை உள்ளது. எனவே, ஆண்டுதோறும் நிதிநிலைக்கேற்ப பகுதி-2 திட்டத்தில் சேர்த்து காலக்கிரமத்தில் பழுதடைந்த கிராமச் சாவடிகளைப் பழுதுபார்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இது ஒரு தொடர் நடவடிக்கையாதலால் எப்போது இப்பணிகளை முடிக்க இயலும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற இயலாது.

32—

### வெள்ள நிவாரண நிதி

**வினா 27391—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதிக்கு வெள்ள நிவாரணத்தின்பொருட்டு 1998-99-க்கு வழங்கப்பட்ட நிதி உதவி எவ்வளவு?

(ஆ) ஒன்றிய வாரியாக அதன் விவரம் என்ன?

[2000 ஏப்ரல் 7

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ரூ.1.81 லட்சம்

| | | |
|---|---|---|
| (ஆ) (1) மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்கு | ரூ. | 24,000 |
| (2) கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு | ரூ. | 1,04,000 |
| (3) எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு | ரூ. | 53,000 |
| மொத்தம் | ரூ. | 1,81,000 |

33—

## பூமி அதிர்ச்சி

**வினா 27395—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம மாவட்டத்தில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) இந்த இயற்கை விபரீதம் குறித்து அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 25-8-1998 மற்றும் 25-11-1998 ஆகிய தேதிகளில் சில இடங்களில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இதனால் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

(ஆ) தமிழ்நாடு உட்பட தக்காண பீடபூமியில் ஏற்படும் நில நடுக்கத்தைக் கண்காணிப்பதற்காக இதுவரை காரைக்காலில் இயங்கி வந்த மத்திய அரசின் இந்திய வானியல் துறையினைச் சார்ந்த நில நடுக்கப்பிரிவு (Seismography Unit) தற்போது சேலம் நகருக்கு மாற்றப்பட்டு 24-9-1999 முதல் அங்கு இயங்கி வருகிறது. ஆயினும் சேலத்தில் தனியாக ஒரு நில நடுக்க இணைவுறு மையம் (Seismic Array Station) ஏற்படுத்தித்தர மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 7]

34—

## தீ விபத்து விவரம்

**வினா 32947—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி தமிழ்நாட்டில் எத்தனை இடத்தில் தீ விபத்து நடந்துள்ளது?

(ஆ) அதன் விவரம் மற்றும் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) 1999ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதி அன்று தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் தீ விபத்து நடந்துள்ளது.

(ஆ) சென்னை மாவட்டத்தில், மாம்பலம்-கிண்டி வட்டம், நெசப்பாக்கம் கிராமத்திலும், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், பண்டகபாடி கிராமத்திலும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இத்தீவிபத்தினால் எவ்வித மனித உயிர் சேதமோ, கால்நடைச் சேதமோ ஏற்படவில்லை. சென்னை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் மேற்சொன்ன கிராமங்களில் தலா ஒரு குடிசை வீதம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குடிசைகளின் உரிமைதாரர்களுக்கு, அரசு நிவாரணமாக, தலா ரூ.1,000 மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்பட்டுள்ளது.

35—

## ஆய்வுக் குழு அமைத்தல்

**வினா 33271—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பல்வேறு வகையான புறம்போக்கு நிலங்களை (காட்டுப் புறம்போக்கு, ஏரி, வாரி புறம்போக்கு) ஆய்வு செய்ய ஒரு குழு அமைத்து நிலங்களை பகுத்துப் பிரிவினை செய்ய அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 7

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசு புறம்போக்கு நிலங்கள் ஏற்கனவே அதன் தன்மைக்கேற்ப காட்டுப் புறம்போக்கு ஏரி, வாரி, மந்தைவெளி, மயானம், வாய்க்கால், பாட்டை, கண்மாய், குட்டை என்று பலவாறாகப் பிரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**36—**

### நிலங்கள் ஒதுக்கீடு

**வினா 33327—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் வீட்டுமனை இல்லாத ஏழை எளிய மக்களுக்குப் புறம்போக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த நான்காண்டு காலத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு கீழ்க்கண்டவாறு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது:—

| வருடம் | வழங்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| 1996-97 | 4686 |
| 1997-98 | 5011 |
| 1998-99 | 3857 |
| 1999-2000 (31-12-1999 முடிய) | 2600 |



2000 ஏப்ரல் 7]

**37—**

### சாலையை சீரமைத்தல்

**வினா 11152—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கறம்பக்குடியிலிருந்து குளத்திரான்பட்டு செல்லும் பழுதடைந்துள்ள சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கறம்பக்குடி-கொளத்திரான்பட்டி சாலையானது இதர மாவட்ட சாலையாகும். சிவவிடுதி-குளத்திரான்பட்டு சாலை கி.மீ. 0/0-4/8 ஆகும். இச்சாலையில் மிகவும் மோசமான பகுதியான கி.மீ. 0/0-1/0 சாலை வரையிலான பகுதிக்கு 1.90 லட்சங்களுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு 5-12-1998-ல் பணி முடிக்கப்பட்டது. தற்போது போக்குவரத்துக்கு ஏற்றவகையில் உள்ளது.

**38—**

### தார்ச் சாலை

**வினா 12239—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சி, சேலம்-எடப்பாடி நெடுஞ்சாலையில் பிரிந்து ஒண்டிப்பனைபிரிவு சாலையிலிருந்து பச்சியாய்கோவில் வழியாகச் செல்லும் பாதை மிக மோசமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

[2000 ஏப்ரல் 7

(ஆ) உடனடியாக இங்கு தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி, மகுடஞ்சாவடி நெடுஞ்சாலையிலிருந்து ஒண்டிப்பனைப் பிரிவு சாலை பச்சியம்மன்கோவில் வழியாக செல்லும் பாதை 1997-98 வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் எடுத்து தார்ச் சாலையாக மாற்றப்பட்டுவிட்டது.

**39—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13952—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு ஒன்றியம், தரடாப்பட்டு மதுரா அண்ணா நகர் பகுதிக்கு தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஒன்றியம், தரடாப்பட்டு மதுரா அண்ணாநகர் பகுதிக்கான குடிநீர்த் திட்டப் பணிகள் யாவும் முடிக்கப்பட்டு மின் இணைப்புப் பெறப்பட்டு 30-12-1999 முதல் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டு, தரடாப்பட்டு ஊராட்சியிடம் இத்திட்டம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 7]

**40—**

### நடுநிலைப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா 16328—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, சாலைப் பேரூராட்சி கேகேநகர் நடுநிலைப் பள்ளிககுக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி தொகுதி, சாலைப் பேரூராட்சி கேகே. நகர் நடுநிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்கு சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலரிடம் ஊராட்சி ஒன்றியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களான வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

**41—**

### கசிவுநீர்க் குட்டைகள்

**வினா 21341—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99-ல் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் கட்டப்பட்ட உள்ள கசிவுநீர்க் குட்டைகள் எத்தனை?

(ஆ) அதன் விவரம் என்ன? அதற்கான நிதி ஒதுக்கம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99-ல் சேலம் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 72 கசிவுநீர்க் குட்டைகளுக்கு ரூ.122.70 இலட்சங்கள் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

42—

**சாலைகளைச் செப்பனிடுதல்**

**வினா 22167—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர்-பழையூர் சாலை கோளப்பாடி இராமகொண்டஅள்ளி சாலைகளை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஏரியூர் பழையூர் மற்றும் சோளப்பாடி இராமகொண்ட அள்ளி சாலையின் மொத்த நீளம் 23.40 கி.மீ. ஆகும். இதில் நெடுஞ்சாலைத் துறையினால் 16 கி.மீ. சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 7.40 கி.மீ. சாலை பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து 1998-99ஆம் ஆண்டுக்கு ரூ.9,00,000 மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.





43—

**சாலை செப்பனிடுதல்**

**வினா 22764—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கொப்பரூர்-சாமத்தாள் சாலை வழி கலப்பம்பாடி-ஒண்டிக்கோட்டை சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், சாமத்தாள் முதல் ஒண்டிக்கோட்டை வரை கிராமச் சாலைகள் திட்டத்தில் வேலைகள் எடுக்கப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது. மேலும் 1998-99ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் கலப்பம்பாடி முதல் ஒண்டிக்கோட்டை வரை (1/0-2/0) கி.மீ. புதிய சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

44—

**இணைப்புத் திட்டம்**

**வினா 22855—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளகரம், புழுதிவாக்கம்-பேரூராட்சி எல்லையிலுள்ள புல எண் 22/1பி, 23/1,2, 3-ஏ, 4, 24/1,2,3 மற்றும் இவற்றை உள்ளடக்கிய சரஸ்வதி நகர் 1,2,3,4 மற்றும் 5-வது தெருக்களை சென்னை மாநகராட்சியோடு இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

45—

## சாலை செப்பனிடுதல்

**வினா 23341—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளியிலிருந்து நெருப்பூர் வரை செல்லும் சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக அமைத்துக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

46—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா 23343—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, மலையனூர் பிரிவு சாலையிலிருந்து சந்தனக் கொடிக்கால் வழியாக மஞ்சாரஅள்ளி இணைப்பு சாலை வரை சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட்டு, தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, மலையனூர் பிரிவு சாலையிலிருந்து சந்தனக் கொடிக்கால் வழியாக மஞ்சாரஅள்ளிக்கு ஏற்கனவே 3 கி.மீ. அளவுக்கு கற்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையினை பழுதுபார்த்து தார்ச் சாலையாக மாற்றிட பணி 1999-2000 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

47—

## காவலர்கள் பணி வரன்முறை

**வினா 23599—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் 1-4-1981-க்குப் பின்னர் நியமனம் செய்யப்பட்ட ஒன்றிய இரவுக் காவலர்களுக்கு அரசு அலுவலகங்களில் பணிபுரியும் இரவுக் காவலர்களைப்போன்று பணிவரன்முறை, ஊதியம் நாளது தேதி வரை அமல்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

[2000 ஏப்ரல் 7

(அ) 1-4-1981-க்கு பின்னர் நியமனம் செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றிய இரவுக் காவலர்களின் பணிகளை அவர்கள் 10 ஆண்டு காலம் தொடர்ந்து பணி முடித்த பின்னர், ஊராட்சி ஒன்றியங்களில் அவ்வப்போது ஏற்படும் ஏற்பளிக்கப்பட்ட காலிப் பணியிடங்களில் நியமித்து அந்நாளிலிருந்து அவர்களை முறையான பணிக்குக் கொண்டுவரும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியர்களுக்கு, சில நிபந்தனைகளுடன், அளித்து அரசு (நிலை) எண் 267, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 22-12-1999-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

48—

**சிறப்பு நிதி ஒதுக்குதல்**

**வினா 23610—திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், குண்டடம் ஒன்றியம், ருத்ராவதி பேரூராட்சிக்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்பு நிதி, பத்தாவது நிதிக் குழுவின் மானியம் உட்பட எதுவும் வழங்காததால் இவ்வாண்டு சிறப்பு நிதி ஒதுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ருத்ராவதி பேரூராட்சிக்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபாய் 50 இலட்சங்களுக்கும் மேலாக கீழ்க்கண்டவாறு பல்வேறு இனங்களில் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது:—



2000 ஏப்ரல் 7]

| | ஒதுக்கப்பட்ட தொகை | | |
|---|---|---|---|
| | 1997-98 | 1998-99 | 1999-2000 |
| நிதிப் பங்கீடு | 7,57,633 | 9,64,826 | 4,44,182 |
| விற்பனை வரி | .. | 87,356 | 44,994 |
| உள்கட்டமைப்பு | 3,24,400 | 2,47,000 | 3,35,121 |
| 10-வது நிதிக்குழு | 63,115 | 63,000 | 65,869 |
| சிமெண்ட் கான்கிரீட் சாலை.. | .. | .. | 2,00,000 |
| சுவர்ண ஜெயந்தி | .. | 2,00,000 | .. |
| குடிசை மேம்பாடு | 4,25,000 | 4,00,000 | 2,19,365 |
| சந்தை | .. | .. | 1,57,000 |
| மொத்தம் | **15,78,148** | **19,62,182** | **14,66,431** |

சிறப்பு நிதி ஒதுக்கும் திட்டம் ஏதும் நிலுவையில் இல்லை.

49—

**கிணற்றை மூடுதல்**

**வினா 24064—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பட்டாம்பாளையம் சரஸ்வதி ஆயில் மில்லுக்கு அருகில் ரோடு ஓரத்தில் உள்ள பாழடைந்த கிணற்றை மூடிவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், பட்டாம்பாளையம் சரஸ்வதி ஆயில் மில்லுக்கு அருகில் ரோடு ஓரத்திலுள்ள பாழடைந்த கிணறு தற்பொழுது மூடப்பட்டுவிட்டது.

**50—**

### வரி வசூலிப்பாளர்

**வினா 24806—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்த வரி வசூலிப்பாளரும் இல்லை என்பது இடைக்கோடு பேரூராட்சி நிர்வாகம் மூலம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரி வசூலிப்பாளரை நியமனம் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம் இடைக்கோடு பேரூராட்சி ஆரம்பத்தில் ஊராட்சியாக மாற்றிட சம்மதம் தெரிவிக்கப்பட்டதன்பேரில் முதல் நிலை அறிவிக்கை வெளியிடப்பட்டது. பின்னர், இப்பேரூராட்சி தொடர்ந்து பேரூராட்சியாகவே செயல்பட தீர்மானித்ததைத் தொடர்ந்து அரசு இப்பேரூராட்சியை ஊராட்சியாக வகை மாற்றம் செய்யவில்லை. ஊராட்சியாக மாற்றப்பட்டால் வரித்தண்டலர் பணியிடத்தை வேறு பேரூராட்சிக்கு மாற்ற வேண்டி வருமென கருதியதால் அப்பணியிடம் உடன் நிரப்பப்படவில்லை. தற்போது வரி வசூல் பணிக்காக மாற்றுப் பணியில் ஒரு வரித்தண்டலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மற்றொரு பணியிடத்தை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் இருந்து பட்டியல் பெற்று நிரப்ப கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பணியாளர் ஒதுக்கீடு கிடைத்த பின்னர் இப்பணியிடம் பூர்த்தி செய்யப்படும்.





**51—**

### பாலம் கட்டுதல்

**வினா 26121—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம் பின்னையூர் ஊராட்சியில் சிறுசாளுவர் தெருவில் முவிக்கோவில் அருகில் ஒரு பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பின்னையூர் ஊராட்சியில் சிறுசாளுவர் தெருவில் முவிக்கோவில் அருகில் ரூ.5,000 மதிப்பீட்டில் ஊராட்சி நிதியில் இருந்து மரப்பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

**52—**

### சுடுகாடு கோரி மனு

**வினா 26347—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், செரங்காடு (நல்லூர் பேரூராட்சி) பொதுமக்கள் சுடுகாடு கோரி அரசிற்கு மனு அனுப்பியுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில், நல்லூர் பேரூராட்சியில் ச.எண் 700/2ல் 0.97 எக்டேர் நிலம் மயானமாக உள்ளது. இந்த நிலம் திருப்பூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் பராமரிப்பில் உள்ளது. நல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் இந்த இடத்தினை பேரூராட்சியிடம்

[2000 ஏப்ரல் 7

ஒப்படைக்க ஊராட்சி ஒன்றியத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்படி மயானபூமி பேரூராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் நல்லூர் பேரூராட்சி மக்களுக்குப் பயன்படுத்தப்படும்.

**53—**

**மின் வசதி**

**வினா 27248—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சியில் செல்லம்பட்டி சாலையில் உள்ள சுடுகாட்டு சாலையை செப்பனிட்டும், சுடுகாட்டில் மின்வசதியும் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செல்லம்பட்டி சாலையில் உள்ள சுடுகாட்டு சாலையை, செப்பனிட்டு மின்வசதி செய்துதர பேரூராட்சியில் நிதியில்லை. நிதியுதவி பெறப்பட்டபின் முன்னுரிமை கொடுத்து பணிகளை செய்துமுடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**54—**

**தெருவிளக்கு அமைத்தல்**

**வினா 27562—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, அனுமந்தபுரம் கிராமம், அண்ணாநகர், வாத்தியார் கொட்டாய், குட்டம்பட்டி காலனி ஆகிய இடங்களில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, அனுமந்தபுரம் கிராமம், அண்ணாநகரில் தெரு விளக்கு அமைக்க மின் வாரியத்தால் பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. வாத்தியார் கொட்டாய், குட்டம்பட்டி காலனி ஆகிய இடங்களில் 1999-2000 ஆண்டிற்கு சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியாக உள்ளாட்சிகளின் பல்வேறு பணிகளுக்கு ரூ. 73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து தேவைக்கேற்ப மேற்கண்ட இடங்களுக்கு தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்க ஊராட்சி மன்றத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**55—**

**தெருவிளக்கு அமைத்தல்**

**வினா 27564—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, ஒத்தக்காள்சீர் கிராமம், சின்னபையன் வீடு அருகில், அரசன் வீடு அருகில், பொற்றிக்கான் வீடு அருகில் ஆகிய இடங்களில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, ஒத்தக்காள்சீர் கிராமம், சின்னபையன் வீடு அருகில், அரசன் வீடு அருகில், பொற்றிக்கான் வீடு அருகில் ஆகிய இடங்களில் 1999-2000 ஆண்டிற்கு அரசால் உள்ளாட்சிகளின் பல்வேறு பணிகளுக்காக ரூ.73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதியிலிருந்து, தேவைக்கேற்ப மேற்கண்ட இடங்களுக்கு தெரு விளக்குகள் அமைத்துத்தர ஊராட்சிமன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

56—

### தெருவிளக்கு அமைத்தல்

**வினா 27627—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாகலஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பாகலஅள்ளி கிராமம், மருள்காரன்கொட்டாய், குரும்பட்டி, சவளூர் ஆகிய இடங்களில் தெருவிளக்கு அமைக்காமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாகலஅள்ளி ஊராட்சி, பாகலஅள்ளி கிராமம், மருள்காரன்கொட்டாயில் ஏற்கனவே 6 தெருவிளக்குகளும், குரும்பட்டியில் 6 தெருவிளக்குகளும், சவளூரில் 8 தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்களுக்கு இந்தத் தெருவிளக்குகள் தற்போது போதுமானதாக உள்ளது.

57—

### தெரு விளக்கு அமைத்தல்

**வினா 27635—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தளவாய்அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சிறுகளூர் கிராமம், கீழ்வீதியில் புதிதாக தெரு விளக்கு அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தலைவாய்அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சிறுகளூர் கிராமம் கீழ்வீதியில் புதிதாக தெரு விளக்கு அமைக்க, 1999-2000ஆம் ஆண்டிற்கு அரசால் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியிலிருந்து உள்ளாட்சிகளின் பல்வேறு பணிகளுக்காக ரூ.73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து மேற்கண்ட இடங்களுக்குத் தேவைக்கேற்ப தெருவிளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்க ஊராட்சிமன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

58—

### தண்ணீர்த் திட்டம்

**வினா 29964—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விக்கிரவாண்டி பேரூராட்சிக்குத் தனி நபருக்கு 55 லிட்டர் தண்ணீர் வழங்க பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டத்தில் சேர்த்து திட்டத்தை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விக்கிரவாண்டி பேரூராட்சியில் பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

59—

### குடிநீர் வசதி

**வினா 30693—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 7

திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் ஒன்றியம், வீரானந்தல் ஊராட்சி, மேல்குப்பம், அடிவாரம் ஆகிய ஊர்களில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதி செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் ஒன்றியம், வீரானந்தல் ஊராட்சி, மேல்குப்பம் மற்றும் அடிவாரம் குடியிருப்புகளுக்கு, வரும் 2000-2001ஆம் ஆண்டில் மேல்நிலைநீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் மேற்கொள்ள முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**60—**

**கழிப்பறை**

**வினா 32532—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கழிப்பறை இல்லாத ஊராட்சி மன்றக் கட்டடங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் கழிப்பறை வசதி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) எவ்வளவு காலத்திற்குள் கழிப்பறை வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தமிழகத்தில் கழிப்பறை வசதி இல்லாத ஊராட்சி மன்றக் கட்டடங்கள் 4,864. கழிப்பறை வசதி இல்லாத ஊராட்சி மன்றக் கட்டடங்களுக்குக் கழிப்பறை வசதிகளை ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துச்செய்ய அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்குள்



2000 ஏப்ரல் 7]

(31-03-2000க்குள்) மேற்கண்ட வசதிகளைச் செய்துமுடிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**61—**

**சமுதாயக் கூடம்**

**வினா 32877—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி பேரூராட்சி, சந்தைப் பேட்டையிலுள்ள சமுதாயக் கூடத்தைப் பேரூராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி பேரூராட்சி, சந்தைப் பேட்டையிலுள்ள சமுதாயக் கூடம், பேரூராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டு பராமரிப்பில் உள்ளது.

**62—**

**மானிய விலையில் வண்டிகள்**

**வினா 24220—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் டயர் வண்டி வழங்கும் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு திட்டம் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

63—

## நீர்ப்பாசனத்திற்கு நிதி

**வினா 24518—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99ஆம் ஆண்டு சொட்டுநீர்ப் பாசனத்திற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) சேலம் மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(இ) இதில் எத்தனைப் பயனாளிகள் பயன்பெற்றனர்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மைய அரசின் நிதி உதவியுடன் தோட்டக்கலைப் பயிர்களுக்கு விவசாயிகள், சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க 1998-99 நிதி ஆண்டிற்கு மானியம் வழங்க ரூ.1125 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்கப்பட்டது.

(ஆ) 1998-99 நிதியாண்டில் சேலம் மாவட்ட தேவையின் அடிப்படையில் ரூ.15 இலட்சம் சொட்டுநீர்ப் பாசனப் பணிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(இ) 1998-99 நிதி ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சொட்டுநீர்ப் பாசன அமைப்பிற்கென செலவிடப்பட்ட தொகை ரூ. 15.60 இலட்சத்தில் மொத்தம் 68 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

64—

## தானிய விதைகளைக் கொள்முதல் செய்து விநியோகித்தல்

**வினா 30361—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் சிறு தானிய விதைகளைக் கொள்முதல் செய்து விநியோகிக்க, அரசு நடப்பு ஆண்டில் நடவடிக்கை எடுக்குமா?





விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விதைப் பெருக்கத் திட்டத்தின்கீழ் 1999-2000-ஆம் ஆண்டிற்கான விதைக் கொள்முதல் மற்றும் விநியோகம் செய்ய அரசாணை (நிலை) எண் 362, வேளாண்மை, நாள் 16-08-1999-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் 1999-2000ஆம் ஆண்டில் ஐந்து எக்டேர் பரப்பில் விதைப் பண்ணை அமைத்து ஐந்து மெட்ரிக் டன் சிறு தானிய விதைகளான ராகி மற்றும் கம்பு கொள்முதல் செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

65—

## விசைத்தெளிப்பான் வழங்குதல்

**வினா 30855—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் சிறு, குறு விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய விசைத்தெளிப்பான் எத்தனைப் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டு எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கைத்தெளிப்பான் மற்றும் விசைத்தெளிப்பான், மானியத்தில் வழங்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் மொத்தம் வழங்கப்பட்ட விசைத்தெளிப்பான்கள் எண்ணிக்கை 12. அதில் சிறு, குறு விவசாயிகள் 9 நபர்களுக்கு வழங்கப்பட்டது. நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் வழங்கப்பட்ட விசைத்தெளிப்பான்கள் எண்ணிக்கை 20 அதில் சிறு மிகச் சிறு விவசாயிகளுக்கு 15 நபர்களுக்கு வழங்கப்பட்டது. தேசிய பயறு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சிறு, மிகச் சிறு விவசாயிகளுக்கு, சேலம் மாவட்டத்தில் 8 நபர்களுக்கும், நாமக்கல் மாவட்டத்தில் 8 நபர்களுக்கும், விசைத்தெளிப்பான்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. பருத்தி மற்றும் கரும்பு அபிவிருத்தித் திட்டங்களில்

[2000 ஏப்ரல் 7

சிறு. மிகச் சிறு விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய விசைத் தெளிப்பான்கள் வழங்கும் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை.

**66—**

**பாலத்தைச் சீரமைத்தல்**

**வினா 5301—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், சிதம்பரம் கிள்ளை சாலையில் தில்லைநாயகபுரம் அருகில் பழுதடைந்துள்ள சிறிய மதகுப் பாலத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், சிதம்பரம் கிள்ளை சாலையில் தில்லைநாயகபுரம் அருகில் கிள்ளை சாலையினை கடந்து செல்கிற தலைப்பு மதகினைச் சார்ந்த மீதிக்குடி வாய்க்கால் மதகுப் பாலத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் நீக்கப்பட்டு பாலம் 1997-98-ல் சீரமைக்கப்பட்டுள்ளது.

**67—**

**தொழில் தொடங்க கடனுதவி**

**வினா 27478—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம், பகுதியில் வன வளத்தைப் பாதுகாக்கின்ற வகையில் மரம் வெட்டுவதையே தொழிலாகக் கொண்டுள்ள வனப் பகுதி அருகிலுள்ள கிராமப் பொது மக்களுக்கு வேறு தொழில் தொடங்க கடனுதவி வழங்கவும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) குற்றாலம் பகுதியில் வன வளத்தைப் பாதுகாக்கின்ற வகையில் மரம் வெட்டுவதையே தொழிலாகக் கொண்டுள்ள வனப் பகுதி அருகிலுள்ள மக்களுக்கு வேறு தொழில் தொடங்க தொழில் கருவிகளும் வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) வழங்கப்பட்ட உதவிகள் விவரம் வருமாறு:-

குற்றாலம் காப்புக்காட்டிற்கு அருகிலுள்ள மத்தளம்பாறை கிராம மக்களுக்கு அம்பை சமூக வனத் திட்டத்திலிருந்து தையல் இயந்திரம் வழங்கவும், மரக்கன்றுகள் நடவும், 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 4,54,560 செலவு செய்யப்பட்டுள்ளது. இதனால் 11320 பேர் பயனடைந்துள்ளனர். 1998-99 ஆம் ஆண்டில் கறவை மாடுகள் மற்றும் பலவகை இனங்களில் ரூ.1,10,000 செலவு செய்யப்பட்டுள்ளது. இதனால் 10 குடும்பங்கள் உட்பட 770 பேர் பயனடைந்துள்ளனர். இவைதவிர, இக்கிராம மக்களுக்கு ரூ.1,54,037 செலவில் ஆழ்குழாய்க் கிணறுகள், காம்பவுண்ட் சுவர், பொதுக் கழிவறை, தொலைக்காட்சி ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், குற்றாலம் காப்புக்காடு அருகே அமைந்துள்ள காசிதர்மம் கிராமத்தில் 1997-98 ஆம் ஆண்டில் தையல் இயந்திரம், தோட்ட வேலைக்கு மண் வெட்டி, சலவைத் தொழில் செய்ய உதவித் தொகை, கயிறு திரிக்கும் இயந்திரம் வாங்குதல், மண் தோண்டும் உபகரணம், கறவை மாடுகள், சிறு உணவகம் நடத்துதல் ஆகிய இனங்களுக்காக ரூ. 99,460 செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை 61 ஆகும்.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் காசி மேஜர்புரம் குடியிருப்பில் 30 ஏக்கர் நிலத்தில் 2030 தினக்கூலிகள் மூலம் 8,00,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இவைதவிர, தமிழ்நாடு காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் ரகுமானியாபுரம் கிராமத்தில் 340 எக்டேரில் தோட்டங்கள் எழுப்பும் வேலை நடைபெற்று வருகிறது. இதேபோன்று மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் 150 எக்டேர் பரப்பில் மரக் கன்றுகள் நடுதல், மண்வளப் பாதுகாப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தொகையானது ஆயிரப்பேரி, வல்லம், மந்தனம்பாறை மக்களுக்கு போய்ச் சேரும்வகையில் அவர்களது உழைப்புகள் பெற்றுக்கொள்ளப்படும்.

மேலும் களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலயத்தில் குற்றாலத்தை ஒட்டிய கடையம் சரகத்திற்குட்பட்ட 12 கிராமங்களைச் சார்ந்த 482 குடும்பங்களுக்கு ரூ.3,06,400 அளவில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவைதவிர, காட்டிலிருந்து விறகு சேகரித்தலைத் தடுக்கும்பொருட்டு 99 குடும்பங்கள் பயன் அடையும் வகையில் ரூ. 1,19,000 பெறுமானம் உள்ள பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், வீட்டுத் தோட்டங்கள் அமைத்தல், சாலையில் மரக் கன்றுகள் நடுதல், தரிசு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் ரூ89,475 அளவிற்கு வேலை ஊதியம் அளிக்கப்பட்டுள்ளது.

**68—**

### புதிய ரயில் நிலையம்

**வினா 23755—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

**(அ)** அம்பத்தூர்-அண்ணனூருக்கிடையே புதிய ரயில் நிலையம் எப்பொழுது திறக்கப்படும்?

**(ஆ)** விரைவாக திறக்க மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர்-அண்ணனூருக்கு இடையே "திருமுல்லைவாயில்" என்னும் பெயரில் புதிய ரயில் நிலையம், பயணிகள் போக்குவரத்திற்காக ஏற்கெனவே திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**69—**

### ரயில்வே லைன்

**வினா 23760—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியைச் சென்னையுடன் இணைக்கும் ரயில்வே லைன் அமைக்க மாநில அரசு மத்திய அரசைக் கோருமா?





விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம்-பெங்களூர் ரயில் மார்க்கத்தில் உள்ள தருமபுரி ரயில்வே நிலையம், தருமபுரியைச் சேலம் மற்றும் பெங்களூர் ஆகிய இரு வழிகளிலும் சென்னையுடன் இணைக்கிறது. எனவே, தருமபுரியைச் சென்னையுடன் இணைக்கும் புதிய ரயில்வே லைன் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

**70—**

### புகை தடுப்பு

**வினா 29647—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து வகையான அரசு வாகனங்களையும் புகை தடுப்புத் தூய்மை சோதனைக்கு உட்படுத்த தகுந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது தொடர்பாக சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய மோட்டார் வாகன விதி எண் 115-ன்படி அரசு வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களும் புகை தடுப்புத் தூய்மை சோதனைக்குக் கட்டாயமாக உட்படுத்தப்படுகின்றன.

(ஆ) தமிழ்நாடு மோட்டார் வாகனச் சட்டம் 1989 விதி எண் 116ஏ(3) (பி)-ன்படி புகை தடுப்புத் தூய்மை சோதனை 6 மாதங்களுக்கு ஒரு முறை செய்யப்பட்டு சான்று பெற வேண்டும். அதன்படி சென்ற 30-6-1999 வரை உள்ள ஆறு மாதத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 1,02,851 ஆகும்.

| | | |
|---|---|---|
| போக்குவரத்து வாகனங்கள் | .. | 16,406 |
| போக்குவரத்தில்லா வாகனங்கள் | .. | 86,445 |
| மொத்தம் | .. | 1,02,851 |

[2000 ஏப்ரல் 7

71—

### சாலைகள் மேம்பாடு

**வினா 28509—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி பகுதியிலுள்ள பிரதான மாவட்டச் சாலைகளை மேம்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள எடப்பாடி நகராட்சி எல்லைக்குள் கீழ்க்கண்ட மூன்று பிரதான மாவட்டச் சாலைகள் அமைந்துள்ளன:—

1. எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலை கி.மீ.0/0-2/6 கி.மீ.2.60
2. எடப்பாடி-ஜலகண்டபுரம் சாலை கி.மீ.0/0-4/6 கி.மீ. 4.60
3. குமாரபாளையம்-எடப்பாடி சாலை கி.மீ.22/6-25/6 கி.மீ. 3.00 ஆகும்.

இதில் எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலை மேம்பாட்டுப்பணி, நபார்டு-4 திட்டத்தின்கீழ் ரூ.44.30 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. மற்ற இரு சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கும் ரூ.65 லட்சங்கள் செலவாகும். அரசின் நிதி நிலைக்கேற்ப இச்சாலைப் பணிகளும் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

72—

### களவு மீட்பு

**வினா 27050—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், செவ்வாய்ப்பேட்டை கபிலர் தெருவில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் தங்கமுலாம் பூசப்பட்ட செப்புக் கலசம் களவு போனதை மீட்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டம், செவ்வாய்ப்பேட்டை, கபிலர் தெருவில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் தங்கமுலாம் பூசப்பட்ட ரூ.5,000 மதிப்புள்ள செப்புக்கலசம் 26-10-1997 அன்று களவாடப்பட்டது. இக்களவு குறித்து, சேலம் செவ்வாய்ப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணைக்குப் பின் குற்றவாளியைக் கண்டுபிடிக்க இயலவில்லை எனக் காவல் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

73—

### உழவு மாடுகள்

**வினா 26249—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஒன்றியத்தில் 1997-98 மற்றும் 1998-99 ஆகிய இரண்டாண்டுகளில் விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் வழங்கப்பட்ட உழவு மாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

புவனகிரி ஒன்றியத்தில் 1997-98 மற்றும் 1998-99 ஆகிய இரண்டாண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தாட்கோ திட்டம் போன்றவை மூலம் 4 உழவு மாடுகளும், மற்றும் டயர் வண்டிகளுக்காக 37 மாடுகளும் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

74—

### பகுதி நேர நியாயவிலைக் கடை

**வினா 30277—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், தின்னப்பட்டி ஊராட்சி, சேத்துக்குழியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க அனைத்துத் தகுதிகளும் இருப்பதால் பூதப்பாடி நியாயவிலைக் கடையிலிருந்து பிரித்து, சேத்துக்குழியில் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை நடப்பாண்டில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், தின்னப்பட்டி ஊராட்சி, சேத்துக்குழியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு 13-12-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

**75—**

### புதிய கட்டடம்

**வினா 30467—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, பாம்பூர் கிராமத்தில், இயங்கும் வேளாண்மை கூட்டுறவு வங்கிக் கட்டடம் இடியும் தருவாயில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் உள்ள பாம்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம் இடியும் தருவாயில் இல்லை. சிறு சிறு பழுதுகள்தான் உள்ளன.





(ஆ) இருப்பினும், வங்கியின் கட்டடத்தில் உள்ள சிறு சிறு பழுதுகளைச் சீர்செய்ய கூட்டுறவுத் துறை கட்டுமானப் பிரிவு பொறியாளர்களிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை பெற்று சீர்செய்து கொடுக்க மண்டல இணைப் பதிவாளருக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**76—**

### பாலிதீன் பைகள்

**வினா 30633—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொது விநியோகப் பொருட்களை பாலிதீன் பைகளில் போட்டுக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நியாய விலைக் கடைகளில் மைதா, ரவை மற்றும் பாமாலின் மட்டுமே பாலிதீன் பைகளில் அடைத்து விற்கப்படுகின்றன. மற்ற பொது விநியோகப் பொருட்களை பாலிதீன் பைகளில் போட்டு வழங்குவது குறித்த செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**77—**

### சுயதொழில்

**வினா 31700—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், மல்லப்புரம் கிராமத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க அரசு வங்கியின் மூலம் கடன் வசதி பெற்றுத் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 ஏப்ரல் 7

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்கு வேளாண்மைசாராக் கடன் (non farm sector loan) வங்கிகள் மூலம் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், மல்லப்புரம் கிராமத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், சுயதொழில் தொடங்க வேண்டி கடன்பெற, திண்டுக்கல் மத்தியக் கூட்டுறவு வங்கியை அணுகினால் வங்கியின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு கடன் வழங்க தயாராக உள்ளது. இதுதொடர்பாக வங்கி கிளை மேலாளர்களுக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**78—**

**புதிய வங்கிகள்**

**வினா 32728—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் புதியதாகத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை தொடக்க வேளாண்மை வங்கிகள் தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆரம்பிக்க அவ்வப்போது அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் கொங்கனாபுரம் மற்றும் பேளூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பிரித்து முறையே கங்காயூர், குறிச்சி ஆகிய புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடங்க



2000 ஏப்ரல் 7]

அனுமதி வழங்கப்பட்டன. இவை முறையே 11-10-1999 மற்றும் 11-8-1999 ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் இத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடங்கப்படும் என்று அறுதியிட்டுக் கூற இயலாது. கருத்துருக்கள் பெறப்படும்போது அவ்வப்போது பரிசீலித்து அனுமதி அளிக்கப்படும்.

**79—**

**நியாயவிலைக் கட்டடங்கள்**

**வினா 32729—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் நியாயவிலைக் கடைக்கான புதிய கட்டடங்களை அரசு கட்டியுள்ளது?

(ஆ) இன்னும் எத்தனை நியாயவிலைக் கடைகள் தனியார் கட்டடங்களில் நடந்து வருகின்றன?

(இ) அவை அரசுக் கட்டடங்களில் இயங்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகளுக்கென புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை 97.

(ஆ) தனியார் கட்டடங்களில் நடந்துவரும் நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை 576.

(இ) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்ட சேலம் மாவட்ட ஊரக முகமை திட்ட அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 7

**80—**

**நியாயவிலைக் கடைகள்**

**வினா 32730—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் எத்தனை கடைகளில் முறைகேடுகள் நடந்ததாக அரசால் கண்டறியப்பட்டுள்ளது?

(ஆ) எத்தனை நபர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள 1,135 நியாயவிலைக் கடைகளில் முறைகேடுகள் நடந்ததாகக் கண்டறியப்பட்டது. முறைகேடுகளுக்காக ரூ.9,81,074.89 அபராதமும் விதிக்கப்பட்டது.

(ஆ) 37 நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர்கள்மீது கூட்டுறவுத் துறையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**81—**

**வங்கிகள் விவரம்**

**வினா 32734—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 2000-ஆம் ஆண்டில் புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(ஆ) தொடங்க உள்ள புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அரசுக் கட்டடங்களில் இயங்க அரசு ஆவன செய்யுமா?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க தகுதியின் அடிப்படையில் அவ்வப்போது அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) புதியதாக தொடங்க உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட தக்க நிதி வசதிகளை அரசு செய்து தரும்.

**82—**

**வங்கிகளில் முதலீடு**

**வினா 32739—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உபரி நிதி இருப்பில் வைத்துள்ள கூட்டுறவு அமைப்புகள் பிற கூட்டுறவு வங்கிகளில் முதலீடு செய்வதற்கு அரசு அனுமதி வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 68 (பி)-ன்படி பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் தனது நிதியினைக் கூட்டுறவு வங்கிகளின் பங்குகளாகவோ, வைப்புகளாகவோ பதிவாளரின் முன்அனுமதி பெற்று முதலீடு செய்யலாம்.

[2000 ஏப்ரல் 7

**83—**

**பகுதி நேர அங்காடி அமைத்தல்**

**வினா 32864—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காடுவெட்டிவிடுதி ஊராட்சியைச் சார்ந்த நரங்கியப்பட்டு கிராமத்தில் பகுதிநேர அங்காடி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, இராஜாளிவிடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் காடுவெட்டிவிடுதி அங்காடி 382 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை கோரும் பகுதியான நரங்கிப்பட்டியில் 40 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் அரசு ஆணை 214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-10-1998-ன்படி 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை இந்நேர்வில் நிறைவேறாத காரணத்தினால் நரங்கிப்பட்டி கிராமத்தில் பகுதிநேர கடை அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**84—**

**பகுதிநேர நியாயவிலைக் கடைகள்**

**வினா 33131—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டத்தில் எத்தனை பகுதிநேர நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) அதன் விவரம் என்ன?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டத்தில் 64 முழுநேர நியாயவிலைக் கடைகளும் 14 பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) பகுதிநேர நியாயவிலைக் கடைகளின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | நியாயவிலைக் கடை விவரம் | பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | மொரசம்பட்டி | 250 |
| 2. | மோட்டாங்காடு | 393 |
| 3. | சாவடிபாளையம் | 343 |
| 4. | வளையசெட்டியூர் | 310 |
| 5. | குப்புதாசன்காட்டுவளவு | 304 |
| 6. | கிழக்குக்காடு | 362 |
| 7. | நடுப்பட்டி | 340 |
| 8. | வேட்டுவம்பட்டி | 346 |
| 9. | சிலுவம்பாளையம் | 209 |
| 10. | வெடிக்காரன்பாளையம் | 309 |
| 11. | புதூர் | 360 |
| 12. | அடுவாய்ப்பட்டி | 278 |
| 13. | வீரப்பன்பாளையம் | 477 |
| 14. | ஆவணியூர் | 295 |

[2000 ஏப்ரல் 7

**85—**

**பகுதிநேர நியாயவிலைக் கடைகள் விவரம்**

**வினா 33132—திரு. ஐ. கணேசன்**: மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் எத்தனைப் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் மொத்தம் 10 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) அவற்றின் விவரம் பின்வருமாறு:

| | பகுதிநேர நியாயவிலைக் கடையின் பெயர் | இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகள் |
|---|---|---|
| 1. | அ. தாழையூர் | 502 |
| 2. | காளிகவுண்டம்பாளையம்-1 | 488 |
| 3. | கிழக்குபாளையம் | 553 |
| 4. | கரையானூர் | 315 |
| 5. | காளிகவுண்டம்பாளையம் | 522 |
| 6. | எம்.ஜி.ஆர். நகர் | 394 |
| 7. | ஒண்டிக்கடை | 496 |
| 8. | சுண்டமேட்டூர் | 331 |
| 9. | நல்லாரன் பூசாரிவளவு | 232 |
| 10. | வறட்டேரி | 280 |



2000 ஏப்ரல் 7]

**86—**

**பகுதி நேர நியாயவிலைக் கடை அமைத்தல்**

**வினா 33135—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், வெங்கரை ஊராட்சி, மாஞ்சாக்காடு கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, வெங்கரை கோட்டைக்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் வெங்கரை-1 மற்றும் வெங்கரை-2 என்கிற அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் வெங்கரை அங்காடியைப் பிரித்து வெங்கரை-2 என்ற பகுதி நேர கடை 426 குடும்ப அட்டைதாரர்களுடன் செயல்பட்டு வருகிறது. இதில் பகுதிநேர கடை அமைக்கக் கோரப்பட்டுள்ள மாஞ்சாக்காடு கிராமத்தில் 65 குடும்ப அட்டைகளே உள்ளதால், அரசு ஆணை எண் 214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-10-1998-ன்படி பகுதிநேரக் கடையுடன் 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை நிறைவேறாத காரணத்தினால், மாஞ்சாக்காடு கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**87—**

**பால் பண்ணை**

**வினா 30083—திரு. டி. மணி:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97-ல் மத்திய அரசின் இந்திய அரசு ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தில் மாநிலத்திற்கு எத்தனைக் கோடி ரூபாய் வந்துள்ளது?

(ஆ) அதில் எந்தெந்த மாவட்டங்களுக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மைய அரசு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 1995-96 ஆம் ஆண்டிலிருந்து 1998-99 ஆம் ஆண்டு வரை ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.336.63 இலட்சம் 100 விழுக்காடு மானியமாக வழங்கியது. இதில் ரூ.240.18 இலட்சம் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்காக, சிவகங்கை மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கும், ரூ.96.45 இலட்சம் கன்னியாகுமரி மாவட்டத்திற்காக, கன்னியாகுமரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்டது.

88—

## நிதி உதவி

**வினா 30605—திரு. டி. மணி:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் அரசு ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தில் கிடைத்த நிதி எதற்காக பயன்படுத்தப்பட்டது?

(ஆ) அதனால் பால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைத்த பயன் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திய அரசு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 1995-96 ஆம் ஆண்டிலிருந்து 1998-99 ஆம் ஆண்டு வரை ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.336.63 இலட்சம் 100 விழுக்காடு மானியமாக வழங்கியது. இதில் ரூ.240.18 இலட்சம் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்காக, சிவகங்கை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கும், ரூ.96.45





இலட்சம் கன்னியாகுமரி மாவட்டத்திற்காக, கன்னியாகுமரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூலமாக சிவகங்கை கால்நடை தீவன கிடங்கு, காரைக்குடியில் சிற்றுண்டிச் சாலையுடன் கூடிய தொழிலாளர் ஓய்வு அறை, நெய் உற்பத்தி மற்றும் சேமிப்பு அறை, சிவகங்கையில் பால் குளிரூட்டும் நிலையத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் சிவகங்கை மற்றும் பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையங்களில் இயக்கியுடன் கூடிய (motor) ஆழ்துளைக் கிணறு போன்ற பணிகள் இத்திட்டத்தின் மூலமாக முடிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

பாலை சமச்சீர்படுத்தும் இயந்திரம் (homogeniser), கிடைநிலை பால் கொள்கலன் (horizontal milk silo), பால் டேங்கர்கள், பால் கேன்கள் மின்னணு பால் பரிசோதனைக் கருவிகள், கணிப்பொறி, நெய்யை டின்னில் நிரப்பும் இயந்திரம், உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் குடுவைகள், பால் கேன்களைச் சுத்தப்படுத்தும் இயந்திரம், சுத்தப்படுத்தப் பயன்படும் தொட்டி, பால் டெப்போக்கள், பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்குச் சிகிச்சை மற்றும் கருவூட்டல் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இதர இயந்திர தளவாடங்கள் ஆகியவை இவ்வொன்றியத்தில் வாங்கப்பட்டன.

இத்திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூலமாக நாகர்கோவிலிலுள்ள பால் பண்ணையில் கால்நடை தீவன கிடங்கு மற்றும் குளிர்பதன அறை கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் கொதிகலன், பாலை பாலிதீன் பைகளில் நிரப்பும் இயந்திரம், ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யும் இயந்திரம், குளிர்பதன அறைகளுக்குத் தேவையான இயந்திரம்; பால்கோவா உற்பத்திக்குத் தேவையான உபகரணங்கள்; கிடைநிலை பால் கொள்கலன், பால் டெப்போக்கள்; பிளாஸ்டிக் தொட்டிகள், கணிப்பொறி, உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் குடுவைகள், மின்னணு பால் பரிசோதனைக் கருவிகள், பால் கேன்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு பசுந் தீவனங்களை சிறு துண்டுகளாக வெட்டத் தேவைப்படும் கருவிகள், பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு சிகிச்சை மற்றும் கருவூட்டல் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இதர இயந்திர தளவாடங்கள் வாங்கப்பட்டன.

[2000 ஏப்ரல் 7

இத்திட்டத்தின்கீழ் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பண்ணை தொழில் சம்பந்தமான அறிவியல் விளக்கங்கள் செயல்முறைகள் பற்றிய பயிற்சி ஈரோடு மற்றும் மதுரை ஒன்றியங்களில் உள்ள பயிற்சி நிலையங்கள் மூலம் அளிக்கப்பட்டது.

பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்குத் தேவைப்படும் மருந்துகள், செயற்கை முறை இனவிருத்தி கருவூட்டலுக்குத் தேவையான கருவிகள் வாங்கப்பட்டன. பசும்புல் உற்பத்திபற்றி விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு, இதனால் பால் உற்பத்தியாளர்கள் நன்கு பயனடைந்தனர். ஒலி, ஒளிக் கல்வி மூலம் பால் உற்பத்தியாளர்களுக்குப் பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்பற்றி எடுத்துக்கூறி, இத்தொழிலில் ஈடுபட ஊக்கப்படுத்தப்பட்டுள்ளனர்.

89—

### மருந்தகத்திற்குக் கூடுதல் தொகை

**வினா 19368—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி போன்ற அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இயங்கும் மருந்தகத்திற்கு வழங்கும் தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தைத் தவிர மற்ற அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பகுதிநேர மருத்துவரும் மருந்தாளுனருமே உள்ளனர். அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பயிற்சியாளர்களுக்கு அவசரத் தேவைக்கு மருந்துகள் கொள்முதல் செய்ய 1998-99 நிதியாண்டில் ரூ. 70,000 ஒதுக்கப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்றாற்போல், ஒவ்வோர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் மருந்துகள் கொள்முதல் செய்ய பரமக்குடி தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூ.10,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனைத்தவிர, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இயங்கும் மருந்தகத்திற்கு வழங்கும் தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.



2000 ஏப்ரல் 7]

90—

### சிறப்புப் பள்ளிகள்

**வினா 19730—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு சிறார் தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தின்கீழ் எவ்வளவுபேர் சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் தூத்துக்குடி, விருதுநகர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, வேலூர், தருமபுரி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 8 மாவட்டங்களில் இயங்கிவரும் சிறப்புப் பள்ளிகளில் 1997-98 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1023. அதற்கு முந்தைய ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளுடன் 1997-98-ல் சிறப்புப் பள்ளிகளில் பயின்ற குழந்தைகளின் எண்ணிக்கை 12,600.

91—

### தொழிற்பயிற்சிப் பள்ளி

**வினா 19783—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு புறம்போக்கு நிலத்தில் தனியாரோ, தொண்டு நிறுவனமோ தொழிற்பயிற்சிப் பள்ளி அமைக்க முன்வருமானால் அதற்கு அரசு அனுமதி வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க முன்வரும் தனியார் அல்லது தொண்டு நிறுவனங்கள் அவர்களாகவே நிலம் மற்றும் தேவையான

[2000 ஏப்ரல் 7

அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொள்கின்றனர். இருப்பினும், தொண்டு நிறுவனங்கள் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க முன்வருமானால் அதற்கான புறம்போக்கு நிலம் அளிப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**92—**

**கார் தொழிற்சாலைகளில் பணியமர்த்துதல்**

**வினா 31134—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பெருங்களத்தூரில் எட்டு ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கும் ஸ்டாண்டர்டு கார் தொழிற்சாலையில் பணி புரிந்த தொழிலாளர்களை சென்னையில் புதியதாகத் தொடங்கியுள்ள ஹூண்டாய் மற்றும் ஃபோர்டு கார் தொழிற்சாலைகளில் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், ஹூண்டாய் மற்றும் ஃபோர்டு கார் தொழிற்சாலைகள் அனைத்தும் தனியார் நிறுவனங்களாகும். எனவே, ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மூடியதனால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு மற்ற இரு நிறுவனங்களில் பணி வாய்ப்பு பெற்றுத் தருவது குறித்து தொழிலாளர் துறையில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை ஏதுமில்லை.

**93—**

**சிறைச்சாலை**

**வினா 31531—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலை மரணங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் குறைந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன என்று அரசு ஆராய்ந்ததா?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**94—**

**அனுமதி**

**வினா 33439—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக சிறைச்சாலைகளில் உள்ள முஸ்லிம் இனக் கைதிகள் அவர்களின் விருப்பத்தின்பேரில் ரமலான் நோன்பு வைப்பதற்கு அரசு அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான வசதியை செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறை விதி 286 (6)-ன்படி, முஸ்லிம் சிறைவாசிகள் ரமலான் நோன்பு இருக்க அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் சிறை விதி 286 (5)-ன்படி அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் அவற்றை விநியோகிக்கும் நேரம் ஆகியவற்றினை முறைப்படுத்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**95—**

**சங்கம் பதிவு செய்தல்**

**வினா 27747—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னிமலை விசைத்தறித் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் பதிவு செய்யும் மனுவை ஏற்றுக்கொள்ள கால தாமதப்படுத்துவது ஏன்?

[2000 ஏப்ரல் 7

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

உத்தேச சென்னிமலை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் முதன்மை அமைப்பாளர் திரு. பி. ராஜேந்திரன் என்பவர் சென்னிமலை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் புதிய விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க பிரேரணை சமர்ப்பித்தார். திரு. பி. ராஜேந்திரன், ஏற்கெனவே ஈரோடு விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராக இருந்தவர். அவர் அச்சங்கத்தின் உறுப்பினர் அந்தஸ்திலிருந்து 25-1-1999 அன்று ராஜினாமா செய்துள்ளார். இந்நிலையில் தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 23 (எப்)-ன்படி ஒரு நபர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததிலிருந்து ஓராண்டு காலம் முடிவடையவில்லை எனில், அதேவகையான சங்கத்தில் உறுப்பினராவதற்குத் தகுதியற்றவராகிறார் என அரசு வழக்குரைஞர் கருத்துத் தெரிவித்துள்ளார். எனவே, மேற்கூறிய உத்தேச சங்கத்தை திரு. பி. ராஜேந்திரன் என்பவரை முதன்மை அமைப்பாளராகக் கொண்டு பதிவு செய்ய இயலாது.

**96—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா 16183—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செம்பியக்குடி கிராமத்திலும், அரியலூர் ஒன்றியம் பெரிய திருக்கோணம் கிராமத்திலும் கால்நடை மருத்துவமனைகள் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**97—**

**சீருடைகள் மாற்றுதல்**

**வினா 29473—திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாணவியர் விடுதி மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவியர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அரைப் பாவாடையைத் தவிர்த்து முழுப் பாவாடையாக மாற்றித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இத்துறையால் நடத்தப்படும் ஆதிதிராவிடர் நலப்பள்ளி விடுதி மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளில் 1 முதல் 4 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு அரைப் பாவாடையும், 5 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு முழுப் பாவாடையும் வழங்கப்பட்டு வருகிறது. 1 முதல் 4 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்கள் சிறு பிள்ளைகளாக இருப்பதால் அவர்களுக்கு முழுப் பாவாடைகள் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை. இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 ஏப்ரல் 7

98—

## விடுதிகள்

**வினா 33074—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கான உணவுடன் கூடிய தங்கும் விடுதிகள் எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர்களுக்கான விடுதிகள் 39-ம் (ஆதிதிராவிடர் நல விடுதிகள் 33, பழங்குடியினர் நல விடுதிகள் 6), உண்டு உறைவிடப்பள்ளி 47-ம் உள்ளன.

99—

## நலப்பள்ளிகள் விவரம்

**வினா 33075—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் எத்தனை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை பள்ளிகள் உள்ளன? அவற்றின் விவரம் என்ன?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 55 உயர்நிலைப் பள்ளிகளும், 62 மேல்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

(ஆ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 57 பள்ளிகள் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

| | | ஆதிதிரா விடர் நலப் பள்ளிகள் | பழங்குடி யினர் நலப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | ஆரம்பப் பள்ளிகள் | 7 | 40 | 47 |
| 2. | நடுநிலைப் பள்ளிகள் | 2 | 5 | 7 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | 1 | 2 | 3 |
| 4. | மேல்நிலைப் பள்ளிகள் | .. | .. | .. |
| | மொத்தம் | **10** | **47** | **57** |

100—

## இலவம் பஞ்சு கொள்முதல்

**வினா 26418—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1995-96 ஆம் நிதியாண்டில் முதல்தர இலவம்பஞ்சு கொள்முதல் செய்வதற்குப் பதிலாக இரண்டாம் மற்றும் மூன்றாம்தர இலவம் பஞ்சைக் கொள்முதல் செய்ததால் வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பு எவ்வளவு?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1995-96 ஆம் நிதியாண்டில் முதலில் கொள்முதல் செய்யப்பட்ட பஞ்சின் மாதிரி (sample) சரியாக இருந்ததால் மெத்தை,

[2000 ஏப்ரல் 7

தலையணைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டன. 1996 ஜூலையில் வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் மீண்டும் பரிசோதனை செய்ததில் பஞ்சின் தரக்குறைவு கண்டறியப்பட்டது. இதற்கிடையில் பெரும்பாலும் மெத்தைகள் தலையணைகள் குறிக்கப்பட்ட விலையில் விற்கப்பட்ட நிலையில் விற்கப்பட்டதில் வாரியத்திற்கு இழப்பு ஏதும் ஏற்படவில்லை. பஞ்சு தரக்குறைவாக கொள்முதல் செய்த செயல் குறித்து இலஞ்ச ஒழிப்புத் துறையின் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

## எட்டாவது பட்டியல்

1—

### வகுப்பறை வசதி

**வினா 12853—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கல்லூரியில் போதுமான வகுப்பறைகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வகுப்பறைகள் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதி நிலைமையையொட்டி வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும். இதனிடையில் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இக்கல்லூரிக்கு வகுப்பறைகள் கட்டித்தர இயலுமா எனவும் அரசு பரிசீலிக்கும்.

2—

### உயர்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா 19837—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 7]

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் பஞ்சாயத்து வெ.மேட்டுப்பாளையம் நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் உயர்நிலைப் பள்ளியாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 269, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-7-1998-ல் எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெ. மேட்டுப்பாளையம் என்கிற வெள்ளாளபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, 1998-1999 ஆம் கல்வி ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு 17-8-1998 முதல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

3—

### இடைநிலை ஆசிரியர்கள் நியமித்தல்

**வினா 21729—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக இரண்டு இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மகுடஞ்சாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 8 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டு அப்பணியிடங்களில் 1984-85-ல் 2 பணியிடங்களும், 1994-ல் 2 பணியிடங்களும், 1997-98-ல் 4

[2000 ஏப்ரல் 7

பணியிடங்களும் நிரப்பப்பட்டன. இவற்றில் ஒரு பணியிடத்தில் தொழிற்கல்வி ஆசிரியர் உட்படுத்தப்பட்டுள்ளார். இடைநிலை ஆசிரியர் பணியிடம் எதுவும் காலியாக இல்லை.

4—

**பொறியியல் கல்லூரியில் கட்டணம்**

**வினா 30514—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, எம்.ஜி.ஆர். பொறியியல் கல்லூரியில் பொறியியல் மாணவர்களிடம் அரசு நிர்ணயித்த கட்டணத்திற்கும்மேல் வசூலிப்பதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

5—

**பணியிடம் நிரப்புதல்**

**வினா 14333—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள சுமார் 300 ஆய்வுக்கூட நுட்பனர் தரம்-2 பணியிடங்களை நிரப்ப அரசுக்கு முறையீடுகள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளில் 53 ஆய்வக நுட்பனர் தரம்-2 பணியிடங்கள் தற்போது வெற்றிடமாக உள்ளன. மருத்துவக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளில் 63 ஆய்வக நுட்பனர் தரம்-2 பணியிடங்கள் தற்போது வெற்றிடமாக உள்ளன. மேற்காணும் வெற்றிடமாக உள்ள ஆய்வக நுட்பனர் தரம்-2 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா 22003—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பண்டஅள்ளி மற்றும் நாகதாசம்பட்டியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு கொள்கையளவில் எடுத்த முடிவின்படி அரசாணை (டி) எண் 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, நாள் 27-5-1996-ல் வட்டார அளவிலான முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாயநல நிலையங்ளை மட்டுமே 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற ஆணையிடப்பட்டது. அவ்வாறே 1996-97 மற்றும் 1997-98 நிதியாண்டுகளில் இரண்டு கட்டமாக 250 முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாயநல மையங்கள் 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டு கூடுதல் பணியாளர்கள், படுக்கை வசதிகள் மற்றும் அவசரகால ஊர்தியுடன் செம்மையாக

[2000 ஏப்ரல் 7

செயல்படுகின்றன. மேற்படி ஆணையின்படி தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள பண்டஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பெண்ணாகரம் ஒன்றியத்திலுள்ள நாகதாசம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணிநேர நிலையங்களாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

**7—**

### மின் உபயோகச் சிக்கனம்

**வினா 25985—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெரும்பாலான அரசு அலுவலகங்களில் எல்லா நேரமும் மின் விசிறிகளும், மின்விளக்குகளும் இயங்குவதால், கணிசமான மின்சக்தி விரயமாவதை அரசு அறியுமா?*

(ஆ) *ஆம் எனில், மின் உபயோகத்தில் சிக்கனத்தைக் கடைபிடிக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இது விவரம் அரசின் கவனத்திற்கு ஏற்கெனவே வந்து மின் விரயத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மின் உபயோகத்தில் மின் சிக்கனத்தைக் கடைபிடிக்க, அனைத்து தமிழ்நாடு மின்வாரிய அலுவலகங்களிலும் மின்சக்தி குறைந்த மின் திறன் மிக்க மின்விளக்குகள் மற்றும் உபகரணங்களை உபயோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தேவையற்றபோது மற்றும் அலுவலகத்தை விட்டுச் செல்லும்போது மின்விளக்குகளையும், மின் விசிறிகளையும் அணைப்பதன் மூலம் கணிசமான மின்சக்தி விரயத்தைக் குறைக்க அனைத்து அலுவலகங்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கீழ்க்கண்ட குறிப்புகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளைத் தமிழ்நாடு மின் வாரியம் வெளியிட்டுள்ளது:—



2000 ஏப்ரல் 7]

(1) தலைமைப் பொறியாளர்/ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு அலுவலகம் வழியாக உறுப்பினர்/பகிர்மானம் அவர்கள் அனைத்துத் தலைமை பொறியாளர்களையும் 40 வாட் குழல் விளக்குகளுக்குப் பதிலாக 36 வாட் மெல்லிய குழல் விளக்குகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்ட அறிக்கை.

(2) மின் வாரிய வளாகத்தில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களும் மின்விரயத்தைத் தவிர்க்கும் பொருட்டு அவர்களது கவனத்தை ஈர்க்கும் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள மின்சேமிப்பு நடவடிக்கைக்கான வாசகங்கள்.

(3) தேர்ந்தெடுக்கப்பட்ட துணை மின்நிலையங்களின் வளாக விளக்குகள் வீணாக எரிவதைத் தவிர்த்திட எடுத்துள்ள நடவடிக்கை.

(4) மின்சாரம் சேமிப்பதை அனைவருக்கும் உணர்த்தும்பொருட்டு ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 14 ஆம் நாள் மின்சார சேமிப்பு தினமாகவும், அதனைத் தொடர்ந்து அவ்வாரம் முழுவதையும் மின்சார சேமிப்பு வாரமாகவும் அனுசரிக்க மின் வாரியம் எடுத்துவரும் நடவடிக்கை.

(5) மின் நுகர்வோர் கவனத்திற்கு மின்சேமிப்பு செய்யும் விதம் குறித்து சில வழிமுறைகள்.

**8—**

### எய்ட்ஸ் நோய்

**வினா 27131—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*1998-99 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மாவட்ட வாரியாக எவ்வளவு நபர்கள்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டில் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரம், டிசம்பர் வரை மாவட்ட வாரியாக பின்வருமாறு தரப்பட்டுள்ளது:

[2000 ஏப்ரல் 7

| வரிசை எண் | மாவட்டம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | கோயம்புத்தூர் | 93 | 20 | 113 |
| 2. | திருவள்ளூர் | 137 | 28 | 165 |
| 3. | காஞ்சிபுரம் | 177 | 52 | 229 |
| 4. | தருமபுரி | 92 | 23 | 115 |
| 5. | திண்டுக்கல் | 74 | 22 | 96 |
| 6. | விருதுநகர் | 20 | 3 | 23 |
| 7. | கன்னியாகுமரி | 9 | 2 | 11 |
| 8. | சென்னை | 790 | 208 | 998 |
| 9. | மதுரை | 113 | 46 | 159 |
| 10. | தேனி | 36 | 10 | 46 |
| 11. | நீலகிரி | 11 | 4 | 15 |
| 12. | திருநெல்வேலி | 30 | 4 | 34 |
| 13. | நாகப்பட்டினம் | 27 | 6 | 33 |
| 14. | திருவாரூர் | 10 | 1 | 11 |
| 15. | புதுக்கோட்டை | 29 | 1 | 30 |
| 16. | சிவகங்கை | 19 | 8 | 27 |
| 17. | ஈரோடு | 199 | 62 | 261 |
| 18. | சேலம் | 265 | 62 | 327 |
| 19. | நாமக்கல் | 198 | 49 | 247 |
| 20. | திருவண்ணாமலை | 139 | 33 | 172 |
| 21. | கடலூர் | 171 | 35 | 206 |
| 22. | தஞ்சாவூர் | 65 | 26 | 91 |
| 23. | திருச்சிராப்பள்ளி | 211 | 65 | 276 |
| 24. | வேலூர் | 154 | 37 | 191 |
| 25. | விழுப்புரம் | 179 | 43 | 222 |
| 26. | பெரம்பலூர் | 71 | 18 | 89 |
| 27. | கரூர் | 67 | 16 | 83 |
| 28. | தூத்துக்குடி | 29 | 6 | 35 |
| 29. | இராமநாதபுரம் | 8 | 3 | 11 |
| | முகவரி இல்லாத நோயாளிகள் | 270 | 40 | 310 |
| | மொத்தம் | **3693** | **933** | **4626** |



2000 ஏப்ரல் 7]

**9—**

**மின்கம்பங்கள் மாற்றம் செய்தல்**

**வினா 27299—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் என்.பெத்தனேந்தல் போன்ற கிராமங்களில் உள்ள மின்கம்பங்கள் துருப்பிடித்து கீழே விழும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின்கம்பங்களை மாற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி தொகுதியில் என். பெத்தனேந்தல் கிராமத்தில் பழுதடைந்த நிலையிலுள்ள 11 மின் கம்பங்களும் மாற்றியமைக்கப்பட்டுவிட்டன.

**10—**

**காலிப்பணியிடம் நிரப்புதல்**

**வினா 27377—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகர மின்வாரிய பிரிவு அலுவலகத்திற்கு உதவிப் பொறியாளர் காலிப்பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேட்டூர் அணை சிறப்புப் பராமரிப்புப் பிரிவில் உதவிப் பொறியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. இராஜசேகரன் என்பவர் எடப்பாடி நகரப் பிரிவு அலுவலகத்திற்கு உதவிப் பொறியாளராக நியமிக்கப்பட்டு, அவர் 3-1-2000 அன்று தனது புதிய அலுவலகத்தில் பணி ஏற்றுள்ளார்.

11—

### மின்விளக்கு வசதி

**வினா 28973—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஈச்சங்கோட்டை—வீரமுண்டார் குடிகாடு, சாமிபட்டி சாலைகளில் மின் விளக்கு வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கிராமங்களில் சாமிப்பட்டி கிராமத்தில் 4 தெருவிளக்குகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டன. மற்ற இரண்டு கிராமங்களில் தெருவிளக்குகள் அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு 9 தெருவிளக்குகள் அமைக்க ரூ. 1,10,650 செலவிலும், 5 தெருவிளக்குகள் அமைக்க ரூ. 50,870 செலவிலும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் மேற்கண்ட தொகையை இதுவரை செலுத்தவில்லை. ஊராட்சிகள் பணம் செலுத்தியவுடன் தெருவிளக்குகள் அமைக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



12—

### மின் உற்பத்தி செய்ய எரிவாயு

**வினா 29091—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் மின் உற்பத்திச் செய்ய பயன்படுத்தும் எரிவாயு உள்நாட்டில் கிடைக்கிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் மின் உற்பத்தி செய்யப் பயன்படுத்தும் எரிவாயு தமிழ்நாட்டில் கிடைக்கிறது.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எரிவாயு பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

(1) *நரிமணம் எரிவாயு மின் சுழலித் திட்டம்:* தமிழ்நாட்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நரிமணம் என்னும் இடத்தில் கிடைக்கும் எரிவாயுவிலிருந்து நாளொன்றுக்கு 57,000 கனமீட்டர் அளவு எரிவாயு விநியோகிக்கப்படுகின்றது.

(2) *கோவில்களப்பால் எரிவாயு மின் சுழலித் திட்டம்:* தமிழ்நாட்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில், கோவில்களப்பால் என்ற இடத்தில் கிடைக்கும் எரிவாயுவிலிருந்து நாளொன்றுக்கு 4.5 இலட்சம் கனமீட்டர் அளவு எரிவாயு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(3) *பெருங்குளம் எரிவாயு மின் சுழலித் திட்டம்:* தமிழ்நாட்டில், ராமநாதபுரம் மாவட்டத்தில் பெருங்குளம் என்ற இடத்தில் கிடைக்கும் எரிவாயுவிலிருந்து நாளொன்றுக்கு 4.5 இலட்சம் கனமீட்டர் அளவு எரிவாயு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(4) *குத்தாலம் எரிவாயு மின் சுழலித் திட்டம்:* தமிழ்நாட்டில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மருதூர் கிராமத்தில் கிடைக்கும் எரிவாயுவிலிருந்து நாளொன்றுக்கு 3.2 இலட்சம் கனமீட்டர் அளவு எரிவாயு மின் உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 7

13—

### மின்வசதி செய்தல்

**வினா 29095—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இன்னும் மின்வசதி பெறாத கிராமங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றிற்கு அரசு எவ்வளவு நாட்களுக்குள் மின்வசதி செய்யும் என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1991-ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி தமிழகத்தில் உள்ள அனைத்து 15,822 கிராமங்களுக்கும் 1991-92 ஆம் ஆண்டு முடிவிலேயே மின்வசதி செய்யப்பட்டுள்ளது. 9 கிராமங்கள் மக்கள் குடியிருப்பு இல்லாத கிராமங்களாகும்.

(ஆ) வினா எழவில்லை.

14—

### தளவாட சாமான்கள் கிடைக்கச் செய்தல்

**வினா 31951—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் மின்சாரத் துறைக்கு உரிய நேரத்தில் தளவாட சாமான்கள் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

குஜிலியம்பாறை ஒன்றியம் திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்தில் அமைந்துள்ளது.

மின் கம்பங்கள் உற்பத்தி செய்திட தேவையான மூலப்பொருட்கள் மற்றும் மின் இணைப்பு தந்திட தேவையான மின்கம்பிகள், ஸ்டேஸ்டேயர், மின்மாற்றிகள், இன்சுலேட்டர்கள் போன்ற முக்கியமான தளவாட சாமான்கள் உரிய நேரத்தில் திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்திற்கு கிடைத்திட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

15—

### சொந்தக் கட்டடம்

**வினா 32089—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) குற்றாலத்தில் மின் வாரியப் பிரிவு அலுவலகம் கட்டுவதற்கு உரிய இடம் பேரூராட்சியிடம் கேட்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி கிடைத்தவுடன், நிலம் கையகப்படுத்தப்பட்டு அலுவலகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[2000 ஏப்ரல் 7

16—

## பொது மருத்துவமனை

**வினா 32355—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அரசினர் பொது மருத்துவமனை போதுமான அளவிற்கு சுத்தமாக பராமரிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, அரசு பொது மருத்துவமனை போதுமான அளவிற்கு சுத்தமாகவே உள்ளது. மருத்துவமனையில் உள்ள பொதுப் பணித் துறையைச் சார்ந்தவர்கள், மருத்துவமனையில் பணியாற்றி வருகின்ற துப்புரவுத் தொழிலாளிகள் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவப் பணியாளர்களைக் கொண்டும், பொதுமக்களின் முழு ஒத்துழைப்பைக் கோரியும் இன்னும் அதிகமான அளவில் சுத்தமாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

17—

## மின்வாரிய உதிரி பாகங்கள்

**வினா 33001—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்சார வாரியத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் வாங்குவதற்கு அரசு கடைபிடிக்கும் விதிமுறைகள் என்ன?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(1) *திறந்த ஒப்பந்தப்புள்ளி முறை:* வாரியத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் தின நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடப்பட்டு அளவுகளை, அவைகளின் மதிப்புக்குத் தகுந்தவாறு உரிய அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்டு அதற்கான கொள்முதல் ஆணைகள் அனுப்பப்படுகின்றன.

(2) *வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி முறை:* உதிரி பாகங்கள் அவசர வேலையின் தேவைக்கேற்ப இந்த முறையில் வாங்கப்படுகின்றன. இந்த முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்களிடமிருந்து மட்டும் பெறப்படுகின்றன.

(3) *ஒற்றை ஒப்பந்தப்புள்ளி முறை:* இந்த ஒப்பந்தப்புள்ளி முறையில் மிக அவசியமான தனியுரிமைத் தன்மைகொண்ட உதிரி பாகங்கள் மட்டும் அவற்றை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் அல்லது உரிமம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து மட்டும் வாங்கப்படுகின்றன.

18—

## மின் இணைப்பு வழங்குதல்

**வினா 33005—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் சுயமுதலீட்டுத் திட்டத்தின்கீழ் எத்தனை பேருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது?

(ஆ) நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 827 நபர்களுக்கு சுய முதலீட்டுத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

(ஆ) 503 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

[2000 ஏப்ரல் 7

19—

## பட்டா வழங்குதல்

**வினா 20123—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, வெள்ளரி வெள்ளி பஞ்சாயத்தில் கிராம நத்தம் நிலத்தை சர்வே செய்து வீட்டுமனைப்பட்டா வழங்காத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உடனடியாக பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, வெள்ளரி வெள்ளி பஞ்சாயத்தில் கிராம நத்தம் நில அளவையின்போது இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது. அதன் பின்னர், கிராம நத்தத்தில் புதியதாக தாழ்த்தப்பட்ட 113 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது.

20—

## குடிநீர் விநியோகப் பணி

**வினா 52213—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பூலாம்பட்டி—ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எடப்பாடி நகராட்சிப் பகுதிக்குக் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு மட்டும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(ஆ) அதன் விவரத்தை அரசு அறிவிக்குமா?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி மற்றும் ராசிபுரம் நகராட்சிகள், 9 பேரூராட்சிகள் மற்றும் 155 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்காக அரசு ஆணை எண் 89, நாள் 14-5-1998-ன்படி ரூ. 3210.50 இலட்சங்களுக்கான மதிப்பீடு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் எடப்பாடி நகராட்சிக்கு மட்டும் 30-6-1999 முடிய செலவான தொகை ரூ. 729.47 இலட்சங்களாகும். ஒட்டுமொத்தமாக மேற்கண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 30-6-1999 முடிய செலவான தொகை ரூ. 3082.50 இலட்சங்களாகும்.

21—

## தார்ச் சாலைகள்

**வினா 29154—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தின் பரப்பளவு என்ன?

(ஆ) நகரம் முழுவதும் தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் நகரத்தின் பரப்பளவு 27.20 சதுர கிலோ மீட்டர்.

[2000 ஏப்ரல் 7

(ஆ) திருப்பூர் நகரத்தில் அமைக்கப்பட்ட தார்ச் சாலைகள் பற்றிய விவரங்கள்:

| திட்டத்தின் பெயர் | சாலைகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | சாலைகளின் மொத்த நீளம் கி.மீட்டரில் |
|---|---|---|---|
| நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதித் திட்டம்-I | 87 | 50.00 | 19.46 |
| நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதித் திட்டம்-II | 91 | 167.66 | 20.33 |
| மொத்தம் | 178 | 217.66 | 39.79 |

அவை தவிர கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு அளித்துள்ள மானியம், விற்பனை வரி மீதான கூடுதல் வரி, 10-வது நிதிக் குழு பரிந்துரையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு மற்றும் அரசு நிதி உதவி ஆகியவற்றைப் பயன்படுத்தி 136.33 கிலோமீட்டர் தூரமுள்ள தார்ச் சாலைகளில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், 39 கிலோமீட்டர் தூரமுள்ள சாலைகள் 74 நகராட்சி அங்கீகாரம் செய்யப்படாத மனைப் பிரிவுகளில் அமைந்துள்ளதால் சட்ட விதிகளின்படி அவற்றில் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை.

22—

## குடிநீர் வசதி

**வினா 30067—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், வேப்பூர் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) அங்கு குடிநீர்த் தொட்டி அமைத்தபின் இதுவரையிலும் அது செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், வேப்பூர் மற்றும் வேப்பூர் ஆதிதிராவிடர் காலனி ஆகிய குடியிருப்புகள் ஓலைப்பாடி ஊராட்சியில் உள்ளது. இவ்வாண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ஓலைப்பாடி ஊராட்சி முழுமைக்கும் 55 எல்.பி.சி.டி. குடிநீர் வழங்குவதற்கு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. வேப்பூரில் நீராதாரமாக திறந்த வெளிக்கிணறு அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கிணற்றினை நீராதாரமாகக்கொண்டு வேப்பூர் மற்றும் ஆதிதிராவிடர் காலனிக்கு திட்டம் செயல்படுத்தப்படும்.

(ஆ) வேப்பூர் மற்றும் வேப்பூர் ஆதிதிராவிடர் காலனி ஆகிய குடியிருப்புகள் அந்தூர், கிளியூர் மற்றும் 11 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன்பெறும் குடியிருப்புகள். இத்திட்டத்தின்படி ஏற்கெனவே வேப்பூர் ஆதிதிராவிடர் காலனியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி கட்டப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்பொழுது திருச்சி பராமரிப்புக் கோட்டம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. 1992-ல் முடிக்கப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பரவையில் உள்ள ஆழ்குழாய் கிணற்றின் நீர்கொடுதிறன் குறைந்துவிட்டபடியால் வேப்பூர் மற்றும் ஆதிதிராவிடர் காலனிக்கு முழுமையாக குடிநீர் தற்பொழுது வழங்கப்படவில்லை. தற்சமயம் பிற இனத்தினர் வசிக்கும் பகுதியில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து இரண்டு பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(இ) அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் வேப்பூர் மற்றும் வேப்பூர் ஆதிதிராவிடர் காலனிக்கு புதிய திறந்த வெளிக்கிணறு மூலம் தனித் திட்டத்தைச் செயல்படுத்தி குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

23—

## நீர்த்தேக்கத் தொட்டி பழுதுபார்த்தல்

**வினா 30113—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 7

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், மத்தளம்பாறை ஊராட்சி, தங்கம்மன்கோவில் தெருவிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், மத்தளம்பாறை கிராமத்தில் திறந்த வெளிக்கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மேல்கூரை கல்நார் தகடுகளால் ஆனது. இது சற்று பழுதடைந்துள்ளது. ஊராட்சி மன்றத் தலைவர் கல்நார் தகடுகளில் விரைவில் பழுது நீக்கம் செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார். இக்குடியிருப்புக்கு 1995 ஆம் ஆண்டு ஆழ்குழாய்க் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய திட்டம் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு ஊராட்சியின் பராமரிப்பில் இருந்து வருகிறது.

**24—**

### புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 30142—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பாச்சூர் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதால் ஒரு லட்சம் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பாச்சூர் கிராமத்திலுள்ள குடிநீர்த் திட்டத்தில் (1980) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி



பழுதடைந்துள்ளதுடன், இதற்கான நீராதாரம் உப்புத்தன்மை உடையதாக உள்ளதால் இக்குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் ஒரு இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய புதிய குடிநீர்த் திட்டம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கான நீராதாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதர பணிகளைச் செயலாக்க ஒப்பந்தப்புள்ளி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை விரைந்து பயனுக்குக் கொண்டு வர திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**25—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா 30557—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சி, பருத்திக்கோட்டையில் ஓர் ஆழ்குழாய் கிணறு மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த பருத்திக்கோட்டை (வடக்கு) பகுதியில் ரூ.4.68 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் குடிநீர்த் திட்டம் ஒன்று நடப்பு ஆண்டு 1999-2000-ல் எடுத்துக்கொள்ளப்பட்டு, 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியுடன் 300 மீட்டர் நீளத்தில் பகிர்மானக் குழாய்கள் பதிப்பு மற்றும் 3 பொதுக் குழாய் மேடை அமைத்தல் போன்ற பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை விரைவில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 7

26—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 30558—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், சூரக்கோட்டை ஊராட்சி, நத்தம்படிபட்டி கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், சூரக்கோட்டை ஊராட்சி நத்தம்படிபட்டி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 920 ஆகும். தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 12 லிட்டர் ஆகும். தற்சமயம் 150 எம்.எம். விட்டமுள்ள 69 மீட்டர் ஆழத்துடன்கூடிய ஒரு ஆழ்துளைக் கிணறு கையிறைப்பானுடன் பயனில் உள்ளது. மேற்கண்ட குடியிருப்பில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதால் 1999-2000 ஆம் நிதிநிலை அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டு ரூ. 6.40 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. அத்திட்டத்தில் 150 எம்.எம். விட்டமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைத்து 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் 1500 மீ. பகிர்மானக் குழாய் அமைத்து 6 பொதுக் குழாய் மேடைகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது. தற்போது திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

27—

**மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியை பழுதுபார்த்தல்**

**வினா 30575—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பண்டஅள்ளி ஊராட்சி, பண்டஅள்ளி கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?*



2000 ஏப்ரல் 7]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பண்டஅள்ளி ஊராட்சி, பண்டஅள்ளி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. எந்தவிதமான பழுதும் ஏற்படவில்லை. எனவே, பழுதுபார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

28—

**மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி**

**வினா 30585—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, சந்தனக்கொடிக்கால், கரணிக்காடு காலனி, புதுநாகமரை, மலையனூர், பங்குநத்தம் ஊராட்சி, மாக்கன்கொட்டாய் கிராமம், அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, டேம்கொட்டாய் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமகொண்டஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த புதுநாகமரை மற்றும் மலையனூர் ஆகிய குடியிருப்புகளில் நடப்பு நிதியாண்டில் (1999-2000) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப்பம்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மலையனூர் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மின் இணைப்பு பெறப்பட்டபின், திட்டம் பொதுமக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

[2000 ஏப்ரல் 7

இராமகொண்டஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சந்தனக்கொடிக்கால் மற்றும் கரணிக்காடு காலனி, பங்குநத்தம் ஊராட்சிகளைச் சேர்ந்த மாக்கன்கொட்டாய் மற்றும் அஜ்ஜனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த டேம்கொட்டாய் ஆகிய குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

**29—**

### குடிநீர் வழங்குதல்

**வினா 30689—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், இடையர்தவணை ஊராட்சிக்கு கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து சிற்றாறிலிருந்து புதிய நீர் ஆதாரம் ஏற்படுத்தி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், இடையர்தவணை கிராமத்தின் மக்கட்தொகை 1991 ஆம் ஆண்டின்படி 825 ஆகும். இக்கிராமத்திற்கு 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி திறந்த வெளிக்கிணற்றை நீராதாரமாகக் கொண்டு குடிநீர்த் திட்டம் ஊராட்சி ஒன்றியத்தால் செயல்படுத்தப்பட்டு பயனில் உள்ளது. மேலும் அருகிலுள்ள மீனாட்சியாபுரத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்திலிருந்து பகிர்மான குழாய் நீட்டிப்புச் செய்து 15 பொது நல்லிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவை தவிர 2 கையிறைப்பான்களும் உள்ளன. தற்பொழுது பாராளுமன்ற உறுப்பினர் நிதியின்கீழ் இக்கிராமத்திற்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க, நிர்வாக ஒப்புதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால்



2000 ஏப்ரல் 7]

வழங்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

**30—**

### மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல்

**வினா 30819—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கொண்டையனஅள்ளி ஊராட்சி, ஆலமரத்துப்பட்டி கிராமத்திற்கு போதுமான குடிநீர் வசதியில்லாமலிருப்பதால், அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1999-2000) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கொண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து, 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 3/2000-க்குள் முடிக்கப்பட்டு மக்கட்பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**31—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 30884—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 7

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர்த்தேக்கம் போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) அறியுமெனில், போதுமான அளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி (மகுடஞ்சாவடி சண்முகபுரம்) குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) திட்டம் செயல்படுத்த சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நீராதாரம் உருவாக்கப்பட்டுவிட்டது. இத்திட்டத்தினை நடப்பு நிதியாண்டிலேயே நிறைவேற்றி பயனுக்குக் கொண்டுவர தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**32—**

### மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி

**வினா 31331—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சி, அருந்ததியர்புரம், புளிச்சகுளம் ஆகிய 2 கிராமங்களுக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அருந்ததியர்புரம் மற்றும் புளிச்சகுளம் குடியிருப்புகள் திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சியில் உள்ள புல்லுக்காட்டுவலசை குடியிருப்பில் அடங்கிய பகுதிகளாகும். புல்லுக்காட்டு வலசை குடியிருப்பிற்கு 1992 ஆம் ஆண்டில் திறந்தவெளிக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து பகிர்மானக் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. பின்பு 1995 ஆம் ஆண்டில் ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய் அமைப்புடன்கூடிய திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அருந்ததியர்புரம் பகுதிக்கு 4 பொது நல்லிகளும், புளிச்சகுளம் பகுதிக்கு 7 பொது நல்லிகளும் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது ஆழ்துளைக் கிணற்றின் நீர் உவர்ப்பாக மாறியுள்ளது. எனவே, அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் திறந்த வெளிக்கிணற்றை நீராதாரமாகக் கொண்ட கட்டுக்குத்தகை பஞ்சேரி குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து அருந்ததியர்புரம், புளிச்சகுளம் ஆகிய குடியிருப்புகளுக்கு தனித்தனியாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய் அமைப்புடன் கூடிய புதிய திட்டத்தைச் செயல்படுத்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளன. தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





**33—**

### மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல்

**வினா 32111—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கருக்காகோட்டை நத்தம் கிராமத்திலும், மேலும் பருத்திக்கோட்டை ஊராட்சியில் பருத்திக்கோட்டைக்கும், உப்பங்கரைக்கும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(1) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கருக்காகோட்டை நத்தம் கிராமம்:

[2000 ஏப்ரல் 7

இக்குடியிருப்பில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் 1985 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு தற்போது பயனில் இருந்து வருகிறது. இதுவே போதுமானதாகும். புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டும் திட்டம் ஏதுமில்லை.

(2) *தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த பருத்திக்கோட்டை:*

இக்குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் 1992 ஆம் ஆண்டு முதல் பயனில் இருந்து வருகிறது. அதிலிருந்து தற்போது இப்பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் பருத்திக்கோட்டை வடக்கு குடியிருப்பில் நடப்பு நிதியாண்டு 1999-2000-ல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் 300 மீ. பகிர்மானக் குழாய் மற்றும் 3 பொதுக்குழாயுடன்கூடிய வசதிகளுடன் ரூ.4.65 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

(3) *தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த உப்பங்கரை:*

நீராதாரம் சம்மந்தமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**34—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 32141—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், மேலஉளூர் ஊராட்சியில் நடைபாலம் என்ற ஊரில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், மேலஉளூர் ஊராட்சியில் நடைபாலம் என்ற குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் மேல்நிலை



2000 ஏப்ரல் 7]

நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையிலுள்ளது. இத்திட்டத்தை மார்ச், 2000-க்குள் பயனுக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**35—**

### மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி

**வினா 32480—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மோளப்பாறைக்காடு, கிட்டாங்கூர், கோணங்காட்டுகோரை ஆகிய பகுதியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மோளப்பாறைக்காடு, கிட்டாங்கூர், கோணங்காட்டுகோரை ஆகிய குடியிருப்புகள் தஞ்சாவூர் ஊராட்சியில் உள்ள சிட்டாக்காடு கிராம குடியிருப்பிற்கு உட்பட்ட பகுதியாகும். மேற்கண்ட குடியிருப்புகளுக்கு கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் (1999-2000) ஆழ்துளைக் கிணறு அமைத்து 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டி குடிநீர் வழங்க சிறப்பு திட்டத்தின்கீழ் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**36—**

### அக்ரோ மையங்கள்

**வினா 24200—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள அக்ரோ மையங்கள் எத்தனை நட்டத்தில் இயங்கி வருகின்றன?

[2000 ஏப்ரல் 7

(ஆ) அந்த அக்ரோ மையங்களை இலாபகரமாக இயக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள 7 அக்ரோ மையங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன.

(ஆ) சங்கங்களின் வியாபார பெருக்கத்திற்குப் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தினால் பல சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. அக்ரோபெட் செய்யும் அனைத்து பணிகளும், திட்டங்களும் இணைய உறுப்பு சங்கங்கள் மூலம்தான் நடைபெற்று வருகின்றன. அரசு நேரடியாக உதவ வழிவகை இல்லை.

**37—**

### ஆம்னி பேருந்துகளை தணிக்கை செய்தல்

**வினா 26269—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் ஆம்னி பேருந்துகள் பேருந்து நிலையங்களுக்கு அருகே நின்று பயணிகளை ஏற்றிச் செல்வதால் தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்து பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளைவிட குறைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தனியார் ஆம்னி பேருந்துகள் பேருந்து நிலையங்களுக்கு அருகே நின்று பயணிகளை ஏற்றிச்செல்வதால், விரைவுப் பேருந்துக் கழகத்திற்கு பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இதுகுறித்து போக்குவரத்துத் துறையிலுள்ள களப்



2000 ஏப்ரல் 7]

பணியாளர்களுக்கு இவ்வகை ஆம்னி பேருந்துகளை ஆய்வு மேற்கொண்டு தணிக்கை அறிக்கை வழங்கும்படி அறிவுறுத்தப்பட்டதில் 1-1-1999 முதல் 30-9-1999 முடிய 4012 ஆம்னி பேருந்துகள் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கை வழங்கப்பட்டு இவ்வகையில் ரூ. 7,06,550 - இயக்க கட்டணமாக வசூலிக்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதியில் ஆம்னி பேருந்துகளை ஒவ்வொரு நாட்களிலும் மாநிலம் முழுவதும் தணிக்கை செய்து தணிக்கை அறிக்கைகள் வழங்க போக்குவரத்து ஆணையரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**38—**

### கூட்டுறவுச் சங்கத் தேர்தல்

**வினா 20789—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்னும் தேர்தல் நடத்தப்பட வேண்டும்?

(ஆ) நீதிமன்றங்களில் வழக்கில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் எத்தனை சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தேர்தல் நடத்த திட்டமிடப்பட்ட தொடக்க நிலை, மைய மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களில் கீழே குறிப்பிட்டுள்ளவண்ணம் இன்னும் 96 கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளது:—

| | | |
|---|---|---|
| தலைமைச் சங்கங்கள் | .. | 2 |
| மையச் சங்கங்கள் | .. | 11 |
| தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 83 |
| மொத்தம் | .. | 96 |

(ஆ) 13.

[2000 ஏப்ரல் 7

39—

## மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம்

**வினா 32731—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் புதிதாக மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் எத்தனை புதிதாக தொடங்கப்பட உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1999-2000 ஆம் ஆண்டிற்குள் மொத்தம் 500 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 13 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேலும் 6 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

40—

## மின்சார கூட்டுறவுச் சங்கம்

**வினா 33029—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் கிராமிய மின்சார கூட்டுறவுச் சங்கம் கடந்த ஆண்டு ஈட்டிய இலாபம் எவ்வளவு?

(ஆ) வருமான வரியாகச் செலுத்தப்பட்டது எவ்வளவு?



2000 ஏப்ரல் 7]

(இ) வருமான வரியில் விதிவிலக்கு பெற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கும்பகோணம் கிராமிய மின்சார கூட்டுறவுச் சங்கம் 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் தணிக்கையின்படி நிகர இலாபமாக முறையே ரூ. 64,97,275 மற்றும் ரூ. 98,08,613 ஈட்டியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் உத்தேசமாக (tentative) ரூ. 1,50,00,000 நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

(ஆ) கும்பகோணம் கிராமிய மின்சார கூட்டுறவுச் சங்கம் 1997-98 ஆம் ஆண்டு ஈட்டிய இலாபத்திற்காக ரூ. 43,40,907-ம் 1998-99 ஆம் ஆண்டில் ஈட்டிய இலாபத்திற்காக ரூ. 52,46,000-ம் வருமான வரியாக செலுத்தியுள்ளது.

(இ) இல்லை.

41—

## அடுக்குமாடிக் கட்டடங்கள்

**வினா 29775—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் 25-வது வார்டில் நிர்மலா கல்லூரிக்கு எதிரில் உள்ள தனியாருக்குச் சொந்தமான கல்லுக்குழியில் குடியிருக்கும் மக்களுக்கு அந்த இடத்தை கையகப்படுத்தி குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

[2000 ஏப்ரல் 7

42—

### நீதிபதி பணியிடம் நிரப்புதல்

**வினா 22708—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்களில் நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவை எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்களில் நீதிபதி பணியிடங்கள் தற்போது காலியாக ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

43—

### மழைக்கால நிவாரணம்

**வினா 27939—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நெசவாளர்களுக்கு மழைக்காலத்தில் நெசவுத் தொழில் பாதிப்பு ஏற்படும்போது மழைக்கால நிவாரணம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் நெசவாளர்களுக்கு மழைக்காலத்தில் நெசவுத் தொழில் பாதிப்பு ஏற்படும்போது, அரசால் "மழையினால் பாதிக்கப்பட்ட பகுதி" (flood prone area) என்று அறிவிக்கப்படும் பகுதிகளில், கீழ்க்கண்ட



2000 ஏப்ரல் 7]

விவரப்படி கூட்டுறவின் கீழுள்ள நெசவாளர்களுக்கு மழைக்கால நிவாரணம் வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்டு வருகின்றது:

| | ஒரு தறிக்கு |
|---|---|
| முழுவதும் பாதிக்கப்பட்ட பருத்தி தறிக்கு | ரூ. 2000 |
| பகுதியாகப் பாதிக்கப்பட்ட பருத்தி தறிக்கு | ரூ. 1000 |
| முழுவதும் பாதிக்கப்பட்ட பட்டு தறிக்கு | ரூ. 3500 |
| பகுதியாகப் பாதிக்கப்பட்ட பட்டு தறிக்கு | ரூ. 1000 |
| கூட்டுறவில் அல்லாத நெசவாளர்களுக்கு: தறி மற்றும் உபகரணங்கள் பாதிப்பிற்கு | ரூ. 400 |
| பாவு பாதிப்படைந்தால் | ரூ. 500 |

44—

### இலவச வேட்டி, சேலை விநியோகம்

**வினா 31576—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வழங்கும் இலவச வேட்டி, சேலை 1989-90-ல் குடும்ப அட்டை உள்ள பொது மக்களுக்கு விநியோகம் செய்ததுபோல நடப்பாண்டில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) அரசு வழங்கும் இலவச வேட்டி, சேலைகளை குடும்ப அட்டை உள்ள பொது மக்களுக்கு வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2000 ஏப்ரல் 7

45—

## வீட்டு வசதி வாரியம்

**வினா 29223—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வழங்கப்படும் வீடுகளுக்கான முழுத் தொகையையும் கட்டிய பின்னர் நீண்ட நாட்களுக்குப்பின் மீண்டும் பாக்கி உள்ளதாகவும் அதற்கு வட்டி சேர்த்து ஒரு பெரும் தொகை கட்ட வேண்டும் என்றும் நோட்டீஸ் அனுப்புவது குறித்தும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அதனால் பாதிக்கப்படும் மக்கள் நலன் கருதி அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் மனை/வீடு/அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்படும்போது சில நிகழ்வுகளில் மனையின் விலை தோராயம் எனக் குறிப்பிடப்படும். இவை முன்னாள் நிலச் சொந்தக்காரருக்கு கொடுக்க வேண்டிய தொகை இறுதியாக்கப்படாமல் உள்ள நிலையிலும், முன்னாள் நிலச் சொந்தக்காரர் கூடுதல் இழப்பீட்டுத் தொகை கேட்டு நீதிமன்றம் சென்ற நிலையிலும்தான் ஏற்படும். அந்தச் சூழ்நிலைகளில் திட்டம் செயல்படுத்திய காலத்திற்கான அடிப்படை விலையினை (base rate) நிர்ணயம் செய்து அதற்குப் பின்னர் ஒவ்வோர் ஆண்டிற்கும் வட்டி முதலாக்கம் செய்து வழிகாட்டு விலை நிர்ணயம் செய்யப்படும். இத்தகைய நிகழ்வுகளில் ஒதுக்கீடுதாரர் தோராய விலை செலுத்திவிட்ட போதிலும் வித்தியாசத் தொகை செலுத்திட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இறுதி விலை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்படும் இனங்களில் ஒதுக்கீடுதாரர் வட்டி நிலுவையின்றி முழுத்தொகையும் செலுத்திவிட்ட பின்னர் நிலுவைத் தொகை செலுத்த வேண்டிய நடவடிக்கை ஏதும் வாரியம் எடுப்பதில்லை.



2000 ஏப்ரல் 7]

46—

## வீட்டு வசதி வாரிய வீடுகள்

**வினா 30990—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி வாரிய வீடுகளை ஒதுக்கீடு செய்வதில் எந்தமுறை பின்பற்றப்படுகிறது?

(ஆ) அதன்மீது அதிருப்தி எழுந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீட்டு வசதி வாரியத் திட்டப் பகுதிகளில் குடியிருப்புகள் ஒதுக்கீட்டிற்குத் தயாரானவுடன் 15 விழுக்காடு அரசு ஒதுக்கீட்டுப் பங்கிற்கு (GDO) பதிவு செய்த பின்னர் 85 விழுக்காடு குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படும் முறை பின்பற்றப்படுகிறது. இந்த முறையில் அதிருப்தி தெரிவிக்கப்படவில்லை.

47—

## டான்சில்க் நிறுவனத்திடமிருந்து கடன்

**வினா 21697—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டான்சில்க் நிறுவனத்திடமிருந்து பட்டு கூட்டுறவு சங்கங்கள் கடனில் வாங்கிய பட்டு நூலுக்கான தவணை தவறிய பாக்கிக்கு விதிக்கப்பட்டுள்ள 2% தண்ட வட்டி, சங்கங்கள் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் நிலுவையை செலுத்தினால் அரசுக்கு ஏற்படும் இழப்புத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

டான்சில்க் நிறுவனத்திடமிருந்து பட்டு கூட்டுறவு சங்கங்கள் கடனில் வாங்கிய பட்டு நூலுக்கான தவணை தவறிய பாக்கிக்கு வசூலிக்கப்படும் தண்ட வட்டி (அபராத வட்டி) 3% ஆகும். அரசு ஆணை கடித எண் 103,

நாள் 21-5-1998-ல் இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் பட்டு கூட்டுறவு சங்கங்கள் தங்கள் பாக்கியை செலுத்திவிட்டால் இந்த 3% அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும். அதன்படி 10 கூட்டுறவு சங்கங்கள் தங்களது பாக்கியைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தி பயனடைந்துள்ளன. இவ்வாறு அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்ட வகையில், ரூ. 8696-ஐ அச்சங்கங்களுக்குத் தள்ளுபடி செய்த வகையில் இணையத்திற்கோ, அரசுக்கோ நட்டம் ஏதுமில்லை.

**48—**

### ஊட்டச்சத்து வழங்குதல்

**வினா 23044—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி, ஆதிதிராவிட குடியிருப்புக்கு அருகாமையில் உள்ள மையத்தில் ஊட்டச்சத்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சுந்தரபாண்டியபுரம் ஆதிதிராவிட குடியிருப்பு கிராம மக்கள், அருகாமையில் உள்ள மையத்தில் இருந்து இணை உணவு வழங்கிட வேண்டாம் எனவும், புதிய மையம்தான் வேண்டும் எனவும் கோருவதால் அருகாமையில் உள்ள மையத்திலிருந்து இணை உணவு வழங்கிட இயலவில்லை. உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் கூடுதலாக புதிய மையங்கள் ஆரம்பிக்க மத்திய அரசின் அனுமதி தேவை.

(ஆ) இக்கேள்வி எழாது.





**49—**

### சார்-பதிவாளர் அலுவலகம்

**வினா 27150—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

திருவோணம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டடம் கட்ட ரூ. 14.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**50—**

### சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா 29906—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் கள்ளிமந்தையத்தில் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[2000 ஏப்ரல் 7

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

(திரு. பி.ஆர் சுந்தரம், டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று பேர்கள் நிற்கிறீர்கள்; யாருக்கு அனுமதி கொடுப்பது? கொஞ்சம் பின்னாலே பாருங்கள். (குறுக்கீடு) மரபெல்லாம் ஒன்றும் கிடையாதா இப்பொழுது? நான் வினா நேரம் முடிந்தது என்றுகூடச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்த அறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆம் தேதி அன்று, தமிழக முதல்வர்மீது ஓர் உரிமைப் பிரச்சினை எழுதி, தங்களிடம் கொடுத்திருந்தேன். அந்த உரிமைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவிட்டீர்களா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைப் பிரச்சினை கொடுத்தவுடன், உரிமைக் குழுவிற்கு அனுப்புவது மரபல்ல. அதில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்துவிட்டுத்தான் அனுப்பவேண்டும். நீங்கள் எழுதியதைப் பரிசீலித்துவிட்டு தீர்ப்பு கூறுகிறேன்.

### (ஆ) அண்ணா பல்கலைக் கழகம் நடத்தும் தொழில் கல்லூரிகளுக்கான நுழைவுத் தேர்வு நாட்கள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு நடத்துகிற professional college admission-க்கான தேர்வினை அண்ணா பல்கலைக் கழகம் நடத்துகிறது. ஏற்கெனவே ஒரு தேதியை அண்ணா பல்கலைக் கழகம் அறிவித்துவிட்டு, பிறகு ஏப்ரல் 29, 30 என்று தேதியை இப்போது மாற்றியிருக்கிறது. இதற்கு முன்பே, மத்திய அரசின் Human Resources Department-ன் கீழுள்ள Indian Institute of Information Technology என்ற நிறுவனம் நடத்தக்கூடிய தேர்வும், 29 ஆம் தேதியே நடக்கிற காரணத்தினால், இப்பொழுது தமிழகத்தில்



2000 ஏப்ரல் 7]

இருக்கக்கூடிய எந்த மாணவரும் Indian Institute of Information Technology என்கிற அந்த நிறுவனம் நடத்துகிற தேர்விலே பங்குகொள்ள முடியாமல் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். Information Technology பற்றியும், கணினி பற்றியும் மிக அதிகமான கவனம் செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிற தமிழக அரசு, மத்திய அரசு நடத்தக்கூடிய Information Technology தேர்விலே, தமிழக மாணவர்களும் கலந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிற காரணத்தினாலே, மாணவர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகிற காரணத்தினாலே, நம்முடைய professional college admission-க்கான தேர்வுகளை, நம்முடைய தமிழக அரசின் அண்ணா பல்கலைக் கழகம் நடத்தக்கூடிய அந்தத் தேர்வுக்கான தேதிகளை மாற்றி அறிவிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கமாகவும் ஒரு பதில் சொல்லலாம்; முடியாது என்றும் திட்டவட்டமாகச் சொல்லலாம். விளக்கமாகச் சொல்வதென்றால், ஏற்கெனவே, தமிழக அரசு அறிவித்த அந்தத் தேதிகளில், அதற்கு அடுத்த நிலையிலே உள்ள இன்னொரு தேர்வு, அகில இந்திய அளவிலே நடைபெறுகிறது என்று சொல்லி, ஒரு குறிப்பிட்ட பாடத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள், எந்த இடத்தில் எழுதுவது என்று தெரியாமல் அவர்களுக்கு ஓர் இடர்ப்பாடு ஏற்படுவதாகத் தெரிவித்து, மறுபடியும் அந்தக் குழு கூடி, ஆய்வு செய்து, இந்தத் தேதிகளை மாற்றி, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு—இலட்சம் பேர் இங்கு எழுதுவார்களானால், அந்த ஆயிரம் பேர் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிவித்தது. இப்போது, நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் தெரிவித்த இதைப் பற்றியும் அந்தக் குழுவிற்குத் தெரிவித்தபோது, அவர்கள் பரிசீலனை செய்து, இதை எழுதக்கூடியவர்களின் எண்ணிக்கை குறைவு; அப்படி எண்ணிக்கை குறைவாக உள்ளவர்களுக்காக எல்லாம் தொடர்ந்து மாற்றுவது என்று சொன்னால், நமக்கு ஒரு நாளும் கிடைக்காது; எனவே இயலாது என்று Academic குழு தெரிவித்திருக்கிறது. அந்த இயலாமையைத்தான் நான் தெரிவிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விஷயம் குறித்து, என்னுடைய அறையில் இரண்டு நாட்கள், மாண்புமிகு உறுப்பினர் என்னிடமும் மாண்புமிகு கல்வி அமைச்சரிடமும் பேசி, விளக்கம் பெற்றிருக்கிறார். அதற்குப் பிறகு, என்னுடைய அனுமதியைப் பெறாமலே இங்கு வந்து எழுப்புகிறார். இதுதான் இனிமேல் நடக்கப்போகின்ற மரபு.

# 3. கவன ஈர்ப்பு

## கன்னியாகுமரி மாவட்ட மீனவர் கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுக்க தூண்டில் வளைவு அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் மாண்புமிகு மீன் வளத் துறை அமைசசர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

முற்பகல்10-35

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டத்தில், கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட இணையம், புத்தன்துறை, இராமன்துறை, முள்ளூர்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்கும் தொழில் செய்ய வசதியாகவும், கடல்கொந்தளிப்பிலிருந்து, அக்கிராமங்களைக் காப்பாற்றும்பொருட்டும் தூண்டில் வளைவு அமைப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தமிழ்நாட்டில் கடற்கரை ஓர மீனவக் கிராமங்களில் இயற்கையின் சீற்றத்தால் கடலரிப்பு ஏற்பட்டு வருகிறது. இக்கடலரிப்பு தடுப்புப் பணிகள் பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு பொறியியல் பிரிவு மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

தற்போது மீனவர்கள் மீனவக் கிராமங்களில் கடலரிப்பு ஏற்படும் இடங்களில் தூண்டில் வளைவு என்ற அமைப்பைக் கட்டுமாறு கோரி வருகின்றார்கள். ஒவ்வொரு மீனவக் கிராமத்திலும் தூண்டில் வளைவு (சிராயின் அமைப்பு) கட்டுவதற்கு சாத்தியப்படுமா என்பதைக் கண்டறியும் பொருட்டு, அந்தந்தக் கிராமங்களில் கடலமைப்புப்படி தனித்தனியே பூண்டி நீரியல் மற்றும் நீர் நிலையியல் இயக்குநர் அலுவலக ஆய்வுக் கூடத்தில் மாதிரி ஆய்வுகள் மேற்கொண்டு அந்த ஆய்வுப்படி தூண்டில் வளைவு கட்ட சாத்தியமானால் அதன் அடிப்படையில் அரசு அளவில் பரிசீலிக்கப்பட்டு பணிகள் தொடங்க வாய்ப்பு உள்ளது.





எனவே கிள்ளியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பில் தெரிவித்துள்ள இணையம், புத்தன்துறை, இராமன்துறை, முள்ளூர்துறை ஆகிய கிராமப் பகுதிகளில் தூண்டில் வளைவு அமைக்கும் பணியினை உடனடியாக மேற்கொள்ள இயலாது. ஏனெனில் அப்பகுதியில் கடலமைப்பின்படி பூண்டி நீரியல் மற்றும் நீர்நிலையியல் ஆய்வகத்தில் மாதிரி ஆய்வுகள் மேற்கொண்டு அறிந்த பின்பு சாத்தியப்படுமானால் இப்பகுதியில் தூண்டில் வளைவு கட்ட பரிசீலிக்கப்படும்.

கடலரிப்பு ஏற்பட்டுவரும் ஒவ்வொரு மீனவக் கிராமத்திலும் மீனவர்கள் கோரும் தூண்டில் வளைவு என்ற அமைப்பினை கட்ட வேண்டுமெனில் ஒவ்வொரு கிராமத்திலும் மாதிரி ஆய்வு செய்ய சுமார் ரூ. 4 லட்சங்களுக்கு மேல் செலவினம் ஏற்படும்.

தற்போது முதற்கட்டமாக திருநெல்வேலி மாவட்டம், உவரி கிராமத்தில் தூண்டில் வளைவு என்ற அமைப்பை அமைக்கும் பொருட்டு, உவரி கிராமத்தைப் பார்வையிட்டு முன் ஆய்வு அறிக்கை தயாரிக்கும் பணி—நடவடிக்கை—பூண்டி நீரியல் மற்றும் நீர்நிலையியல் இயக்குநர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் செயல்பாடுகளைக் கண்டறிந்தபிறகு இதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பு ஏற்படும் கிராமங்களில் தூண்டில் வளைவு என்ற அமைப்பினை அமைப்பது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிற சில கருத்துகளைப்பற்றி நான் இங்கே கூறியாக வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில், பொதுவாக, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில், பெரும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, ஆண்டுதோறும், குறைந்தபட்சம் 100, 150 வீடுகள் கடலில் இழுத்துச்செல்கின்ற ஒரு துர்பாக்கியமான நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அந்தப் பகுதிகளிலே, தடுப்புச் சுவர்கள் அமைக்கும்முகத்தான், அரசு பல கோடி ரூபாய்க்கு, கடற்கரை கிராமங்களில் ஒட்டுமொத்தமாக தடுப்புச் சுவர் அமைத்து வந்திருக்கின்றது. நான் குறிப்பிட்டிருக்கிற என்னுடைய பகுதியைச் சேர்ந்த, குறுமனை, மிடாலம், மேல்மிடாலம், இணையம், புத்தன்துறை, இராமன்துறை, முள்ளூர்துறை, தேங்காய்பட்டணம் ஆகிய இந்தப் பகுதிகளில், கிட்டத்தட்ட 15,000 முதல் 20,000-க்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடிக்கச்

செல்கின்ற சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். கடல் கொந்தளிப்பாக இருக்கிற காரணத்தாலே, கட்டுமரங்கள், விசைப்படகுகள், கடலிலே செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல, கடல் கொந்தளிப்பு வருகிறபோது, கிராமங்களும் அடித்துச் செல்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இங்கே இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது, பூண்டி நீரியல் மற்றும் நீர்நிலையியல் ஆய்வகத்தின் மூலம் அதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, 15 ஆண்டுகளாக இதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். ஆனால், இன்னும், அவற்றில் அவர்கள் கவனம் செலுத்தாதது மிக வேதனை அளிக்கிறது. அதைப்போல, ஒவ்வொரு கிராமத்திற்கும் மாதிரி தூண்டில் வளைவு அமைப்பது குறித்து ஆய்வு செய்வதற்கு 4 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த, 1997-98 ஆம் ஆண்டு அன்றைய நாகர்கோவில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பெரியவர், மரியாதைக்குரிய டென்னிஸ் அவர்கள், 5 இலட்சம் ரூபாயை, ஆய்விற்கு என்று கொடுத்திருக்கிறார்கள். நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் கொடுத்தார்கள். அன்றைக்கு, நாங்கள், இந்த மனுக்களைக் கொடுத்ததன் அடிப்படையில், பெங்களூரிலிருந்து ஒரு Team அங்கே வந்து இவற்றையெல்லாம் சரி செய்கிறோம் என்று சொல்லி ஆய்வு செய்தார்கள். ஆய்வு செய்து, 5 இலட்சம் ரூபாயையும் கொடுத்தபிறகு இதுவரைக்கும், அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமல்ல, கடந்த நிதி ஆண்டில், இப்படிப்பட்ட கடல் கொந்தளிப்புச் சூழ்நிலையிலே, தமிழக அரசுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கேயிருந்து பரிந்துரை செய்து, 6 கோடி ரூபாய்க்கு, அந்தக் கடற்கரை கிராமங்களிலே தடுப்புச்சுவர் அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்தார். ஆனால், அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பெருந்தன்மையோடு, ஒரு கோடி ரூபாயைக் கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் அதிலே 5 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது. இந்தப் பணத்தை வைத்தே, அந்தத் தூண்டில் வளைவு அமைக்க முடியும் என்பது எங்களுடைய கருத்து. எனவே, அதை நீங்கள் கருத்திலேகொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மிகவும், experienced legislator. இரண்டு கேள்விகளைக் கேட்பதிலே, இரண்டையும் சேர்த்து ஒரு பேருரையையே நிகழ்த்துகிறீர்கள்.



**டாக்டர் தே. குமாரதாஸ்:** இது, பல்லாயிரக்கணக்கான மீனவர்களுடைய பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இல்லை என்று சொல்லவில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். அதுமட்டுமல்ல, மீனவர்கள் இந்த 6 மாத காலம் மீன்பிடிக்காத ஒரு சூழ்நிலை ஏற்படுகிற நிலையிருக்கிறது. இப்போது பாகிஸ்தான் சிறையிலே 19 பேர் இருக்கிறார்கள் என்று சொன்னால், வெளி நாட்டிற்குத் தொழில் செய்வதற்கு சென்ற காரணத்தாலேதான் அங்கே மாட்டிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பக்கத்திலே சென்றால், இலங்கையிலே பிடித்து அங்கே அடைத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையை தவிர்க்கின்றமுகத்தான், இப்படிப்பட்ட மீன்பிடி தூண்டில் வளைவுகளை அமைக்கிறபோது, அவர்கள் தொழில் செய்ய முடியும். இன்னொரு கருத்தினையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு தூண்டில் வளைவு அமைக்கிறபோது, இன்னொரு கிராமத்தை அது பாதிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதியைப் பொறுத்தவரையில், இரண்டு கேள்விகள் கேட்கலாம். நீங்கள், இப்போது நான்கு கேள்விகள் கேட்டு, இன்னும் அமைச்சருடைய கருத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். அதனால், நீங்கள் தயவுசெய்து சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அமைச்சர் அவர்களுக்கு ஒரு சின்ன விளக்கம் தர வேண்டும். அதிகாரிகள் சொல்வதை வைத்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால், ஒரு சின்ன விளக்கம் சொல்ல வேண்டும். வேறு ஒன்றுமில்லை. ஒரு கிராமத்திலே தூண்டில் வளைவு அமைக்கிறபோது...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அமைச்சரைச் சந்திக்க முடியாதவர் அல்ல, அவருக்குத் தெரிந்த ஆயிரம் விளக்கங்களை அமைச்சரிடத்திலே நேரில் பேசலாம். அதற்கு சட்டமன்ற உறுப்பினருக்கு உரிமையுண்டு. அவையில் அதிக நேரத்தை எடுத்துக்கொண்டு, அந்த

நேரத்தை அவரவர்கள் விளக்க விரும்புகிற எல்லாவற்றையும் விளக்குவதற்குப் பயன்படுத்துவது. சட்டமன்ற நடைமுறைக்கு ஏற்றதல்ல. மற்ற உறுப்பினர்களுடைய உரிமையில் அது தலையிடுவதாகும்.

முற்பகல் 10-40

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எனக்கு விளக்கம் அளிக்க வாய்ப்பு இன்றைக்குத்தான் கிடைத்திருக்கிறது. அதற்குப் பிறகுதான் சொல்கிறேன். கேரள மாநிலத்தில் இதேபோல தூண்டில் வளைவுகள் நிறைய அமைக்கப்பட்டு இருக்கின்றன. அங்கே, பக்கத்தில் உள்ள கிராமங்கள் ஒன்றும் அடித்துச் செல்லப்படவில்லை. எனவே, தென்பகுதிகளுக்கு ஒட்டுமொத்தமாகச் சேர்த்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. மணி அவர்கள் கேட்டிருந்ததைப்போல, இந்தப் பகுதிக்குத்தான் என்று இல்லை, விளவங்கோட்டிற்கு உட்பட்ட பகுதியானாலும் சரி, தேங்காய்ப்பட்டினம், பொழி என்கிற பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியை மையமாக வைத்தாவது இதை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீனவர்கள்மீது அக்கறைகொண்டு செயல்படுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குரிய விளக்கத்தை நேற்றே அவையில் நான் அளித்துவிட்டேன். இருந்தாலும், இந்த விளக்க அறிக்கையில், விளக்கக் குறிப்பில் முதற்கட்டமாக உவரியை நாங்கள் தேர்வு செய்து அதற்கு ஆய்வுகள் எல்லாம் எதிர்பார்க்கப்படுகின்றன. அந்த அறிக்கை வந்தபின், படிப்படியாக ஒவ்வொரு கிராமமாக, உறுப்பினர் கேட்பது போன்று, அமைப்புகள் ஏற்படுத்த முடியுமா என்று அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்தெட்டாவது முதல் இருநூற்று முப்பத்திரெண்டாவது வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.



## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 38—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

### (ஆ) கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு

### (அ) கோரிக்கை எண் 38—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தபடியாக, 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 38—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 336,36,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 102, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் இருந்து சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1142, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம்-ஊத்துக்குளி ஒன்றியம் மற்றும் பெருந்துறை ஒன்றியம் ஆகிய இரண்டு வட்டார வளர்ச்சிப் பகுதிகளிலும் சில முக்கியச்

சாலைகளை கிராமப்புறச் சாலைகள் திட்டத்தில் எடுத்துப் பணிகளை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 833, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் சுற்றுச்சாலை அமைக்கும் பணிகள் விரைவாகக் காலதாமதமின்றி முடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 394, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி வழி, உள்ளிக்கோட்டை-பட்டுக்கோட்டை சாலையை அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் அகலப்படுத்தி புதிய சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் **464**, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மறுகால்குறிச்சி முதல் வில்லுவராயர்குளம் ஆதிதிராவிடர் காலனி வரை சாலை அமைத்துத் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ.100-குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 247, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், காடையான்பட்டி ஒன்றியம், டேனிஷ்பேட்டையிலிருந்து குருவம்பட்டி உயிரியல் பூங்கா வரையுள்ள மண்சாலையை தார்ச் சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 863, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 947, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1191, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள, பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 699, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 535, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, பேராவூரணி, ஆதனூர் மற்றும் நெல்லிஅடிக்காட்டை இணைக்கும் அம்புலி ஆற்றின் குறுக்கே புதிதாக பாலம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 302, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணத்திலிருந்து தஞ்சை செல்லும் பேருந்து சாலையில் வளுத்தூரிலிருந்து அய்யம்பேட்டை ரெயில்வே நிலையம் வரை உள்ள சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலையாக மாற்ற வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 347, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழையனூரிலிருந்து ஓடாத்தூர் வழியாக நண்டுணாச்சி கிராமத்திற்கு சாலை அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 421, திரு. வி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, திருவேங்கடம் பேரூராட்சி, திருவேங்கடத்திலிருந்து ஆவுடையாபுரம், ஆலங்குளம், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் செல்லும் சாலையில் திருவேங்கடம் அருகில் உள்ள பெரியஓடையில் பாலம் ஒன்று கட்டி போக்குவரத்திற்குத் திறந்துவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1046, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1113, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, உடையான்குடியிலிருந்து நிண்ணியூர் வழியாக குழுமுரைசாலைவரை சேரும் குறுக்குச் சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 63, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், களியக்காவிளை-விரிவிளை சாலையில் கோழிவிளை முதல் விரிவிளைவரை பழுதடைந்துள்ள சாலையைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 687, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 914, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, To discuss the need to lay a road from Mulukalapatti to Kondampatti in Chennapatti Panchayat, Sholagiri Block, I move—

"That the sum of Rs.336,36,78,000 allocated under Demand No.38- Roads, Bridges and shipping be reduced by Rs.100".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1027, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் தியாகதுருகம் சாலை, கெடிலம் எலசனூர்கோட்டைச் சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அவற்றை உடனடியாகச் செப்பனிடுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 433, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை-மேலதொண்டியகாட்டில் பாலம் ஒன்று கட்டி மக்களின் உபயோகத்திற்குத் திறந்துவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 735, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் மேற்கு கடற்கரையோரச் சாலையை விரைவில் முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 785, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை ஒன்றியம் புத்துதர் மாலையூர் சாலை 0/0/2-7.2. கி.மீ. சாலை, பாப்பாகோவில்-இழப்பூர் 0/0-7/6, 7.6 கி.மீ. சாலை, சிக்கல் ஒட்டதட்டை சாலை 0/0-5/0-5 கி.மீ. சாலை, பரவை, நீர்தள மங்களம் சாலை 0/0-2/2-2.2 கி.மீ. சிக்கல்-சங்கமங்கலம்பெருட்கடமலூர் சாலை 0/0-4/0 4 கி.மீ. ஆகிய சாலைகள் ஊரகச் சாலை திட்டத்தின்கீழ் தார்ச் சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,36,78,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 637, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோத்தகிரியிலிருந்தும், மோயாரிலிருந்தும், தொங்குமரஹாடா செல்லத் தனித் தனியாகச் சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2722, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதியில் உள்ள அனைத்துச் சாலைகளையும் செப்பனிட்டு மேம்படுத்த வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 336,36,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

முற்பகல் 10-45

## (ஆ) கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 56 — சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 466,49,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 100, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடி முதல் ஆலங்காயம் வரை உள்ள சாலையைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 21, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, எட்டிக்குட்டைமேடு முதல் இளம்பிள்ளை வரை செல்லும் சாலையைப் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1140, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 816, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் சுற்றுச்சாலையை ஒட்டி 45 கோடி மதிப்பீட்டில் சாலைகள்,

பாலங்கள் கட்டும் இரண்டாம் கட்டப் பணிகளைத் தொடங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 389, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 449, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், களக்காடு-சவளைக்காரன்குளம்-கோவிலம்மாள்புரம்-காமனேரி-செட்டிமேடு-சோனாவூர் ஏர்வாடி சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 237, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், சூரமங்கலம் முத்துநாயக்கன்பட்டி சாலையில் பழையூர் சத்திரம் அருகே ஒரு தரைப் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 873, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 946, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி கடையம்-முக்கூடல் சாலை பழுதடைந்துள்ளதால் அதை உடனடியாக செப்பனிட்டு சீர்செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 704, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

[2000 ஏப்ரல் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 511, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, அத்தாணி, செல்லப்பிள்ளையார் கோயில், கட்டுமாவடி ஆகிய கிராமங்களில் உள்ள இணைப்புச் சாலைகளை கிராம நெடுஞ்சாலைத் துறை மூலம் தார்ச் சாலைகளாக மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 327, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, கோவிந்தநாட்டுசேரி ஊராட்சியில் ஒன்றிய பட்டுகுடி, கூடலூர், புத்தூர், குடிக்காடு செல்லும் கொள்ளிடக்கரை சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலையாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 70, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " குமரி மாவட்டம், குளச்சல் முதல் நீரோடி வரையிலான கடற்கரை சாலைப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



2000 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 918, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, 'To discuss policy', I move—

"That the sum of Rs. 466,49,36,000/- allocated under Demand No. 56, Capital Outlay on Roads, Bridges and Shipping be reduced by Rs. 100.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 430, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மருதூர் முதல் ஆதிச்சபுரம் வரை உள்ள கோதையாற்று இடதுகரை சாலையைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 772, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தார்ச் சாலைக்கு மாற்றாக ரப்பர் கலந்த தாரைப் பயன்படுத்தி தமிழகத்தில் சாலைகளை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 346, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கே. தங்கமணி] [2000 ஏப்ரல் 7

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 466,49,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் இந்த விவாதத்திலே பங்கெடுக்க இருக்கின்றார்கள். ஆகவே, கண்டிப்பாக எந்த ஒரு உறுப்பினருக்கும், எவ்வளவு சிறப்பாக பேசக் கூடியவராக இருந்தாலும், 10 நிமிடத்திற்கு மேல் கொடுக்க முடியாது. அதுமட்டுமல்லாமல், மீண்டும் ஒரு முறை விதியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். புகாரோ, குற்றச்சாட்டோ சொல்ல வேண்டுமென்றால், ஆதாரத்தை என்னுடைய அறையில் காட்டிவிட்டுத்தான் பேச வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்களை விவாதத்தைத் தொடங்கி வைக்குமாறு அழைக்கின்றேன்.

**திரு. ச. அழகிரி:** எங்களுடைய பெருத்த மரியாதைக்கும், நம்பிக்கைக்கும் உரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமாக தமிழ் மாநில காங்கிரசின் சார்பாக எனது கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

@ 556 முதல் 591 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



2000 ஏப்ரல் 7] [திரு. ச. அழகிரி]

அதற்கு முன்பாக ஒரு விஷயத்தைப் பேரவையிலே பதிவு செய்ய நான் விருப்பப்படுகிறேன். 1984 ஆம் ஆண்டு தமிழகத்திலே நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகமும், அ.இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் போட்டியிட்டன. அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவிற்கு மருத்துவ சிகிச்சை பெறுவதற்காகப் போயிருந்தார்கள். இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு 'wall poster' ஒன்றை அச்சடித்துப் பிரசுரித்தார்கள். அதிலே, எனது 40 ஆண்டுகால நண்பர் நலம் பெற்றுத் திரும்பி வந்தவுடன் இந்த ஆட்சியை அவரிடம் ஒப்படைத்துவிடுகிறேன் என்ற ஒரு வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு பல பிரச்சினைகள் ஏற்பட்ட காரணத்தினால் அந்தச் சுவரொட்டி திரும்பப்பெறப்பட்டது. நம்முடைய முதலமைச்சர் அன்றைக்குச் சொன்ன அந்தக் கருத்துகளுக்கு அ.இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஏமாறவில்லை என்பதனைப் பெருத்த மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தாக இருப்பதிலே எனக்கு எந்த மறுப்பும் கிடையாது. இது Highways மானியம். ஒருவேளை Highways-லே எங்கேயாவது ஒட்டியிருந்திருப்பார்கள் என்ற காரணத்தினாலே (மேசையைத் தட்டும் ஒலி) பேசியிருக்கலாம். ஏனென்றால், ஒவ்வொரு துறை மானியத்தையும் அரசியலாக்க விரும்பினால் அரசியல் முறையிலேயே பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும். விவாதம் பயனளிக்கக்கூடிய கருத்துகளை உள்ளடக்கியதாக அமையாமல் போய்விடும். ஆகவே, அரசியலைப்பற்றிப் பேசக்கூடிய வேறு சூழ்நிலைகளில் மாண்புமிகு உறுப்பினர் பேசுவதைப்பற்றி எனக்குத் தடை இல்லை. அந்தக் கருத்து அவருக்கு உரிமையான கருத்து, அவருக்குச் சொந்தமான கருத்து என்பதையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தை இந்த 10 நிமிடங்களில் இதற்குப் பயன்படுத்திவிட்டு, உறுப்பினர் தனக்குப் போதுமான பேசுகிற நேரம் கிடைக்கவில்லை என்று வருத்தப்படுவதிலே அர்த்தம் இல்லை.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைப் பணித் துறை 106 பாலங்களை தற்போது கட்டி வருகிறது. Turn-key என்கின்ற முறையின்கீழ் இவை இப்போது நடைபெற்று

வருகின்றன. Turn-key முறையிலே இந்தப் பாலங்கள் கட்டப்படுவது தவறு என்பதை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, ஒருவர் வீடு கட்ட விரும்புகிறார். வீடு கட்ட வேண்டுமென்றால் சிமெண்ட், கம்பி, மணல், மரம் எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்து, கொத்தனாரை வைத்துக்கொண்டு தனது மேற்பார்வையின்கீழ் வீட்டைக் கட்டுவது என்பது ஒரு முறை. இன்னொரு முறை இருக்கிறது. எனக்கு ஒரு ஆயிரம் சதுர அடியிலே வீடு வேண்டும்; பணம் கொடுத்துவிடுகிறேன்; எவ்வளவு செலவாகிறதோ கட்டித் தந்துவிடுங்கள் என்று கூறுவது இரண்டாவது முறை. இந்த இரண்டு முறையிலுமே வீட்டின் சொந்தக்காரருக்கு வீடு கிடைக்கும். ஆனால், முதல் முறையிலே வீடு கட்டினால் அந்த வீட்டிலே அவருக்கு நஷ்டம் குறைவாக இருக்கும்; செலவு கொஞ்சமாக இருக்கும். ஆனால், இரண்டாவது முறையிலே வீடு கட்டினால் வீட்டினுடைய சொந்தக்காரருக்கு செலவு அதிகமாகும். இதுதான் இப்போது இருக்கின்ற நடைமுறை. ஆனால், தமிழக அரசாங்கம், நெடுஞ்சாலைத் துறை 106 பாலங்களைக் கட்டுகின்றபோது, நான் கூறியதில் இரண்டாவது முறையைத் தேர்ந்தெடுத்து இருக்கிறது. எதிலே செலவு மிக அதிகமாகுமோ அந்த முறையைத் தேர்ந்தெடுத்து, turn-key project-ன்கீழ் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த turn-key-யைப் பொறுத்தவரை இன்னொரு நடைமுறையும் இருக்கிறது. நமக்குத் தெரியாத தொழில் நுட்பமாக இருந்தால், இதுவரை நம்முடைய நாட்டிலே கடைபிடிக்கப்படாத தொழில்நுட்பமாக இருந்தால், அந்தத் தொழில்நுட்பம் வேறு யாருக்குத் தெரிந்திருக்கிறதோ அவர்களிடம் இந்தப் பணியைக் கொடுத்து செய்யச் சொல்வது என்பதுதான் turn-key முறையினுடைய உள்ளார்ந்த தத்துவம்.

உதாரணமாக, 100 அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்று கட்ட வேண்டும் என்று சொன்னால் அந்தத் தொழில்நுட்பம் நம்மிடம் இல்லை. அதனை turn-key முறையிலே தரலாம். அல்லது ஒரே இடத்திலே ஒன்றன்மீது ஒன்றாக 4 பாலங்கள் கட்ட வேண்டும் என்று சொன்னால், அந்தத் தொழில்நுட்பம் நம்மிடம் கிடையாது. அதனை turn-key முறையிலே தரலாம், ஆனால், நெடுஞ்சாலைத் துறை என்ன செய்திருக்கிறது என்று சொன்னால், turn-key என்ற தத்துவத்தை கையிலே வைத்துக்கொண்டு 16 மீட்டர் நீளம் உள்ள பாலங்களைக்கூட turn-key முறையிலே கொடுத்திருக்கிறார்கள். இது ஒரு கேவலம் என்பதை நான் இந்த இடத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி அவர்கள் செய்திருக்கக்கூடாது.



**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, turn-key முறையே தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் வாதாடுவது பொருத்தமற்றது என்று நான் கருதுகிறேன். தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, அகில இந்தியாவிலேயும், உலக முழுவதும்கூட இந்த turn-key முறையைத்தான் இப்போது பின்பற்றுகிறார்கள். அது அதிகமான தொகை கொடுப்பதற்கான வழிமுறை என்று இட்டுக்கட்டிப் பேசுவது பொருத்தமற்றது. இந்த turn-key முறையிலே, குறைந்த அளவுக்கு பாலத்தை tender எடுத்து இருக்கிறார்கள் என்றுகூட அவர்களுடைய வாதத்தின் அடிப்படையிலே, குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே turn-key முறை என்பது இப்போது மட்டுமல்ல, கடந்த காலத்திலேயும் பின்பற்றப்பட்டிருக்கிறது. இன்னொன்று, இந்த 106 பாலங்களுக்கு HUDCO நிறுவனமும், NABARD நிறுவனமும் கடன் வழங்குகின்றன. கடன் கொடுக்கிறவர்கள் 'இதை உங்களுடைய துறை மூலமாக விரைவாக நிறைவேற்ற முடியாது; turn-key முறை மூலமாக, Consultancy மூலமாக நிறைவேற்றுங்கள்' என்று ஒரு condition போடுகிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் திட்டங்களை விரைவாக நிறைவேற்ற வேண்டும், பாலங்கள் நிரம்பக் கட்ட வேண்டும், அதற்கு நமக்கு நிதியாதாரம் தேவை. நிதியாதாரம் தருகிறவர்கள் இத்தகைய condition போடுகிறபோது அதை நாம் ஏற்றுக்கொள்வதிலே என்ன தப்பு? தவறு இருந்தால் சுட்டிக்காட்டலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லாத விஷயங்களை எல்லாம் சொன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். Turn-key முறையே தவறு என்று நான் சொல்லவில்லை. 106 பாலங்களை turn-key முறையில் செய்திருக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய வாதம். (குறுக்கீடு) Turn-key முறை வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. நமக்குத் தெரியாத தொழில்நுட்பத்திலே turn-key முறையை நாம் கடைபிடிக்கலாமே ஒழிய, 16 மீட்டர் நீளமுள்ள பாலங்களை ஒரு சாதாரண ஒப்பந்தக்காரர், கிராமத்திலே இருக்கிற ஒப்பந்தக்காரர்கூடச் செய்துவிட முடியும். அதற்கு அந்த turn-key முறை வேண்டாம் என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன்.

முற்பகல் 10-55

அடுத்து, இதிலே தனியார் Consultant-கள் நுழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருபுறம் turn-key முறையிலேயும் நீங்கள் கொடுத்துவிட்டு, இரண்டாவது தனியார் Consultant-களையும் அதன் உள்ளே நுழைத்திருப்பது என்பது நியாயமற்றது என்பது என்னுடைய வாதம். இந்த 106 பாலங்களைக் கட்டுமுன் தளஆய்வு, தளபரிசோதனை மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகளைச் செய்யத் தனியார் Consultant-களை நெடுஞ்சாலைத் துறை நியமனம் செய்துள்ளது. இவர்களது பணி, பாலங்களைக் கட்டும் இடத்தை ஆய்வு செய்வது, மண் பரிசோதனை செய்வது, எவ்வளவு ஆழத்திற்கு pillar அல்லது அடித்தளம் அமைப்பது என்று முடிவு செய்வது மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பது போன்றவைதான். இங்குதான் பிரச்சினை ஆரம்பிக்கிறது. தனியார் Consultant-கள் தந்துள்ள விவரங்கள் சரிதானா என்பதனைத் துறையினுடைய அதிகாரிகள் அருகிலிருந்து சரிபார்த்து இருக்கிறார்களா? ஒரு பாலம் கட்டப்படுகின்ற இடத்தைத் தனியார் Consultant-கள் சென்று பரிசோதனை செய்கிறார்கள். தளபரிசோதனை செய்கிறார்கள். 10 மீட்டர் ஆழத்திற்கு இங்கே மணல் இருக்கிறது; 10 மீட்டருக்குக் கீழ்தான் மணல் இருக்கிறது என்று சொல்லி அவர்கள், தள ஆய்வு செய்துகொண்டு வந்து ஒரு report-ஐத் தலைமைப் பொறியாளரிடம் காட்டுகிறார்கள். காகிதங்களை வாங்கித்தான் தலைமைப் பொறியாளர் பரிசோதனை செய்கிறாரேயொழிய, உண்மையிலேயே பாலம் கட்டப்படுகிற இடத்திற்குச் சென்று 10 மீட்டர் ஆழத்திற்கு அவர்கள் பரிசோதனை செய்கிறபோது, தன்னுடைய துறையினுடைய உதவிப் பொறியாளரோ அல்லது வேறொரு பொறியாளரோ அருகிலிருந்து பார்ப்பதற்கான வழிமுறைகளை உங்களுடைய துறை செய்ததா என்பதுதான் என்னுடைய கேள்வி. அப்படிச் செய்யாத காரணத்தினால்தான் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. தனியார் Consultant-கள் 3 மீட்டர் ஆழத்திலே pillar போடக்கூடிய இடங்களுக்குக்கூட 10 மீட்டர் ஆழம் pillar போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்; ஆய்வு அறிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திலே உங்களுடைய துறை தூங்கிவிட்டது என்பதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Field particulars என்று சொல்லக்கூடிய,



மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய அந்த நில ஆய்வுப் பணிகள் அத்தனையையும் துறையில் இருக்கக்கூடிய பொறியாளர்கள் அல்லது நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கிறவர்கள் 106 பாலங்களுக்கும் விரைவாகச் செய்ய முடியாது. அதுமட்டுமல்ல, தேவையான இயந்திரங்கள்— machineries—நம்முடைய துறையிலே இல்லை. துறையும் அதனை வாடகைக்குத்தான் எடுக்க வேண்டும். அதனாலே, Consultancy மூலமாக இந்த field particulars தயார் செய்வது, அதற்குத் துறை ஒத்துழைப்பது என்ற அந்த விதி இருக்கிறது. ஒவ்வோர் ஆய்வும் துறையின் அதிகாரிகளால் அவ்வப்பொழுது பரிசீலிக்கப்படுகிறது; பரிசீலிக்கப்பட்டுத்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக 10 மீட்டர் ஆழத்திற்கு துளை போடுவதற்கான கருவிகள்கூட எங்களிடம் இல்லை என்று 100 ஆண்டுகாலமாகச் செயல்படும் நெடுஞ்சாலைத் துறை இங்கே சொல்லுமானால், இதனைவிடக் கேவலமான விஷயம் ஏதாவது இருக்கிறதா என்பதனை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 மீட்டர் ஆழம் என்று சொல்கிறார்; 30 மீட்டர் ஆழத்திற்குகூடப் போட வேண்டும். இப்பொழுது modern technology எல்லாம் வந்திருக்கிறது. புதுப்புது machineries எல்லாம் வந்திருக்கின்றன. Quick-ஆகப் பண்ணுவதற்கு எல்லாம் வசதிகள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் துறையிலே வாங்கி வைத்துக் கொண்டிருக்க முடியுமா? துறையிலே வாங்கி வைத்திருக்கக்கூடிய machineries, roller-கள் எல்லாம் இப்போது என்ன ஆவது? Department-லே வாங்கி வாங்கி வைக்கிற machineries எல்லாம் என்ன ஆகும்? ஆகையினாலே இதிலே investment செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தனியார் துறைகளை engage பண்ணுவதிலே ஒன்றும் தவறு இல்லை.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த roller-கள் என்ன ஆயிற்று என்று நாங்கள் கேட்கிறபோது நன்றாக இருக்கின்றன என்று நீங்கள் பதில் சொல்கிறீர்கள். ஆனால், இதைப்போல கேள்விகள் கேட்டால் roller-களை வாங்கினால் என்ன ஆவது என்கின்ற கேள்விகளைக் கேட்கிறீர்கள். இருக்கட்டும். தனியார் Consultant-களை engage பண்ணுவதை நான் தவறு என்று சொல்லவில்லை. அவர்கள்

தளபரிசோதனை செய்யும்போது ஏன் துறையின் அதிகாரிகள் அருகில் அமர்ந்து அந்தத் தளபரிசோதனை சரிதானா என்பதனை ஆய்வு செய்யவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. (மணியடிக்கப்பெற்றது) நான் பேச்சை சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, turn-key முறையிலே தனியார் ஒப்பந்தக்காரர்கள் பாலம் கட்டுகிறார்கள். அவரும் தனியார். மதிப்பீட்டை ஒருவர் தயார் செய்கிறார், அவரும் தனியார். ஆக, இரண்டு பேரும் சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள்; ஒரு கூட்டணி அமைத்துக்கொள்கிறார்கள். ஒப்பந்தக்காரரும் தனியார், மதிப்பீடுகளைத் தயார் செய்கிறவரும் தனியார் என்று பார்க்கிறபோது இந்த மதிப்பீடுகள் எல்லாம் சரிதானா என்பதனை ஏன் துறையினுடைய அதிகாரிகள் சரிபார்த்திருக்கக்கூடாது; துறையினுடைய அதிகாரிகள் ஏன் தயார் செய்திருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி. உதாரணமாக ஒன்று சொல்கிறேன். இந்த உதாரணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுக்கமாட்டார்கள் என்று நம்புகின்றேன். தனியார் Consultants தயார் செய்த மதிப்பீடுகள், உதாரணமாக ஸ்ரீவைகுண்டம்-புதுக்கோட்டை சாலை உண்மையான மதிப்பீட்டை விட 804 சதவிகிதம் அதிகமாக அது tender விடப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு. இந்த முறைகேடுகளைத் தலைமைப் பொறியாளர் திரு. ஆர். ஜெயசிங் சுட்டிக்காட்டி, dissent note எழுதச் சொல்லி, கையெழுத்திட மறுத்தார். ஆனால், அவர் மறுத்த பிறகும்கூட, அவர் இல்லாத நேரம் பார்த்து மற்ற தலைமைப் பொறியாளர்களை அழைத்து, அவர்களிடம் அனுமதி பெற்று, தொழில்நுட்ப அங்கீகாரம் அளித்து இருக்கிறீர்களே என்ன காரணம்? (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-00

இரண்டாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து செயலாற்றுவதற்காக தனியார் Consultant-களை நியமித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். 45 நாட்களுக்குள் தள மதிப்பீட்டை செய்து முடிப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால், தனியார் Consultant-களால் முடிக்க முடிந்ததா? 90 நாட்கள் எடுத்துக் கொண்டார்கள். துறை அதிகாரிகள் அதை 90 நாட்களிலே செய்து முடிக்க மாட்டார்களா? 2000 ஆண்டிற்குள் எல்லா பாலங்களையும் கட்டி முடிப்பதற்காகத்தான் turn-key முறையிலே கொடுத்திருக்கிறோம் என்று



சொன்னீர்கள். ஆனால் 106 பாலங்களிலே இன்னும் பல பாலங்களுடைய வேலைகளே ஆரம்பிக்கப்படவில்லை என்பதனை அமைச்சர் மறுக்கமாட்டார் என்று நான் கருதுகின்றேன். இந்தத் தவறுகளுக்கு ஓர் உதாரணத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஸ்ரீவைகுண்டம்-புதுக்கோட்டை சாலையிலே கிலோமீட்டர் 14-6-ல் தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு two spans 8 மீட்டர் நீளத்திற்குப் பாலம் கட்டுகிறார்கள். ஆக 16 மீட்டர் அந்தப் பாலத்தினுடைய நீளம். இதற்கு நானும் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் என்னுடைய அருமை நண்பர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் உங்களுடைய துறையைச் சேர்ந்த உதவிப் பொறியாளரையும் அழைத்துக் கொண்டுபோய் அந்த இடத்தைப் பார்வையிட்டு ஒரு மதிப்பீடு தயார் செய்யச் சொன்னோம். அவர்கள் மதிப்பீடு தயார் செய்து, கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள், அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு 16 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று. உங்களுடைய துறையினுடைய தலைமைப் பொறியாளர் ஒரே ஒரு பக்கத்திலே ஒரு திட்ட மதிப்பீடு (Estimate) போட்டிருக்கிறார். நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், உதாரணமாக, ஒரு பாலம் கட்ட estimate தயார் செய்ய வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் நூறு பக்கங்களாவது வரும். அப்போதுதான் அது முறையான estimate. ஆனால், துறையினுடைய தலைமைப் பொறியாளர் ஒரே ஒரு பக்கத்திலே அந்த estimate-ஐ தயார் செய்திருக்கிறார். ஒரே ஒரு பக்கம். ஆக, அந்த ஒரு பக்கம் மட்டும்கூட ஒரே தேதியிலே அவ்வளவு பேரும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். உதவிப் பொறியாளரும் 7 ஆம் தேதியே கையெழுத்திட்டிருக்கிறார். கோட்டப் பொறியாளரும் 7 ஆம் தேதியே கையெழுத்திட்டிருக்கிறார். தலைமைப் பொறியாளரும் 7 ஆம் தேதியே கையெழுத்திட்டிருக்கிறார். மேற்பார்வைப் பொறியாளரும் 7 ஆம் தேதியே கையெழுத்திட்டிருக்கிறார். இதைவிட முறைகேடு வேண்டுமா? எல்லோரையுமே சென்னைக்கு அழைத்து வந்து திட்ட மதிப்பீடு தயார் செய்தீர்களா? ஒரே தேதியில் இவ்வளவு அதிகாரிகள் கையெழுத்திடுகிறார்கள் என்றால் இதனைவிட முறைகேடு இந்தத் துறையிலே ஏதாவது இருக்க முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன். (குறுக்கீடு) 15 நிமிடங்கள் ஆயிற்று.

**திரு. ச. அழகிரி:** விரைவில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் 10 நிமிடங்கள் தான் சபாநாயகர் ஒதுக்கிவிட்டுப் போனார். 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 16 இலட்சம் வேலைக்கு உங்களுடைய தலைமைப் பொறியாளர் அவர்கள் ஒரு திட்ட மதிப்பீட்டைத் தயார் செய்திருக்கிறார். அவர் எவ்வளவு போட்டிருக்கிறார் என்றால் 25 இலட்சம். ஆக, உங்களுடைய துறையினுடைய அதிகாரிகளை வைத்தே நாங்கள் தயார் செய்தபோது 16 இலட்சம். தலைமைப் பொறியாளர் தயார் செய்தபோது 25 இலட்சம். ஆனால், அந்த வேலை tender விடுகிறபோது 144 இலட்சத்திற்கு விடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-05

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறையின் துணைப் பொறியாளரை அழைத்துக்கொண்டு போய் பார்த்தோம் என்று சொல்கிறார். அவர்தான் இவருக்கு எல்லா விவரங்களையும் கொடுக்கிறார்போல் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் இவர் பேசுகிறார். அவர், எப்படி தவறாகப் பேச வேணடுமோ, அபபடியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அழகிரிக்குச் சொல்லித் தருகிறார் அல்லது பீட்டர் அல்போன்ஸ்-க்கு சொல்லித் தருகிறார் என்று நினைக்கின்றேன். இதிலே தனிப்பட்ட ஒவ்வொரு பாலத்திற்கும் எங்களுடைய துறையின் சார்பில் tentative - omni-bus estimate என்று சொல்லுவார்கள்; அதைப்போட்டு 8 பாலங்கள், 10 பாலங்கள், இதற்கு இவ்வளவு பணம் தேவை என்று tentative-ஆக கடன் வாங்குவதற்கு சொல்கிறோம்; சொல்வோம். ஆனால், tender விடுகிறபோது ஒட்டுமொத்தமாக 10 பாலங்களோ, 8 பாலங்களோ, ஒரு package-க்குத்தான் tender விடுகிறோம். தனித் தனிப் பாலத்திற்கு, தனித் தனியாக tender விடுவதில்லை. நீங்களே சொன்னீர்கள். Turn-key-லே ஏன் விடுகிறீர்கள் என்று சொன்னீர்கள். Turn-key-லே விட்டோம். Package-லே ஏன் கொடுத்தீர்கள் என்று சொன்னீர்கள். Package-லே விட்டோம். Package-லே 10 பாலங்கள் என்றால், 8 பாலங்கள் என்றால், 5 பாலங்கள் என்றால், அந்த package-க்கு உள்ள estimate-க்குத்தான் tender. அந்த tender விட்ட பின்பு, அந்த tender condition-லே ஒன்றைச் சொல்வோம். உங்களுடைய schedule of payment எப்படி என்று கேட்போம். வேலை



செய்துகொண்டே இருக்கும்போது எப்படி பணம் கொடுப்பது? அப்போது schedule of payment அவன் போட்டுக்கொடுப்பான். அப்படியொரு சின்ன பாலம், 10 இலட்சம் ரூபாயிலே கட்டும்போதுகூட, அதைக் கட்டி முடிக்கிறபோது எங்களுக்கு 15 இலட்சம் ரூபாய் கொடுங்கள் அல்லது 20 இலட்சம் ரூபாய் கொடுங்கள் என்று schedule of payment போட்டிருப்பான். ஆனால், total-லிலே பார்த்தால் குறைந்த tender போட்டிருப்பான். L-1 ஆக இருப்பான். Schedule of rate சில நேரங்களிலே குறைத்துப் போட்டிருப்பான். Schedule of payment குறைத்துப் போட்டிருப்பான். ஆனால், tender-லே L-இரண்டோ L-மூன்றாகவோ இருப்பான். அந்த L-2, L-3-க்குக் கொடுக்க முடியாது. L-1-க்குத்தான் கொடுக்க முடியும். Payment கூடி இருந்தால்கூட L-1-ஐ நாங்கள் எடுத்திருக்கிறோம். குறைந்த tender-ஐ நாங்கள் எடுத்திருக்கிறோம். அதுதான் முறை. அதனாலே ஒரு குறிப்பிட்ட பாலத்திற்கு இவ்வளவு ரூபாய் கொடுத்திருக்கிறோம். இவ்வளவு அதிகமான estimate ஆகியிருக்கிறது என்று சொல்வது தவறான வாதம். மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் என்னிடத்திலே தனியாகப் பேசுவார்களேயானால் இன்னும்கூட நான் விளக்கம் சொல்லித் தருகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய நிலையிலே மிக உறுதியாக இருக்கிறேன். நான் சொல்வதற்கு நான் பொறுப்பு ஏற்கிறேன். நான் சொல்கிற விஷயங்கள் தவறு என்று அமைச்சர் அவர்கள் நிரூபிப்பார்களேயானால் இந்த அவையைவிட்டு வெளியே போகிறபோது ராஜினாமா செய்துவிட்டுப் போகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட எல்லா உத்தரவாதமும், ஆதாரங்களையும், உங்களாலேயேகூட காட்ட முடியாது. ஏனென்றால், உங்களுடைய துறை அதிகாரிகள்தான் எனக்குக் கொடுத்தார்கள். நான் மறுக்கவில்லை. எனக்குத் தொழில்நுட்ப அறிவு கிடையாது. உங்களுடைய துறை அதிகாரிகளோடு 15 தினங்கள் உட்கார்ந்து அவர்கள் கொடுத்த விவரங்களின் அடிப்படையிலேதான் பேசுகிறேன். அவர்கள்கூட Affidavit-லே கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொன்றை நான் கேட்கிறேன். 144 இலட்சம் ரூபாயில் கட்டப்பட வேண்டிய பாலத்தை 16 இலட்சம் ரூபாய்க்குக் கட்டலாம் என்று அவர் சொல்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் சொல்கிறார்கள். நான் கேட்கிறேன்,

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [2000 ஏப்ரல் 7

இப்போது ஒருவர் tender எடுத்திருக்கிறார், private contractor எடுத்திருக்கிறார், அவரே 16 இலட்சம் ரூபாய்க்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார், நீங்கள் சொல்லக்கூடிய பொறியாளரோ அல்லது நீங்களோ அந்தப் பாலத்தை 16 இலட்சம் ரூபாய்க்கு எடுத்துக் கட்டுங்கள்; கட்டி முடியுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது வாதம் அல்ல. நான் ஒப்பந்தக்காரர் கிடையாது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கேளுங்கள், நான் ஒப்பந்தக்காரர் கிடையாது. நான் உங்களுடைய துறை அதிகாரிகளை வைத்தே ஒரு திட்ட மதிப்பீடு தயார் செய்திருக்கிறேன். உங்களுடைய தலைமைப் பொறியாளர் ஒரு திட்ட மதிப்பீடு தயார் செய்திருக்கிறார். இது 16 இலட்சம் ரூபாய்; அது 25 இலட்சம் ரூபாய். ஆனால், நீங்கள் Tender விட்டிருப்பது 144 இலட்சம் ரூபாய்க்கு. ஆக, 800 சதவீதம் அதிகம். நான் உங்களிடம் கேட்கிறேன்—உங்களுடைய துறை—ஒரு நீதிமன்ற விசாரணைக்கு நீங்களே உங்களை ஆட்படுத்திக்கொள்ள தயாரா? நீங்கள் தயார் என்று சொன்னால்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. சுப. தங்கவேலன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி ஒரு கேள்வியோடு முடித்திருக்கிறார். தொடர்ந்து பேசி வேறு பிரச்சினைகளை உருவாக்கினால், நேரம் ஆகும். உள்ளபடியே 20 நிமிடங்கள் ஆகிவிட்டன, அவர் பேசி முடித்திருக்கிறார், முடித்த இடத்தோடு நிறுத்திக்கொண்டால் அதற்கு தகுந்த பதிலை அமைச்சர் பின்னர் சொல்வார். இப்போது இத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். நான் நேரத்திற்குச் சொல்ல முடியாது.

**திரு. ச. அழகிரி:** ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்கிறேன். நிறைய விஷயங்கள் நான் சொல்ல வேண்டியிருக்கின்றன. ஆனாலும், நீங்கள் காலத்தினுடைய பெயரால் என்னைக் கட்டுப்படுத்த...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது அவையினுடைய உரிமை. காலம் என்பது தனிப்பட்ட உறுப்பினருடைய உரிமை அல்ல. காலத்தின் பெயரால்



2000 ஏப்ரல் 7] [பேராசிரியர் க. அன்பழகன்]

கட்டுப்படுத்துவதாக இருந்தால் பத்தாவது நிமிடத்திலேயே பேச அனுமதித்திருக்கத் தேவையில்லை. காலத்தின் பெயரால் கட்டுப்படுத்தவில்லை. மாண்புமிகு உறுப்பினருடைய உரிமையை நான் மதிக்கிறேன். அவர் இதுவரையிலே பேசியதற்குப் பதில் சொல்கிறபோது, ஒருவேளை பிரச்சினை ஏற்படுமானால், பின்னர் நீங்கள் தனியாக சபாநாயகர் அவர்களுக்கு ஒரு Notice கொடுத்து, இந்த அவையிலே எழுப்பலாம். இப்போது பேசிக்கொண்டிருக்க முடியாது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அனுமதிக்க முடியாது. ஏற்கெனவே 21 நிமிடங்கள் ஆகிவிட்டன. பேரவைத் தலைவர் ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள்தான் ஒதுக்கியிருக்கிறார். நீங்கள் 21 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள், இத்தோடு பேச்சை நிறுத்திக்கொள்ளுங்கள். அடுத்து, திரு. சுப. தங்கவேலன்.

பிற்பகல் 11-10

***திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழினத் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்கள் ஓர் அற்புதமான நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் தாக்கல்செய்து, அதன்மீது விவாதங்கள் முடிந்து அவர்கள் பதிலுரைத்து, அந்தப் பதிலுரையின்போது, பல்வேறு சிறப்பான அறிவிப்புகளையும் அறிவித்து, தமிழகத்து மக்களுடைய நெஞ்சங்களில் தங்க சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கக்கூடிய எங்களுடைய அற்புதத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பங்குகொண்டு சில கருத்துகளை வழங்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அற்புதமாகப் பணியாற்றி பல அரும்பெரும் சாதனைகளை அண்மைக் காலத்தில் நிகழ்த்தி இருக்கின்றது. ஏராளமான புதிய பாலங்கள், தரமான சாலைகள் ஆகியவற்றைத் தமிழ்நாட்டிலே உருவாக்க வேண்டுமென்று கருதி, திட்டமிடுதல், திட்டத்திற்கான நிதியாதாரங்களைத் திரட்டுதல், அந்தத் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்று கண்காணித்தல் என்ற மூன்று தலைப்புகளில் அற்புதமான பணிகளை தொய்வின்றி தொடர்ந்து ஆற்றிவருகின்றது. இதற்குச் சான்றாக ஒன்றை நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

கடந்த முறை இந்த மாமன்றத்திலே நான் இதே மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்றபோது, நாட்டின் பிற பகுதிகளில் இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலைகளை தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளோடு ஒப்பிடுகிறபோது வெறும் 2002 கிலோமீட்டர் தூரம்தான் இருக்கிறது. இது மிகவும் குறைவானது. பல்லாண்டுகாலமாக 2002 கிலோமீட்டர் தூரம்தான் என்ற நிலைதான் இருக்கிறது. அதை உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதனுடைய விளைவாக, இப்போது தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளுடைய மொத்த நீளம் 3789 கிலோமீட்டராக உயர்த்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, 1787 கிலோமீட்டர் நீளத்தை ஒரே ஆண்டில் தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்திய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் உண்டு என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 89 விழுக்காடு சாலைகள் ஒரே ஆண்டில் உயர்த்தப்பெற்றிருப்பது வரலாற்றுச் சிறப்பு மிகுந்த காரியம். இந்த அளவுக்கு உயர்த்தியும், அதிலே வேதனையான சம்பவம் ஒன்று. 800 கிலோமீட்டர் சாலைகளை நம்முடைய இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறையினுடைய ஆணைக் குழு—National Highways Authority of India— எடுத்துக்கொண்டு, அதை நாங்களே மேம்பாடு செய்வோம் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது நம்முடைய மாநில சுயாட்சிக் கொள்கைக்கு விரோதமானது என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, தமிழ்நாட்டிலே சாலைகள் போடுகின்ற வேலைகள் உங்களுக்கு வேண்டாம். அதற்கு நாங்கள் ஓர் அற்புதமான துறையை வைத்திருக்கிறோம் என்று சொல்லி தமிழ்நாட்டினுடைய 800 கிலோமீட்டர் சாலைகளையும் நீங்கள் விடுவிக்க வேண்டும். தமிழ்நாட்டினுடைய நெடுஞ்சாலைத் துறைதான் அந்தச் சாலையினுடைய மேம்பாட்டுப் பணிகளைச் செய்ய வேண்டும். அதற்கான நிதியை அவர்கள் தர வேண்டும். அதற்கு முன்பணம் போட்டால்கூட, அதை reimbursement செய்ய வேண்டுமேயொழிய, தமிழ்நாட்டில் சாலைகளைப் போடுகின்ற வேலை மத்திய அரசுக்கு வேண்டியதில்லை என்பதை வலியுறுத்தி, அந்த 800 கிலோமீட்டர் சாலைகளையும் மாநில அரசின் ஆளுகைக்குள்



கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேலன் அவர்கள் சொல்கின்ற இந்தக் கருத்து, ஏற்கெனவே மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் அல்லது வேறு மாநிலங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளை Ministry of Surface Transport என்ற துறை மூலமாகவே செய்தால் நம்முடைய தமிழ்நாட்டு தேசிய நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள் அதை மேற்கொள்வார்கள், பழுது பார்ப்பார்கள். எனவே, அந்த தேசிய நெடுஞ்சாலைக் குழுமத்திடம் பராமரிப்புப் பணி எடுப்பதற்குப் பதிலாக, பராமரிப்புப் பணிகளை M.O.S.T. என்று சொல்லக்கூடிய Ministry of Surface Transport துறையே வைத்துக்கொள்ளலாம். அதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்கள் பராமரிப்புப் பணிகளைக் கண்காணிக்கலாம். பெரிய திட்டங்களை, Projects-ஐ மட்டும் National Highways Authority of India வைத்துக்கொள்ளலாம் என்ற கருத்து அவர்களிடம் வைக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. சுப. தங்கவேலன்:** நன்றி. புதிதாக எடுக்கப்பட்ட 1787 கிலோமீட்டர் சாலைகளில், திருச்சி-இராமநாதபுரம் சாலையும் ஒன்றாகும். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் இராமநாதபுரத்தோடு அந்தச் சாலை நின்றுவிடாமல், இந்தக் கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு அமைச்சர் அவர்கள் கலந்துபேசி, கீழக்கரை, ஏர்வாடி, சாயல்குடி, வேம்பார் வழியாக தூத்துக்குடிவரை அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம், தூத்துக்குடி துறைமுகம் விரிவாக்கப்பட்டு வருகிறது. அந்தத் துறைமுகத்தினுடைய முக்கியமான ஏற்றுமதிப் பொருள்கள் இரண்டு. ஒன்று, உப்பு. மற்றொன்று granite. உப்பினைப் பெருமளவில் உற்பத்தி செய்கின்ற மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டம் சிறந்து விளங்குகிறது. நம்முடைய தமிழக அரசுக்குச் சொந்தமானது உப்பு நிறுவனம். 5,000 ஏக்கருக்குச் சொந்தமான நிறுவனம். அந்த நிறுவனம் ஐந்தாயிரத்துக்கும் அதிகமான ஏக்கரில் 3,000 ஏக்கரில் இப்போது தரமான உப்பை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. அதை தூத்துக்குடிக்கு எடுத்துச்செல்ல வேண்டியிருக்கிறது.

முற்பகல் 11-15

அதுமட்டுமல்ல, வாலிநோக்கம் கப்பல் உடைக்கின்ற துறைமுகம். அந்த வாலிநோக்கம் கப்பல் உடைக்கிற துறைமுகத்தில் உடைக்கப்படுகின்ற கப்பல்களுடைய உதிரி பாகங்களை வெளியே எடுத்துச் செல்வதற்கும் நல்ல சாலைகள் தேவைப்படுகின்றன. அங்கே magnesium plant இருக்கிறது. அது இப்போது செயலிழந்து கிடக்கிறது. அதை நம்முடைய உப்பு நிறுவனமே இப்போது விலைக்கு வாங்கியிருக்கிறது. Magnesium-ல் இருந்து பிரித்தெடுத்தால் bromine கிடைக்கிறது. 1¼ கோடி ரூபாயில் அங்கே தொழிற்சாலை தொடங்கவிருக்கிறது. உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில்—சொல்லியிருக்கக்கூடிய 2000 மெகாவாட் மின்சார உற்பத்தித் திட்டம் வேம்பாருக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய மணப்பாட்டு கிராமத்தில்—வெளிநாட்டிலிருந்து naptha-வையும், நிலத்தடி எரிவாயுவையும் கொண்டுவந்து இரண்டாயிரம் மெகாவாட் மின்சாரத்தைத் தயாரிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்களே, அதற்கு 1997 ஏக்கர் நிலம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கன்னிராசிபுரத்திலேதான் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது. வெறும் 30 ஏக்கர்தான் தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த 2000 மெகாவாட் மின்சாரத்தைத் தயாரிக்கப்போகிற தொழிற்சாலையும் அந்த வழித் தடத்திலேதான் வருகிறது. எனவே, அருள்கூர்ந்து தூத்துக்குடி வரைக்கும் இந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையா: ஆக்க வேண்டும். கடற்கரைச் சாலையிலே இருக்கிற இதை தேசிய நெடுஞ்சாலையிலே எடுக்க வேண்டுமென்று எனக்கும் தெரியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடக்கூடாது. கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு ஏற்படுத்தக்கூடிய பல்வேறு தடைக் கற்களை எல்லாம் நன்றாக உணர்ந்துதான் எங்களுடைய மாவட்டத்து மக்கள் இதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, இராமநாதபுரம்-திருச்சி சாலையையும், மதுரை-இராமேஸ்வரம் சாலையையும் இணைக்கின்ற வகையில் இராமநாதபுரம் நகருக்குக் கீழ்ப்புறம் ஒரு புறநகர் சாலையை bye-pass அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை-இராமேஸ்வரம் சாலையில், மானாமதுரை, சுமுதக்குடி, உச்சிப்புளி ஆகிய 3 இடங்களிலும் உள்ள ரயில்வே கேட்டை மேம்பாலமாக மாற்றித்தர வேண்டும். சுமுதக்குடிக்கு நில ஆர்ஜிதம்



செய்து முடிந்துவிட்டது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தில் மிகப் பெரிய ஒரு பங்கை வகிப்பது நம்முடைய அன்புத் தலைவர், தானைத் தலைவர் கலைஞர் அவர்களால் கண்டறியப்பட்ட கிராமச் சாலைகள் திட்டம். இந்தக் கிராமச் சாலைகள் திட்டம்தான் இப்போது தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்திலே முன்னிலை வகித்துக்கொண்டு இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. கிராமப்புறத்தினுடைய அடிப்படை கட்டமைப்புகளான கிராமச் சாலை திட்டம், குடிநீர்த் திட்டம், சுகாதாரத் திட்டம், போக்குவரத்து, மின்சாரம், கண்மாய் மற்றும் கால்வாய்களைத் தூர்வாரி, விவசாயிகளுக்கு குளங்களிலே நீர் நிரப்பி அவர்களை உற்பத்தியில் ஈடுபடச் செய்தல் போன்ற காரணங்களால் நகர்ப்புறங்களை நோக்கி கிராமப்புறத்து மக்கள் குடியேறுவது பெருமளவிற்குத் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனாலேதான் நகர்ப்புறங்களிலே இப்போது real estate தொழில் மோசமான நிலைக்கு ஆளாகியிருக்கிறது. இந்த ஆட்சியிலே பணப் புழக்கம் இல்லை என்று சொல்கிறார்கள். அது தவறு. இந்த ஆட்சி திட்டமிடுகிறது, திட்டத்திற்கு உரிய நிதி ஆதாரத்தைத் திரட்டுகிறது. இந்தத் திட்டம் மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று கண்காணிக்கிறது. எனவே, கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு இந்த அரசு assets ஆக—பள்ளிக் கட்டடங்களாகவும், பாலங்களாகவும், நல்ல சாலைகளாகவும் குடிநீர்த் திட்டங்களாகவும் மாற்றியிருக்கிற காரணத்தாலேதான் வேலையே செய்யாமல் bill போடுகின்ற காலம் போய், போடுகின்ற திட்டகளெல்லாம் மக்களுக்குப் போய்ச் சேருகின்ற காரணத்தாலே (மேசையைத் தட்டும் ஒலி) அடிப்படை கட்டமைப்பை உருவாக்கித் தந்து வரலாறு படைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய மாநில நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 4351 கிலோமீட்டர் இப்போது இருக்கிறது. அதிலே கடந்த முறை என்னுடைய பெயரைச் சொல்லி, சுப. தங்கவேலனுடைய வேண்டுகோளை ஏற்று 500 கிலோமீட்டர் சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளாக ஏற்றுக்கொள்கிறோம் என்று இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்டது. 500 கிலோமீட்டர் என்று அறிவிக்கப்பட்டாலும் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 186 கிலோமீட்டர்தான் அதில் cover ஆகிறது. இந்த 186 கிலோமீட்டரும் ஒரு வழித்தடச் சாலையாக இருக்கிறது. இந்த 186

[திரு. சுப. தங்கவேலன்] [2000 ஏப்ரல் 7

கிலோமீட்டரிலும் 46 கிலோமீட்டர் தூரத்தை இப்போது பல்வேறு சாலைகளாக, 5 கிலோமீட்டர், 6 கிலோமீட்டர் என்று போட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. Work-in-progress என்ற முறையில் இருக்கிறது. எனவே, எஞ்சியிருக்கக்கூடிய 140 கிலோமீட்டரை எங்களுக்கு இருவழித்தடச் சாலையாகக்கூட வேண்டாம். அந்தச் சாலையில் உள்ள பகுதிகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதி. (மணியடிக்கப்பெற்றது) பல்லாண்டு காலமாகவே உழவுக்கு வராத மாடுகளை சந்தைக்குக் கொண்டு வந்து விற்பதைப்போல, ஒழுங்காக வேலை பார்க்காத அதிகாரிகளுக்கெல்லாம் புகலிடமாக, தண்ணீர் இல்லாத காட்டுக்கு மாற்றப்படக்கூடிய மாவட்டமாக இருந்ததை மாற்றி எங்களுடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்தில்தான் அந்த மக்கள் இப்போது தலைநிமிர்ந்து கட்டமைப்புத் தேவைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது). எனவே, அருள்கூர்ந்து எங்களுக்கு இருவழித்தடச் சாலை வேண்டாம், இருவழித்தடச் சாலை என்று சொன்னால் ஒரு கி.மீ.-க்கு 32 இலட்ச ரூபாய் தேவைப்படும். அது எங்களுக்குத் தேவையில்லை. Intermediate claim என்ற வகையில் ஒரு கி.மீ.-க்கு 25 இலட்சம் ரூபாய் செலவழித்தால் எஞ்சியுள்ள 140 கி.மீ.-க்கும் 32 கோடி ரூபாய்தான் வருகிறது. அது பின்தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்தில் சாதிச் சண்டை நடைபெறுகிறது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று நம்முடைய தானைத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழு அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறது. நாங்கள் தூத்துக்குடி வரைக்கும் போக வேண்டும் என்று கருதினோம். நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மாறன் அவர்கள் நாங்குநேரிக்கே அழைத்துப்போகிறேன் என்று சொல்லி, அதற்கான திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட திட்டங்களெல்லாம் வருகிறபோது அடிப்படைக் கட்டமைப்புக்கு இந்த மாநிலத்தில் நெடுஞ்சாலையை உருவாக்கித் தர வேண்டும். எஞ்சியுள்ள 140 கி.மீ.-சாலையையும் இந்த நிதியாண்டில் நீங்கள் செய்துதர வேண்டும்.

முற்பகல் 11-20

அடுத்து, மாவட்ட பெரிய சாலைகளைப் பொறுத்தவரையில், Major District Roads— எங்கள் மாவட்டத்தில் வெறும் 142 கி.மீ. தான் இருக்கிறது. இந்த 142 கி.மீட்டரும் ஒருவழித்தடச் சாலையாக இருக்கிறது. இந்த மாநிலத்திலேயே பிற மாவட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது எல்லா M.D.Roads-களும் அற்புதமாக இருக்கின்றன. ஆனால் எங்களுடைய அமைச்சரிடம் சொன்னால், எல்லாம்



2000 ஏப்ரல் 7] [திரு. சுப. தங்கவேலன்]

தென் மாவட்டத்திற்கே செலவழிக்கிறேன் என்று குறைபட்டுக் கொள்வார்கள் என்று பயப்படுகிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) சீரழிந்து போயிருக்கிற தென் மாவட்டங்களில் அந்தச் சாலைகளைப் போட்டுத் தருவதற்கு நீங்கள் அவரை ஊக்குவிக்க வேண்டும். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சருக்கு நீங்கள் ஆலோசனைகளை வழங்க வேண்டும். அவர்கள் பயப்படுகிறார்கள். அவர்களுடைய அச்சத்தைப் போக்க வேண்டும். தேவைப்பட்டால் வட மாவட்டங்களைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து ஒரு தடவை சுற்றி வந்தால் தெரியும். ஒரு காருக்கு ஆயிரம் ரூபாய் பராமரிப்புச் செலவு தேவைப்படுகிறது. அந்த அளவுக்கு அந்தப் பகுதிகளில் சாலைகளின் நிலைமை இருக்கிறது. பிற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு இருக்கிறது.

நடப்பு நிதியாண்டில் அற்புதமான திட்டங்களைத் தீட்டியிருக்கிறீர்கள். முதற்கட்டமாகக்கூட, bad structure எங்கெங்கு இருக்கிறதோ அவற்றைக் கண்டறிந்து அவற்றையெல்லாம் பழுதுபார்ப்பதற்காக திட்டமிடப்பட்டு, அது தேவையில்லை; ஒரு சாலையை எடுத்துக்கொண்டால் o/o-ல் இருந்து அந்தச் சாலையினுடைய end வரைக்கும் முழுவதும் பழுதினை நீக்கம் செய்து அந்தச் சாலையைத் தரமான சாலையாக ஆக்க வேண்டுமென்று சொல்லி, அந்த யோசனையைத் தெரிவித்தோம். அது இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கிராமப்புறங்களின் பொருளாதாரத்திலே.... (மணியடிக்கப்பெற்றது)

ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன். அதை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 'பெற்றவளுக்குத்தான் தெரியும் பிள்ளையினுடைய அருமை' என்று சொல்வார்கள். NABARD-ல் வாங்கி அற்புதமாக சாலையைப் போட்டுவிட்டு, அங்கே வேலை பார்ப்பவர்களுக்கு சம்பளமே கொடுக்க முடியாமல் திண்டாடுகிற ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொறுப்பிலே ஒப்படைத்தால், நாம் அற்புதமாக உருவாக்கிய சாலை மீண்டும் சிதைந்து போய்விடும். எனவே, நெடுஞ்சாலைத் துறையே வைத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கிலோமீட்டரைக் கணக்கிட்டு பராமரிப்புக்காக நெடுஞ்சாலைத் துறைக்கு அரசு நிதி கொடுக்க வேண்டும். அதை நெடுஞ்சாலைத் துறைதான் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த உத்தரவை உங்களுடைய துறைதான் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த உத்தரவை இன்றைக்கே ரத்து செய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறை மூலமாக, என்னுடைய மன்னார்குடி தொகுதியில் நீண்டகாலமாகப் பிரச்சினைக்குரிய இடமாக இருந்த கீழப்பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அதற்காக துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை, விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற பகுதியாக இருக்கிறது. அங்கே சதுப்பு நிலமாக இருக்கிற காரணத்தால் சாலைகளெல்லாம் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டச் சாலைகளை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்ய வேண்டும். திருச்சியிலிருந்து தஞ்சாவூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் வரையிலும் இருக்கிற சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதற்குரிய முன்மொழிவுகள் இருக்கும் என்று கருதுகிறேன். அதை நிறைவேற்ற முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சாலைப் பராமரிப்புப் பணிகள்பற்றி குறிப்பிட்டுப் பேசினார்கள். அதைத் தனியாருக்கு ஒப்படைக்கிற பிரச்சினை பற்றியும் விவாதத்திற்கு வந்திருக்கிறது. குறிப்பாக, நமது மாநிலத்திலே கோவை ஆற்றுப் பாலம், செங்கல்பட்டு பாலம், அதேபோல சேத்தியாத்தோப்பிலே இருக்கிற பாலம் எல்லாம் கட்டப்பட்டு தனியார் பல ஆண்டுகளாக வரி வசூல் செய்துகொண்டேயிருக்கிறார்கள். இதற்கு என்ன கால அளவு என்பதே தெரியவில்லை. இவர்கள் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் வசூல் செய்துகொண்டே இருப்பார்கள் என்பதெல்லாம் புரியவில்லை. கோவை ஆற்றுப் பாலத்திலே மிகப் பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டு அதில் அரசு, அமைச்சர்கள் எல்லாம் தலையிட்டு தீர்வு காண்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆக, தனியார்களுக்கு ஒப்படைப்பதனாலே இப்படிப்பட்ட பிரச்சினைகளும், சிரமங்களும் வருகின்றன. இன்னும் வெளிநாட்டிலே இருக்கக்கூடிய தனியார் கம்பெனிகள் எல்லாம் வருவதாகக்கூட குறிப்பிட்டு இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமாக நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய பணிகள் அனைத்துமே தனியார்மயமாக ஆக்கப்பட்டுவிட்டால் பல பிரச்சினைகளும் சங்கடங்களும் வருவதற்குரிய



வாய்ப்புகள் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அவற்றை எண்ணத்திலேகொண்டு இதைச் சரிசெய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அடுத்து, சாலைப் பணியாளர்கள் பத்தாயிரம் பேர் நியமிக்கப்படுவார்கள் என்று நம்முடைய முதல்வர் அவர்களாலே அறிவிக்கப்பட்டு, பணி நியமனம் செய்திருக்கிறார்கள். மகிழ்ச்சி. இந்தச் சாலைப் பணியாளர்கள், சாலைகளிலே பணிபுரியச் செல்வதற்குரிய வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன. 30, 40 கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டிய அவசியமிருக்கிற காரணத்தினால், அவர்கள் சைக்கிளிலே செல்கிறார்கள். இவர்களுக்குரிய கருவிகளையெல்லாம் எடுத்துச்செல்வதில் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, அவர்களுக்குப் பேருந்திலே பயணம் செய்ய இலவச bus pass வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சாலையிலே பணியாற்றுபவர்களுக்கு மிகப் பெரிய ஆபத்து ஏற்படுகிறது. பாதிப்பு ஏற்பட்டு விபத்துகளிலே பல பேருக்கு மரணம் ஏற்படுகிறது. ஆகவே, அவற்றைப் போக்கக்கூடிய வகையிலே அவர்களுக்குச் சீருடை வழங்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதையும் கருத்திலேகொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, NABARD நிதியுதவியோடு சாலைகள் நெடுஞ்சாலைத் துறை மூலமாகப் போடப்படுகின்றன. அதுபோல, Rural Roads நெடுஞ்சாலைத் துறை மூலமாகப் போடப்படுகிறது. அதையெல்லாம் திரும்ப ஒன்றியத்திலேயே ஒப்படைத்து அதைப் பராமரிக்க வேண்டுமென்று சொல்வதென்பது சாத்தியமே இல்லை. ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அதைக் கண்டிப்பாக நிறைவேற்ற முடியாது; நெடுஞ்சாலைத் துறை மூலமாக, அதற்குரிய தரத்திலே சாலை போடப்பட்டுவிட்டதற்குப் பின்னரே ஊராட்சி ஒன்றியம் அதைப் பராமரிக்க வேண்டும் என்பது எந்தச் சூழ்நிலையிலேயும் முடியாது. ஆகவே, அவையெல்லாம் திரும்பவும் நெடுஞ்சாலைத் துறை மூலமாகவேப் பராமரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைப் போக்குவரத்து இயந்திரக் கோட்டம் ஒன்று செயல்பட்டது. அது இப்போது சரியாகச் செயல்படவில்லை. அது சென்னை, கோவை, புதுக்கோட்டையிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கு 38 தினக் கூலிப் பணியாளர்கள்தான் தந்திருக்கிறார்கள். அதிலே 15 பேர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட வேண்டுமென்று வழக்குத் தொடர்ந்து, உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரைக்கும் சென்று, அவர்களுக்குரிய தொகைகள், ஊதியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. இவர்கள் வழக்குப் போட்டார்கள் என்ற காரணத்தினாலே, அவர்களுக்கு நிரந்தரப் பணி கிடைக்கவில்லை. வழக்குப் போடாத 23 தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பணி கிடைத்திருக்கிறது. ஆகவே, அவர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்து இருக்கிறது. அவற்றைப் போக்குவதற்குரிய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிடுகிற இந்தப் பிரச்சினை ஒரு வாரத்திற்கு முன்புதான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. உச்ச நீதிமன்றத்திலே, உயர் நீதிமன்றத்திலே அப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு இருக்குமானால், அதை என்னிடத்திலே கொடுங்கள். நிச்சயமாக இந்த அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்று அவர்களுக்கு உறுதி சொல்லியிருக்கின்றேன். என்னிடத்திலே இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலேதான் கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நன்றி. அடுத்து, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே திருப்பூரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் வலியுறுத்தி வந்த கோரிக்கையை முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டு அறிவித்தார்கள். பொருளாதாரப் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு, 65 கோடி ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, முதல் கட்டமாக 15 கோடி ரூபாய் செலவிலே சுற்றுச்சாலைப் பணிகளுக்குரிய ஏற்பாடுகள் செய்து பணிகள் நடைபெறுகின்றன. மீதம் இருக்கிற 50 கோடி ரூபாய்க்கு மத்திய அரசிடமிருந்து அனுமதியைப் பெறுவதற்கான முயற்சியினை நம்முடைய மாநில அரசாங்கம் மேற்கொள்ளவில்லையென்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.



**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** தமிழக அரசு முயற்சி செய்யவில்லை என்று சொல்லக்கூடாது. ஏற்கெனவே, அதில் மத்திய அரசினுடைய கொள்கை 50:50 basis; 50 சதவிகிதம் மாநில அரசு 50 சதவிகிதம் மத்திய அரசு என்றிருந்தது. இப்போது முழுவதையுமே 100 per cent-ம் கடனாகத்தான் தர முடியும் என்று மத்திய அரசு ஒரு கொள்கையை வகுத்திருக்கிறது. என்றாலும்கூட, அதையும் பெறலாம் என்ற முயற்சியிலே தமிழக அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதற்கு விரைவாக மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இந்தச் சுற்றுச்சாலையிலே இரயில்வே தரைப்பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. அணைப்பாலம் என்ற இடத்திலே, அது அநேகமாக நாம் நகரத்தினுடைய நெரிசலைப் போக்குவதற்காக சுற்றுச்சாலை அமைத்து, அந்தத் தரைப்பாலம் அமைப்பதன்மூலமாக, பெரிய கனரக வாகனங்கள் அதனுள்ளே செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதென்று கூறப்படுகிறது. ஆகவே, அதையும் கவனத்தில்கொண்டு அமைக்கப்படுகிறபோது, கனரக வாகனங்கள் செல்வதற்குரிய வாய்ப்புகளையும் அதிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அடுத்து, தமிழ்நாடு கடல்சார் பயிற்சிக் கழகம் நம்முடைய முதல்வர் அவர்களால் 16-9-1998-லே தொடங்கப்பட்டது. இது தூத்துக்குடியிலே தொடங்கப்பட்டிருக்கிறது. இக்கழகத்தினுடைய செயலாளர் இயக்குநராக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினுடைய நிர்வாக இயக்குநர் செயல்படுகிறார். இந்தக் கழகத்திற்காக அந்தத் துறைமுகத்திலேயிருக்கக்கூடிய Port Trust கட்டடம் வாடகைக்காக அமர்த்தப்பட்டிருக்கிறது. இந்த வாடகைக் கட்டடத்தை சீரமைக்கச் செய்கிற செலவு என்ற அடிப்படையில் 25 இலட்சம் ரூபாய்க்கு மேலே செலவு செய்திருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தின் படத்தை நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே காட்டினேன். (ஒரு புத்தகத்தை அவையினருக்குக் காண்பித்து) இந்தப் புத்தகத்திலே இருக்கின்ற கட்டடம்தான் அது. 25 இலட்சம் ரூபாயிலே கட்டடத்தையே கட்டிவிடலாம். ஆனால், இதற்குரிய சுற்றுச் சுவர்கள் அமைப்பதற்காகவும் அங்கே நிலத்தைச் சமன்படுத்துவதற்காகவுமே பல இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மேல் தளத்திற்கு வெள்ளையடிப்பதற்காக ஓர்

இலட்சத்து 64 ஆயிரம், கீழ் தளத்திற்கு வெள்ளையடிப்பதற்காக இலட்சத்து 64 ஆயிரம் என்றெல்லாம் bill போடப்பட்டு அந்த விழா நடத்துவதற்கான முயற்சிகளை எடுக்கிறபோது அந்தக் கட்டடத்திற்கும், அதைச் சுற்றியிருக்கிற நிலப் பகுதிக்கும் மட்டும் 25 இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறபோது, அதிலே முறைகேடு நடந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடல்சார் பயிற்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்கான அனுமதிகளெல்லாம் Director-General of Shipping, மும்பையிலிருந்து பெறப்பட்டு, தொடங்கப்படவிருந்த சூழ்நிலையில் அதற்குரிய கட்டடம் இல்லை. எனவே, தூத்துக்குடி Port-Trust-க்குச் சொந்தமான அந்தக் கட்டடம் பாழடைந்தக் கட்டடமாக இருந்தது, அதை நாம் வாடகைக்குப் பெற்றிருக்கிறோம். நாம் என்ன செலவழித்திருந்தாலும் அது வாடகையிலே கழித்துக்கொள்ளப்படும். அதிலே முறைகேடு எதுவும் நடைபெறவில்லை. நிச்சயமாக அந்தக் கட்டடம் ஓர் அற்புதமான கட்டடம். வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்டது. மிகவும் அருமையான கட்டடம். அதை அப்படியே விட்டிருந்தால்கூட பாழ்பட்டுப்போயிருக்கும். நாம் அதைச் சரி செய்திருக்கிறோம். தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டைச் சரி செய்திருப்பதைப்போல, அந்தக் கட்டடத்தையும் சரி செய்திருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் கட்டடத்தை வாடகைக்கு எடுத்திருப்பதிலே எனக்கு பிரச்சினையில்லை. சரி செய்ததிலே பிரச்சினையில்லை. ஆனால், அதற்கு செலவு செய்யப்பட்டிருக்கிற தொகையைப் பார்க்கும் போது, அதிலே முறைகேடு நடந்திருப்பதாகத்தான் நான் சொல்கிறேன். 25 இலட்சம் ரூபாய் அளவிற்கு அதிலே செலவு செய்வதற்குரிய வாய்ப்புகள் இல்லை.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடத்தை நானும் பார்த்தேன். அது எவ்வளவு பழுதடைந்து இருந்தது என்பதும் எந்த அளவுக்குப் பழுது பார்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது ஒன்றும் அதிக செலவில்லை. நியாயமான செலவுதான். சில T.B.- களுக்கு Guest House-களுக்கு எல்லாம் கடந்த காலத்திலே 50 இலட்சம் ரூபாய், 60 இலட்சம் ரூபாய் என்று செலவாகியிருக்கின்றன. இப்போது நான் அதைக் குறையாகச் சொல்லவில்லை. இப்போது ஏறியிருக்கின்ற விலைவாசி, கூலி, இவற்றையெல்லாம் கணக்கில் எடுக்கிறபோது அந்த அளவிற்கு செலவாகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சருடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும், இதிலே பிரச்சினைகளைச் சொல்கிறபோது இதெல்லாம் பத்திரிகைச் செய்தியாக, வாரப் பத்திரிகையிலே எல்லாம் விரிவாக வந்திருக்கிறது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக நிறுவனத்தைப் பற்றிய பிரச்சினையும் இருக்கிறது, அதனுடைய இயக்குநர்-செயலாளாரைப் பற்றிய கருத்தும் இருக்கிறது. பொதுவாக, நம்முடைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு வாடகைக் கப்பல் அமர்த்துவதிலேயே பிரச்சினையிருக்கிறது. 100 கோடி ரூபாய்க்கு tender விடப்பட்டிருக்கிறது. ஆனால், சென்ற ஆண்டு இருந்த நிலைமையிலிருந்து, இந்த ஆண்டு பார்க்கிறபோது, கிட்டத்தட்ட 21 கோடி ரூபாய் அதிகமாக வாடகை கொடுத்து எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறைந்த வாடகையிலே எடுப்பதற்குப் பதிலாக, பல கப்பல்களுடைய முதலாளிகள் போட்டியிலே பங்கெடுப்பதைத் தவிர்த்து, வேண்டியவர்களுக்கு வழங்குவதற்கான முயற்சியை நிர்வாகம்....

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, நான் இந்தக் குற்றச்சாட்டைக் கடுமையாக மறுக்கிறேன். கப்பல்களை நம்முடைய மின்சாரத் துறைக்கு நிலக்கரி கொண்டு வருவதற்காக வாடகைக்கு எடுக்கிறோம். இதிலே Poompuhar Shipping Corporation ஓர் Agentஆக இருந்து செயல்படுகிறது. அதற்கு நமக்கு ஒன்றும் remuneration இல்லை. அதனால் வருமானம் எதுவும் கிடையாது. Poompuhar Shipping Corporation ஓர் அரசாங்க Agency-யாக இருந்து செயல்படுகிறது. ஆனால், கப்பல்களை வாடகைக்கு அமர்த்துகிறபோது, வெளிப்படையான tender விட்டுதான் அதைத் தேர்வு செய்திருக்கிறார்களே தவிர, அதிலே முறைகேடு எதுவும் இல்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வாடகைக்கு அமர்த்தப்படுகிறபோது குறைவான வாடகையில் நியமிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு மாதங்களுக்குள்ளாகவே கிட்டத்தட்ட 21 கோடி ரூபாய் அளவுக்கு அதிகமாக வாடகை கொடுக்க வேண்டிய அவசியம் எப்படி வந்திருக்கிறது என்பதுதான். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் குறை சொல்வதாக இல்லை. இதிலே இருக்கிற அந்த நிர்வாக அதிகாரி தன்னுடைய விருப்பத்திற்கேற்ற முறையிலே எல்லாம் இதைப் பயன்படுத்துகிறார் என்ற பிரச்சினையிருக்கிறது. இதை நீங்கள் அலசி ஆராய்ந்து பரிசீலிக்க வேண்டும் என்பதற்காக நான்

சொல்கிறேன். இப்படி நிலக்கரி இறக்குமதி செய்வது நம்முடைய மின்சாரம் தயாரிப்பதற்குரிய அத்தியாவசியப் பணிக்கான தேவைக்காகத்தான்

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** இதிலும் பாதிக்கப்பட்ட சில ஊழியர்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கிற தகவலைத்தான் நீங்கள் சொல்கிறீர்கள்.

முற்பகல் 11-35

**திரு. வை. சிவபுண்ணியம்:** அப்படி பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தவறாக இருந்தால், நடவடிக்கை எடுப்பதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. பாதிக்கச் செய்கிற அதிகாரி இருக்கிறாரே, அவரைப் பற்றியும் பரிசீலனை செய்யுங்கள் என்றுதான் நான் கேட்கிறேன். நான் திரும்பவும் வலியுறுத்திச் சொல்வது, அந்த அதிகாரியினுடைய செயல்பாடுகள் என்பது, இந்தப் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்...

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** துணைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட என்று சொல்வதைவிட நடவடிக்கை எடுக்கப்பட்ட ஊழியர்கள் என்று கூறலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களுக்கு கருத்தைச் சொல்கிறேன். இதிலே இருக்கிற பிரச்சினைகளே இன்னும் கருத்துகளோடு எழுத்துப் பூர்வமாகவே கொடுக்க வேண்டிய அவசியம் இருக்குமானால் கொடுத்து நீங்கள் விசாரியுங்கள் என்று சொல்கிறேன். நான் அரசாங்கத்தையோ அமைச்சரையோ குறை சொல்லவில்லை. நான் தெளிவாகத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இருந்தாலும், இப்படிப்பட்ட உயர் அதிகாரிகள் மூலமாக இந்தப் பிரச்சினைகள் வந்துவிடும்; பின்னாலே அது ஒரு பிரச்சினைக்குரியதாக மாறுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. அவர் இந்த முறைகேடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்; அவற்றின்மீது நீங்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

***திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை குறித்த 38 மற்றும் 56-வது எண் மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்புத் தந்தமைக்காக தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய



நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே எனக்கு முன்னர் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். மதிப்பீடு தயார் செய்யும்போது தனியாரை வைத்து 3 மீட்டர் ஆழத்திற்கு piles போட வேண்டிய கட்டடங்களுக்கெல்லாம் 9 மீட்டர், 8 மீட்டர் ஆழத்திற்கு piles போட மதிப்பீடு தயார் செய்தார்கள் என்று சொன்னார்கள். மதிப்பீடு எவ்வளவு தயார் செய்தாலும், அங்கு எந்த அளவுக்குக் கட்டடங்கள் கட்டி இருக்கிறார்களோ, எந்த அளவுக்கு piles போட்டிருக்கிறார்களோ, அந்த அளவுக்குத்தான் பணம் பட்டுவாடா செய்யப்படும் என்பதை உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், அதெல்லாம் structural work-ல் எந்தக் காலத்திற்கும் மாற்ற முடியாத வேலைகள்; அதிலே தவறு செய்திருந்தால் எந்த நேரத்திலேயும் அதைக் கண்டுபிடித்து நிச்சயமாக அவர்களுக்குத் தண்டனை வழங்கக்கூடிய வேலைகள். கடந்த காலத்திலே நடைபெற்ற சாலைப் பணிகளைப் போலல்லாமல்— அவையெல்லாம் மறைந்துவிடும்; 6 மாத காலத்திற்குள்ளாக அவையெல்லாம் இல்லாமல் போய்விடும்; அந்த வகையிலேதான் கடந்த காலத்திலே கொள்ளையடித்திருக்கிறார்கள்.ஆனால்— இப்படிப்பட்ட வேலைகளில் யாராலும் எந்தவிதமான தவறுகளும் செய்ய முடியாது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல turn-key முறையிலே மதிப்பீடு தயார்செய்து 16 இலட்சம் ரூபாய்க்கு போடப்பட்ட ஒரு 16 மீட்டர் பாலத்தை 104 இலட்சம் ரூபாய் என்று சொன்னார்கள். உண்மையிலேயே அந்த 16 இலட்சம் ரூபாய்க்கு போட்டிருக்கிற அந்தப் பொறியாளரைக் கேட்டிருந்தால், இவருக்குத் தெரிந்திருக்கும். concrete போடுவதில் 1:1 என்று ஒரு முறை இருக்கிறது; 1:3 என்று ஒரு concrete முறை இருக்கிறது; 1:4 என்று ஒரு concrete முறை இருக்கிறது—இப்படி பலவகையான concretes இருக்கின்றன. எனவே, இதை எல்லாம் அவர்கள் சரியாகப் பார்வையிட்டு குற்றம் குறைகளைச் சொல்ல வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையிலே பல்வேறு அமைப்புகள் மூலம் சாலைப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைகள் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் 2 ஆயிரம் கிலோமீட்டர் அளவுக்குத்தான் நம்முடைய தமிழகத்திலே இருந்தன. ஆனால், இந்த 3 ஆண்டுகளில் அவற்றை சுமார் 4 ஆயிரம் கிலோமீட்டர் அளவுக்குப்

[திரு. வீ. தமிழ்மணி] [2000 ஏப்ரல் 7

போட்டு 2 ஆயிரம் கிலோமீட்டர் அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்றால், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எந்த அளவுக்கு இந்தச் சாலைப் போக்குவரத்திலே கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

அடுத்தபடியாக கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் சுமார் 4 ஆயிரம் கிலோமீட்டர்தான் நம்முடைய மாநில நெடுஞ்சாலைகள் இருந்தன. ஆனால், இப்போது அது சுமார் 8 ஆயிரம் கிலோமீட்டர் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுவும் தரம் வாய்ந்த சாலைகளாக அவை போடப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக மாவட்டப் பெரிய சாலைகள். மாவட்டப் பெரிய சாலைகள் நம்முடைய தமிழகத்திலே சுமார் 10 ஆயிரம் கிலோமீட்டர் இருக்கின்றன. இந்த 10 ஆயிரம் கிலோமீட்டர் சாலைகளும் மிகவும் உறுதி வாய்ந்த சாலைகளாகப் போடப்பட்டிருக்கின்றன. அவற்றிலே சுமார் 4 ஆயிரம் கிலோமீட்டர் சாலைகள் ஒருவழிப் பாதைகளாக இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே சட்ராஸ் சூரப்பன் சாலை என்று ஒரு சாலை இருக்கிறது; அது 70 கிலோமீட்டர் நீளமுடைய சாலை; அந்த 70 கிலோமீட்டர் நீளமுடைய சாலையிலே 6 கிலோமீட்டர் சாலை ஒருவழிப் பாதையாக இருக்கிறது. மற்றவை எல்லாம் இரண்டு வழிப் பாதைகளாக இருக்கின்றன. இந்த 6 கிலோமீட்டர் சாலையையும் இருவழிப் பாதையாக மாற்றித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அடுத்தபடியாக இப்போது சுமார் 40,000 கிலோமீட்டர் சாலைகள் நம்முடைய மாநிலத்திலே 'இதர மாவட்டச் சாலைகளாக' இருந்து கொண்டிருக்கின்றன. அந்த இதர மாவட்டச் சாலைகளின் நிலைமைதான் உள்ளபடியே கொஞ்சம் வேதனைக்குரியதாக இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே 'இதர மாவட்டச் சாலைகளில்' குறிப்பாக, நெரும்பூர்-வாயலூர் சாலை, புதுப்பட்டினம்-விட்டிலாபுரம் சாலை, திருக்கழுக்குன்றம்-நெரும்பூர் சாலை, நெல்வாய்-திருக்கழுக்குன்றம் சாலை, பொன்விளைந்த களத்தூர்-வல்லிபுரம் சாலை, கன்னிகோயில்-பாண்டூர் சாலை, திருக்கழுக்குன்றம்-பெரும்பேடு-கிளாப்பாக்கம் சாலை, நரசங்குப்பம்-பேரம்பாக்கம் சாலை, ஒத்திவாக்கம்-மணப்பாக்கம் சாலை, பொன்விளைந்த களத்தூர்-ஒதியம்பாக்கம் சாலை, மேலேரிப்பாக்கம்-சோகண்டி சாலை, இப்படிப் பல்வேறு சாலைகள் சுமார் 200 கிலோமீட்டர் தூரத்திற்கு 'இதர



2000 ஏப்ரல் 7] [திரு. வீ. தமிழ்மணி]

மாவட்டச் சாலைகள்' வகையிலே வருகின்ற இந்தச் சாலைகள் கடந்த ஓராண்டு காலமாக மிகவும் பழுதுபட்டிருப்பதற்குக் காரணம் என்னுடைய தொகுதியிலே பாலாறு இருக்கிறது. அந்தப் பாலாற்று மணலைக் கொண்டுவந்துதான், சென்னை நகரத்திலே அனைத்துக் கட்டடங்களும் கட்ட வேண்டுமென்கிற கட்டாயம் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பாலாற்று மணலை எடுத்துக்கொண்டு வருகிற வழியில் இந்தக் கிராமச் சாலைகளும், இதர மாவட்டச் சாலைகளும் உள்ள காரணத்தால், இந்தச் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் பழுதாகிக் கொண்டிருக்கின்றன. காரணம் என்னவென்றால் வருகின்ற லாரிகள் குறைந்தது 25 டன் எடையோடு வருகின்ற காரணத்தால் இந்தக் கிராமச் சாலைகள் மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, இதற்கென தனியாக ஒரு நிதியை ஒதுக்கித் தந்து உதவி செய்ய வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து சுமார் 400 கோடி ரூபாயைப் பெற்று, இந்த இதர மாவட்டச் சாலைகளையெல்லாம் பழுதுபார்க்க இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இத்திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 153 கோடி ரூபாய் அளவில் சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள இந்தச் சாலைகளையெல்லாம் அவசியம் செப்பனிடுவதற்கு மீதமுள்ள நிதியில் நிதியொதுக்கித் தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

1,000 பேர் மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கெல்லாம் கடந்த 2 ஆண்டு காலத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் இணைப்புச் சாலைகளை அமைத்துத் தந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு முதல் 500 முதல் 1,000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அதற்கும் நிதியொதுக்கியுள்ளார்கள். இந்த ஆண்டு 500 மக்கள்தொகை கொண்ட கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் வழங்கப்படும் என்ற நல்ல செய்தியை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

தமிழகத்திலே அனைத்துப் பகுதிகளிலும் 10,000-க்கும் மேற்பட்ட சாலைப் பணியாளர்களை நியமித்திருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, என்னுடைய மாவட்டத்தில் மட்டும் இதுவரையில் சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. எனவே, கிராமச் சாலைகள் அதிகமிருக்கின்ற எங்கள் பகுதிக்கு அவசியம் சாலைப் ப்ணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கல்பாக்கம் அணுமின் நிலையமும், சுற்றுலாத் தலமான மாமல்லபுரமும் இருக்கின்ற காரணத்தால் செங்கல்பட்டிலேயிருந்து திருக்கழுக்குன்றம் செல்கின்ற அந்தப் பாதையில் ஓர் இரயில்வே மேம்பாலம் அவசியம் கட்டித்தர வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தினுடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சென்னை நகரத்திலே மிக அற்புதமாகப் பல மேம்பாலங்களைக் கட்டி, இப்போது அந்த மேம்பாலங்களின்மேலே செல்கின்றபோது, மேலை நாடுகளிலே பயணம் செய்வது போன்ற ஓர் எண்ணம் ஏற்படுகின்ற அளவிற்கு இந்தப் பாலங்களை அழகாக உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மீண்டும், மீண்டும் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்வது, என்னுடைய தொகுதியில் பாலாற்று மணல் கொண்டு செல்வதால் பழுதாகி இருக்கின்ற கிராமச் சாலைகளை, மாவட்ட இதர சாலைகளைப் பழுதுபார்க்க, இந்த நிதியாண்டிலேயே நிதியை ஒதுக்கித் தந்து, போக்குவரத்திற்கே பயனற்று போய் இருக்கின்ற அந்தச் சாலைகளை அவசியம் சீர்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

முற்பகல் 11-45

* **திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு என்னுடைய நன்றியினைக் கூறிக்கொள்கிறேன். ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, விவசாய மேம்பாடு, போக்குவரத்து மேம்பாடு ஆகிய அத்தனைக்கும் உறுதுணையாக இருக்கின்ற துறைதான் இந்த நெடுஞ்சாலைத் துறை. இந்தத் துறையிலே இருக்கின்ற சாலைகள் சீராக, செம்மையாக வைத்துக்கொள்ளப் பட்டிருந்தால்தான் போக்குவரத்து போன்ற வசதிகள் சிறப்பாக அமையும். நமது தமிழகத்தைப் பொறுத்த அளவில் பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம், அரசுத் துறையிலே இயக்கப்படுகின்ற காரணத்தால், நெடுஞ்சாலைத் துறையினுடைய சாலைகளை, கிராமப்புறச் சாலைகளை சீராக வைத்துக் கொள்வதன் மூலமாகத்தான் போக்குவரத்துத்



துறை சீராகச் செயல்படுவதற்கு, முழுமையாகச் செயல்படுவதற்கு வழி வகுப்பதாக இருக்கும் என்கின்ற முறையிலே, இந்த நான்காண்டு காலமாக ஓரளவிற்கு, எல்லா கிராமப்புறச் சாலைகளும், நெடுஞ்சாலைத் துறையிலே பராமரிக்கப்படுகின்ற சாலைகளும், சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தேசிய நெடுஞ்சாலை கடந்த 4 ஆண்டுகளிலே 2,000 கிலோமீட்டரிலிருந்து இப்போது ஏறக்குறைய 3,700 கிலோமீட்டருக்கு மேலாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுபோல இப்போது மாவட்டச் சாலைகளிலே ஏறக்குறைய 3,500 கிலோமீட்டர் அளவுக்கு நெடுஞ்சாலையாக ஆக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. நெடுஞ்சாலைத் துறையில் இருந்துகூட கடந்த வாரத்திலே ஒரு புத்தகத்தை வெளியிட்டிருந்தார்கள். எங்களைப் போற்றவில்லை என்று சொன்னாலும்கூட நாங்கள் செய்கின்ற பணிகளை நீங்கள் தூற்றாமல் இருந்தால் போதும் என்கின்ற அளவிற்கு, இவ்வளவு மிகப்பெரிய பணியினை நாங்கள் செய்திருக்கிறோம். அதற்கு உங்களுடைய போற்றுதல் இல்லையென்றாலும்கூட உண்மையினை ஏற்றுக்கொண்டு புழுதி வாரித் தூற்றாதீர்கள் என்கின்ற அளவிற்கு சில விளக்கங்களைத் தந்திருந்தார்கள். என்னைப் பொறுத்த அளவிலே, நமது அய்யன் வள்ளுவர் சொன்னதைப்போல

“குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்”

என்பதுபோல, கடந்த காலங்களிலே நடந்தவற்றையெல்லாம் பார்த்து, இப்போதைய நடைமுறைகளையும் பார்த்து, இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது இங்கொன்றும், அங்கொன்றும் சில குறைகள் இருந்தாலும்கூட மிகையாக மிகுந்து நிற்பது குணம் என்பதை நான் உணர்ந்து, பல்வேறு நல்ல காரியங்கள் நடந்து கொண்டிருப்பதை என்னாலே பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

நான் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னால் சீன நாட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு இருக்கின்ற சாலைகளையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில், நகர்ப்புறங்களிலே 4 சாலைகள் சந்திக்கின்ற இடத்திலே எல்லாம் மிகச் சிறப்பாக மேல்நிலைப் பாலங்களை அமைத்து அங்கு இருக்கின்ற போக்குவரத்தை எல்லாம் சீர்த்திருத்தம் செய்திருக்கின்ற நிலைகளைப் பார்த்து, நமது தமிழகத்தில் இப்படியெல்லாம் என்றைக்கு அந்த நிலை உருவாக முடியுமோ என்கின்ற எண்ணத்தோடு வந்து பார்க்கின்றபோது, இப்போது, சென்னையில் மட்டும் அல்ல, மதுரையில்கூட [illegible] ப்பட்ட மேம்பாலங்களெல்லாம் இருக்கின்றன என்பதை [illegible]

பல்வேறு மேம்பாலங்கள் எல்லாப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையை நம்மால் பார்க்க முடிகிறது. அப்படிப்பட்ட வேலைகளை எல்லாம் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற முறையிலே, பல்வேறு பாலங்கள், இந்த அரசின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கின்றன.

நமது முதலமைச்சர்கூட சொன்னார்கள், கடந்த 4, 5 மாதங்களுக்கு முன்னால் Indian Road Conference என்பது, பல்வேறு மாநிலங்களிலே நடைபெறுகின்ற அந்த Conference இந்த ஆண்டு நமது தமிழகத்திலே நடக்கவிருக்கிறது. அது நடப்பதன் மூலமாக பல்வேறு வேலைவாய்ப்புகளை இந்த நெடுஞ்சாலைத் துறையிலே பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதற்காகத்தான் நாங்கள் நிதியை ஒதுக்கி அந்த Conference-ஐ இங்கே நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அத்தகைய Conference பெரும்பாலும், சென்னை நகரிலே பல்வேறு நேரங்களிலே நடந்திருந்தாலும் இந்த முறை அதை மதுரையிலே சிறப்பாக நடத்தி அந்த மதுரைப் பகுதியிலும், இங்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கவேல் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தமிழகத்தில் பல்வேறு பகுதிகளையும் சுற்றிப்பார்க்கிறபோது மற்ற இடங்களைக் காட்டிலும் மிகப் பின்தங்கிய பகுதியாக எப்படி பொருளாதார ரீதியிலே, சமூக ரீதியிலே தென் மாவட்டங்கள் பின்தங்கி இருக்கின்றனவோ, அதைப்போல தென் மாவட்டங்களில் இருக்கின்ற சாலைகளும்கூட சற்றுப் பின்தங்கிய நிலையில்தான் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை கவனத்தில்கொண்டு ஏறக்குறைய தென் பகுதிகளுக்கு இந்த முறை சற்றுப் அதிகமாக நிதிகள் ஒதுக்கப்பட்டு அங்கிருக்கின்ற சாலைகள் எல்லாம் பராமரிக்கப்பட்டாலும்கூட இன்னும் அதிகப்படியான நிதியை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தென் பகுதியிலே இருக்கின்ற சாலைகளைப் புனரமைப்பதற்கு, அங்கிருக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அந்தச் சாலைகளுடைய மேம்பாட்டு நிதியினை அதிகப்படுத்தித் தர வேண்டும்.

முற்பகல் 11-50

சென்னையைச் சிங்காரச் சென்னையாக ஆக்குவதுபோல, மதுரையை அழகு மிகுந்த மதுரையாக ஆக்க வேண்டிய நிலையினை இப்போது நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு மேம்பாலங்கள் வந்திருக்கின்றன. அதுபோல மதுரையிலே radial roads அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது எல்லா பகுதியிலும் சிறப்பாக



நிறைவு பெறுவதற்கு இன்னும் நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. இப்போது, கிழக்குப் பகுதியிலே இராமேஸ்வரம் சாலை, சென்னை சாலையை இணைக்கின்ற அளவுக்கு அந்தச் சாலை வந்திருக்கிறது.

அதுபோல மேற்குப் பகுதியில் பிற்பட்டப் பகுதியாக இருக்கின்ற உசிலம்பட்டி பகுதி போன்றவை எல்லாம் முற்பட்டப் பகுதிகளாக ஆக்குவதற்கு குமுளிவரை செல்கின்ற நெடுஞ்சாலையை நமது மதுரை நகரத்தோடு இணைக்க ஒரு புறவழிச்சாலை ஏற்படுத்துவதற்கு அதிகப்படியான நிதிகளை ஒதுக்கித்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதியைப்பொறுத்த அளவிலே நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். வளையப்பட்டி சாலையிலே ஒரு பெரிய காட்டாறு இருக்கிறது. அந்த ஆற்றிலே நீர் வருகிற நேரத்தில் இரண்டு மூன்று நாட்களுக்குக்கூட அங்கிருக்கிற மக்கள் அந்த ஆற்றைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. அந்தச் சாலை என்பது திண்டுக்கல் மாவட்டத்தை இணைக்கின்ற, நத்தம் பகுதியை இணைக்கின்ற ஒரு நல்ல சாலை. எனவே, அந்தச் சாலையிலே ஒரு பாலம் வேண்டும் என்பதை முதலமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை விண்ணப்பமாக அளித்திருக்கிறேன். அவர்களும் அந்தத் துறைக்கு அனுப்பி வைக்கிறார்கள். அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் ஒவ்வொரு முறையும் முதலமைச்சரிடமிருந்து விண்ணப்பம் வந்திருக்கிறது, நாங்கள் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் என்கிற பதிலைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அதைச் செய்கிறோம் என்கிற நிலை எடுக்கவில்லை. தேர்தல் நேரங்களில் நாங்கள் எல்லாம் அதற்குரிய வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறோம். பத்திரிகையிலேகூட தொகுதியைப் பற்றி எழுதுகின்ற நேரத்திலே இப்படி வாக்குறுதி கொடுத்தவர் செய்யவில்லையே என்றுகூட குறையாக எழுதியிருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து இந்த நிதி ஆண்டில் அந்த வளையப்பட்டி பாலத்தை—மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேகூட அன்றைக்கு ஒரு மனுவாக நான் கொடுத்திருக்கிறேன்—செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதியிலே கரும்புச் சாலை என்பது மிகுந்த பிரச்சினைக்குரிய சாலை. எங்களது அமைச்சர் அவர்கள்கூட முன்னால் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய தொகுதியிலேகூட நிறைய கரும்புச் சாலைகள் வருகின்றன. என்னுடைய தொகுதியிலே இரண்டு சர்க்கரை

ஆலைகள் இருக்கின்றன. அந்தக் காலத்தில் அந்தச் சர்க்கரை ஆலைக்கு கரும்புச் சாலை நிதியிலிருந்துதான் பல்வேறு சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சாலைகள் எல்லாம் சர்க்கரை ஆலைத் துறையிலிருந்து போதிய நிதி வரப்பெறவில்லை என்கிற காரணத்தினால் பராமரிக்கப்படாத நிலை இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கிற சாலைகள் பராமரிக்கப்பட்டிருந்தாலும்கூட அந்தச் சாலைகள் பராமரிக்கப்படாத நிலையிலே அந்தப் பகுதி முழுமையாக நிறைவு பெறவில்லை. எனவே, அந்தச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையாவது எடுத்து உரிய முறையிலே பராமரிக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தக் கோரிக்கை, கரும்புச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை, ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை எடுத்துக்கொள்ளும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இப்போது நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பிலே வந்துவிட்டது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய கரும்புச் சாலைகளை எல்லாம் நாம் எடுத்துகொள்கிறோமா அல்லது குறிப்பிட்ட சாலைகளை மட்டும் எடுத்துக்கொள்கிறோமா? நிறைய இடங்களில் இதுபோன்ற கரும்புச் சாலைகள் இதுவரையிலும் போடப்படாமலேயே பராமரிக்கப்படாமலேயே இருக்கின்றன, போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. பிரத்தியேகமாக, தமிழ்நாடு முழுவதும் இந்தக் கரும்புச் சாலைகளை நாம் எடுத்துகொள்கிறோமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள அத்தனை கரும்புச் சாலைகளும் ஏற்கெனவே வேளாண்மைத் துறையின் மூலமாகப்



பாரமரிக்கப்பட்டு வந்தன. கரும்பு cess நிதியின் மூலமாக இது பராமரிக்கப்பட்டு வந்தது. பல ஆலைகள் அந்த cess-ஐ தரவில்லை என்ற காரணத்தால் பராமரிப்பிலே சுணக்கம் ஏற்பட்டது. Cess வந்தாலும், வராவிட்டாலும் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக அவற்றைப் பராமரிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டு கரும்புச் சாலைகள் முழுவதும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மானியக் கோரிக்கையிலே பேச அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாட்டைப் பற்றியும், நாட்டிலுள்ள மக்களைப் பற்றியும் சிந்தித்தத் தலைவனுக்குத்தான் நாட்டை ஆளும் தகுதி இருக்கும் என்ற நிலை இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே தெரிகின்றது. குறிப்பாக, ஓர் இனத்தைப்பற்றி அறிந்த தலைவனுக்குத்தான் அந்த இனத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற துடிப்பு இருக்கும். இனத் தலைவராக, தமிழக முதல்வராக இங்கே வீற்றிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்ற துடிப்போடு சிறப்பாகவும் செம்மையாகவும், நிதிநிலை அறிக்கைகளை வழங்கிக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், நெடுஞ்சாலைத் துறையிலே முன்பு பழமொழி கூறுவார்களே, படை பெருத்ததால் பார் சிறுத்ததோ அல்லது பார் சிறுத்ததால் படை பெருத்ததோ என்ற அந்தப் பழமொழியை மாற்றி பாதை பெருத்ததால் பார் சிறுத்ததோ என்ற நிலையிலே தமிழகம் இப்போது நெடுஞ்சாலைத் துறையிலே ஒரு சிறப்பான நிலையை எய்தி வருகிறது என்பதைப் பெருமையோடு இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமங்கள் நம் நாட்டின் உயிர்நாடி. அந்தக் கிராமப் பொருளாதாரத்தை வளர்க்கவும், இந்தியப் பொருளாதாரத்தை உயர்த்தவும், தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் சாலைகள் எவ்வளவு முக்கியம் என்பதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்களும்,

மரியாதைக்குரிய மாண்புமிகு நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், என்றைக்குமே இல்லாத அளவுக்கு 2000-2001 ஆம் ஆண்டிலே சுமார் 1,685 கோடி ரூபாயை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கி, அதிலே சாலை வசதிகளைச் செய்ய பல்வேறு வகையிலே ஏற்பாடு செய்து இந்தத் துறைக்கென மட்டும் இதில் 809 கோடி ரூபாயை இப்போது தமிழக அரசு வழங்கி, சாலைகளையும், பாலங்களையும் மேம்படுத்த இந்த 4-வது ஆண்டில் சிறப்பான ஒரு நிலையை இந்தத் துறை எடுத்து வருகிறது என்பதை மீண்டும் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைப் பதிவு செய்தார்கள். மீண்டும் இந்த மன்றத்திலே அதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். 1996-க்கு முன்னாலே, எம்.ஜி.ஆர். ஆட்சி உட்பட, 18 ஆண்டு காலத்திலே சாலைகள், பாலங்கள் பணிக்காக ஒதுக்கிய தொகை சுமார் 1957 கோடி ரூபாய்; கழக ஆட்சி பொறுப்பேற்ற இந்த நான்காண்டு காலத்திலே மட்டும் சுமார் 2,480 கோடி ரூபாய் இந்தத் துறையிலே செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு இங்கு நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

அதேபோல, தமிழகத்திலே அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது, குறிப்பாக 1996-க்கு முன்னாலே 2002 கிலோமீட்டர் மட்டுமே தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் இருந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பின்பு, கடந்த நான்காண்டு காலத்திலே, கலைஞரின் ஆட்சியிலே, 1785 கிலோமீட்டர் அதிகப்படியாக எடுத்து, இப்போது 3,739 கிலோமீட்டர் அளவிலே, தமிழகத்திலே தேசிய நெடுஞ்சாலைகள் விளங்குகின்றன என்றால், இந்த அரசினுடைய செயல்பாடு எவ்வாறு இருக்கிறது என்பதை நடுநாயகமாக இருப்பவர்களும், படித்தவர்களும், பாமரர்களும், இப்போது சிந்தித்து இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பார்த்து, இப்போது சிலர் மக்கள் விரோத அரசு என்று கூறுவது, வேடிக்கையிலும் வேடிக்கையாகவும், விந்தையிலும் விந்தையாகவும் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். நான்காண்டு காலத்திலே 780 கோடிக்கு மேலாக NABARD வங்கியின் மூலமாகப் பல்வேறு நிதிகளைப்பெற்று, தமிழகத்திலே இப்போது கிராமப்புறச் சாலைகளும், நகர்ப்புறச் சாலைகளும், தேசிய நெடுஞ்சாலைகளும் சிறப்பானதொரு நிலையை எய்தி இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களோடும் போட்டி



போடக்கூடிய அளவிற்கு தமிழகத்தினுடைய சாலைகள் சிறப்பாக இருக்கின்றன என்ற ஒரு பெரிய பெயரைப் பெற்றிருக்கிறது. கிராமப்புறத்திலே இருப்பவர்கள் முதல் பத்திரிகையாளர்கள்வரை அத்தனை பேரும் இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கும் ஒரு துறையாக நெடுஞ்சாலைத் துறை விளங்குகிறது என்பதை மீண்டும் மிகுந்த பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

நவீன இயந்திரங்கள் பொறுத்தவரையில் Paver இயந்திரத்தைப் பயன்படுத்தும் முறையிலே tender-கள் விடப்படும் நிலையிருந்ததை மாற்றி, நவீன இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள இந்த மானியக்கோரிக்கையிலே வழிவகை செய்திருப்பதை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். இதன்மூலமாக அதிகப்படியான போட்டிகள் ஏற்பட்டு, அரசு லாபம் ஏற்படும் நிலையை அடையும் என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, ரூ.360 கோடியிலே 106 பாலங்கள் அமைக்கும் பணி, தமிழக சரித்திரத்தில், தமிழக வரலாற்றில் என்றும் இல்லாத அளவிற்கு இப்போது அந்தப் பாலங்கள் அமைக்கும் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. சென்னை நகரில், சீர்மிகு சென்னையை சிங்காரச் சென்னையாக ஆக்குவது என்ற நமது மாண்புமிகு மேயர் அவர்களின் கனவை நனவாக்கும் விதமாக, இப்போது சென்னையில் எங்குபார்த்தாலும் விண்ணை முட்டும் பாலங்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. பாதைகளைப் பார்த்தால், கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம்போல் காட்சியளிக்கின்றன. அந்தப் பால வேலைகள் அனைத்தும் முடிந்தால், சிங்காரச் சென்னை. சிங்கப்பூர் சென்னை என்று பெயர் மாற்றி அழைக்கப்படும் ஒரு நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, பல்வேறு வகையிலே இப்போது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நெடுஞ்சாலைத் துறையைப் பாராட்டிக்கொண்டே பலவற்றைச் சொல்லலாம் என்று இந்த நேரத்திலே இருந்தாலும், எனது தருமபுரி தொகுதியைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சியால், தருமபுரியிலே தொப்பூர் மலைப் பாதைக்கு 25 கோடி ரூபாய் வழங்கி இப்போது வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதற்காகவும், இந்த Budget-லே 55 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, தொப்பூரிலே ஒரு பாலம் இடிந்த நிலையில் இருந்ததைச் சரிசெய்ய அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்; அதற்காகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, தருமபுரியிலேயிருந்து திருப்பத்தூர்

செல்லும் வழியிலே, 6-வது கிலோமீட்டரிலே செம்மாண்டக்குப்பம் என்ற இடத்தில் ஒரு தரைப்பாலம் உள்ளது. பெரும் விபத்து ஏற்பட்டு, மழைக்காலங்களில் பெருத்த பாதிப்பிற்குள்ளாகும் அந்தப் பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு மேம்பாலமாக நிலையை உயர்த்தித் தரவேண்டும். பலமுறை நான் கோரிக்கை கொடுத்துள்ளேன். நேற்றுகூட அந்தக் கோரிக்கையைக் கொடுத்துள்ளேன். நிச்சயமாக அதைச் செய்து தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அதேபோல, வாணியம்பாடி-திருப்பத்தூர் செல்லும் சாலையை நெடுஞ்சாலையாக அறிவிக்க வேண்டுமென ஒரு கோரிக்கை நீண்ட நாட்களாக எழுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை மாநில நெடுஞ்சாலையாக அறிவித்திட வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தருமபுரி-சேலம் செல்லும் வழியிலே அதியமான்கோட்டை என்ற இடத்திலே ஒரு ரயில்வே மேம்பாலம் பெரியதாகக் குறிக்கீடாக இருந்தது. அந்த மேம்பாலத்திற்கு ரூ.10 கோடி ஒதுக்கியும் வேலைகள் இன்னும் தொடங்கப்படாமல் உள்ளது. அந்த வேலைகளை உடனடியாகத் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

*** டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியின் வளர்ச்சிக்கும், அதேபோன்று தொழில் வளர்ச்சிக்கும் எப்படி தொழில்நுட்பமும், மூலதனமும் அவசியமோ, அதேபோல நவீனப்படுத்தப்பட்ட சாலைகளும் அவசியம். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, முதலிலே நான் என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியிலே இருக்கக்கூடிய சாலைகளின் நிலைமைகளைப் பற்றிச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதி தொழில் வளமற்ற பகுதி. அதேபோல, நீண்ட நெடுங்காலமாக இன்னும் சொல்லப்போனால், தொடர்ச்சியாக வறட்சிக்கு இலக்காகும் பகுதி. அந்தப் பகுதியிலே தொழில் வளங்கள் வராமல் போனதற்குக் காரணம் பல. பத்து ஆண்டுக் காலமாக சாலைகள் போடப்படாமலேயே புறக்கணிக்கப்பட்டதுதான். இந்த அவல நிலையைக்கூட, 1997 ஆம் ஆண்டு ஒட்டப்பிடாரம் அருகிலே இருக்கக்கூடிய கவர்னகிரியிலே சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கனாருடைய வாரிசுகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்த



விழாவிலே, தமிழக முதலமைச்சர் கலந்து கொண்டபோது, நான் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து ஏறக்குறைய 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, பல சாலைகள் பழுதுபார்க்கப்பட்டன. இருந்தாலும்கூட, இன்னும் ஒட்டப்பிடாரம் தொகுதியிலே பெரும்பாலான சாலைகள் போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லை. எனவே, இந்த மாமன்றத்தின் மூலமாக நான், ஒட்டப்பிடாரம் தொகுதி விசேஷமாக கவனிக்கப்பட வேண்டும், சாலைகள் முழுமையாகப் பழுதுபார்க்கப்பட்டு இன்னும் புதுபிக்கப்பட வேண்டுமென்று சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக மதுரை-திருநெல்வேலி சாலையிலிருந்து, கங்கைகொண்டான் சாலையிலேயிருந்து, தே.கைலாபுரம், கொடியங்குளம், புளியம்பட்டி வழியாக தெய்வசெயல்புரம் செல்கின்ற சாலைகளை உடனடியாக மேம்படுத்த வேண்டும். அந்த சாலைதான் ஒட்டப்பிடாரம் தொகுதியிலே இருக்ககூடிய பிரதானமான சாலை. அதேபோல பாளையங்கோட்டை—அருப்புக்கோட்டை சாலையில் ஒட்டப்பிடாரம் தொகுதியிலே இருக்கக்கூடிய சீவலப்பேரியிலிருந்து குறுக்குச் சாலை வரையிலும், அந்தச்சாலை பழுதுபார்க்கப்பட வேண்டும். அதேபோல புதூர் பாண்டியாபுரம், புதியம் புத்தூர், ஒட்டப்பிடாரம் வரை இருக்கக்கூடிய சாலை, செட்டிக்குறிச்சி, காளாம்பட்டி, வானரமுட்டி சாலை, கயத்தாறு-வடக்கு மயிலோடை சாலை, காளாம்பட்டி கோபாலபுரம்-கோவில்பட்டி சாலை, கடம்பூர், மேலப்பாரப்பட்டி, குருவிநத்தம், கீழப்பாரப்பட்டி சாலை, கே. கைலாசபுரம், வேப்பன்குளம், கயத்தாறு சாலை, புளியம்பட்டி, மருதன்வாழ்வு, கடம்பூர் சாலை, நாரைக்கிணறு, கொத்தாளி, ஐரம்பட்டி சாலை, கழுகுமலை, நாலச்சன் புத்தூர் சாலை, கயத்தாறு, பன்னீர்குளம் சாலை, கயத்தாறு-கடம்பூர், கயத்தாறு-கழுகுமலை, ஐய்யனார் ஊற்று சாலை போன்ற சாலைகள் எல்லாம் சாதாரண வண்டிப் போக்குவரத்திற்குக்கூடப் பயன்படுத்தமுடியாத அளவிற்கு மேடு பள்ளங்களாக இருக்கின்றன.

அதேபோல, 3 பாலங்கள் NABARD திட்டத்தின்மூலம் கட்டப்படும் என்று ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்பாக உத்தரவாதம் கொடுக்கப்பட்டும்கூட, அந்தப் பாலங்கள் இன்னும் கட்டப்படவில்லை. குறிப்பாக, வேப்பன்குளம் கிராமத்திலே ஒரு பாலமும், ஒட்டநத்தம் கிராமத்திலே ஒரு பாலமும், அருப்புக்கோட்டை-பாளையங்கோட்டை சாலையிலே ஓசநூத்து அருகிலே ஒரு பாலமும், அதேபோல, ஆளனூர், உள்ளுர் அருகே ஒரு பாலம் கட்டுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செல்லும் வழியிலே, 6-வது கிலோமீட்டரிலே செம்மாண்டக்குப்பம் என்ற இடத்தில் ஒரு தரைப்பாலம் உள்ளது. பெரும் விபத்து ஏற்பட்டு, மழைக்காலங்களில் பெருத்த பாதிப்பிற்குள்ளாகும் அந்தப் பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு மேம்பாலமாக நிலையை உயர்த்தித் தரவேண்டும். பலமுறை நான் கோரிக்கை கொடுத்துள்ளேன். நேற்றுகூட அந்தக் கோரிக்கையைக் கொடுத்துள்ளேன். நிச்சயமாக அதைச் செய்து தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அதேபோல, வாணியம்பாடி-திருப்பத்தூர் செல்லும் சாலையை நெடுஞ்சாலையாக அறிவிக்க வேண்டுமென ஒரு கோரிக்கை நீண்ட நாட்களாக எழுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை மாநில நெடுஞ்சாலையாக அறிவித்திட வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தருமபுரி-சேலம் செல்லும் வழியிலே அதியமான்கோட்டை என்ற இடத்திலே ஒரு ரயில்வே மேம்பாலம் பெரியதாகக் குறிக்கீடாக இருந்தது. அந்த மேம்பாலத்திற்கு ரூ.10 கோடி ஒதுக்கியும் வேலைகள் இன்னும் தொடங்கப்படாமல் உள்ளது. அந்த வேலைகளை உடனடியாகத் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

*** டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியின் வளர்ச்சிக்கும், அதேபோன்று தொழில் வளர்ச்சிக்கும் எப்படி தொழில்நுட்பமும், மூலதனமும் அவசியமோ, அதேபோல நவீனப்படுத்தப்பட்ட சாலைகளும் அவசியம். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, முதலிலே நான் என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியிலே இருக்கக்கூடிய சாலைகளின் நிலைமைகளைப் பற்றிச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதி தொழில் வளமற்ற பகுதி. அதேபோல, நீண்ட நெடுங்காலமாக இன்னும் சொல்லப்போனால், தொடர்ச்சியாக வறட்சிக்கு இலக்காகும் பகுதி. அந்தப் பகுதியிலே தொழில் வளங்கள் வராமல் போனதற்குக் காரணம் பல. பத்து ஆண்டுக் காலமாக சாலைகள் போடப்படாமலேயே புறக்கணிக்கப்பட்டதுதான். இந்த அவல நிலையைக்கூட, 1997 ஆம் ஆண்டு ஒட்டப்பிடாரம் அருகிலே இருக்கக்கூடிய கவர்னகிரியிலே சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கனாருடைய வாரிசுகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்த



விழாவிலே, தமிழக முதலமைச்சர் கலந்து கொண்டபோது, நான் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து ஏறக்குறைய 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, பல சாலைகள் பழுதுபார்க்கப்பட்டன. இருந்தாலும்கூட, இன்னும் ஒட்டப்பிடாரம் தொகுதியிலே பெரும்பாலான சாலைகள் போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லை. எனவே, இந்த மாமன்றத்தின் மூலமாக நான், ஒட்டப்பிடாரம் தொகுதி விசேஷமாக கவனிக்கப்பட வேண்டும், சாலைகள் முழுமையாகப் பழுதுபார்க்கப்பட்டு இன்னும் புதுபிக்கப்பட வேண்டுமென்று சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக மதுரை-திருநெல்வேலி சாலையிலிருந்து, கங்கைகொண்டான் சாலையிலேயிருந்து, தே.கைலாபுரம், கொடியங்குளம், புளியம்பட்டி வழியாக தெய்வசெயல்புரம் செல்கின்ற சாலைகளை உடனடியாக மேம்படுத்த வேண்டும். அந்த சாலைதான் ஒட்டப்பிடாரம் தொகுதியிலே இருக்ககூடிய பிரதானமான சாலை. அதேபோல பாளையங்கோட்டை—அருப்புக்கோட்டை சாலையில் ஒட்டப்பிடாரம் தொகுதியிலே இருக்கக்கூடிய சீவலப்பேரியிலிருந்து குறுக்குச் சாலை வரையிலும், அந்தச்சாலை பழுதுபார்க்கப்பட வேண்டும். அதேபோல புதூர் பாண்டியாபுரம், புதியம் புத்தூர், ஒட்டப்பிடாரம் வரை இருக்கக்கூடிய சாலை, செட்டிக்குறிச்சி, காளாம்பட்டி, வானரமுட்டி சாலை, கயத்தாறு-வடக்கு மயிலோடை சாலை, காளாம்பட்டி கோபாலபுரம்-கோவில்பட்டி சாலை, கடம்பூர், மேலப்பாரப்பட்டி, குருவிநத்தம், கீழப்பாரப்பட்டி சாலை, கே. கைலாசபுரம், வேப்பன்குளம், கயத்தாறு சாலை, புளியம்பட்டி, மருதன்வாழ்வு, கடம்பூர் சாலை, நாரைக்கிணறு, கொத்தாளி, ஐரம்பட்டி சாலை, கழுகுமலை, நாலச்சன் புத்தூர் சாலை, கயத்தாறு, பன்னீர்குளம் சாலை, கயத்தாறு-கடம்பூர், கயத்தாறு-கழுகுமலை, ஐய்யனார் ஊற்று சாலை போன்ற சாலைகள் எல்லாம் சாதாரண வண்டிப் போக்குவரத்திற்குக்கூடப் பயன்படுத்தமுடியாத அளவிற்கு மேடு பள்ளங்களாக இருக்கின்றன.

அதேபோல, 3 பாலங்கள் NABARD திட்டத்தின்மூலம் கட்டப்படும் என்று ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்பாக உத்தரவாதம் கொடுக்கப்பட்டும்கூட, அந்தப் பாலங்கள் இன்னும் கட்டப்படவில்லை. குறிப்பாக, வேப்பன்குளம் கிராமத்திலே ஒரு பாலமும், ஒட்டநத்தம் கிராமத்திலே ஒரு பாலமும், அருப்புக்கோட்டை-பாளையங்கோட்டை சாலையிலே ஓசநூத்து அருகிலே ஒரு பாலமும், அதேபோல, ஆளனூர், உள்ளூர் அருகே ஒரு பாலம் கட்டுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது கோவில்பட்டியிலேயிருந்து பசுவந்தனைவரையிலும் இருக்கக்கூடிய சாலையில் ஆறு பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதில் மூன்று பாலங்கள் கோவில்பட்டி தொகுதியிலேயும், மூன்று பாலங்கள் ஒட்டப்பிடாரத்திலும் வருகின்றன. அந்த ஆறு பாலங்களைக் கட்டுகின்ற நிலையைப் பார்க்கின்றபோது பரிதாபமாக இருக்கிறது.

பிற்பகல் 12-10

நான் 10 தினங்களுக்கு முன்பு, அந்த 6 பாலங்களையும் பார்வையிட, சில அதிகாரிகளோடு சென்றிருந்தேன். அந்தப் பாலங்கள் எல்லாம் மிகத் தரக் குறைவான சிமெண்ட். அருகிலே இருக்கக்கூடிய ஓடை மணல், அதேபோல் packing material என்று சொல்லக்கூடிய அளவுக்கு, கையிலே எடுத்தாலும்கூட பொடிந்து விடக்கூடிய அளவுக்கு ஜல்லிகளை வைத்து, தரம் குறைந்த அளவுக்கு கட்டப்பட்டு வருகின்றன. அப்படி அந்தப் பாலங்கள் தரக் குறைவான பொருள்களால் கட்டப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால், இலட்சக்கணக்கான ரூபாய் இந்த அரசு செலவழித்து கட்டக்கூடிய பாலங்கள், அந்த ஓடைகளிலே பெருத்த வெள்ளம் வருகிறபோது, அடித்துச் செல்லுகின்ற வாய்ப்பு ஏற்பட்டு, அதனுடைய பலனே இல்லாமல், அரசினுடைய பணம் வீணாவதற்குண்டான வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு இந்தப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதேபோல், துறைச் செயலாளருடைய கவனத்திற்கும் கொண்டு வந்தார். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, அங்கே தரம் குறைந்த பணிகள் நடப்பதாகத் தெரியவில்லை. அவர் மாருதி சிமெண்ட் என்ற ஒன்றைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னார். அதுகுறித்து குறிப்பாகக் கேட்கப்பட்டது. மாருதி சிமெண்டும் I.S.I. முத்திரை பெற்றதுதான். என்றாலும்கூட, நான் அதிகாரிகளுக்கு, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமிக்கு அந்த சிமெண்டிலே சந்தேகம் இருக்குமானால், அரசு சிமெண்ட் அல்லது ராம்கோ சிமெண்ட் அல்லது இந்தியா சிமெண்ட உபயோகப்படுத்தும்படி—காண்டிராக்டர்களுக்கு— ஒப்பந்தக்காரர்களுக்கு உத்தரவிடுகிறேன் என்று சொல்லி, அந்த சிமெண்டுதான் இப்போது பயன்படுத்தப்படுகிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, எந்தவிதமான



தவறும் நடக்காமல் நிச்சயமாக கண்காணிக்கப்படும். அந்தப் பாலங்கள் கட்டுவதிலே மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே பயன்படுத்தக்கூடிய மணல், அருகிலே இருக்கிற ஓடையிலே இருந்து எடுக்கிறார்கள். அந்த மணல் எப்படி இருக்கிறது என்றால், முழுக்க முழுக்க கறுப்பாக இருக்கிறது. அது சிமெண்டோடு கலக்கிறபோது, வலு இருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து. அதேபோல், ஜல்லிகள் முழுக்க முழுக்க நல்ல கருங்கற்களிலேயிருந்து தயாரிக்கப்படாமல், வெள்ளைநிற ஓடை கற்களைப்போல் இருக்கும் கற்களிலேயிருந்து தயாரிக்கிற ஜல்லிகளாக இருக்கின்றன. எனவே, அதை இன்னும் கவனிக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தபடியாக, இராமநாதபுரத்திலே இருந்து தூத்துக்குடிக்குச் செல்லக்கூடிய கிழக்குக் கடற்கரைச் சாலை, முதலிலே, ஏற்கெனவே இருந்த திட்டப்படி, இராமநாதபுரத்திலே இருந்து குளத்தூர் வந்து, குளத்தூரிலிருந்து குறுக்கு சாலை வழியாக தூத்துக்குடி செல்வதற்குத் தான் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், சிறிய, பெரிய முதலாளிகளின் தலையீட்டின் காரணமாக, இப்போது அந்தச் சாலை, குறுக்கு சாலை வழியாக வராமல், வேறுசில கிராமங்கள் வழியாக, தூத்துக்குடி செல்வதாக அறிகிறேன். குறுக்கு சாலை என்பது, ஒட்டப்பிடாரம் தொகுதியைத் தொடக்கூடியது. ஒட்டப்பிடாரம் தொகுதி, வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த மண். தளபதி சுந்தரலிங்கம் வாழ்ந்த மண். வ.உ.சி. வாழ்ந்த மண். பாஞ்சாலங்குறிச்சியிலே வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு நினைவாலயம் இருக்கிறது; தளபதி சுந்தரலிங்கத்திற்கு நினைவாலயம் கட்ட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். வ.உ.சி. பிறந்த மண்; அதேபோல, சுப்பிரமணிய சிவா பிறந்த மண். எனவே, இப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தத் தல நாயகர்கள் பிறந்த அந்த மண் பகுதியை, கிழக்குக் கடற்கரைச் சாலை தொட்டுச் செல்வதைத்தான் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், குறுக்குச் சாலை வழியாகச் செல்லாமல், வேறு கிராமங்களுக்குச் செல்கிறபோது, அந்தச் சாலைகூட நல்லமுறையிலே இருக்குமா என்பதுகூட கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே, குளத்தூரிலிருந்து குறுக்குச்சாலை வழியாக, தூத்துக்குடி செல்வதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நெடுஞ்சாலைத் துறையில் பல்லாண்டுகளாகப் பணியாற்றிய எஞ்சினியர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பதவி உயர்வில் இட ஒதுக்கீடு இல்லாமல் இருக்கிறார்கள். பல துறைகளில், பதவி உயர்வில் இட ஒதுக்கீடு கொடுக்கிறபோது, இந்தத் துறையில் மட்டும் நானூறுக்கும் மேற்பட்டவர்கள் அந்த வாய்ப்பை இழந்து, ஏறக்குறைய 10, 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் de-promotion என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் குறிப்பாக மிக முக்கியமான ஒரு காரணம் என்னவென்றால், அந்த நானூறு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பொறியாளர்களுக்குப் பதவி உயர்விலே இட ஒதுக்கீடு கொடுக்கக்கூடாது என்று உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்த ஓர் எஞ்சினியர், அமைச்சருடைய உதவியாளராக இருந்துகொண்டு இடையூறு செய்கிறார் என்பதாக நான் கேள்விப்படுகிறேன். எனவே, அவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது, அவர்களுடைய பதவி உயர்விலும் இருப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோல, கோயம்புத்தூரிலே, ஆத்துப்பாலத்திலே L & T உதவியோடு பாலம் கட்டப்பட்டது. வழக்கமாக இட நெருக்கடியைப் போக்குவதற்கும், போக்குவரத்து நெரிசலைத் தவிப்பதற்கும்தான் பாலங்கள் கட்டப்படுகின்றன. ஏற்கெனவே இருக்கக்கூடிய பழைய பாலத்திற்கும் சேர்த்து, இப்பொழுது L & T வடிவமைப்பு செய்கிறது. அந்தப் பாலம் கட்டப்பட்டிருக்கக்கூடிய இடம் மதுரை மற்றும் தெற்கு மாவட்டங்களிலிருந்து கோயம்புத்தூருக்கு நுழையக்கூடிய பகுதியும், அதேபோல, கேரளாவிலிருந்து கோவைக்குச் செல்கின்ற இடம்—இரண்டும் இணையக்கூடிய பகுதி. இவர்கள் சுங்கம் வசூலிப்பதற்காக வாகனங்களை நிறுத்துகின்றபோது—எந்த நோக்கத்திற்காக அதாவது—போக்குவரத்து நெரிசல் இல்லாமல் கோயம்புத்தூருக்கு நுழைய வேண்டும் என்ற நோக்கத்தோடு கட்டப்பட்ட பாலம், சுங்க வசூலுக்காக நிறுத்தப்படுகின்ற காரணத்தாலே நூற்றுக்கணக்கான வாகனங்கள் நின்று சென்று, இப்பொழுது முன்பைக்காட்டிலும் அதிகமான போக்குவரத்து நெரிசல் உண்டாகியிருக்கிறது. எனவே, அந்த ஒப்பந்தத்திலேயே ஏற்கெனவே போடப்பட்டுள்ளபடி, அரசே அந்தப் பணத்தை, 10 கோடியோ, 7 கோடி ரூபாயோ, திருப்பிச் செலுத்திவிட்டு, சுங்கம் இல்லாமல், அந்தப் பாலத்தை



அரசுப் பாலமாக மாற்ற வேண்டுமென்று நான் வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். ஆக்கிரமிப்புகளை Highways துறை மூலமாக அகற்றுகின்றார்கள். அப்படி அகற்றுகின்றபோது, அதிலே பாரபட்சம் காட்டப்படுவதாக நான் அறிகிறேன். பெரிய நகரங்களில், சிறிய நகரங்களில், அகற்றுகின்றபோது, அரசியல் தலையீடுகளின் காரணமாக சில வசதிபடைத்தவர்களுடைய வீடுகளையோ அல்லது அவர்களுடைய சொத்துகளையோ அகற்றுவது கிடையாது. குறிப்பாக, நான் 15 நாட்களுக்கு முன்பு தேனி மாவட்டத்தில், சீலையம்பட்டிக்குச் சென்றிருந்தேன். 15 சலவைத் தொழிலாளர்கள் கட்டியிருந்த வீடுகள் இடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், வசதி படைத்தவர்களுடைய வீடுகள் அகற்றப்படவில்லை. எனவே, இப்படி பாரபட்சமான முறையிலே, தேசிய நெடுஞ்சாலைத் துறையிலே ஆக்கிரமிப்புகளை அகற்றுவதை நிறுத்திவிட்டு, ஒட்டுமொத்தமாக சட்டப்படி என்றால், நியாயப்படி என்றால், எல்லா ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட வேண்டும். இல்லையென்றால், ஏழையெளியவர்களுக்கு பார்த்து விதிவிலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. அன்பரசன்.

***திரு. சி. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில், எம்.ஜி.ஆர்.- அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இந்த ஆண்டை, பராமரிப்பு ஆண்டாக எடுத்துக்கொண்டு, சரிந்து கிடக்கின்ற சாலைகளையெல்லாம், செறிவு செய்து செப்பனிடுகின்ற பணியை மேற்கொண்டிருக்கின்ற, இந்தத் துறையையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஆண்டு, மாவட்ட இதர சாலைகள் என்ற பிரிவிலே, ஏறத்தாழ 40,000 கிலோமீட்டர் பழுதுபட்டும், சரி செய்யப்படாமலும் இருப்பதை கருத்திலேகொண்டு, பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருப்பதை நான் பாராட்டுகின்றேன்.

பொதுவாக, சாலைகள் என்பது பொருளாதாரத்தையும், சமூகக் கட்டமைப்பையும் மேம்படுத்தக்கூடியது என்பதை உணர்ந்து, இந்த அரசு

செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற வகையில், நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில் State Highways-ன் கீழ், புதுக்கோட்டை நகரத்திலேயிருந்து அறந்தாங்கிக்குச் செல்கின்ற நெடுஞ்சாலையை இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, கட்டுமாவடி என்ற ஊரிலேயிருந்து, அரசனேரி என்ற ஊர் வரையில், ஏறத்தாழ 37 கிலோமீட்டர் கடற்கரை ஓரத்திலே கடற்கரைச் சாலையாக இருக்கிறது. அது எப்படியிருக்கிறது என்பதை, கடந்த தேர்தல் நேரத்திலே, அமைச்சர் பெருமக்களே பார்த்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, துறையின் செயலாளர் அடிக்கடி கோட்டைப்பட்டணம் வருகின்றார். ஆகவே, அதை உணர்ந்து, அதைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியில், வெள்ளாற்றின் குறுக்கே வீரமங்கலம், நாகுடி என்று இரண்டு பகுதிகளிலே பாலங்களை அமைத்து இரண்டு தாலுகாகளையும் இணைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வில்லூரிணி என்ற ஆற்றின் குறுக்கே, அறந்தாங்கியிலிருந்து, பேராவூரணிக்குச் செல்கின்ற அந்தப் பாதையில் இராமசாமிபுரத்தில் ஒரு பாலத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-20

எங்கள் பகுதியில் எல்லா சாலைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய கலைஞர் அவர்கள் தமிழக அரசிற்கும், இந்தத் தொகுதியைச் சார்ந்த திருநாவுக்கரசிற்கும், வேட்பாளர் அன்பரசிற்கும் வெற்றியைத் தேடித் தர வேண்டுமென்று இலக்கிய நயத்தோடு கேட்டார்கள். மக்கள் வெற்றியைத் தேடித் தந்திருக்கின்றார்கள். பணத்திற்கு மயங்காமல், படாடோபத்திற்கு மயங்காமல், பகட்டிற்கு மயங்காமல், பகலிலே சுற்றி வந்தாலும், இரவிலே ஒலிவாங்கியைப் பயன்படுத்தி சுற்றிவந்தாலும், ஒலி வாங்கி ஓய்ந்ததற்குப் பின்னாலே, எங்கெங்கெல்லாம் போக முடியுமோ அங்கெல்லாம் போனாலும், பணத்திற்கு நாங்கள் மயங்கமாட்டோம், பகட்டிற்கு நாங்கள் மயங்கமாட்டோம், பணத்திற்கு மயங்காத நாங்கள், பாசத்திற்குத்தான் மயங்குவோம் என்று என் தொகுதி மக்கள் பாசத்திற்கு நன்றியைக் காட்டியிருக்கின்றார்கள். அதை உணர்ந்து எங்களுடைய தொகுதியில் அரசர்குளம் கிழக்கிலேயிருந்து மங்கலநாடு, பெரியலூரிலேயிருந்து வல்லவாரி, இடையன் காட்டிலேயிருந்து சணிக்காடு, கீழச்சேரியிலிருந்து கிடங்கிவயல், கலபத்திலேயிருந்து அதவத்தூர், ஏம்பல்,



புதுக்கோட்டை—ஏம்பல் சாலையிலேயிருந்து ஏனங்கால், மேற்பனைக்காடு தெற்கிலேயிருந்து வேம்பங்குடி இவை ஒரு சில சாலைகள்தான். இன்னமும், இதுபோல பழுது பார்க்க வேண்டிய சாலைகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் சரி செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இப்பொழுது, சில பேருக்கு சட்டமன்றத்திலே நீதித் துறை மீது நீங்காத பற்றும், பாசமும் வந்திருக்கிறது. அந்தவகையில், நான் அவர்களுடைய உணர்வைப் பாராட்டி, அந்த உணர்வு தொடர வேண்டும், நீதிமன்றத்தின் படிக்கட்டுகளைப் பயன்படுத்திக்கொண்டு, அதை நீளப்படுத்தி, தவணைகளை வாங்குகின்றவர்களுக்கு, அவர்கள் சரியான ஆலோசனையைச் சொல்லி, நீதிக்குத் தலை வணங்க வேண்டும் என்ற கருத்தை அவர்களுக்கு, நண்பர்களுக்குச் சொல்ல வேண்டும்.

'கொள்ளு' என்றால் வாயைத் திறப்பதும், 'கடிவாளம்' என்றால் வாயை மூடிக்கொள்வதும், தமிழ்நாட்டு அரசியலிலே இப்போது வெகு சாதாரணமாக மாறிவிட்டது. எல்லாவற்றிற்கும், எல்லாக் கட்சிகளும் தயாராக இருக்க வேண்டும். பாராட்டுவது மட்டும் கொள்கை என்று நினைக்கக் கூடாது. கூட்டணியை அமைத்துக் கொண்டதற்காக எதை வேண்டுமானாலும் பேசக்கூடாது. கூட்டணியில், ஏதோ நாங்கள்தான் கொள்கையோடு இருக்கின்றோம், டாக்டர் கலைஞர் அவர்கள் பாரதிய ஜனதாவோடு கூட்டு வைத்துவிட்டார்கள், அதனாலேதான் நாங்கள் விலகிச் சென்றுவிட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். நான் எண்ணிப் பார்க்கின்றேன். மம்தா பானர்ஜி அவர்கள் பாரதிய ஜனதா கட்சியிலே ஓர் அமைச்சர். சாதாரண அமைச்சர் அல்ல, ஒரு வலுவான அமைச்சர். அவரோடு, காங்கிரஸ் கட்சி கை கோர்த்துக்கொண்டு நிற்கின்றபோது, நம்முடைய மரியாதைக்குரிய மூப்பனார் அவர்கள், நீண்டகால நண்பரான கலைஞரோடு நிச்சயமாகக் கூட்டு சேர்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையோடு, தொடர்ந்து அவர்களும்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவருடைய நம்பிக்கையை அவர் சொல்கிறார். அவர் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. சி. அன்பரசன்:** ஏனென்றால், நான் சொல்வது மூப்பனாருடைய ஆசையை மறுக்க வேண்டும் என்றால் அவர்தான் மறுக்க வேண்டும் என்று கருதுகின்றேன். (குறுக்கீடு) மறுக்கமாட்டார் என்ற நம்பிக்கையும்

எனக்கு உண்டு. காரணம், அவர் ஒரு புனிதமான தலைவர், நல்ல தலைவர், நாணயமான தலைவர். அவர் நல்ல கருத்தையே, நல்ல முடிவையே எடுப்பார் என்ற நம்பிக்கையோடு வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொன்னதில் ஏதாவது தவறு இருக்கிறதா? அவருடைய நம்பிக்கையை அவர் தெரிவித்தார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்கிறபோது, நட்பு என்பது வேறு, கூட்டணி என்பது வேறு என்பதை மறந்து விட்டுப் பேசுகிறார்கள். பொதுவாக மதவாத கட்சியான B.J.P.-யோடு திராவிட முன்னேற்றக் கழகம் போன அதே கணத்தில், நாங்கள் அந்த இயக்கத்தில், கூட்டணியில் இருக்க முடியாது என்கிற ஒரு கொள்கையில்தான் நாங்கள் பிரிந்து நிற்கிறோமேயொழிய, அதற்காக ஏதோ நாங்கள் திருப்பிச் சேர்ந்து விட்டோம் என்று அவருடைய கருத்தையெல்லாம் இங்கே சொல்லி, மூப்பனார்தான் மறுக்க வேண்டுமென்று சொன்னார். இப்போதுகூட, B.J.P.-யினுடைய அந்தக் கூட்டணியை விட்டு விலகத் திராவிட முன்னேற்றக் கழகம் தயாரா என்று முதலில் நான் கேட்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-25*

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சியை மதவாதக் கட்சி என்று பேசுவது முறையல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** பாரதிய ஜனதா கட்சியில் அனைத்து சமயத்தைச் சார்ந்தவர்களும் இருக்கின்றார்கள். நாட்டில் எங்கு பிரச்சினை நடந்தாலும்கூட, ஜாதிமதத்திற்கு அப்பாற்பட்டு அனைவருக்காவும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றோம். அனைத்து மக்களும் B.J.P.-யை ஆதரிக்கின்றார்கள். மதவாத கட்சி என்று பேசப் பேச பாரதிய ஜனதா கட்சியினுடைய செல்வாக்கு வளர்ந்து கொண்டே போகின்றது. ஆக பொதுமக்கள் பாரதிய ஜனதா கட்சியை மதவாத கட்சி அல்ல என்று புரிந்து கொண்டு யார் மதவாதிகள் என்று சொல்கின்றார்களோ, அவர்களுடைய செயல்பாடுகள், அவர்களுடைய கட்சிகள் எப்படித் தோன்றின, இப்போது எங்கிருக்கின்றார்கள் என்பதை எல்லாம் புரிந்துகொண்டு பொதுமக்கள் B.J.P.-யை நன்றாகத் தெரிந்துகொண்டே ஆதரிக்கின்றார்கள்.



**திரு. கே. சுப்பராயன்:** இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த அரசியல் விவாதம் சம்பந்தப்பட்ட மானியத்தில் வருகின்றதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மானியத்தில் பாலம் வருகிறது. பாலம் வருவதால் அவர் பாலம் போட எண்ணினார். அவ்வளவுதான். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

*** திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கும் உங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாடு தொழிற் துறையிலே முன்னேற வேண்டுமென்று சொன்னால், அதற்கு அடிப்படை கட்டமைப்புகள் தேவை. அந்த அடிப்படைக் கட்டமைப்பிலே தொழிற் துறைக்கு மிகவும் இன்றியமையாதது. இந்த நாட்டில் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய, ஏற்றுமதியை வளர்க்கக்கூடிய அடிப்படையிலே அதற்கு மிகவும் பொருத்தமானது துறைமுகம்தான். எந்த நாட்டிலே போதுமான துறைமுக வளங்கள் இருக்கின்றனவோ, அந்த நாடுதான் பொருளாதாரத்தில் முன்னேற முடியும் என்பது என் கருத்து. அந்த வகையிலே நாகை துறைமுகம் கடந்த பல ஆண்டுகளாக இயங்காமல் இருந்து வந்த நிலையிலே கடந்த ஆண்டு Foods, Fats and Fertilisers Limited நிறுவனத்தில் அங்கே ஒரு சேமிப்புக் கிடங்கை ஆரம்பித்து, அதன்மூலம் இறக்குமதியை ஏற்படுத்தியுள்ளனர். அதன்மூலம் கடந்த காலத்தில் இயங்காமல் இருந்த துறைமுகம் லேசான வகையிலே இயங்கத் தொடங்கியது. அந்த வகையிலே மேலும் பல முன்னேற்றங்களைக் காணக்கூடிய வகையில் கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் திரு. ஸ்ரீதர் அவர்கள் நாகைக்கு வருகை தந்திருந்து, அங்கிருந்த Chamber of Commerce Member-களையும் மற்றும் தொழில் முனைவோர்களையும் அழைத்து, அவர்கள் எல்லாம் மீண்டும் அங்கே ஏற்றுமதியை, இறக்குமதியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலே அங்கேயுள்ள தொழில் முனைவோர்களும், அரசும் 75:25 சதவீதம் என்ற அடிப்படையிலே அங்கே ஒரு நிறுவனத்தைத் தொடங்குவது என்றும், அதுபோல J.S. Overseas நிறுவனமும் அதனுடைய இறக்குமதியையும், ஏற்றுமதியையும் தொடங்குவதற்கு அனுமதி வேண்டுகின்ற நிலையிலே மிகவும் ஆர்வமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தத் துணைத் தலைவருடைய அந்த முயற்சியை நான் வெகுவாகப் பாராட்டக்

கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவருடைய வேகம் ஏனோ யாருடைய தலையீட்டின் காரணமாகவோ அவருடைய வேகம் சற்றுக் குறைந்திருக்கின்றதோ என்று அஞ்சுகின்றேன். ஏனென்றால் அவர் அவ்வளவு ஆர்வமாக வந்து, அந்தத் தொழில் முனைவோர்களுக்கு எல்லாம் விருந்து படைத்து, அரசு சார்பாக, அந்தத் துறை சார்பாக விருந்து வைத்து, அதற்கான நிகழ்வுகளை மிகவும் சுறுசுறுப்பாக ஏற்படுத்தியவர்கள். பதவி நீக்கப்பட்ட சிலரின் தலையீட்டின் காரணமாகவோ அல்லது ஒற்றுமையின்மையின் காரணமாகவோ அந்த அனுமதி வழங்கக்கூடிய பணியில் சற்று தொய்வு ஏற்பட்டிருக்கின்றது. அந்தத் தொய்வு நாகப்பட்டினத்தினுடைய ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் அது பாதிக்கும். ஆகவே அந்தத் துணைத் தலைவருடைய முயற்சியை மென்மேலும் வளர்த்து, விரைவில் அந்த நிறுவனங்களுக்கெல்லாம் அனுமதி கொடுக்கவும், மேலும் சிலரும் இதுபோன்ற அனுமதி கேட்டிருக்கின்றார்கள், ஏற்கெனவே இருக்கின்ற Foods, Fats & Fertilisers Limited நிறுவனம் அதனுடைய பரப்பளவை விரிவுபடுத்தக் கேட்டிருக்கின்றது. அதையெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நாகை சேம்பர் குழுவினர் 4, 5 நாட்களுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சரை அவரது இல்லத்தில் சந்தித்து, கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் 7 ஆம் தேதிக்குப் பிறகு நிச்சயமாக இதற்கான நடவடிக்கை எடுப்போம் என்று கூறியுள்ளார்கள். அந்தக் கருத்தை இன்று இங்கே வலியுறுத்தி விரைவாக எத்தனை நிறுவனங்கள் கேட்டாலும், அத்தனை நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கி, அந்த நாகை துறைமுகம் முழுமையாகச் செயல்பட தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கின்ற நிலையிலே மண் தூர்ந்து இருப்பதனால் 350 டன்தான் கொண்டுவர முடிகின்றது. கடலூரிலே Dozer ஒன்று இயங்காமல் repair-ல் இருந்து கொண்டிருக்கிறது. அதை repair செய்து நாகைக்குக் கொண்டு வந்து ஆழப்படுத்தினால், மேலும் பல நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்க முடியும். அதேநேரத்தில் 450 டன்னை கரைக்குக் கொண்டுவர முடியும். ஆகவே அதுகுறித்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் கவனத்தில்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

M.R.L. நிறுவனம் நாகையை அடுத்த நாகூரிலே ஓர் Oil Jetty அமைப்பதாகவும், 0.5 million tonne-ல் இருந்து 9 million tonne-ஆக அதை



விரிவுபடுத்துவதற்காகவும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டோடு கூட்டணியில் இருந்த அமைச்சர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டம். அந்தப் பணி இரண்டு ஆண்டு காலமாக தொய்ந்து நிற்கின்றது. அந்தப் பணியை விரைவுபடுத்துவதற்கு மாநில அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகூர் வெட்டாறு பாலம் துறைமுகத்திற்கு ஓர் இணைப்புப் பாலமாக அமைந்து கொண்டிருக்கிறது. அதைக் கட்டுவதற்குப் பெருமளவிலே நிதி தேவைப்படுகிறது என்று கடந்த மத்திய ஆட்சிக் காலத்திலே நமது மாண்புமிகு முன்னாள் அமைச்சர் டி.ஆர். பாலு அவர்களோடு தொடர்பு கொண்டதிலே நான் O.N.G.C.மூலமாக ஒரு நிதியைத் தருகிறேன் என்று சொன்னார்கள். அதை நான் கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் சொல்லி, அவர்கள் ஒப்புதல் அளித்த அந்தக் கடிதத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது? அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டனவா? அந்தப் பாலத்தை எப்போது கட்டப்போகிறார்கள் என்று விவரக் குறிப்பு கொள்கை விவரக் குறிப்பிலே இல்லை. O.N.G.C. உதவி நம் தென்னகத்தைப் பொறுத்தவரை கிடைப்பதே இல்லை. கொஞ்சமாக--25 இலட்சம் என்ற நிலையில் நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். வட மாநிலங்களுக்கு வாரி வழங்குகின்றார்கள். 4 கோடி, 5 கோடி என்ற அளவிலே பெரிய அளவிலே பாலங்களைக் கட்டுகின்றார்கள். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் இருக்கின்ற காலத்திலே தரப்பட்ட ஒப்புதல் மீண்டும் நினைவூட்டுக் கடிதமாக விவரமாக கேட்கப்பட்டதா என்பதுதான் புரியவில்லை. ஏதோ நமக்கு ஒரு chance கிடைத்து தமிழ்நாட்டைச் சார்ந்த மத்திய அமைச்சர் உட்கார்ந்த நேரத்திலே ஓர் அனுமதி கடிதம் கிடைத்தது. அது குறித்து மீண்டும் விவரமான ஒரு கேட்புமனு அனுப்பி அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்ட வேண்டும். அப்பொழுதான் அந்தப் பகுதி முன்னேறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாகூர்-நாகை bye-pass road. 27 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. அது தீட்டப்பட்டு--மக்கள் கருத்து கேட்கப்பட்டு--கிட்டத்தட்ட நாகை பகுதியிலே 3 மக்கள் கருத்து கூட்டங்கள் போடப்பட்டன. ஆனால் இன்றுவரை அந்தப் பணி துவக்கப்படவும் இல்லை; அது என்ன ஆயிற்று என்று தெரியவும் இல்லை. அதைப்பற்றிய குறிப்பும் நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை. ஆகவே அதுகுறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு

அந்தத் திட்டத்தை உடனடியாகத் தொடங்கிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாகை தொகுதிக்கு வந்திருந்தபோது அக்கரைப்பேட்டை கடுவையாறு பாலத்தைக் காட்டினேன், ஒரு நாளைக்கு 1 கோடி ரூபாய்க்கு மேலே அங்கே வர்த்தகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கடலிலே உற்பத்தியாகும் மீனைப் பிடித்து அந்தக் கடுவையாற்றுப் பாலம் வழியாகக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசியம் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் அந்தத் திட்டம் என்னவாயிற்று என்று எந்தக் குறிப்பும் இதில் இல்லை. மிகவும் அவசியமான பாலம். வெட்டாறு பாலமும், கடுவையாறு பாலமும் நாகை மாவட்டப் பொருளாதாரத்திற்கு இன்றியமையாதவை ஆகும். கடுவையாறு பாலம் கட்டப்படுவதனால் இன்னொரு நன்மையும் உண்டு. துறைமுகத்தில் இருக்கக்கூடிய மீன்பிடி படகுகளை அந்தப் பக்கம் செலுத்தி அந்தப் பகுதியிலே நிறுத்துவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. துறைமுகத்தில் சிரமங்களும் குறையும். ஆகவே அதுகுறித்து கவனம் செலுத்த வேண்டும். இந்தத் திட்டங்களால் நாட்டுக்கும் வருமானமும் மக்களுக்கும் வேலைவாய்ப்பும் கிடைக்கும். ஆகவே இதை உடனடியாகக் கவனத்தில்கொண்டு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கிழக்குக் கடற்கரைச் சாலை கடலூரோடு நின்றிருக்கிறது. அதை மேலும் விரிவுபடுத்தும் நிலை என்னவாயிற்று என்பது புரியவில்லை. அதுகுறித்து இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அதேபோல கரூர்-நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலையை விரிவுபடுத்துவதாகக் கூறினார்கள். அந்தப் பணி இன்றும் தொடங்கப்படவில்லை. அதனை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியிலே முக்கியமான காரப்பிடாகை தெற்கு சடையன் கோட்டகம் பாலம் கீழையூர் பகுதியிலே கேட்டிருக்கின்றேன். ரொம்ப நாளாக அந்தப் பகுதி தீவு மாதிரி இருந்து கொண்டிருக்கிறது. மழைக் காலங்களிலே Collector எல்லாம் boat-லே சென்றுதான் அந்த மக்களைப் பார்க்க வேண்டிய நிலைமை. அது வேதாரண்யம் கால்வாயிலே கட்டப்பட வேண்டிய பாலம். காரப்பிடாகை தெற்கு சடையன்கோட்டகம் புதிய சக்கிலியன் வாய்க்காலில் ஆற்றுப்பாலம் ஒன்று கட்ட வேண்டும். அந்தப்



பகுதியும் தீவுபோல அமைந்திருக்கிறது. காரப்பிடாகை தெற்கு முதலியப்பன்கண்டி அரிச்சந்திர நதியில் ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டிருந்தேன். வேட்டைக்காரவிருப்பு அரிச்சந்திர நதியில் பாலம் கேட்டிருந்தேன். இவை எல்லாம் மிகவும் முக்கியமான பாலங்கள். இவை எல்லாவற்றையும் கட்டினால் மக்களுடைய போக்குவரத்துக்கு உதவும். அந்தக் கடற்கரை ஓரப்பகுதிகளான வேதாரண்யம், நாகப்பட்டினம், கீழையூர் ஒன்றியம் போன்ற பகுதிகளுக்கு easy-யாகச் செல்வதற்கும் வர்த்தக ரீதியாக அந்த மக்கள் நகர்வதற்கும் மிகவும் இலகுவாக இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால் இவை எல்லாவற்றையும் செய்து தாருங்கள் என்று கேட்டு, மேலும் பல சாலைகளை அங்கே ஊரக சாலைகள் திட்டத்தின்கீழ் செய்து தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

## 6. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 38—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறை

மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும் எனது நன்றியைத் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் சுவாமிமலையிலிருந்து திருவலஞ்சுழி செல்லும் சாலையில் காவிரி அரசலாறு பாலம் கட்டுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் பாலங்கள் கட்டுவதில் முழு கவனம் செலுத்துவதுபோல் சாலைகள் போடுவதிலும் முழு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

தமிழகத்தில் B.O.T. திட்டத்தின் மூலம் பல வேலைகளைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, மலேசியா போன்ற நாடுகள் முன்வருவதாகத் தெரிவித்துள்ளீர்கள். ஏன் உள்நாட்டில் யாரும் முன்வரவில்லையா? எந்தெந்தச் சாலைகளை, பாலங்களை B.O.T. திட்டத்தில் சேர்க்க உள்ளீர்கள் என்ற விவரம் இந்தக் கொள்கைக் குறிப்பிலே இல்லை என்பதையும் நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

தமிழகத்தில் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 623.24 கிலோமீட்டர் சாலைகளை மேம்படுத்த ரூபாய் 31.28 கோடி செலவில் எடுத்து வேலை செய்வதைப் பொறுத்தவரையில் எந்தெந்தச் சாலைகள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்றும், அதற்கு ஒதுக்கிய நிதி போதுமானதாக இல்லை; கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம், அணைக்கரைப்பட்டி முதல் கும்பகோணம்வரை செல்லும் சாலையில் புறவழிச்சாலை அமைக்க கொரநாட்டுக் கருப்பூர் ஊராட்சி, பெருமாண்டி ஊராட்சி, ஏழகரம் ஊராட்சி, பாவுராஜபுரம் ஊராட்சி, வலையப்பேட்டை ஊராட்சி ஆகிய ஊராட்சிகள் வழியாகத் தஞ்சை செல்லும் சாலையை இணைக்க சுமார் 10 ஆண்டுகளாகப் பணிகள் மேற்கொண்டு நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்து விட்டதாகக் கேள்விப்படுகின்றேன். அந்தச் சாலைப் பணி எப்போது தொடங்கி எப்போது முடிக்கப்படும் என்பதையும் பாலப்பணிகள் எப்போது முடிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



கும்பகோணம் - தஞ்சை செல்லும் சாலையில் உத்தாணி Railway gate-வரை உள்ள சாலை நல்ல நிலையில் உள்ளது; அதிலிருந்து பள்ளி அக்கிரஹாரம் வரை சாலை குண்டும் குழியுமாக உள்ளது. அந்த 25 கிலோமீட்டர் சாலையைச் சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, நீலித்த நல்லூரிலிருந்து பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் தொகுதி, மதனத்தூரை இணைக்கும் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று 1996 ஆம் ஆண்டு, பாபநாசம், திருவிடைமருதூர், குத்தாலம், ஜெயங்கொண்டம் ஆகிய தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் கடிதம் கொடுத்தோம். 1997 ஆம் ஆண்டு கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'அடுத்த ஆண்டு பார்ப்போம்' என்று சொன்னார்கள். அந்தப்பாலம் அமைவதன் மூலமாக, சென்னை செல்பவர்களுக்கு சுமார் 30 கிலோமீட்டர் தூரம் குறையும் என்றும், அதேநேரத்திலே அணைக்கரை பாலம் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது என்று பொறியாளர்கள் கூறியுள்ளதாலும் அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பாபனாசம் தொகுதியில் 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இருந்தபோது, துரும்பூர்-கீழமாஞ்சேரியை இணைக்கும் மண்ணியாற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் ராஜாங்கம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. 20 ஆண்டுகளாக அந்தப் பணிகள் தொடங்கவில்லை. 1996 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பல கடிதங்கள் கொடுக்கப்பட்டும், பலமுறை நேரிலே எடுத்துச் சொல்லியும் இன்னமும் அந்த வேலை எடுத்துக்கொள்ளப் பெறவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அந்தப் பால வேலை எடுத்துக்கொள்ளப் பெற வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம்-தஞ்சை செல்லும் சாலையில் பாபனாசத்தில் ஒரு புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்று 1996 ஆம் ஆண்டு, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருந்தேன். அடுத்த ஆண்டு பார்ப்போம் என்று

சொன்னார்கள். அந்தப் புறவழிச் சாலை அமைவதன் காரணமாக பாபனாசத்திற்குக் கிழக்கே உத்தாணி railway gate ஓரமாக, பாபனாசம் புதிய பேருந்து நிலையத்தின் ஓரமாக வங்காரம் பேட்டை மேற்கு பகுதியிலே சென்று அதை தஞ்சை செல்லும் சாலையிலே இணைத்தால், பாபனாசத்திலே இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், அதேநேரத்திலே அங்கேயுள்ள மக்களுக்கு அது நலமாக இருக்கும் என்பதையும் கருத்திலேகொண்டு அந்தப் புறவழிச் சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம்-திருவையாறு செல்லும் மாநிலச் சாலை, சுவாமிமலைவரை இரு வழிச்சாலையாக மாற்றப்பட்டிருக்கின்றது. அந்தச் சாலையின் அருகில் திருமன்றங்குடி திரு ஆரூரான் சர்க்கரை ஆலை அமைந்திருக்கின்றது. அந்தச் சாலையில் பல்வேறு வாகனங்கள் கரும்புகளை ஏற்றிச் செல்கின்ற காரணத்தினால் அந்தச் சாலை சீர்கேடான நிலையிலே இருக்கின்றது. அந்தச் சாலையை உடனடியாகச் சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கும்பகோணம்-திருவையாறு செல்கின்ற சாலையிலே அண்டக்குடியையும் சுந்தரம்மாள் கோவிலையும் இணைக்கும் காவிரி ஆறு, அரசலாற்றில் பாலம் கட்ட வேண்டுமென்று 3 ஆண்டுகளுக்கு முன்பே 4 கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்த வேலையைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

தஞ்சை-கும்பகோணம் செல்லும் சாலையில் வழுத்தூரிலிருந்து உள்ளிக்கடை செல்கிற வழியில் குடமுருட்டி காவிரியாற்றுக்குப் பாலம் கட்ட வேண்டுமென்று 1996 ஆம் ஆண்டு முதல் பல கோரிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 35 ஆண்டு காலமாக அந்தப் பகுதியிலே இருக்கிற நண்பர்கள் பல கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அந்த வேலைக்கு மதிப்பீடும் 4 கோடி ரூபாய்க்கு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த வேலையையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம் மணலூர்பேட்டை, தியாகதுருவகத்தை இணைக்கும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும்



தரைப்பாலப் பணி கடந்த 13 ஆண்டுகளாக முடிக்கப்படாமல் உள்ளது. அதை உடனடியாக முடித்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர்-ஆலந்தூர்-ஏலாகுறிச்சி சாலையைச் செப்பனிட்டுத்தரக் கோருகின்றேன். அரியலூர் தொகுதிக்கு உட்பட்ட ஆலந்துறையார் கட்டளை ஊராட்சியைச் சேர்ந்த புதுப்பாளையம், கீழக்காங்கேயனூர், மேலக்காங்கேயனூர் ஆகிய கிராமங்களுக்கு இதுவரை சாலை வசதி செய்து தரப்படவில்லை. ஆகவே, உடனடியாக சாலை வசதி செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், நெடுஞ்சாலைத் துறை அலுவலகத்தில் வேலை செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு இதுவரை 5 கோடி ரூபாய் பாக்கியுள்ளது. அதை உடனடியாகக் கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் தொகுதியில் பல சாலைகள் ஜல்லி சாலையாக, செம்மண் சாலையாக இருந்து முதற்கட்ட வேலைகளை முடித்து பல மாதங்கள் ஆகியும் இதுவரை தார் போடப்படாமல் சாலை சீரழிந்துபோய்விட்டது. உடனடியாக தார்ச்சாலை போட்டு அந்தச் சாலையைச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை குறித்த மானியக் கோரிக்கைளில் மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பல்வேறு கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். பல கோரிக்கைகளையும் இங்கே வைத்திருக்கின்றார்கள்.

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

என்று அய்யன் திருவள்ளுவர் குறிப்பிட்டிருப்பதற்கிணங்க தமிழகத்தில் பிணியின்மைக்காக வருமுன் காப்போம் திட்டம், செல்வ வளங்கொழிப்பதற்காக பல்வேறு நலத் திட்டங்கள், விளைச்சலை அதிகப்படுத்துவதற்காக வேளாண்மைத் துறையிலே திட்டம், அந்த விளைபொருட்களை விற்பதற்கான உழவர் சந்தைத் திட்டம், இன்பத்தை

நாட்டு மக்களுக்கு அளிப்பதற்கான பல்வேறு வகையான திட்டங்கள், இதுதவிர, இந்த நாட்டினுடைய பாதுகாப்பு என்ற அந்த வகையில் வள்ளுவர் வழிநின்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு அரசைக் கடந்த நான்கு ஆண்டுக் காலம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் நாம் எல்லோருமே மாண்புமிகு முதல்வருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் நெடுஞ்சாலைத் துறை என்பது முன்பு கடலிலே கரைத்த பெருங்காயத்தைப்போல கண்ணுக்குத் தெரியாமல் இருந்தது. இப்போது நெடுஞ்சாலைத் துறையைப் பற்றி ஆழமாக, அகலமாக, அழுத்தமாக பல்வேறு கருத்துகளைத் தெரிவிப்பதற்கான ஒரு வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கி, இதை ஒரு தனித் துறையாக்கி உங்களுக்கெல்லாம் இந்த வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். அதைப்போல எனக்கும் இந்த வாய்ப்பைத் தந்திருக்கிறார் என்ற வகையில் நானும் அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன். அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்று நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாலை மேம்பாடு நாட்டின் சமுதாயப் பொருளாதார மேம்பாடு. தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவதை உணர்ந்த நம்முடைய தமிழக அரசு சாலை மேம்பாட்டிற்காகப் பல்வேறு தொலைநோக்கு திட்டங்களைத் தீட்டி செயல்படுகிறது என்பதை நீங்கள் எல்லாம் அறியாதவர்கள் அல்ல. நான் ஒரு எடுத்துக்காட்டிற்காக சொல்வேன். தமிழகத்தில் அரசு பராமரிப்பில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 60,212 கிலோமீட்டர். இதில் 100 சதுர கிலோமீட்டருக்குள்ள சாலையினுடைய அடர்த்தி 177.572 கிலோமீட்டர். அகில இந்திய சராசரியான 66.3 கிலோமீட்டரைப்போல் இது இரண்டு மடங்குக்கு மேலும் அதிகமாகும்.

பிற்பகல் 12-45

தமிழ்நாட்டில் சாலைகளினுடைய அடர்த்தி அகில இந்திய சராசரியான 66.3 கிலோமீட்டரைப்போல இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வாய்ப்பை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.



இன்னொன்றைச் சொல்வேன். 1991-92 ஆம் ஆண்டு திட்டப் பணிகளுக்காக மட்டும் தமிழ்நாட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, அதாவது 1991-92-ல் 67.05 கோடி ரூபாய். 2000-2001 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை 809.19 கோடி ரூபாய். ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பதை, அதுவும் இந்தச் சாலைப் பணிகளுக்கு நெடுஞ்சாலைத் துறைக்கு எவ்வளவு அதிகமான நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். 1991-92 ஆம் ஆண்டோடு ஒப்பு நோக்கினால் 1,207 சதவீதம் இது அதிகமான நிதியாகும். 1995-96 ஆம் ஆண்டு திட்டப்பணிகளுக்கு ஒதுக்கீடு 153.16 கோடி ரூபாய். 1996-97 முதல் படிப்படியாக இந்த நிதி உயர்த்தப்பட்டு இப்போது 809.19 கோடி ரூபாயாக, கோபுரம்போல் உயர்ந்திருக்கிறது. துறையின் கொள்கை விளக்க குறிப்புப் புத்தகத்திலே இதை நான் ஒரு படமாகப் போட்டுக் காட்டியிருக்கிறேன். அதைப் பார்த்தாலே தெரியும், ஒவ்வோர் ஆண்டும் நெடுஞ்சாலைத் துறைக்கு எவ்வளவு நிதி தமிழக அரசின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். 1995-96 ஆம் ஆண்டைவிட 428 சதவீதம் அதிகமான நிதியொதுக்கீடு பெறப்பட்டிருக்கிறது.

நான் இதுவரை சொன்னது plan, அதாவது திட்டப் பணிகள். திட்டம் சாராப் பணிகளுக்கு (non-plan) 1991-92 ஆம் ஆண்டு ஒதுக்கீடு 93.62 கோடி ரூபாய். இப்போது 182.64 கோடி ரூபாயாக அது உயர்ந்திருக்கிறது. திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகளுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் மொத்தமாக 991.83 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கி சாதனை படைத்திருக்கிறோம் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1996-97 ஆம் ஆண்டில் திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகளுக்கு 403.33 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டைத் தொடங்கிய இந்த அரசு இப்போது 991.83 கோடிக்கு உயர்த்தியதன் பெருமை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்திலுள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட பெரிய சாலைகளை அகலப்படுத்திட சுமார் 1,800 கோடி ரூபாய் தேவைப்படுகிறது

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [2000 ஏப்ரல் 7

மத்திய அரசு 1998 மற்றும் 1999ஆம் ஆண்டுகளில் பெட்ரோல் மற்றும் டீசல்மீது விதித்த கூடுதல் தீர்வையை மத்திய சாலை நிதிக்கு மாற்றி, மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்திருக்கிறது. இதன் மூலம் தமிழகத்திற்கு ஏறத்தாழ 200 கோடி ரூபாய் நிதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிதியினைப் பயன்படுத்தி சாலைகளை பகுதி பகுதியாக அகலப்படுத்துகிற அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். கடந்த ஆண்டு சாலைகளின் தரத்தை இயந்திரங்களைக் கொண்டு மேம்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 100 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்தார்கள். அதைப் பயன்படுத்தி 1,771.44 கிலோ மீட்டர் சாலைப் பணி இப்போது நடைபெற்று வருகிறது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

தேசிய நெடுஞ்சாலைகளைப் பற்றி பல மாண்புமிகு உறுப்பினர்கள், இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைப் பணிகளுக்கு நிதியொதுக்கீட்டைப் பெறுவதில் நம்முடைய தமிழக அரசு முனைந்து செயல்பட்டிருக்கிறது. 1996 ஆம் ஆண்டுவரையில் தமிழ்நாட்டில் மொத்தம் 2,002 கிலோமீட்டர்தான் தேசிய நெடுஞ்சாலை இருந்தது. ஆனால், இப்போது 1996-97-ல் 600 கிலோமீட்டர் சாலையும், 1998-99-ல் 1,187 கிலோமீட்டர் சாலையும் தேசிய நெடுஞ்சாலையாக மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகளுக்கு மற்றும் பராமரிப்புக்கு, மத்திய அரசு ஒதுக்கிய தொகை வெறும் 24.04 கோடி ரூபாய். 1999-2000 ஆண்டில் மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை 201.34 கோடி ரூபாய். 24 கோடி எங்கே இருக்கிறது, 201 கோடி எங்கே இருக்கிறது. மத்திய அரசிடத்திலேயிருந்து இவ்வளவு தொகையைப் பெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை இந்த மாமன்றத்திலேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சி வித்தியாசம் இல்லாமல் பாராட்ட வேண்டாமா என்று நான் கேட்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதைப்போல வரும் ஆண்டில் இந்த நிதி ஏறத்தாழ 250 கோடி ரூபாய் வரை கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதுகுறித்து நான் மத்திய அரசிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

கடந்த ஆண்டு பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. 500 முதல் 1000 வரையிலான மக்கள் தொகையைக் கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் இல்லாமல் இருந்தன. அதிலே 340 கிராமங்களுக்கு முதல் கட்டமாக சாலை வசதி செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு 256 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.



2000 ஏப்ரல் 7] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

சென்னை மாநகரத்தைச் சுற்றி ஆரச் சாலைகள் அமைப்பதற்கு 212 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்தப் பணிகளும் இப்போது நடந்துகொண்டிருக்கின்றன. நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி சாலைகளை மேம்படுத்துவதற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்தப் பணிகளும் இப்போது விரைந்து செயல்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்ட அந்தத் திட்டங்கள் எல்லாம் மிக நேர்த்தியாக நடைபெறுகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முந்தைய மானியக் கோரிக்கையில் தெரிவித்தபடி, NABARD கடன் உதவியுடன், மாவட்ட பெரிய சாலைகள், இதர மாவட்டச் சாலைகள் மற்றும் கிராமச் சாலைகள் மேம்படுத்தும் திட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இதுவரை 8482 கிலோமீட்டர் சாலைப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன--மூன்றாண்டுகளில். வேண்டுமானால் நான்காண்டுகள் என்று வைத்துக்கொள்ளுங்கள். இதில் கிராம இணைப்புச் சாலைகள் மட்டும், 4192 கிலோமீட்டர். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைத் திட்டம், Minimum Needs Programme மூலமாகக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் வசதி அளிக்கும் திட்டம் ஒரு மகத்தான முன்னேற்றத்தை அடைந்து இப்போது பெருமையுடன் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகிறது.

ஆயிரத்துக்குமேல் மக்கள்தொகை உள்ள எல்லா கிராமங்களுக்கும் 31-3-1999 உடன் இணைப்புச் சாலை வசதி செய்து முடிக்கப்பட்டுவிட்டது. இப்போது 500 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி அளிக்கும் திட்டம் NABARD கடன் உதவியோடு, 1999-2000-ல் தொடங்கப்பட்டு, அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் 436 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதி பெற்றுவிடும். இதிலே ஆதிதிராவிட மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் 100 கிராமங்கள் பயன்பெறும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [2000 ஏப்ரல் 7

இதுவரை மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட 8,482 கிலோமீட்டர் சாலைப் பணிகளில், 6,415 கிலோமீட்டர்வரை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2,067 கிலோமீட்டர் சாலைகள் 31-12-2000-க்குள்ளாக முடிக்கப்பட்டுவிடும். இதனைத் தொடர்ந்து, கிராமச் சாலைகள், இணைப்புச் சாலைகளுக்காக ரூ.160 கோடிக்கான முன்மொழிவும், இதர மாவட்டச் சாலைகள், பாலங்கள் கட்டுவதற்காக ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கான முன்மொழிவும் NABARD-க்கு இந்த ஆண்டு அனுப்பப்பட இருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இவை முழுவதும், இந்த ஓராண்டுக் காலத்திற்குள், அதாவது 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அல்லது மே மாதத்திற்குள்ளாக இன்னும் நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் சாலைகளும், நூற்றுக்கணக்கான பாலங்களும் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதர மாவட்டச் சாலைகள் என்பது, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 40,814 கிலோமீட்டர் தூரத்திற்கு இருக்கிறது. இந்த 40,814 கிலோமீட்டர் சாலைகளும் கடந்த 18 ஆண்டுகாலமாக பராமரிக்கப்படாமல் விடப்பட்டிருந்தன. அதிலேயே பேருந்துகள் போய்க் கொண்டிருக்கின்றன. பெரும்பாலும் கிராமங்களை இணைக்கின்ற சாலைகள். அந்தச் சாலைகள் முழுவதுமாகப் பழுதுபட்டுப் போய்விட்டன. அவற்றை முழுமையாகச் செப்பனிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டார்கள். நாங்களும் கிராமப்புறத்தில் இருக்கின்றவர்கள்தான், எங்களுக்கும் அந்த நிலைமைகள் தெரியும். ஆகவே அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச்சொன்னோம். எங்களுடைய கணக்குப்படி ஏறத்தாழ 16,000 கிலோமீட்டர் உடனடியாகச் சரி செய்யப்பட வேண்டுமென்று சொன்னோம். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எவ்வளவு பணம் தேவைப்படும் என்று கேட்டார்கள். ஏறத்தாழ 750 கோடி ரூபாய் தேவைப்படும் என்று சொன்னோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள், சரி பணத்தைக் கொடுத்துவிடுகிறேன், நீங்கள் எவ்வளவு நாளில் செய்து முடிப்பீர்கள் என்று கேட்டார்கள். நெடுஞ்சாலைத் துறையைப் பற்றி யாரோ ஒரு பொறியாளர் கொடுத்த சில தகவல்களையெல்லாம் வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் இங்கே பேசினார்கள். நெடுஞ்சாலைத் துறையினுடைய சக்தி, அதிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள், அதிலே இருக்கக்கூடிய தளவாடங்கள், இன்னும் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஒப்பந்தக்காரர்களுடைய நிலைமைகள் இவற்றையெல்லாம் கணக்கிட்டுப்



2000 ஏப்ரல் 7] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

பார்த்தால், இந்த 16,000 கிலோமீட்டரைப் போட்டு முடிப்பதற்கு இரண்டாண்டு காலம் ஆகும். எனவே, 2001 ஆம் ஆண்டில்தான் முடிப்போம் என்று சொன்னேன். 2001 இல் முடிப்பதற்கு நான் இவ்வளவு பணம் தர வேண்டுமா என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுவிட்டு, டிசம்பர் 2000-க்குள் முடிக்கிறீர்களா என்று கேட்டார்கள். எங்களுடைய இயலாமையை நாங்கள் சொன்னோம். உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 400 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த 400 கோடி ரூபாயிலேதான் இதர மாவட்டச் சாலைகள் என்று சொல்லக்கூடிய O.D.R. என்ற அந்தச் சாலைகளை இப்போது எல்லா தொகுதிகளிலேயும் பரவலாகச் சீர்செய்யும் பணி நடக்கிறது. நான் கேள்வி நேரத்திலேகூடச் சொன்னேன். கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லா தொகுதிகளிலும் 40 கிலோமீட்டரிலிருந்து 50 கிலோமீட்டர் வரை அந்தந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய சாலைகளுடைய நீளத்திற்குத் தக்கவாறு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையும் நான் இங்கே தெரிவித்தேன். அந்தப் பணிகள் இப்போது தொடர்ந்து நடக்கின்றன, இன்னும் தொடர்ந்து நடக்கும்.

*பிற்பகல் 12-55*

கரும்புச் சாலைகளைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். மாண்புமிகு பழனிசாமி அவர்களும் கேட்டார்கள். தமிழ்நாட்டில் 1,366 கிலோமீட்டர் கரும்புச் சாலைகள் இருக்கின்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல இந்தச் சாலைகள் எல்லாம் கரும்பு cess நிதியிலிருந்து பராமரிக்கப்பட்டன. வேளாண்மைத் துறை அதைக் கண்காணித்து வந்தது. கரும்பு cess சரியாக வரவில்லை என்ற காரணத்தால் அந்தச் சாலைகள் பராமரிக்கப்படாமல் பாழடைந்து போய்விட்டன. அதைப்பற்றி கடந்த ஆட்சி கவலைப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இதை எடுத்துச் சொன்னபோது அவர்கள் ஏன் இதை நெடுஞ்சாலைத் துறையிலே எடுத்துச் செய்ய வேண்டியதுதானே என்று கேட்டார்கள். அதற்கான உத்தரவையும் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த 1,366 கிலோமீட்டர் கரும்புச் சாலையும் இப்போது நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்டு அதிலேயும் 623 கிலோமீட்டர் இந்த ஆண்டு மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தப் பணி இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, பாலங்கள். பாலங்களைப் பற்றித்தான் மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஏதேதோ பேசுகிறார்கள். நான் அவர்களுக்குச்

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [2000 ஏப்ரல் 7

சொல்வேன். 1957-லிருந்து 1997 வரை 40 ஆண்டுகாலம், பல ஆட்சிகள் இருந்திருக்கின்றன. எங்களுடைய கலைஞர் ஆட்சியும் இருந்தது. எம்.ஜி.ஆர். ஆட்சி இருந்தது; ஜெயலலிதா ஆட்சி இருந்தது; அதற்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்தது. தலைவர் காமராஜர் இருந்தார், பக்தவத்சலம் இருந்தார். 40 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் கட்டப்பட்ட பாலங்களுடைய மொத்த எண்ணிக்கை வெறும் 195. ஆனால் இந்த நான்காண்டு காலத்தில், நான் பெருமையோடு சொல்வேன். 393 பாலங்கள் இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே 325 பாலங்களை டிசம்பர் 2000-க்குள் கட்டி முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய துறைக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். எனக்கு இருக்கிற கவலை, நீங்கள் எது எதுவோ பேசுகிறீர்கள். இந்த 325 பாலங்களும் டிசம்பர் 2000-க்குள் கட்டி முடிக்கப்படுமானால், தமிழ்நாட்டுக்கு எவ்வளவு பெரிய பொலிவு கிடைக்கும் தெரியுமா? எவ்வளவு அழகு கிடைக்கும் தெரியுமா? எவ்வளவு அற்புதமான திட்டங்கள் என்று நாட்டுமக்கள் இப்போது பாராட்டுகிறார்களே, அதை ஏன் எதிர்க்கட்சியினர் மனமுவந்து பாராட்டக்கூடாது? கட்டிய வீட்டிற்கு ஆயிரம் குறைகளைச் சொல்லலாம், குறைகளைச் சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லை. குறைகளைச் சொல்லலாம். ஆனால் குற்றச்சாட்டுகளாகச் சொல்வதை என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது 121 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. மீதி பாலங்கள் விரைவிலே கட்டி முடிப்பதற்கான எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தேசிய நெடுஞ்சாலைத் துறையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை பாலம், வேலூர் மாவட்டத்தில் திருவலம் பாலாற்று பாலம், இவை இரண்டும் B.O.T. திட்டத்தில் கட்டுவதற்கு மத்திய அரசு—அவை தேசிய நெடுஞ்சாலை—அனுமதி அளித்திருக்கிறது. இதன் செயலாக்கத்திற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலை எண் 5, கல்கத்தா செல்லக்கூடிய அந்தச் சாலையில் பழுதடைந்த காரனோடை பாலத்தைச் சீரமைக்கின்ற பணி மே மாதத்தில் முடிவு அடையும். அது பழைய பாலத்தைச் சீரமைக்கின்ற பணி. அதையொட்டி இன்னொரு பாலமும் கட்டப்படுகிறது. அந்தப் பாலமும் விரைவிலே கட்டி முடிக்கப்படும். அந்தப் பணியும் இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 7] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

இங்கே நம்முடைய நிஜாமுதீன் அவர்கள் அக்கரைப்பேட்டை பாலத்தைப் பற்றிச் சொன்னார். நானும் அங்கே போய்ப் பார்த்தேன். அவரையும் அழைத்துக்கொண்டு போய்ப் பார்த்தேன். நம்மைவிட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அந்தப் பாலத்தைப்பற்றி மிகத் தெளிவாகத் தெரிகிறது. அவர்களுக்கு எப்படித் தகவல் வந்தது என்று தெரியாது. தன்னுடைய செயலாளரை அங்கே அனுப்பி அந்தப் பாலத்தைப் பார்த்துவிட்டு வரும்படி கூறியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அந்தப் பாலம் வருகிறது. எனவே, அந்தப் பாலம் மீனவர்களுக்கு பெரும் உதவியாக இருக்கக்கூடிய பாலம். அந்தப் பாலத்தை இந்த ஆண்டு கட்டி முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து 11 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன், சொல்லுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் கருவையாறு பாலம் 11 கோடியில் வழங்கியமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய கால்களாலேயே சுற்றி வந்த அவருடைய சொந்த ஊர், அந்தப் பகுதி என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அந்தப் பகுதியிலே பலதடவை தன்னுடைய கால்களாலே சுற்றி அலைந்தவர்கள். ஆகவே, அவருக்குத் தெரியாமல் இருப்பதற்கு நியாயமில்லை. நான் பிறப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே அந்தப் பகுதியை நன்கு அறிந்து வைத்து இருக்கக்கூடியவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** அதைப்போலவே இந்தப் பாலங்கள் கட்டுகிற பணிகளைப் பார்த்துவிட்டு மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் எங்கள் ஊருக்கு 4 பாலங்கள், 5 பாலங்கள், 6 பாலங்கள் என்று கேட்கும்போது இப்போது பாலப் பிரச்சினை பெரியதாகத்தான் இருக்கிறது. எல்லாப் பாலங்களையும் கட்ட வேண்டுமென்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆசை. ஆனால் அனைத்தையும் ஒரே நேரத்தில் செய்ய முடியவில்லை என்பதுதான் கவலையே தவிர வேறொன்றுமில்லை.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களும், உறுப்பினர் கே.சி. கணேசன் அவர்களும் நீண்ட நாட்களாக நீலத்தநல்லூர்-மதனத்தூர், அதாவது பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு பகுதிகளையும் இணைக்கின்ற வகையில்

பாலம் வேண்டுமென்று கேட்டார்கள். மதிப்பிற்குரிய கருப்பண்ண உடையார் அவர்களும் இதுகுறித்து இங்கே பேசினார்கள். ஏற்கெனவே கடிதமும் கொடுத்தார்கள். அதைப்போல, மறைந்த அண்ணன் அன்பில் அவர்கள் கிராமத்திற்கருகில் அன்பில் செங்கரையூர் கிராமத்தையும், தஞ்சை மாவட்டத்தில், திருவையாறு பகுதியில் இருக்கின்ற பூண்டி என்ற கிறித்துவ தேவாலயம் இருக்கிறதே அந்தக் கிராமத்தையும் இணைக்கின்ற வகையில் ஒரு பாலம் கட்டப்பட வேண்டுமென்று, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் நேரு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதைப்போல அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டார்கள். திருவையாறு சட்டமன்ற உறுப்பினரும் கேட்டுக்கொண்டார். அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களும் கேட்டுக்கொண்டார்கள். இந்த இரண்டு பாலங்களையும், நீலத்தநல்லூர், மதனத்தூர் ஆகிய இரண்டையும் இணைக்கின்ற பாலம், அதைப்போல அலமேலுபுரம் பூண்டி, அன்பில் செங்கரையூர் ஆகிய கிராமங்களை இணைக்கக்கூடிய இந்த பாலங்களுக்கான ஆய்வுப் பணிகள் இந்த ஆண்டே தொடங்கப்படவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது இந்த ஆண்டே தொடங்கப்படும்.

அடுத்து, சென்னை மாநகரத்தில் சைதாப்பேட்டை, தாடண்டர் நகர் அருகில் ஒரு கீழ்ப்பாலம், நடைபாதைப் பாலம் அமைக்க வேண்டுமென்று சைதை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சைதை கா. கிட்டு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணியும் இந்த ஆண்டே நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று. இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில், மாண்புமிகு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில், அ.இ.அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில்--எடுத்துக்காட்டுக்கு சொல்கிறேன்--மூன்று இரயில்வே மேம்பாலங்கள்தான் பெறப்பட்டன. நான் மிகுந்த பெருமையோடு சொல்வேன். இந்த 4 ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட 52 இரயில்வே மேம்பாலங்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெறப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 52 மேம்பாலங்கள் என்றால் சாதாரண காரியம் அல்ல. அதற்கு பாதித் தொகை இரயில்வே இலாகா தருகிறது. பாதித் தொகையை தமிழ்நாடு அரசு போட வேண்டும். அதற்குரிய நிதியாதாரத்தையும் இங்கே வைத்துக்கொண்டுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைப் பெறுகிறார்கள். கடந்த ஆண்டு 28 பாலங்கள். இந்த ஆண்டு இப்பொழுது 24 பாலங்கள். அன்றைக்கு நான் கேள்வி நேரத்திலே



கூடச் சொன்னேன். இது சாதாரண சாதனை அல்ல. எப்படி 393 பாலங்களை தமிழ்நாட்டிலே அமைக்கிறோமோ அதைப்போல 52 இரயில்வே மேம்பாலங்கள் அமைப்பதும் தமிழ்நாடு அரசினுடைய மகத்தான சாதனை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய மகத்தான சாதனை என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பாலங்கள். திருவாரூர் நகர் கீழ்ப்பாலம், முடிந்திருக்கிறது. விழுப்புரத்தில் கீழ்ப்பெரும்பாக்கம் கீழ்ப்பாலம், அந்தப் பணி முடிந்திருக்கிறது. அரக்கோணம் மேம்பாலம் முடிக்கப்பட்டிருக்கின்றது. சென்னை நகர், கிண்டி மேம்பாலம், அது முடிக்கப்பட்டிருக்கின்றது. சென்னை, இராயபுரம் மேம்பாலம், அதுவும் முடிக்கப்பட்டிருக்கிறது. திண்டிவனம் நகரில் செயலாக்கப்படும் மேம்பாலப் பணி இப்போது முடியும் தருவாயில் இருக்கிறது. ஜூன் மாதத்திலே அந்தப் பாலம் முடிவுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல சென்னை மாநகரில், குரோம்பேட்டை, M.I.T.Gate அருகில் இரயில்வே மேம்பாலப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. திருச்சி நகரத்தில் 4 இரயில்வே மேம்பாலங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்னொன்று. இதை அறிவிப்பாகக்கூட எடுத்துக்கொள்ளலாம். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். மதுரை நகரில் எல்லிஸ் நகர், தினத்தந்தி அலுவலகத்திற்கு அருகில் ஒரு பெரிய மேம்பாலம், பறக்கும் மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. இந்த ஆண்டு அந்தப் பணி தொடங்கப்படவிருக்கிறது. Tender கோரப்பட்டிருக்கிறது.

இது தவிர, தேசிய நெடுஞ்சாலை, பச்சகுப்பம், வாணியம்பாடி அருகில் இரண்டு மேம்பாலங்கள் கட்டுவதற்கு செயலாக்கப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது.

அதைப்போல, இரயில்வே மேம்பாலம், கீழ்ப்பாலம் கட்டுவதில் கடந்த 4 ஆண்டுகளில் கலைஞர் அரசு சாதனை படைத்திருக்கிறது என்பதற்காக இந்த விளக்கங்களையெல்லாம் சொன்னேன். 1991 முதல் 1996 வரை, கடந்த ஆட்சியில் 3 பாலங்கள்தான் பெற்றிருக்கிறார்கள் என்று ஏற்கெனவே சொன்னேன். இந்த ஆட்சியில் 52 பாலங்கள் பெறப்பட்டிருக்கின்றன.

அதைப்போல தேசிய நெடுஞ்சாலையில் -- மாண்புமிகு உறுப்பினர் மனோகரன் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்-- ஏராளமான பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, தேசிய நெடுஞ்சாலை மூலமாக. நம்முடைய தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை நிறைவேற்றுகிற பணிகள் வேறு, அது தவிர தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமம்-- National Highways Authority of India--என்ற ஒரு நிறுவனம், மத்திய சர்க்காருடைய தரைவழிப் போக்குவரத்துத் துறையிலே இருக்கிறது. அந்தத் துறையின் மூலமாக நம்முடைய தமிழ்நாட்டில் 800 கிலோமீட்டர் சாலைகளை பராமரிப்புக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப. தங்கவேலன் அவர்கள் தேசிய நெடுஞ்சாலை பராமரிப்பையெல்லாம் நம்முடைய தமிழ்நாடு அரசுதான் செய்ய வேண்டும், ஆணைக் குழுமத்திடத்திலே கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதுகுறித்து, மத்திய அரசிடத்திலே பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். அந்த முடிவு பின்னால் வரும்.

பிற்பகல் 1-05

இதற்கிடையில் தேசிய நெடுஞ்சாலை 45 மற்றும் 4 ஆகியவற்றை இணைக்கும் வகையில் 19 கிலோமீட்டரில் புறவழிச்சாலை, சென்னை bye-pass road பணி இப்போது மிக விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதைப்போல, பெருநகரங்களான, சென்னை, மும்பை, கல்கத்தா, டெல்லியை இணைக்கும் சாலைகளின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட தங்க நாற்கர திட்டத்தின்கீழ் மைய அரசு தமிழ்நாட்டில் 373 கிலோமீட்டர் நீளச்சாலைப் பகுதிகளை மேம்பாடு செய்ய திட்டமிட்டுள்ளது. இதன்படி சென்னை-சித்தூர் சாலை, இராணிப்பேட்டை வரை தேசிய நெடுஞ்சாலை 4, 113.3 கிலோமீட்டர். இராணிப்பேட்டை--கிருஷ்ணகிரி சாலை, தேசிய நெடுஞ்சாலை எண் 46, 146.70 கிலோமீட்டர். பெங்களூர்-சேலம், தேசிய நெடுஞ்சாலை எண் 7,61.0 கிலோமீட்டர் மற்றும் சென்னை--கல்கத்தா சாலை, தேசிய நெடுஞ்சாலை எண் 5,52.0 கிலோமீட்டர் ஆகியவை மேம்பாடு செய்யப்பட உள்ளன. அந்தப் பொறுப்பை தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணைக் குழுமம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

மைய அரசால் செயல்படுத்தப்படவுள்ள வடக்கு தெற்கு இணைப்புச் சாலையான காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிவரை இணைக்கும் அதிவிரைவு தேசிய நெடுஞ்சாலை அமைப்புப் பணிகளுள் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை 7, பெங்களூர்-சேலம் மதுரை பிரிவு 407.49 கிலோமீட்டர்



நீளச் சாலை மற்றும் மதுரை--கன்னியாகுமரி பிரிவு 231.60 கிலோமீட்டர் நீளச்சாலை இவற்றிலே அடங்கும். இத்திட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஓசூர்-கிருஷ்ணகிரி, தேசிய நெடுஞ்சாலை-ஐ நான்கு வழிப் பாதையாக மேம்படுத்த 33/0-- 48/6 கி.மீட்டர் வரை உள்ள அந்தப் பகுதிப் பணி தொடங்கப்பட்டுள்ளது.

தொப்பூர் மலைச்சாலை நான்கு வழிச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. சேலம் புறவழிச்சாலை 7 கிலோமீட்டர் நான்கு வழிப்பாதை அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. நாமக்கல் புறவழிச்சாலை 8.6 கிலோமீட்டர் நான்கு வழிப்பாதையாக அமைக்கும் பணிக்கு விவர திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. கரூர் புறவழிச்சாலையை 6 கிலோமீட்டர் நான்கு வழிப்பாதை அமைக்க விவர திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. சேலத்திலிருந்து தொப்பூர் வரை சாலையினை நான்கு வழிப்பாதையாக அமைக்கும் பணிக்கு விவர திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரியிலிருந்து இராணிப்பேட்டை வரையிலான சாலை, தேசிய நெடுஞ்சாலை 46-ஐ நான்கு வழிப்பாதையாக அமைக்க விவர திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

தேசிய நெடுஞ்சாலை 45-ல் அதிவாகன நெரிசலை கருத்தில்கொண்டு புக்கத்துறையிலிருந்து திண்டிவனம் வரையிலும் நான்கு வழிப்பாதையாக கிலோமீட்டர் 67/0 முதல் 122/0 வரை மேம்படுத்துவதற்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, கட்டுதல், பராமரித்தல் மற்றும் மாற்றுதல் (BOT) திட்டத்தின்கீழ் பணி தொடங்கப்படவுள்ளது.

திண்டிவனத்திலிருந்து திருச்சி வரை, தேசிய நெடுஞ்சாலை 45 மற்றும் திருச்சியிலிருந்து மதுரை வரை மேலூர் வழி தேசிய நெடுஞ்சாலை 45B சாலையினை நான்கு வழிப்பாதையாக அமைப்பதற்கு உலக வங்கியின் கடனுதவி பெற்று செயல்படுத்தத் திட்டமிட்டு, விவர திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவடையும் தருவாயில் இருக்கிறது. சாலைகள் மேம்பாடு மற்றும் பாலங்கள் கட்டும் பணிகளை திட்டப் பணிகளாக செயல்படுத்துவது மட்டுமல்லாமல், சாலைகளின் அன்றாடப் பராமரிப்பு பணிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ.182.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இயந்திரங்களைக்கொண்டு--using central mixing plant and paver finisher--தரமுடன் சாலை அமைக்கும் பணிகளுக்காக ஆண்டுதோறும் சிறப்பு நிதியாக ரூ.100 கோடி ஒதுக்கினார் என்று நான்

முன்பு குறிப்பிட்டுச் சொன்னேன். 1999-2000 ஆண்டுக்கு அந்த ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலே 1771 கிலோமீட்டர் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.120 கோடி ரூபாயை ஒதுக்குவதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, துறைமுகங்களைப் பற்றி நான் ஒருசில செய்திகளைச் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டை ஒட்டிய சுமார் 1000 கிலோமீட்டர் நீண்ட கடற்பகுதியில் சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு துறைமுகங்களும் கடலூர், நாகை ஆகிய இடைநிலை துறைமுகங்களும், காட்டுப்பள்ளி, திருச்சோபுரம், எண்ணூர் Py3, எண்ணெய்வயல், திருக்கடையூர், பாம்பன், இராமேஸ்வரம், வாலிநோக்கம், புன்னக்காயல், மணப்பாடு, கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய 12 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன. தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகிக்க தமிழ்நாடு கடல்சார் வாரியம் என்ற அமைப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டது.

பிற்பகல் 1-10

கடலூர் துறைமுகத்தைப் பொறுத்தவரையில், தலைமைச் செயலர் அவர்களுடைய தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு கடலூர் துறைமுகத்தை மேம்படுத்துவது குறித்து அளித்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் துறைமுகத்தை மேம்படுத்த உலகளாவிய அளவில் Global tender கேட்கப்பட்டது. ஆனால், எதிர்பார்த்த அளவிற்கு இதற்கு வரவேற்பு கிடைக்கவில்லை. இதனால் தமிழக அரசு TIDCO நிறுவனம் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இணைந்து ஒரு கூட்டு முயற்சியில் இத்துறைமுகத்தை மேம்படுத்திடும் திட்டம் ஆய்வில் உள்ளது. இதுவன்றி திருவாளர்கள் நாகார்ஜுனா எண்ணெய் கார்ப்பரேஷன் லிமிடெட் அவர்கள் திருச்சோபுரம் அருகில் நிறுவிடும் பென்னர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் சேலம் கடலூர் அகல இரயில்பாதைத் திட்டத்தால் கடலூர் துறைமுகத்தின் போக்குவரத்து அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாகை துறைமுகத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நாகப்பட்டினம் துறைமுகம் பல ஆண்டுகளாக பயனற்ற நிலையில் இருந்தது. தற்போது இத்துறைமுகம் தனியார் பயன்பாட்டுத் துறைமுகமாக Captive port என்று அறிவிக்கப்பட்டு foods, fats and fertilisers limited அவர்களால் நாகப்பட்டினம் துறைமுகத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி



செய்யப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு 30 ஆயிரம் மெட்ரிக் டன் சமையல் எண்ணெய் கையாள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, நாகப்பட்டினம் வணிகக் குழு ரூபாய் 2 கோடி முதலீட்டில் ஒரு தனி நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இந்நிறுவனம், தமிழக அரசு, தமிழ்நாடு கடல்சார் வாரியம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டி வருகிறது. இதன்மூலம் நாகப்பட்டினம் துறைமுகத்தின் போக்குவரத்து அதிகரித்திட முயற்சிகள் தீவிர பரிசீலனையில் இருக்கின்றன. அதில் ஒன்றும் தேக்கம் இல்லை. ஒரே ஒருகுறிப்பு நான் சொல்ல வேண்டும். இதிலே கடல்சார் வாரியமோ அல்லது தமிழக அரசோ கூட்டுச் சேர வேண்டுமா, வேண்டாமா என்பது கொள்கை முடிவு. அந்தக் கொள்கை முடிவு எடுத்தபிறகுதான் இதுபற்றி நான் எதுவும் திட்டவட்டமாகத் தெரிவிக்க முடியும். ஆனாலும் அந்தத் தனியார் முதலீடு வருவதை நாங்கள் வரவேற்கிறோம்; தமிழக அரசு வரவேற்கிறது; கடல்சார் வாரியம் வரவேற்கிறது.

அடுத்து, குளச்சல் துறைமுகத்தை சரக்குப் பெட்டகம் கையாளும் ஒரு துறைமுகமாக மாற்றிட அரசு முடிவு செய்திருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மலேசிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியதின் பேரில், குளச்சல் துறைமுகத்தின் மேம்பாட்டுத் திட்டத்தை மலேசிய அரசு B.O.O.T. திட்டத்தில் நிறைவேற்றிட சம்மதம் தெரிவித்தது. இதைத் தொடர்ந்து மலேசிய அரசின் சார்பில் ஆய்வுக் குழுவினர் தங்கள் ஆய்வுப் பணிகளை இப்போது மேற்கொண்டுள்ளனர். சென்ற செப்டம்பர் மாதம் தொடங்கிய ஆய்வுப் பணி வரும் மே மாதம் முடிவடையும். இதற்காக 4.6 கோடி ரூபாய் மலேசிய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்ட அறிக்கை அடிப்படையில் தொடர் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது. இதைத் தொடர்ந்து மேலும் சில அறிவிப்புகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசிடமுள்ள குறைந்த நிதி ஆதாரத்தைக் கொண்டு பெருகிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வது இயலாத ஒன்றாகும். நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட மாற்று வழிவகைகளை ஆய்வு செய்து பரிந்துரை செய்திட நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, தமிழ்நாடு சாலை நிதி ஒன்றினை நிறுவிட அறிக்கை அளித்துள்ளது. அரசு இதனைப் பரிசீலித்து ஆணைகள் வழங்கும். உத்தேசிக்கப்பட்டுள்ள சாலை நிதிகளை நிர்வகித்து மேலாண்மை செய்து பணிகளைச் செயலாக்கிட சுயஆட்சி கொண்ட தமிழ்நாடு சாலை நிதி வாரியம்--Tamil Nadu Road Fund Board--ஏற்படுத்தப்படும். இதற்கான சட்டமுன்வடிவு இந்த மன்றத்தின் ஒப்புதலுக்கு விரைவில் வைக்கப்படும்.

இந்த நிதியின் குறிக்கோள் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரத்தில் உள்ள இடைவெளியைக் குறுக்கி மேம்பாட்டுப் பணிகளை விரைவுபடுத்தவும், சாலை வளர்ச்சியில் மதிப்பீடு, நீண்ட காலத் திட்டங்களைத் தயாரிப்பது, ஒவ்வோர் ஆண்டும் அவற்றை நிறைவேற்றுவது, எந்தப் பணிகளை மேற்கொள்வது என்று முடிவெடுப்பது போன்ற இந்தப் பணிகளை இந்தச் சாலை மேம்பாட்டு நிதிக்குழு முடிவெடுக்கும்.

முந்தைய மானியக் கோரிக்கைகளில் அறிவித்தபடி தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் ஒன்றினை இயற்றிட நெடுஞ்சாலைத் துறையால் சட்டமுன்வடிவு அளிக்கப்பட்டுள்ளது. இந்த முன்வடிவு சட்டத்துறையின் கலந்தாய்வுடன் பரிசீலனையில் உள்ளது. இந்த நெடுஞ்சாலைத் துறை சட்டத்தின் முக்கிய குறிக்கோள் அரசால் பராமரிக்கப்படும் நெடுஞ்சாலைகளில், வளர்ச்சியினை மேம்படுத்துவது, சாலை இருமருங்கிலும் கட்டுப்பாடற்ற வகையில் ஏற்படும் வளர்ச்சிக்கும், ஆக்கிரமிப்பிற்கும் கட்டுப்பாடு மற்றும் தடை செய்ய வழிவகைகளை ஏற்படுத்தும். இதுவன்றி சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு உரிய வகையில் இந்தச் சட்டத்தில் சில வழிவகைகள் ஏற்படுத்தப்படும். தேசிய நெடுஞ்சாலைச் சட்டம் என்ற ஒன்று மத்திய அரசால் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தைப்போல நிலங்களைக் கையகப்படுத்துவதில் இருக்கக்கூடிய கஷ்டங்களைப் போக்குவதற்கு இந்தச் சட்டம் பயன்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பிற்பகல் 1-15

தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் ஆரச் சாலைகள்--radial roads-- மற்றும் இணைப்புச்சாலைகள் புதியதாக அமைத்தல், அகலப்படுத்துதல் மற்றும் மேம்பாடு செய்தல் மூலம் போக்குவரத்து நெரிசலை வெகுவாகக் குறைக்க இயலும். இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக சென்னையில் ஆரச் சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்பாடு செய்தல் பணி செயலாக்கப்பட்டு முடிவடையும் தருவாயில் இருக்கிறது.

அடுத்தகட்டமாக மதுரை மாநகரைச் சுற்றியுள்ள முக்கியமான ஆரச் சாலைகள் மேம்பாடு செய்தல் பணிக்காக திட்டம் வகுக்கப்பட்டு, அதற்கு ரூபாய் 25 இலட்சம் சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு, புலனாய்வு மேற்கொண்டு தேவையான வரைபடங்களும் மதிப்பீடும் தயார்செய்து செயலாக்க அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 138 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலை அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் வேலையும்



கிலோமீட்டர் நீளத்திற்கு சாலை உறுதிப்படுத்துதல் வேலையும், கிலோமீட்டர் நீளத்திற்கு புதிய சாலை அமைக்கும் பணியும் சயலாக்கப்பட உள்ளன. இச்சாலை வேலைகளுடன் செல்லூர்-கூடல்நகர் கிய இரண்டு இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக சாலை மம்பாலங்களும், சக்குடி-மணலூர் ஆகிய கிராமங்களை இணைக்கும் கையில் வைகை ஆற்றில் உயர்மட்டப் பாலமும் மற்றும் சிறு பாலங்களும் டங்கும். அதற்கு 200 கோடி ரூபாய் மதிப்பீடு ஆகும் என்று ணக்கிடப்பட்டு இருக்கிறது. இந்தப் பணி இவ்வாண்டு தொடங்கி டிப்படியாக நிறைவேற்றப்படும்.

கடந்த 10 ஆண்டுகளாக தேசிய அளவிலும் மாநில அளவிலும் சாலைகள் அமைப்பதில் உபயோகித்திடும் தாரின் தன்மையை அதிகரித்திட ஆய்வுகள் சய்யப்பட்டு வருகின்றன. இதனால் சாலைத் தளஆய்வு நீடித்து பராமரிப்புச் சலவு குறைந்திடும். புது டில்லியில் உள்ள மத்திய சாலை ஆராய்ச்சி றுவனமும் மற்றும் சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமும் .B.M. சூப்பர் என்ற ரப்பர் துகள்களை மாற்றாகச் சேர்த்து செய்த சாதனைகளில் ஓடுதள வயது 1.7 மடங்கு உயருவதாக அறியப்பட்டுள்ளது. ந்திய சாலை காங்கிரஸ் தனது தனித் தொகுப்பில் இவற்றினை சாலைத் ளங்களில் உபயோகித்திட வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. மத்திய ரை வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் இதனைப் பரிட்சார்த்த முறையில் உபயோகப்படுத்திட அறிவுறுத்தியுள்ளது. சென்னை எண்ணெய் த்திகரிப்பு ஆலை --M.R.L.-- இந்த மாற்றிய தார் கலவையை தயார் லையில் வழங்கிட உத்தேசித்துள்ளது. ரப்பராக்கப்பட்ட தார், தள ஆயுளைக் கூட்டிடுவதால், ஆண்டு பராமரிப்புச் செலவு குறையும். இது ரிட்சார்த்த முறையில் தமிழக சாலைப் பணிகளில் பயன்படுத்தப்படும். ஒரு கிலோமீட்டருக்கு 53 ஆயிரத்து 820 ரூபாய் அதிகரித்தாலும், இதனால் விளையும் பயன்கள் அதிகம் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

இன்னொன்று நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைப் பகுதிகளில் பணியாற்றக்கூடிய சாலை ஆய்வாளர்களுக்கு (Road Inspectors) மழை கோட்டும் பூட்ஸும் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்து இருக்கிறார்கள். அவை இந்த ஆண்டு முதல் அவர்களுக்கு வழங்கப்படும்.

ஏற்கெனவே சென்னை மற்றும் கடலூர் வரையில் கிழக்குக் கடற்கரைச் சாலை போட்டு முடிக்கப்பட்டு இருக்கிறது. இவ்வாறு மேம்படுத்தப்பட்ட சாலைப் பராமரிப்பு மற்றும் போக்குவரத்து வளர்ச்சிக்கு ஏற்ற மதிப்பீடுகள் வரும் ஆண்டில் செயல்படுத்தப்பட வேண்டும். இதனை அரசு நிதியிலிருந்து

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [2000 ஏப்ரல் 7

செயல்படுத்துவது இயலாத ஒன்றாகும். ஆதலால், TIDCO-வின் கூட்டு நிறுவனமான தமிழ்நாடு சாலை மேம்பாட்டு கம்பெனியால் பராமரித்து, மேம்படுத்தி ஒப்படைத்திட அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான விதிமுறைகள் செயல்பாட்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இது நடப்பு நிதி ஆண்டில் அமைக்கப்படும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தமிழ்மணி அவர்கள், அவர்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய சாலைகள், மணல் லாரிகள் போய் வருவதால் பாழடைந்துவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். அந்தச் சாலைகளையும் சேர்த்து இந்த நிறுவனம் பராமரிப்பதற்கு முன்வந்து இருக்கிறது என்ற அந்த நல்ல செய்தியை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போல கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கென அலுவலக வளாகம் கட்ட அரசாணை எண் 106, நெடுஞ்சாலைத் துறை, 6-4-1999 அன்று அறிவிக்கப்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையினுடைய பொன்விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டபோது இந்த வளாகம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். எனவே, அதற்கான எல்லா ஆய்வுப் பணிகளும் முடிவுற்று ஏறத்தாழ 35 கோடி ரூபாயில் 10 மாடிக் கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாலிநோக்கம் துறைமுகத்தைப் பற்றி ஒரு செய்தியை நான் தெரிவிக்க வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வாலிநோக்கத்தில் அமைய உள்ள சிறு துறைமுகம் கப்பல் உடைப்புப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்கு அமையப்பட்டுள்ள அமைதியான கடலும், சரிவான நிலப் பகுதியும் கப்பல் உடைப்புப் பணிக்கு மிகவும் உகந்ததாக உள்ளது. மேலும் இங்கு அமைந்துள்ள குறைவான கடல் ஆழத்தின் காரணமாக 3,000 டன்கள் எடையுள்ள கப்பல்கள் மட்டுமே உடைப்புப் பணிக்குக் கொண்டு வர ஏற்றதாக உள்ளது. இத்துறைமுகத்தின் அருகே தலா 5 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட 6 கப்பல் உடைக்கும் தளங்கள் TIDCO நிறுவனத்திற்குச் சொந்தமாக உள்ளது. இதுவரை இத்துறைமுகத்தில் 23 கப்பல்கள் உடைக்கப்பட்டுள்ளன.

*பிற்பகல் 1-20*



2000 ஏப்ரல் 7] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

இந்நிலையில் மும்பையைத் தலைமையிடமாகக் கொண்ட ஸ்ரீஜி ஜெம்ஸ் லிமிடெட் என்கிற நிறுவனம் வாலிநோக்கம் துறைமுகத்தில் கப்பல் உடைப்புப் பணிகளை மேம்படுத்துவதற்கு சுமார் 430 ஏக்கர் பரப்பளவு உள்ள தனியார் நிலங்களை வாங்கியுள்ளதாகத் தெரிவித்து மேற்படி நிலத்தில் சுமார் 50 கப்பல் உடைக்கும் தளங்கள் அமைக்க உள்ளனர்.

இத்திட்டத்திற்கான மதிப்பீடு சுமார் ரூ.175 கோடியாகும். வாலிநோக்கம் துறைமுகம் இராமநாதபுரம் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியில் உள்ளது. இப்பகுதி மக்கள் வேலைவாய்ப்பின்றி பொருளாதார நிலை மேம்பாடு அடையாத நிலை ஏற்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் செயலாக்கப்பட்டால் கப்பல் உடைக்கும் தொழிலன்றி அதனையொட்டிய சார்பு தொழில் முனைவோரும் தங்களது முதலீட்டை இப்பகுதியில் ஏற்படுத்திட பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன. இதனால் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 10,000 பேர் வேலை பெறக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு, இந்நிறுவனத்தின் செயற்குறிப்பு 31-7-1999 அன்று நடைபெற்ற கடல்சார் வாரியக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. அந்நிறுவனம் கேட்டுக்கொண்டதன் பேரில் வாலிநோக்கம் துறைமுகத்தில் கப்பல் உடைப்பு தொழிற்சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கான வாரியத்தின் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் பல்வேறு செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்றபிறகு வாலிநோக்கம் கப்பல் உடைக்கும் துறைமுகம் அங்கே செயல்படத் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை குடிமை சாசனத்தில் எங்களது பணிகளை கீழ்க்கண்டவாறு பிரகடனப்படுத்தியுள்ளோம்:

பொது நிதியில் இருந்து செய்யப்படும் முதலீட்டிற்கு முழுப் பயனும் அமைந்திடும் வகையில், வளர்ந்துவரும் விஞ்ஞான தொழில் நுட்ப அடிப்படையில் சாலைகள் மற்றும் பாலங்களைத் திட்டமிட்டு செயலாக்கிட உயர்ந்த தரத்தை அமலாக்கிட எங்களை அர்ப்பணிக்கிறோம். கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி அளித்து, ஊரக மற்றும் மாநிலப் பொருளாதார மேம்பாட்டிற்கு நாங்கள் பொறுப்பேற்றிருக்கிறோம்.

துறையின் பொறுப்பிலுள்ள சொத்துக்களை பாதுகாத்தும், ஒப்புதலற்ற ஆக்கிரமிப்பிற்கு எதிராக விழிப்புடனிருந்து பொது மக்களுக்கு இடையூறில்லாமல் காத்திட உறுதியளிக்கிறோம்.

நெடுஞ்சாலைத் துறை குடும்பத்தினர் ஒற்றுமையுடனும், உண்மையுடனும், கொண்ட நோக்கத்தினை அடைந்திட மாநில மக்களுக்குச் சேவை செய்து பணியாற்றிடுவோம்.

தமிழக சாலைகளின் தரம் அகில இந்திய அளவில் போற்றிடும் வகையில் அமைந்திட நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் மேலே குறிப்பிட்டுள்ள சாசனத்தின்படி உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் அயராது பாடுபட்டு வருகிறார்கள்.

கடைசியாக ஒரே ஒரு செய்தி. மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் இங்கே வேகமாகப் பேசினார்கள். 'நான் சொல்கின்ற குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். நிரூபிக்க முடியவில்லையென்றால் வெளியிலே போகிறபோது ராஜினாமா செய்துவிட்டு நான் வீட்டிற்குப் போகிறேன்' என்று சொன்னார். அவரைவிட வயதிலே நான் மூத்தவன் என்று கருதுகிறேன். கடந்த 40 ஆண்டு காலமாக பொது வாழ்க்கையிலே என்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறேன். பல்வேறு பொறுப்புகளிலே நான் இருந்திருக்கிறேன். ஏறத்தாழ 17 ஆண்டுகாலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். 6 ஆண்டு காலம் ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராக இருந்திருக்கிறேன். இப்போது சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களால் ஆக்கப்பட்டிருக்கிறேன். எனக்கு இருக்கிற ஒரேயொரு தகுதி-- குடும்பத் தகுதி அல்ல, பொருளாதாரத் தகுதி அல்ல, குலப்பெருமை அல்ல, எனக்கு இருக்கிற ஒரேயொரு தகுதி-- நாணயம்தான், (மேசையைத் தட்டும் ஒலி) தலைவரிடத்திலே உள்ள நம்பிக்கைதான். இதைத் தவிர எனக்கு வேறு முதலீடு கிடையாது.

மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர் குறிப்பிடுகிற ஒரு உதவிப் பொறியாளர், ஒரு Association-னுடைய பொதுச் செயலாளர். அவருக்குச் சில காரியங்கள் நடக்கவில்லை என்பதற்காக சில குற்றச்சாட்டுகளை திட்டமிட்டு. வேண்டுமென்றே தயாரித்து அவர்களிடத்திலே கொடுக்கிறபோது, அதை ஆழ்ந்து பரிசீலித்து அவர் பேசியிருக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்கிறேன், அவர் ஆதாரத்தோடு தந்திருக்கிறார் என்று சொன்னார். அவர் ஒரு A.E. அவரை விட D.E.-க்கள் இருக்கிறார்கள். A.D.E.-க்கள் இருக்கிறார்கள். S.E-க்கள் இருக்கிறார்கள். Chief Engineer-கள் இருக்கிறார்கள். இந்த A.E.-யின் தரத்தைவிட Chief Engineer, Superintending Engineer, Divisional Engineer,



Assistant Divisional Engineer இவர்களுடைய தரம் எல்லாம் குறைந்ததா? அவர்களெல்லாம் திறமையற்றவர்களா? ஆகவே வேண்டுமென்றே திட்டமிட்டு, எதையாவது சொல்வதற்காக, தயவு செய்து சொல்ல வேண்டாம். நடக்கின்றப் பணியைப் பாராட்டவில்லையென்றாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் சொன்னதைப்போல நான் ஒரு புத்தகமே வெளியிட்டுக்கொடுத்து இருக்கிறேன்-- நம்முடைய மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளித்து அதைப் புத்தகமாக வெளியிட்டு தந்திருக்கிறேன். படித்துப் பார்த்திருப்பீர்கள். அதற்கு ஒரு rejoinder, அந்த A.E., Association-டைய பொறுப்பாளர் கொடுத்திருக்கின்றார். அவருக்கு சில காரியங்கள் நடக்கவில்லை, அவர் விரும்பிய காரியங்கள் நடக்கவில்லை என்பதற்காக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் இந்த அரசின் மீது அல்லது என் மீது, இந்தத் துறையின்மீது நீங்கள் குற்றச்சாட்டை, அதனை ஆதாரமாக வைத்துக்கொண்டு சொல்லக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் நான் மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே அவர் Affidavit-ல் கையெழுத்துப் போடக் கூட தயாராக இருக்கிறார் என்று சொன்னார். அவர் போட்டாலும் சரி, நீங்கள் போட்டாலும் சரி தாராளமாக இந்தச் சபையில் பேசுவதைவிட—உங்களுக்கு மிகச் சுருக்கமாக நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வெளியில் அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை தயார் செய்து நீங்கள் நீதிமன்றத்தில் என்மீது வழக்குப்போடுங்கள், என்மீதே போடுங்கள். அப்படிப்பட்ட அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் நானே மறுநிமிடமே இந்தப் பதவியிலே இருந்து விலகிக்கொள்வேன். அதுமட்டுமல்ல, எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை ஒரு நிமிடம்கூட அப்படி தவறு செய்தால் இந்தப் பொறுப்பிலே வைத்திருக்க மாட்டார்கள். அவர் பிள்ளையானாலும்கூட அந்த தண்டனையை வழங்குவதற்கு அவர்கள் தயங்கமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அவருடைய பிள்ளையைப் போலதான். ஆகவே அவருடைய தண்டனையை ஏற்றுக்கொள்வேன்.

இன்னொன்றை நான் சொல்லி முடிக்க விரும்புகிறேன். நான் தொடக்கத்திலே இது குறள் வழி வந்த அரசு என்று சொன்னேன். வள்ளுவர்

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [2000 ஏப்ரல் 7

தந்த வாக்குப்படி நடக்கின்ற அரசு என்று சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சரைப் பொறுத்த வரையில்

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமை. எனவே, யாராக இருந்தாலும் குற்றம் செய்தால் அவர்களைத் தண்டிக்கின்ற ஒரு முதலமைச்சர்தான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் எடுத்துச்சொல்லி அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள், உண்மையான குற்றச்சாட்டுகள் இருக்குமானால் தாராளமாக முதலமைச்சரிடத்திலேயும் கொடுங்கள் அல்லது தேவைப்பட்டால் நீதிமன்றத்திற்கும் போங்கள். நீதிமன்றத்திலே அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டாலும், எங்களுடைய நீதிமானிடத்திலே அந்தத் தீர்ப்பு எனக்குக் கிடைத்தாலும், அதைத் தலைவணங்கி ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு, பெருமையோடு, உறுதியோடு நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே வெட்டுத் தீர்மானங்கள் நிரம்பக் கொடுத்திருக்கிறீர்கள், ஏறத்தாழ 329 வெட்டுத் தீர்மானங்கள். அவற்றிலே பல முக்கியமான தீர்மானங்களும் இருக்கின்றன. அந்தத் தீர்மானங்களையெல்லாம் நான் முழுமையாகப் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்க்காமல் நான் பேசுகிறேன் என்று யாரும் தயவுசெய்து கருத வேண்டாம். அவை எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள்தான், வேண்டுகோள்கள்தான். ஆனால் இப்போது இருக்கக்கூடிய நிதிநிலைமையில் இந்த அளவிற்குமேல் எந்த அரசும் செய்ய முடியாது. இன்னும் நான் சொல்வேன், தலைவர் காமராஜர் அவர்களே உயிரோடு வந்து முதலமைச்சராக இருந்தாலும் இவ்வளவு காரியங்களைச் செய்ய முடியாது. காமராஜர் ஆட்சி என்று சொல்கிறீர்களே, அவரே இப்போது உயிரோடு வந்து முதலமைச்சர் பொறுப்பை ஏற்றாலும்கூட இவ்வளவு திட்டங்களை யாராலும், எந்த முதலமைச்சராலும் சாதிக்க முடியாது. எந்த அரசும் சாதிக்க முடியாது. அப்படிப்பட்ட சாதனைகளைப் படைத்திருக்கிறோம். எனவே இந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் பரிசீலித்து, அவற்றைக் காலப்போக்கில் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு நான் நன்றி தெரிவித்து வெட்டுத் தீர்மானங்களை எல்லாம்



2000 ஏப்ரல் 7] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

அன்புகூர்ந்து நீங்கள் திரும்பப்பெற்றுக்கொண்டு கோரிய மானியத் தொகையை அனுமதித்து அரசுக்கு வழங்குவதற்கு நீங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 38 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38-- சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.



**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.



"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.336,36,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.



**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.466,49,36,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 10-4-2000, திங்கட்கிழமை, காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

53. மானியக் கோரிக்கை எண் 38–சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து மற்றும் மானியக் கோரிக்கை எண் 56–சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001.(தமிழ், ஆங்கிலம்)

54. நெடுஞ்சாலைத் துறை பற்றிய நிதி நிலை செயலாக்கச் சாதனைகள், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

55. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்தெட்டாவது அறிக்கை, 1999-2000.

56. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்தொன்பதாவது அறிக்கை, 1999-2000.

57. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பதாவது அறிக்கை, 1999-2000.

58. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்தொன்றாவது அறிக்கை, 1999-2000.

59. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்திரண்டாவது அறிக்கை, 1999-2000.

60. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

61. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

## இணைப்பு

[472 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### கோரிக்கை எண் 38—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

### மற்றும்

### கோரிக்கை எண் 56—சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த் மூலதனச் செலவு

### [கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001]

**தொடக்க உரை**

தமிழகத்தில் நமது பேரன்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையிலான அரசு, மாநிலத்தில் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை அடையும்வண்ணம் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்குத் தேவையான முன்னுரிமை அளித்து வருகிறது. கடந்த ஆண்டுகளில் தொலைத் தொடர்பு, மின்சாரம், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு உள்ளடங்கிய நகர் உள்கட்டமைப்பு, துறைமுகம் மற்றும் சாலைக் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு குறிப்பிடத்தக்க அளவு முதலீடு செய்யப்பட்டது போலவே, நடப்பு ஆண்டிலும் ரூபாய் 8000 கோடி அளவிற்கு முதலீடு செய்யப்பட உள்ளது. அதிலும் குறிப்பாக, சாலை உள்கட்டமைப்பிற்கான மொத்த முதலீடு ரூ. 1685 கோடி ஆகும். இதில் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட திட்ட முதலீடு ரூ.809.19 கோடியாகும். பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இதர துறைகளான, விவசாயம், தொழில், சுரங்கத் தொழில், எரிசக்தி, வனம் மற்றும் பால்வளத் துறை ஆகியவை சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பையும் மற்றும் திறமையான போக்குவரத்தையும் சார்ந்துள்ளன. இவற்றைக் கண்ணுறும்போது, தமிழகம் விரிவான சாலைக் கட்டமைப்பு வளர்ச்சிக்கு கணிசமான முதலீடு செய்துள்ளதோடு, தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்ட பெரிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் என்ற வகையில் 60212 கி.மீ. நீளம் உடைய சாலைகளை சாலைக் கட்டமைப்புக்கு தனது பங்காக அளித்து சாதனை புரிந்துள்ளது.

நெடுஞ்சாலை துறை அதன் நெடுஞ்சாலைப் பணிகளில் இடைவிடாது பணியாற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்ற குறிக்கோளோடு, குறிப்பாகவும் தனித்தன்மையோடும் உருவாக்கப்பட்டு கடந்த 54 ஆண்டுகளுக்கும் மேலாக



தனது பணிகளில் ஒப்பற்ற அனுபவத்தைப் பெற்றுள்ளதால், பெருமளவு சாலை மற்றும் பாலப்பணிகளில் உயர்தரமான பணிகளை ஆற்றியுள்ளது. இச்சாலைக் கட்டமைப்பானது, பொருளாதார வளர்ச்சி, சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் தேச ஒருமைப்பாட்டினைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் முக்கிய பங்காற்றுகிறது. ஏற்கெனவே அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்தி, பராமரித்துப் பாதுகாப்பதோடு, உள்ளடங்கிய கிராமங்களுக்கு சாலை வசதி செய்து தருவதிலும் நெடுஞ்சாலைத் துறை முனைந்துள்ளது. 1000-க்கும் மேல் மக்கட்தொகை கொண்ட அனைத்து கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை வசதிகள் செய்து தருவதான குறியீட்டினை நெடுஞ்சாலைத் துறையானது 31-03-1999-லேயே எய்திவிட்டதோடு, தற்போது 1000-க்கும் குறைவாக மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை வசதிகள் செய்து தருவதற்குத் தொய்வின்றிப் பணியாற்றி வருகின்றது.

விரிவடைந்து வரும் சாலைக் கட்டமைப்பினை வளர்ந்து வரும் போக்குவரத்துச் செறிவுக்கு ஒத்திசையும்வண்ணம் அச்சாலைகளை உறுதிப்படுத்தி, அகலப்படுத்தி, காலமுறை பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது. சாலை உபயோகிப்போரின் கோரிக்கையை நிறைவேற்ற வரவு-செலவுத் திட்டத்திலிருந்து போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்வது பற்றாக்குறையாகிறது. இந்நிலையை எதிர்கொள்ள வெளி முகமைகளான உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (HUDCO) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) மூலமாக பங்கு பத்திரங்கள் (Bonds) வெளியிடுவதன் மூலம், பொதுமக்களிடமிருந்து கடன் பெறுதல் ஆகியவற்றின் மூலம் நிதி ஆதாரங்களைத் திரட்டி இச்சாலைகளில் நல்ல ஓடுதளம் அமைக்க புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சாலைகளை மேம்படுத்த தனியார் துறையினர் ஈடுபாடும் ஊக்குவிக்கப்படுகிறது. எல் அண்டு டி (L & T), ஐசிஐசிஐ (ICICI), ஐ.எல். அண்டு எஃப்.எஸ். (IL & FS), ஆஸ்திரேலியாவில் உள்ள திருவாளர்கள் கின்ஹில் எஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Kinhill Engineers Private Ltd), அமெரிக்காவிலுள்ள திருவாளர்கள் பூஸ் ஆலென் அண்டு ஹேமில்டன் (M/s. Booz Allen & Hamilton), மலேசியாவிலுள்ள திருவாளர்கள் தயா (M/s. Daya), கனடாவிலுள்ள திருவாளர்கள் லீ இன்டர்நேஷனல் (M/s. Lee International) ஆகிய தனியார் நிறுவனங்கள், சாலை உள்கட்டமைப்புத் துறையில் கட்டுதல்-இயக்குதல்-மாற்றுதல்

(B.O.T.)/கட்டுதல்-உடைமையாக்குதல்—இயக்குதல்-மாற்றுதல் (B.O.O.T.) அடிப்படையில் திட்டங்களை மேற்கொள்ள முன்வந்துள்ளன. சந்தை நிலவரங்களின் வழிகாட்டுதல்களால் முதலீட்டாளர்களால் எடுக்கப்படும் முதலீட்டு முடிவுகளால், தற்சமயம் தனியார் துறை ஈடுபாடு ஓரளவே உள்ளது. முட்டுக்கட்டைகளை அகற்றி, தனியார் தொழில் முனைவோரின் அதிகபட்ச ஈடுபாட்டினை உறுதி செய்ய நெடுஞ்சாலைத் துறை தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது.

இதைத் தவிர மற்றொரு பக்கம், சாலைப் பணிகளில் உயர்ந்த தரத்தை உறுதி செய்யவும், காலதாமதம் மற்றும் விலை மாறுபாடுகளை தவிர்த்து, பெருமளவிலான பணிகளை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க ஏதுவாகவும், சாலைக் கட்டுமானத்தை இயந்திரமயமாக்க நவீன இயந்திரங்கள் திரட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. இக்குறிக்கோளை எய்த, ஒப்பந்தக்காரர்கள் நவீன இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்திக் கொள்வதற்கு வழிகோலும் வகையில் இயந்திரங்களைத் திரட்டுதல் (Equipment Pool) என்ற திட்டம் செயலாக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

ஆண்டுக்காண்டு சாலைக் கட்டமைப்பின் செறிவு (intensity) கூடிக்கொண்டே செல்கிறது. நிதிப் பற்றாக்குறையின் காரணமாகவும், போதுமான நிதி ஒதுக்கப்படாத காரணத்தாலும், சாலைகள் பராமரிப்பில், பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. எனவே நடப்பு ஆண்டினை (2000-2001) பராமரிப்பு ஆண்டு என்று அறிவிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு, தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட பெரிய சாலைகளை நல்ல தரத்துடன் பராமரித்து வந்தாலும், மாவட்ட இதர சாலைகளின் பராமரிப்பு பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், மாவட்ட இதர சாலைகளில், தெரிந்தெடுக்கப்பட்ட மோசமான சாலைப் பகுதிகளின் பெரும்பான்மையான பகுதிகள் மேம்படுத்தப்பட்டு, தரமுயர்த்தப்பட்டு, பராமரிக்கப்படும்.

பொதுமக்களும் நமது நாடும் அனைத்து பரிமாணங்களிலும் வளமையையும், மேம்பாட்டையும் நோக்கி முன்னேற்ற நடைபோட ஏதுவாக சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டமைப்பினை பராமரிக்க நெடுஞ்சாலைத் துறை எப்பொழுதும் எல்லா வழிகளிலும் முயற்சிகளை முயன்று கொண்டேயிருக்கும்.

துறைமுகத் துறையைப் பொறுத்தவரையில், கடல்வழிப் போக்குவரத்து வளர்ச்சி பெருமளவு முக்கியத்துவம் பெற்று வருகிறது. தமிழகத்தில் சிறு





துறைமுகங்களை மேம்படுத்த தமிழ்நாடு கடல்சார் வாரியம் அமைக்கப்பட்டது. இரண்டு பெரிய துறைமுகங்களான சென்னையும், தூத்துக்குடியும் ஏற்கனவே நெரிசலாக உள்ளன. எண்ணூரில் புதியதொரு பெரிய துறைமுகம் (சார் துறைமுகம்) அமைக்கும் பணி முடிவடையும் தருவாயிலுள்ளதோடு, அத்துறைமுகம் நடப்பு நிதியாண்டிலேயே இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. துறைமுக வளர்ச்சியிலும் தனியார் துறையினர் ஈடுபாட்டினை ஈர்க்கும்வண்ணம் துறைமுக கொள்கையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையின்படி, தனியார் ஈடுபாடு ஊக்குவிக்கப்படும்.

இவற்றோடு, தனியார் தொழில் முனைவோரின் உதவியுடன் கடலூர், நாகப்பட்டினம், குளச்சல் மற்றும் வாலிநோக்கம் ஆகிய சிறு துறைமுகங்களும் மேம்படுத்தப்படும். இவை தவிர காட்டுப்பள்ளி, எண்ணூர், திருச்சோபுரம், பி.ஒய். 3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல், மணப்பாடு ஆகிய சிறுதுறைமுகங்கள் தனியார் பயன்பாட்டுத் துறைமுகங்களாக (Captive Port) அறிவிக்கப்பட்டுள்ளன. சிறுதுறைமுகத் துறையானது தாராளமயமாக்கலினால் பெரும் வளர்ச்சியை நோக்கியுள்ளது. அதன் பலன்கள் ஊக்குவிப்பதாகவும் உள்ளன.

## II. சாலைகளும் பாலங்களும் கொள்கை வரைமுறைகள்

நெடுஞ்சாலைத்துறை தனது கட்டுப்பாட்டில் உள்ள சாலைக் கட்டமைப்பில் சாலைகள் அமைத்தல், மேம்படுத்துதல், புதுப்பித்தல், பராமரித்தல் போன்ற பணிகளை செய்து வருகிறது. இந்த சாலைக் கட்டமைப்பில், பாலங்கள் தரைப் பாலங்கள், சிறுபாலங்கள், இருப்புப் பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப் பாதை கீழ்ப்பாலங்கள் ஆகியவையும் அடங்கும்.

சாலைக் கட்டமைப்பின் வகைப்பாடுகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன:

அ. தேசிய நெடுஞ்சாலைகள்

ஆ. மாநில நெடுஞ்சாலைகள்

இ. மாவட்ட பெரிய சாலைகள்

ஈ. மாவட்ட இதர சாலைகள்

உ. பாலங்கள், தரைப்பாலங்கள், சிறு பாலங்கள். இருப்புப் பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப்பாதை கீழ்ப்பாலங்கள்

[2000 ஏப்ரல் 7

மேற்கூறிய ஒவ்வொரு வகைப்பாட்டுக்கும் கடைபிடிக்கப்படும் நெறிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**அ) தேசிய நெடுஞ்சாலைகள்**

பெரும் துறைமுகங்கள், மாநில தலைநகரங்கள், பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை இணைக்கும்வண்ணம் நாட்டின் நீளவாக்கிலும் அகலவாக்கிலும் சென்றிடும் மிக முக்கியமான சாலைகளாகும்.

நாட்டின் தொழில் வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டு வருவதால், தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பெருகி வருவதை கருத்தில்கொண்டு மைய அரசு இப்போக்குவரத்தின் பெருக்கத்திற்கு சமமாக தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் தடைகளற்ற துரிதமான போக்குவரத்தை உறுதி செய்வதற்காக நவின தொழில் நுட்பங்களையும், மேலாண் தொழில் நுணுக்கங்களையும் கடைபிடித்து தேவைப்படும் இடங்களில் இடவசதிக்கேற்றபடி ஓடுதளங்களை அகலப்படுத்துதல், போக்குவரத்து தரங்களைப் பிரித்தனுப்புதல், புறவழிச் சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், இருப்புப் பாதை கடவுகளில் மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசும் இப்பணிகளின் செயலாக்கத்திற்கு உதவிடும் வகையில் தேவையான அடிப்படை விவரங்களை மைய அரசுக்குத் தருவதோடு, தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் இடவசதிக்கேற்றபடி நான்கு வழிப்பாதையாக, ஆறு வழிப்பாதையாக அகலப்படுத்திட, சிமென்ட் கான்கிரீட் ஓடுதளம் போட ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளின் பெருக்கத்திற்கு தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி தூண்டுகோலாக இருந்து வருகிறது.

தேசிய நெடுஞ்சாலையின் மொத்த நீளம் 2002 கி.மீ. ஆக 1996 வரை ஒரே நிலையில் இருந்து வந்தது. ஆனால் தமிழக அரசின் விடாமுயற்சியால் கடந்த மூன்று ஆண்டுகளில் மைய அரசு சில மாநில நெடுஞ்சாலைகளையும், மாவட்ட பெரிய சாலைகளையும் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி ஆணை பிறப்பித்தது. தற்போது தேசிய நெடுஞ்சாலையின் நீளம் கூடுதலாக 1787 கி.மீ. சேர்க்கப்பட்டு 89 விழுக்காடு உயர்வுபெற்று 3789 கி.மீ. அளவில் உள்ளது;



2000 ஏப்ரல் 7]

**(ஆ) மாநில நெடுஞ்சாலைகள்.**

மாவட்ட தலைமையிடங்கள், மாநிலத்தின் முக்கிய நகரங்கள், மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலங்களில் உள்ள நெடுஞ்சாலைகள் ஆகியவற்றை இணைக்கும் முக்கிய நெடுஞ்சாலைகள் இதில் அடங்கும்.

மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளமான 4192 கி.மீ-ல் 2820 கி.மீ. நீளச் சாலைகள் இருவழித் தட அகலமாகவும், 90 கி.மீ. பல வழித்தட அகலமாகவும் உள்ளன. ஒருவழித் தடமாக மீதமுள்ள 1282 கி.மீ. நீளச் சாலைப் பகுதிகளை இரு வழித்தட அகலமாகவோ, அல்லது பலவழித்தட அகலமாகவோ அகலப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1787 கி.மீ. அரசு சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்கப்பட்டதால் 3500 கி.மீ. மாவட்ட பெரிய சாலைகள் 1998-99 ஆம் ஆண்டு மாநில நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**(இ) மாவட்ட பெரிய சாலைகள்**

மாவட்டத்தின் உற்பத்தி மையங்கள் மற்றும் சந்தை மையங்கள் ஆகியவற்றிற்குச் செல்லும் சாலைகள், இந்த மையங்களை ஒன்றோடொன்று மற்றும் முக்கியமான நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் சாலைகள் ஆகியவை இதில் அடங்கும். மாவட்ட பெரிய சாலைகளின் மொத்த நீளமான 10051 கி.மீ. சாலைகளில் 5672 கி.மீ. ஒருவழித்தட அகலமாகவும், 4332 கி.மீ. இருவழித்தட அகலமாகவும், 47 கி.மீ. பல வழித்தட அகலமாகவும் உள்ளன. மாவட்ட பெரிய சாலைகள் மாவட்ட அளவில் வள ஆதாரங்களை மேம்படுத்த பெரிதும் உதவுவதால் தமிழ்நாடு அரசு ஒருவழித்தட அகலமாக உள்ள மாவட்ட பெரிய சாலைகளை இடவசதிக்கேற்றபடியும் நிதி நிலைமைக்கேற்றபடியும் படிப்படியாக இருவழித்தட அகலமான சாலைகளாக விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

**(ஈ) மாவட்ட இதர சாலைகள்**

கிராமப்புற உற்பத்தி மையங்களையும் சந்தை மையங்களையும் இணைக்கும் சாலைகள், வட்டத் தலைமையிடங்களை இணைக்கும் சாலைகள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைமையிடங்கள் மற்றும் இதர பெருஞ்சாலைகளை இணைக்கும் சாலைகள் ஆகியன இதில் அடங்கும். இன்றைய நிலைமையில் மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளமான 40814 கி.மீ.-ல் மிகக் குறைந்த அளவேயான 753 கி.மீ. சாலைகள் மட்டும் இருவழித்தட அகலமாகவும் 31 கி.மீ. சாலைகள் பலவழித்தட

[2000 ஏப்ரல் 7

அகலமாகவும் உள்ளன. கிராமப்புறப் பகுதிகளில் இச்சாலைகள் வளமான பொருளாதார மேம்பாட்டினைத் தூண்டுவதாக அமைந்திருப்பதால் தமிழ்நாடு அரசு இச்சாலைகளை அகலப்படுத்திடவும் மேம்படுத்திடவும் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. இதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெறுவதோடு அரசின் பங்காக குறிப்பிட்ட விழுக்காடு நிதி ஒதுக்கீடும் செய்து வருகிறது.

**(உ) பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், இருப்புப் பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப் பாதை கீழ்ப்பாலங்கள்**

சாலைகளின் நேர்ப்பாடுகளில் நீராதாரங்களோ புகை வண்டிப் பாதைகளோ குறுக்கிடுவது இயற்கையானதாகும். எனவே இந்த இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக நெடுஞ்சாலைத் துறை சாலையின் நேர்ப்பாட்டில் பாலங்கள், தரைப்பாலங்கள், சிறுபாலங்கள், இருப்புப் பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப் பாதை கீழ்ப்பாலங்கள் ஆகியவற்றை இடவசதிக்கேற்றபடி கட்டும் பணியையும் செய்து வருகிறது. அரசு சாலைகளில் பல்லாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ள 3,458 பாலங்கள் மிகவும் பழுதடைந்து திரும்பக் கட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளதென ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இப்பாலங்களை நிதிநிலைமைக்கேற்றபடி கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இவை தவிர மக்கள் பிரதிநிதிகள் வேண்டுகோளின்படியும் ஏராளமான பாலங்கள் கட்டப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அரசு சாலைகளில் ஓர் இலட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட இரயில் ஊர்தி அலகுகள் கொண்ட இருப்புப் பாதைக் கடவுகட்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நிதிவளம் மற்றும் பணிகளின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, முன்னுரிமை அடிப்படையில், இருப்புப் பாதைப் பணிகள் திட்டத்தில் இப்பணிகள் சேர்க்கப்படுகின்றன. அணுகு சாலைகள் உட்பட இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காகும் செலவை மாநில அரசும் மைய அரசின் இருப்புப் பாதைகள் அமைச்சகமும் சமமாக 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. மைய அரசின் இருப்புப் பாதை பாதுகாப்பு பணிகள் நிதியிலிருந்து, பணியாளர் நியமிக்கப்படாத இருப்பு ப்பாதை கடவுகளை பராமரித்தல், தற்போது உள்ள இருப்பு ப்பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக மாநில அரசுக்காகும் செலவினங்களை மாநில அரசு திரும்பப்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து எட்டு விழுக்காடு தொகை



2000 ஏப்ரல் 7]

தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுதல் மற்றும் பணியாளர் நியமிக்கப்படாத இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பணியாளரை நியமித்தல் முதலிய பணிகளுக்காக மாநில அரசுக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்படுகின்றது.

**III. சாலைகளும் பாலங்களும் - நடைபெற்று வரும் திட்டங்கள்**

கொள்கை வரைமுறைப் பகுதியில் விளக்கப்பட்ட நோக்கத்தினை அடையும் பொருட்டு பின்வரும் திட்டங்களை 2000-2001-ல் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது:

**1. தேசிய நெடுஞ்சாலைகள்**

*தேசிய நெடுஞ்சாலைகள் - மூலப்பணிகள் மற்றும் பராமரிப்பு*

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 3,789 கி.மீ. ஆகும். மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைக் கொண்டு மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் மூலப்பணிகள், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மொத்தமுள்ள 3789 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையில், 800 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையினை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழு சில மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தன் வசம் எடுத்துக் கொண்டுள்ளது.

தற்போது, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழு கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை செயல்பாட்டிற்கு எடுத்துக் கொண்டுள்ளது:

1. தேசிய நெடுஞ்சாலை-45 மற்றும் தேசிய நெடுஞ்சாலை-4 ஆகியவற்றை இணைக்கும் வகையில் 19 கி.மீ. நீள சென்னை புறவழிச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2. ஓசூர்-கிருட்டிணகிரி சாலையை (தே.நே.7) கி.மீ.33/015 முதல் 94/0 வரை நான்கு வழிப்பாதையாக மேம்படுத்துதல். இதில் கி.மீ. 33/015-48/6-ல் பணி தொடங்கப்பட்டுள்ளது.

3. தேசிய நெடுஞ்சாலை 45-ல் செங்கற்பட்டிலிருந்து திண்டிவனம் வரை நான்கு வழிப்பாதையாக மேம்படுத்துதல் கி.மீ. 67/0 முதல் 122/0 வரை - விவர திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணி தொடங்கப்படவுள்ளது.

[2000 ஏப்ரல் 7

4. நாமக்கல் புறவழிச் சாலை 8.6 கி.மீ. நான்கு வழிப்பாதையாக அமைத்தல் - விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

5. கரூர் புறவழிச் சாலை - 6 கி.மீ. - விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது.

6. சேலம் புறவழிச் சாலை 7 கி.மீ. நான்கு வழிப்பாதையாக அமைத்தல் - பணி தொடங்கப்படவுள்ளது.

7. சேலத்திலிருந்து தொப்பூர் வரை சாலையினை நான்கு வழிப்பாதையாக அமைத்தல் - விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

8. தொப்பூர் மலைச்சாலை பணி நடைபெற்று வருகிறது.

9. கிருட்டிணகிரி - இராணிப்பேட்டை சாலையினை (தே.நெ.46) நான்கு வழிப்பாதையாக அமைத்தல் - விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

10. திண்டிவனத்திலிருந்து திருச்சி வரை (தே.நெ.45) மற்றும் திருச்சியிலிருந்து மதுரை வரை (தே.நெ.45ஆ) சாலையினை நான்கு வழிப்பாதையாக அமைத்தல். இப்பணியை உலக வங்கி கடனுதவியின்கீழ் மேற்கொள்ள திட்டமிட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

இவை தவிர, மைய அரசால் செயல்படுத்தப்படவுள்ள வடக்கு தெற்கு பகுதிகளில் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரியை இணைக்கும் அதிவிரைவு தேசிய நெடுஞ்சாலை அமைப்புப் பணிகளுள் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை 7 பெங்களூர்-சேலம்-மதுரை பிரிவு 407.49 கி.மீ. நீள சாலை மற்றும் மதுரை-கன்னியாகுமரி பிரிவு 231.60 கி.மீ. நீள சாலை ஆகியவையும் அடங்குகிறது.

நம் நாட்டில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு முனைகளை இணைக்கும் சாலைகளின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட தங்க நாற்கர (Golden Quadrilateral) திட்டத்தின்கீழ், மைய அரசு, தமிழ்நாட்டில் 373 கி.மீ. நீள சாலைப் பகுதிகளை மேம்பாடு செய்ய திட்டமிட்டுள்ளது. இதன்படி சென்னை-சித்தூர் சாலை (இராணிப்பேட்டை வரை தே.நெ.4) 113.3 கி.மீ. இராணிப்பேட்டை - கிருட்டிணகிரி சாலை (தே.நெ.46) 146.70 கி.மீ.



2000 ஏப்ரல் 7]

பெங்களூர்-சேலம் சாலை (தே. நெ.7) 61.0 கி.மீ. மற்றும் சென்னை-கல்கத்தா சாலை (தே.நெ.5) 52.0 கி.மீ. ஆகியவை மேம்பாடு செய்யப்படவுள்ளது.

**2. மாநில நெடுஞ்சாலைகள்**

இன்றைய நிலவரப்படி மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 4,192 கி.மீ. ஆகும். 2000-2001-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 5.40 கோடி மதிப்பீட்டில் 8 சாலைப் பணிகள் மற்றும் ஏழு பாலங்கள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்கென 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. மாவட்ட பெரிய சாலைகள்**

இன்றைய நிலவரப்படி மாவட்ட பெரிய சாலைகளின் மொத்த நீளம் 10,051 கி.மீ. ஆகும். 2000-2001 ஆண்டில் பழுதடைந்த பாலங்களை திருப்பி கட்டுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 5.95 கோடி நிலுவையில் உள்ள பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. மாவட்ட இதர சாலைகள்**

இன்றைய நிலவரப்படி மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளம் 40,814 கி.மீ. ஆகும். இவற்றில் சுமார் 14,139 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன என கண்டறிப்பட்டுள்ளது.

இவற்றைத் தரம் உயர்த்துவதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் டிட்கோ மூலமாக ரூ.400 கோடி நிதி திரட்டப்பட்டுள்ளது. இதைத் தவிர 2000-2001 நிதியாண்டில் திட்டப் பணிகளின்கீழ் நிலுவையில் உள்ள பணிகளுக்கென ரூ.6..44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. பாலங்கள்**

*அரசு சாலைகளின் பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல்*

2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.1.30 கோடி மொத்த மதிப்பிலான 5 பாலங்கள் திரும்பக் கட்டும் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென

[2000 ஏப்ரல் 7

2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.6.51 கோடி நிலுவையில் உள்ள பணிகளுக்கும் சேர்த்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக இருப்புப் பாதை மேமபாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல்:

செயின்ட் தாமஸ்மலை இரயில் நிலையம் அருகில் இருப்புப் பாதை கீழ்ப்பாலம் கட்டும் பணி ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது.

திண்டிவனத்தில் பாண்டிச்சேரி - கிருட்டிணகிரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை - 66) குறுக்கே தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுக்கு பதிலாக ஒரு இருப்புப் பாதை மேம்பாலமும், தேசிய நெடுஞ்சாலை எண் 45 சந்திப்பில் இணைக்கும் பரிமாற்றப் பாலமும் ரூ.19.89 கோடி செலவில் பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் மாநில அரசு மற்றும் மைய அரசின் தரைவழிப் போக்குவரத்து மற்றும் இருப்புப் பாதை அமைச்சகங்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதுவரையில் 80 விழுக்காடு பணி முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியை முழுமையாக 2000 ஆம் ஆண்டு சூன் திங்களில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விருதுநகர்-சங்கரலிங்கபுரம் இரயில் நிலையங்களுக்கிடையே ரூ.7.40 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட சாலை மேம்பாலப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

போக்குவரத்து நெரிசலை முழுமையாக நீக்கவும், வாகனப் போக்குவரத்தை விரைவுபடுத்தவும் சென்னை கடற்கரை தாம்பரம் இரயில் நிலையங்களுக்கிடையே 12 இடங்களில் சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலம் அகல இரயில் பாதைத் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 3 பணிகள் சென்னை மாநகராட்சியாலும், 1 பணி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும பண உதவியுடனும் நிறைவேற்றப்பட வேண்டும். இப்பணிகளுக்கு ஆயத்த வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ளவை நெடுஞ்சாலைத் துறையால் செயல்படுத்தப்படும்.

மேலும் குரோம்பேட்டை-தாம்பரம்-சானடோரியம் இரயில் நிலையங்களுக்கிடையே எம்.ஐ.டி. அருகில் பிறிதொரு சாலை மேம்பாலம் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படவுள்ளது. இந்தப் பணி தொடங்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 7]

திருச்சி மாநகரில் உத்தமர்கோயில் அருகே தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவு எண் 241-க்கு பதிலாக ஒரு சாலை மேம்பாலம், தென்னூர் சாலையில் இருப்புப் பாதைக் கடவு எண் 84-க்கு பதிலாக ஒரு சாலை மேம்பாலம், ஹெபர் சாலையில் இருப்புப் பாதைக் கடவு எண் 85-க்கு பதிலாக ஒரு சாலை மேம்பாலம், திருவரங்கத்தில் இருப்புப் பாதைக் கடவு எண் 246-க்கு பதிலாக ஒரு சாலை மேம்பாலம், ஆக நான்கு சாலை மேம்பாலங்கள் கட்டுவதற்கு ரூ.50.00 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

இவையல்லாமல் தமிழகத்தில் 31 இடங்களில் சாலை மேம்பாலம்/ கீழ்ப்பாலம் கட்டுவதற்கு இரயில்வே அமைச்சகம் ஒப்புதலளித்து அவை இரயில்வே திட்ட வேலைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலம் கட்டும் பணிக்கு வரவு-செலவு மதிப்பீடு 2000-2001-ல் ரூ.26.62 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடனுதவியுடன் அரசு சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் புதிய பாலங்களை கட்டுதல்/பழுதடைந்த பழைய பாலங்களை திரும்பக் கட்டுதல்:

1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 2-ன்கீழ் 2823 கி.மீ. நீளத்திற்கான மாவட்ட பெரிய மற்றும் மாவட்ட இதர சாலைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் மற்றும் ஏழு பாலங்களை அமைக்கும் பணிகளும் ரூ.157.53 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் இதுவரை 2700 கி.மீ. நீளத்திற்கான சாலைப் பணிகளும் மூன்று பாலப்பணிகளும் முடிக்கப்பட்டன. எஞ்சிய சாலை மற்றும் பாலப்பணிகள் இவ்வாண்டில் முடிக்கப்படவுள்ளன.

1998-99 ஆம் நிதியாண்டில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 3-ன்கீழ் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 366.58 கி.மீ. நீளத்திற்கான மாவட்ட பெரிய மற்றும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் 53 பாலங்களை அமைக்கும் பணிகளும் ரூ.125.77 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் இதுவரை 207 கி.மீ. நீளத்திற்கான சாலைப்பணிகள் மற்றும் ஒரு பாலப்பணியும் முடிக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் எஞ்சியுள்ள சாலை மற்றும் 52 பாலப்பணிகளையும் இவ்வாண்டில் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1998-99 ஆம் நிதியாண்டில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 4-ன்கீழ் 67 பாலப்பணிகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் 184 கி.மீ. நீளத்திற்கான 28 சாலைப் பணிகளும் ரூ.75.65 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை 78 கி.மீ. நீளத்திற்கான சாலைப் பணிகளும், 20 பாலப்பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகளை இவ்வாண்டில் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1999-2000 நிதியாண்டில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 5-ன் கீழ் 15 பாலப்பணிகளும் மாவட்ட இதர சாலைகளில் 916.55கி.மீ. நீளத்திற்கான 135 சாலைப் பணிகளும் ரூ.78.10 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 15 கி.மீ. நீளத்திற்கான சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

இவற்றுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 5-ன்கீழ் வெள்ளச் சேதத்தில் பழுதடைந்த 27 பாலங்களை திரும்பக் கட்டும் பணிகள் ரூ.41.52 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2000-2001 நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.141.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் நபார்டு மற்றும் ஹட்கோ கடனுதவியுடன் கட்டப்படும் 106 பால பணிகள் பற்றிய விவரம்:**

நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-2 மற்றும் 3-ன்கீழ் தமிழகத்தின் 25 மாவட்டங்களில் 54 பாலப் பணிகளுக்கு ரூ.99.19 கோடிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1997-98 ஆம் நிதியாண்டில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் நிதியுதவியுடன் ரூ.260.11 கோடி மதிப்பீட்டிலான 50 பாலங்கள் கட்டுதல்/திரும்பக் கட்டுதல் என்னும் மிகப் பெரும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

1998-99-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டிலான இரண்டு பழுதடைந்த பாலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நபார்டு வங்கியின் கடனுதவியுடன் மேற்கொள்ளப்படும் 54 பாலங்கள், ஹட்கோ கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் 50 பாலங்கள், 1998-99 ஆம் ஆண்டு பகுதி - 2 திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட 2 பாலங்கள் எல்லாவற்றுக்கும் சேர்த்து மொத்தம் 106 பாலங்களின் மதிப்பீட்டுத் தொகை ரூ.360.31 கோடி ஆகும். இந்த 106 பாலங்களும், 17 சிப்பங்களாகப் (தொகுப்புகளாக) பிரித்து ஒன்றிணைத்து, சுழல் திறவுகோல் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு செயலாக்கத்திற்கு விடப்பட்டது. 1999-2000 ஆம் நிதியாண்டில் 16 பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பாலப்பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. அவை 2000 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் முடிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளன.



**6. சிறப்புப் பகுதிகளில் சாலைகள்**

**வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் உதவியுடன் சென்னை நகரை வந்தடையும் ஆரச் சாலைகளை மேம்படுத்துதல்**

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காணப்படும் போக்குவரத்து நெரிசலின் காரணமாக சென்னை மாநகரத்தை சுற்றி அமைந்து சென்னை மாநகரத்தை வந்தடையும் அனைத்து ஆரச்சாலைகளையும் உறுதிப்படுத்துவதும், அகலப்படுத்துவதும் அத்தியாவசியமாகிவிட்டது. சாலைத் தொகுப்புகளின் மேம்பாடானது தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ளதால், தமிழக அரசு, சென்னை மாநகரைச் சுற்றி அமைந்து, சென்னை மாநகரை வந்தடையும் 251.6 கி.மீ. நீள அரசு சாலைகளை ரூ.212.54 கோடி செலவில் மேம்படுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தில் (HUDCO) கடன் நிதி உதவியாக 70 விழுக்காடு (ரூ.148 கோடி) பெறப்பட்டுள்ளது.

இப்பணி 11 சிப்பங்களாகப் (தொகுதிகளாக) பிரிக்கப்பட்டு பணியை செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நல்ல முன்னேற்ற நிலையில் உள்ளன. மேலும் இப்பணிகளை டிசம்பர் 2000-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மதுரை நகரை வந்தடையும் ஆரச்சாலைகளை மேம்படுத்துதல்**

மதுரை நகரை வந்தடையும் ஆரச்சாலைகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகத்தின் கடனுதவியுடன் மேம்பாடு செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**புறவழிச் சாலைகள்**

ஊர்திகளின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு புறவழிச்சாலைகள் அமைப்பது அத்தியாவசியமாகிறது. புறவழிச்சாலைகள்

அமைக்க நிலங்கள் கையகப்படுத்த வேண்டி இருப்பதால் ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டத்தில் புறவழிச் சாலைகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்துவதற்காக ரூ.2.18 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கும்பகோணம், பழநி மற்றும் செய்யார் ஆகிய நகரங்களில் புறவழிச் சாலைகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கும்பகோணம் புறவழிச்சாலை அமைக்கத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது. பழநி மற்றும் செய்யார் புறவழிச்சாலைகள் அமைத்திடத் தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்தும் பணிகள், நடைபெற்று முடியும் நிலையில் உள்ளன. இது தவிர சேலம், கரூர் ஆகிய நகரங்களில் தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள புறவழிச் சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சென்னை புறவழிச் சாலைப் பணியும் நல்ல முன்னேற்றத்தில் உள்ளது. திருநெல்வேலி புறவழிச் சாலையின் நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் அடிப்படையில் கோயம்புத்தூர் புறவழிச் சாலை பணி முடிவுற்று போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

### தொழிற்சாலைப் பகுதிகளில் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ரூ.8.88 கோடி மதிப்பிலான 69.75 கி.மீ. அரசு சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கி.மீ. 26/0 - 49/0 வரையில் உள்ள விருத்தாசலம் - தொழுதூர் சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கு மதிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகையான ரூ.6.50 கோடியில் திருவாளர்கள் இந்தியா சிமென்ட்ஸ் மற்றும் ராம்கோ சிமென்ட்ஸ் ஆகிய இருநிறுவனங்களும் சேர்ந்து ரூ.3.00 கோடியை அவர்களது பங்காக அளிக்க முன்வந்துள்ளனர். மேலும் இத்திட்டத்தின்கீழ் ரூ.3.45 கோடி மதிப்பீட்டில் திருநீர்மலை சாலை கி.மீ. 20/8 முதல் கி.மீ. 24/8 வரையும் திருநீர்மலை - திருமுடிவாக்கச் சாலை கி.மீ. 24/8 முதல் கி.மீ. 28/0 வரையும் மேம்படுத்தும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இப்பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

இது தவிர கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் திருவாளர்கள் நாகார்ஜுனா எண்ணெய் கார்ப்பரேசன் லிமிடெட், ஐதராபாத் நிறுவனத்தோடு கூட்டு முயற்சியாக தொடங்கப்படவிருக்கும் பெண்ணார் சுத்திகரிப்பு ஆலை அமையவிருக்கும் இடத்தில் மொத்த நீளம் 3.5 கி.மீ. அளவிற்குச் செல்கின்ற ஆலப்பாக்கம்



ரயில்வே ஊட்டுச் சாலை (0/0 - 0/524) மற்றும் திருச்சோபுரம் வழியாகச் செல்லும் ஆலப்பாக்கம்-பெரியகுப்பம் சாலை (0/0-2/8) ஆகியவற்றை ஓர் உயர்மட்டப் பாலத்தோடு மேம்பாடு செய்வதற்காக ரூ.3.65 கோடி மதிப்பீட்டில் பணி செயலாக்கப்படுகிறது. இப்பணிக்காகும் செலவில் பெண்ணார் சுத்திகரிப்பு ஆலை தனது பங்கினை வழங்க இசைவு தெரிவித்துள்ளது.

2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.3.08 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைத் திட்டம்

திருப்பூர் நகரில் சாலை உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்.

தமிழ்நாட்டில் திருப்பூர் நகரம் நெசவு மற்றும் பின்னலாடை ஏற்றுமதிக்கும் பெயர் பெற்றதாகும். இந்த ஏற்றுமதியின் மூலம் ஆண்டுதோறும் அந்நியச் செலாவணி ஈட்டப்படுகின்றது. திருப்பூர் நகருக்குள்ளும் அதனைச் சுற்றியும் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக முதல் கட்டமாக ரூ.15.00 கோடி மதிப்பிலான திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான தொகையில் 50 விழுக்காடு தொகையை அதாவது ரூ.7.50 கோடி செலவினத்தை இந்திய அரசு கடன் நிதி உதவியாக பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. மீதமுள்ள 50 விழுக்காடு செலவினத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். இப்பணிகள் ஏழு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 57.20 கி.மீ. சாலை மேம்படுத்துதல், 93 இடத்தில் சிறு பாலங்கள் கட்டுதல், ஓர் ஆற்றுப் பாலம் ஆகியவை நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. பணி முடியும் தருவாயில் உள்ளது.

திருப்பூர் நகருக்கு ஒரு வட்டச் சாலையும், சில சாலைகளை மேம்படுத்தவும் ரு.50 கோடி மதிப்பில் பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் மேற்கொள்ள மத்திய அரசின் ஒப்புதலுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட உள்ளது.

### 7. சிறப்பு சாலைத் திட்டங்கள்

### தமிழ்நாடு சாலை தொகுப்புத் திட்டம்

1. போக்குவரத்து அதிகமாக உள்ள சாலைகள் முன்னிடைத் திட்ட ஆய்வு 1995 பிப்ரவரியில் தனி ஆலோசகர் மூலம் மேற்கொள்ளப்பட்டு

அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதன்படி 23 பிரிவுகள் கொண்ட 3238 கி.மீ. நீள சாலைகள் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் இடம் பெற்றன. இத்திட்டத்தைத் தயாரிக்கவும் செயல்படுத்தவும் கடன் நிதி உதவி அளிக்க உலக வங்கி முன்வந்துள்ளது. பொருளாதாரச் சாத்தியக்கூறு அறிக்கையின் அடிப்படையில் 1280 கி.மீ. மேம்பாடு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்தச் சாலை அகலப்படுத்தும் மற்றும் வலுப்படுத்தும் மேம்பாட்டுத் திட்டம் மூன்று கட்டங்களில் நிறைவேற்றப்படும். கட்டம் 1-ல் 397 கி.மீ. சாலைகளும், கட்டம் 1அ-ல் மேலும் 353 கி.மீ. சாலைகளும், கட்டம் 1ஆ-ல் 80 கி.மீ. நீளமுள்ள 12 புறவழிச் சாலைகளும், கட்டம் 2-ல் மீதியுள்ள 450 கி.மீ. சாலைகளும் இத்திட்டத்தில் அடங்கும்.

2. இத்திட்ட அனைத்துச் சாலைகளுக்கும் பொருளாதாரச் சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் 750 கி.மீ. சாலைகளுக்கு வடிவமைப்பு, கட்டம் 1-க்கும் மற்றும் 1அ-வுக்கும் முடிவுற்றுள்ளன. கட்டம் 1-ல் கடலூர் முதல் தூத்துக்குடி வரையுள்ள சாலை அடங்கும். கட்டம் 1அ-ல் உள்ள சாலைகள் விவரம், ஆற்காடு- திருவண்ணாமலை - திருக்கோவிலூர் - உளுந்தூர்பேட்டை, போளூர் - செங்கம், விருத்தாசலம்- கும்பகோணம் - திருவாரூர் மற்றும் அரியலூர் - ஜெயங்கொண்டம் ஆகும்.

3. கட்டம் 1ஆ-வில் 12 புறவழிச் சாலைகளுக்குத் திட்டம் தயாரிக்கும் பணி விரைவில் தொடங்க உள்ளது. இதைத் தொடர்ந்து பகுதி-2 திட்டப் பகுதியும் ஆரம்பிக்கப்படும். சாலைகளைப் பராமரிக்க ரூ.430 கோடியும் கடன் நிதி உதவியாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. நில எடுப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு ஆகியவற்றைச் செயல்படுத்த சிறப்பு வருவாய் அலுவலர்கள் இத்திட்டத்தில் உள்ளனர். இதேபோல் மரம் நடுதல் மற்றும் சுற்றுப்புறச் சூழல் போன்றவற்றைக் கவனிக்கவும் சிறப்பு வன அலுவலர்கள் செயல்படுகின்றனர்.

5. அமெரிக்க நாட்டின் பூஸ் ஆலென் அண்டு ஹேமில்டன் என்ற ஆலோசகர் மூலம் ரூ.2.80 கோடி செலவில் துறையை நிர்வாகச் சீரமைக்க ஆய்வு செய்து, அறிக்கை பெறப்பட்டது. இந்த அறிக்கையில் நெடுஞ்சாலைத் துறையை திறம்பட செயலாக்க நிர்வாக மாற்றங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. இதேபோல இத்திட்ட நிதி நிர்வாகத்திற்கு ரூ.25 இலட்சம் செலவில் தனி ஆலோசகர் மூலம் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.



6. இத்திட்ட அலுவலகக் கட்டடம் கட்ட நெடுஞ்சாலைத் துறை திட்டமிட்டுள்ளது. இதற்கு உலக வங்கி ரூ.4 கோடி கடன் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளது.

7. இத்திட்டம் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கட்டுமான மேற்பார்வை சிறப்பு ஆலோசகர்கள் மூலம் நிறைவேற்றப்படும். உலக வங்கியின் ஆய்வு முடிந்தபின் 2000-2001-ல் கட்டுமானப் பணிகள் தொடங்கும். 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.30 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள் உலக வங்கி கடன் உதவியுடன், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், சேலம், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய பத்து நகரங்களில் செயலாக்கப்பட்டன. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களில் சாலைத் தொடர்பு மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கான மேலாண்மை செயல்திட்டம் (TRAMP) ஒன்றாகும். இத்திட்டங்கள் நெடுஞ்சாலைத் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பிரிவில் 1988-89 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டன. உலக வங்கி நிதியுதவி 30-09-1997-ல் முடிவடைந்து விட்டது. எனவே, மீதமுள்ள பணிகள் தமிழ்நாடு அரசின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து தொடர்ந்து நடத்தப்பட்டு முடிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 33 பணிகள் உலக வங்கி உதவியுடனும் மற்றும் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கீட்டிலிருந்தும் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மற்ற 4 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இராயபுரத்தில் சாலை மேம்பாலம் கட்டுதல், திருநெல்வேலி புறவழிச் சாலை அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளன. மேலும் திருச்சியில் ஒரு சாலைப் பணியும் முடிவடைந்துள்ளது.

2000-2001 ஆம் ஆண்டிற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.40.49 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 7

நபார்டு கடனுதவியுடன் கிராமச் சாலைகள் திட்டம்

கிராமங்களே நமது நாட்டின் உயிர்நாடி. கிராமச் சாலைகளே அக்கிராமங்களின் உயிர்த்துடிப்பு. தமிழகத்தில் விவசாயத்தையே பிரதானத் தொழிலாகக்கொண்ட கிராமங்கள் பெருமளவில் இருப்பதால், அக்கிராமங்களில் விளையும் விவசாய விளைபொருட்களை, நகரங்களுக்கு விரைவாக எடுத்துச்செல்ல வசதியாக கிராமச் சாலைகளை அனைத்து பருவக் காலங்களுக்கும் ஏற்றவாறு தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டியது மிகவும் அவசியமானதொன்றாகும். கிராமச் சாலைகள் கீழ்க்கண்ட மூன்று திட்டங்களின்கீழ் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன:

(அ) கிராமச் சாலைகள் திட்டம்

(ஆ) சிறப்பு உறுப்புத் திட்டம்

(இ) பேருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம்

(அ) கிராமச் சாலைகள் திட்டம் (நபார்டு வங்கியின் கடனுதவி மூலமாக)

இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் வேலைகளுக்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

1. 1991 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கீட்டின்படி 1000-த்திற்கும் மேற்பட்ட மக்கட்தொகை கொண்ட கிராமங்கள்.

2. அமைக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம் 1.60 கி.மீ. நீளத்திற்கு மேல் இருக்க வேண்டும்.

3. ஏற்கெனவே மேற்படி கிராமங்கள் தார்ச் சாலைகளினால் இணைப்பு பெற்றிருத்தல் கூடாது.

1991 ஆம் ஆண்டின் மக்கட்தொகைக் கணக்கீட்டின்படி 500 முதல் 1000 வரை மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து கொடுக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் நபார்டு கடனுதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மூலம் 456 கி.மீ. சாலைகள் அமைக்கவும், 11 பாலங்கள் கட்டவும் ரூ. 68.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மக்கட்தொகை 500 முதல் 1000 வரையுள்ள 240 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதி பெறும்.



2000 ஏப்ரல் 7]

இப்பணிகள் யாவும் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. பால வேலைகளை டிசம்பர் 2000-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் 2000-2001 ஆம் ஆண்டில் நபார்டு கடனுதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 5-ன் மூலம் 390 கி.மீ. நீளமுள்ள சாலை வேலைகளும், 12 பால வேலைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு மக்கட்தொகை 500 முதல் 1000 வரையுள்ள 96 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதி பெறும் இத்திட்டத்தில், ஆந்திர-தமிழக மாநிலங்களுக்கிடையிலான சாலை மேம்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளில் வேலூர் மாவட்டத்திற்கென 5 பாலங்கள் மற்றும் தருமபுரி மாவட்டத்திற்கென ஒரு பால வேலையும் அடங்கும்.

2000-2001 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.37.37 கோடியாகும்.

ஆ) சிறப்பு உறுப்புத் திட்டம் (நபார்டு வங்கியின் கடனுதவி மூலமாக)

கிராம மக்கட்தொகையில் 50 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆதிதிராவிடர் மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்குத் தார்ச் சாலை வசதி செய்திட இத்திட்டம் வழிவகுக்கிறது.

1999-2000 ஆம் ஆண்டில் நபார்டு கடனுதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 4-ன் மூலமாக மக்கட்தொகை 500 முதல் 1000 வரையுள்ள 100 கிராமங்களுக்கு 203 கி.மீ. நீளமுள்ள சாலை வேலைகளும், 11 பாலங்களும் கட்டி இணைப்புச் சாலை வசதி செய்து கொடுத்திட ரூ.30.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிகள் யாவும் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. பால வேலைகளை டிசம்பர் 2000-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில் நபார்டு கடனுதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 5-ன் மூலமாக, மக்கட்தொகை 500 முதல் 1000 வரையுள்ள 44 கிராமங்களுக்கு, 220 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலைகளும், 5 பாலங்களும் கட்டி இணைப்புச் சாலை வசதி செய்து கொடுக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.19.90 கோடியாகும்.

[2000 ஏப்ரல் 7

(இ) பேருந்து வழித்தட சாலைகள் மேம்பாடுத் திட்டம் (நபார்டு கடனுதவி— மூலமாக)

இத்திட்டத்தின்கீழ் 3 ஆண்டுகளுக்குமேல் பேருந்துகள் இயங்கும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன.

1999-2000 ஆண்டில் நபார்டு கடனுதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 4-ன் மூலம், 348 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாட்டிற்கும் மற்றும் 10 பாலங்கள் கட்டவும் ரூ.41.17 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இப்பணிகள் யாவும் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. பால வேலைகள் யாவையும் டிசம்பர் 2000-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் 2000-2001 ஆம் ஆண்டில், நபார்டு கடனுதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 5-ன் மூலமாக 440 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு மற்றும் 12 பாலங்கள் கட்டும் பணி ஆகியவை மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்கண்ட மூன்று திட்டங்களில் எடுக்கப்படும் சாலைகள் மாவட்ட இதர சாலைகள் தரத்திற்கு மேம்படுத்தப்படுகின்றன.

2000-2001 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.32.73 கோடியாகும்.

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் அங்காடி மையங்களுக்குச் செல்லும் ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத்திட்டம்

இத்திட்டம் காஞ்சிபுரம், வேலூர், சேலம், விழுப்புரம், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள 23 அங்காடி மையங்களை உள்ளடக்கி, ரூ.109 கோடி மதிப்பீட்டில் 859 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்ய வழிகோலுகிறது. இத்திட்டம் முடியும் தருவாயில் உள்ளது.

புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களை தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புனரமைத்தல்.

இத்திட்டத்தின்கீழ் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 12 சாலைகள் மற்றும் 24 பாலங்களைப் புனரமைக்கவும், புதுப்பிக்கவுமான



2000 ஏப்ரல் 7]

பணிகள் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது.

9. சிறப்புச் சாலைப் பணிகள்

கரும்புச் சாலைகள் அபிவிருத்தி திட்டம்

இத்திட்டத்தின்கீழ் சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் கரும்புத் தீர்வை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டன. இதுவரையில் மொத்தம் 1,366 கி.மீ. சாலைகள் அமைத்து மேம்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இச்சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக வகைப்படுத்தப்பட்டு பராமரிப்பிற்கு நெடுஞ்சாலைத் துறைவசம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் நிதியாண்டில் ரூ.31.23 கோடி செலவில் 623.24 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிழக்குத் தொடர்ச்சி மலைச் சாலைகள் வளர்ச்சித் திட்டம்

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ.35 கோடி முதலீட்டில் மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இப்புதிய திட்டத்தின்கீழ் மண் வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, வன வளர்ச்சி, பழங்குடியினர் ஆதரவுத் திட்டங்கள், சுற்றுச் சூழல் ஆய்வுகள் மற்றும் சுற்றுச் சூழல், வளர்ச்சித் திட்டங்கள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சாலைகள், தொலையுணர்வு ஆய்வுகள் போன்ற உறுப்புகளடங்கியுள்ளன. இதில் சாலைகள் எனும் உறுப்புத் திட்டம் நெடுஞ்சாலைத் துறையுடன் தொடர்புடையதாகும். இத்திட்டத்தின்கீழ், சாலைகள் தலைப்பின்கீழ் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.2.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய சாலைகள் தற்போது கண்டறியப்பட்டு வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலைச் சாலைகள் வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்திற்கென, ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மைய அரசின் முதலீட்டு உதவி ரூ.50.07 இலட்சம் என மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டு இந்த ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் கால முழுமைக்கும் ரூ.86.65 இலட்சத்திற்கான கருத்துருக்களை அனுப்பி வைக்குமாறு தமிழக அரசை மைய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இத்திட்டம் ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய

[2000 ஏப்ரல் 7

ஏழு மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 1999-2000 நிதி ஆண்டில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 4 சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன.

*மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்*

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு அம்சங்கள் அடங்கிய மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்திட மைய அரசின் சிறப்பு நிதி உதவியாக ரூ.124.05 கோடி தொகையை மைய அரசு நிர்ணயித்து உள்ளது. இதில் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுமைக்கும் சாலைப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.17.97 கோடி ஆகும். இத்திட்டத்திற்கென 1999-2000 நிதி ஆண்டில் 29.6 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன.

**10. கருவிகளும் தளவாடங்களும்**

நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த இயந்திர அலகு பல்வேறு கருவிகள் மற்றும் தளவாடங்களது பராமரிப்பைக் கவனித்து வருகிறது. சென்னை, புதுக்கோட்டை மற்றும் கோவை ஆகிய இடங்களில் உள்ள பணிமனைகளில் தளவாடங்களின் பெரும் பழுதுகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. மேலும் சென்னையிலுள்ள பண்டகம் மற்றும் கொள்முதல் கோட்டத்தின் மூலம் இரும்புக் கம்பிகள் வாங்கி, தேவைப்படும் கோட்டத்துக்கு வழங்குதல், கருவிகளும் தளவாடங்களும் மட்டுமின்றி, விஞ்ஞானக் கருவிகள் மற்றும் அவற்றுக்கான உதிரி பாகங்களையும் கொள்முதல் செய்து வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. தங்கள் ஆயுட்காலத்தை முடித்த தளவாடங்களும் மற்றும் வாகனங்களும் பயனற்றதெனக் கழிக்கப்பட்டு காலமுறையில் புதியன வாங்கப்படுகின்றன.

கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் அவற்றின் பராமரிப்பு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டின் நிர்வாகம் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) இயந்திரம் அவர்களின் பொறுப்பில் உள்ளது.

2000-2001 ஆண்டிற்கு ரூ.7.12 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 7]

**11. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்**

1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், டெல்லியிலுள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு இணையாக முழுமை பெற்றுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாட்டில் அமைந்துள்ள சாலைகள், பாலங்களுக்கான கட்டுமானம், பராமரிப்பு தொடர்பான செயல்முறை ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செயல்படுகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் கீழ்க்கண்ட பிரிவுகளில் தன்னிறைவு பெற்ற ஆய்வகங்களைக் கொண்டுள்ளது:

1. மண் மற்றும் அடித்தளப் பொறியியல்
2. கற்கலவை மற்றும் கட்டுமானம்
3. நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள்
4. போக்குவரவு மற்றும் போக்குவரத்து

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப பணிகளை விரைவுபடுத்தவும், கட்டுமானத்தின்போது தரக்கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும், சோதனை செய்வதற்காகவும் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூரில் மண்டல ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இத்துறையின் பணிகளின் தரத்தைக் கண்காணித்து உறுதிபடுத்தும் அலுவலராக, இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் நியமிக்கப்பட்டுள்ளார்.

2000-2001-ல் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு திட்டப் பணிகளுக்காக ரூ.31.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளைத் தீவிரப்படுத்தும் பொருட்டு, தொழில்நுட்பரீதியாக அனுமதிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் தரக்கட்டுப்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில் பாதியை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்குப் பகிர்ந்தளிப்பதின் மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்க முடியும் என்பது தேவையென உணரப்படுகிறது. இது பரிசீலனையில் உள்ளது.

சாலைகள் மற்றும் பாலங்களின் தொழில்நுட்ப விவரங்களையும், புள்ளிவிவரங்களையும் சேகரித்து விவர வங்கி அமைக்கும் பணி

[2000 ஏப்ரல் 7

முன்னேற்ற நிலையில் உள்ளது. பால விவரங்களும், அனைத்துச் சாலைகளின் போக்குவரத்து கணக்கெடுப்பு விவரங்களும் ஏற்கெனவே திரட்டப்பட்டு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையக் கணினியில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. சாலை மேற்பரப்பு ஓடுதளத்தின் தரம், மண் தன்மை முதலான விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின் அனைத்துப் பொறியாளர்களுக்கும் இதர களப் பணி அலுவலர்களுக்கும் பணியிடைப் பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சி நிலையம் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு சாலைத் தொகுப்புத் திட்டப் பிரிவின் திட்ட இயக்குநர் மூலமாக உலக வங்கி உதவியுடன் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இப்பயிற்சி நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

### சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள்

தமிழ்நாடு பல ஆண்டுகளாகச் சுற்றுச்சூழலைப் பராமரித்திடவும், வருவாயைப் பெருக்கிடவும் சாலையோரங்களில் மரங்கள் நடுவதினை முன்னிலைப்படுத்தி வருகிறது. 1998-99-ல் 92 இலட்சம் பனை விதைகளும் 3,18,000 நிழல் தரும் மரக் கன்றுகளும் நடப்பட்டுள்ளன. மரங்களை நல்ல முறையில் பராமரித்து பாதுகாக்கவும், மரங்களின் ஆயுட்காலம் அதிகரிப்பதை உறுதிசெய்யும் பொருட்டும் மரக் கன்றுகளைத் தொகுப்பு வளர்ப்பு முறையில் தொழில்நுட்ப நுணுக்கத்துடன் நடுகின்ற முறை பின்பற்றப்படுகின்றது.

இதுவரை சாலை புருவ ஓரங்களில்தான் மரங்கள் நடப்பட்டு வந்தன. சாலைநில ஓரங்களில் அல்ல. சாலையினை அகலப்படுத்திடும்போது மரங்களை வெட்டுவதில் தவிர்க்க முடியாமல் சுற்றுச்சூழல் பாதிப்பதால் இந்த நடைமுறை வருங்காலங்களில் தவிர்க்கப்படும். இதுவன்றி மழைக் காலங்களில் மரக்கிளைகள் மற்றும் இலைகளிலிருந்து நீர்த்துளிகள் சொட்டுவதால் ஓடுதளம் பாதிக்கப்படுகிறது. அந்த முறை ஆக்கிரமிப்பிற்கும் சுற்றுச்சூழல் தூய்மைப் பாதிப்பிற்கும் வழிகோலுகிறது.

மேற்கண்ட சூழ்நிலையில் வருங்காலங்களில் நெடுஞ்சாலைத் துறை சாலைநில ஓரங்களில் ஒன்று அல்லது இரண்டு வரிசைகளில் சாலையின்



2000 ஏப்ரல் 7]

இரு புறமும் தகுந்த முறையில் இயற்கையாக அணுகுதல் தடைப்படுத்திடும் வகையில் அமையும். ஊராட்சிகள்/இளைஞர் குழுக்கள் ஏனையோரை மரங்கள் நடுவதிலும் பாதுகாப்பதிலும் ஈடுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சாலைப் பணிகளைச் செயல்படுத்திடும் தனியார் முதலீட்டாளர்களும் இதனைக் கடைபிடிக்க மாநில அரசு வலியுறுத்தும். 2000-2001 ஆம் ஆண்டில் நான்கு இலட்சம் நிழல் தரும் மரக் கன்றுகள் நட ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12. மைய அரசின் சாலை நிதித் திட்டப் பணிகள்

பல்வேறு மாநிலங்களில் உள்ள சாலைகளை அபிவிருத்தி மற்றும் மேம்பாடு செய்ய மத்திய அரசால் மத்திய சாலை நிதித் திட்டம் என்னும் திட்டம் உருவாக்கப்பட்டு தற்போது நமது மாநிலத்தில் ரூ.9.10 கோடி மதிப்பீட்டில் 12 பணிகள் வெவ்வேறு முன்னேற்ற நிலையில் உள்ளன.

மைய அரசு, பெட்ரோல் மற்றும் டீசல்மீது லிட்டருக்கு ஒரு ரூபாய் வீதம் மேல்வரி வசூல் செய்யத் தீர்மானித்துள்ளது. இதனால் சுமார் ரூ.5000 கோடி நிதி ஆதாரம் கிடைக்கும். இதில் ரூ.200 கோடி தமிழ் நாட்டிற்கு மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட பெரிய சாலைகளை மேம்பாடு செய்ய ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிதியினைக் கொண்டு போக்குவரத்துச் செறிவு மிகுந்த ஒருவழிப் பாதையாக அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட பெரிய சாலைகள் இருவழிப் பாதையாக மாற்றி அமைக்கப்படும்.

### அரசு சாலைகள் பராமரிப்பு

பொருள்கள் விலை உயர்வு மற்றும் சாலைப் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டு வரும் தொகுதி ஆட்களின் ஊதியம் மற்றும் படிகள் உயர்வு போன்ற காரணங்களினால் சாலைகளைப் பராமரிக்கும் செலவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

[2000 ஏப்ரல் 7

மாண்புமிகு முதலமைச்சர் சட்டமன்றத்தில் மைய தார்க் கலவை இயந்திரம் மற்றும் தளம் பரப்பும் இயந்திரம் ஆகியவைகளைக் கொண்டு தரம் வாய்ந்த சாலைகள் அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தார். இதன் அடிப்படையில் திட்டம்சாரா பணிகளின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால் மாநில சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள் ஆகிய இனங்களில் 1771.44 கி.மீ. சாலைகள் மேம்பாடு செய்திட பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இப்பணிகள் யாவும் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. நவீன தொழில் நுட்ப முறையில் அமைக்கப்பட்ட இச்சாலைகளைப் பொது மக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். இச்சாலைகளின் தரம் மேம்படுத்தப்பட்டு உள்ளது.

### மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு

தற்பொழுது 40814 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகள் ஊரக பொருளாதார மேம்பாட்டிற்கு ஊக்கியாகச் செயல்படுகின்றன. நிதிப் பற்றாக்குறையினால் புதுப்பித்தலில் பின்னடைவு ஏற்பட்டு, குறிப்பிடும் அளவிற்கு பழுது ஏற்பட்டது. 14139 கி.மீ. சாலை மிகவும் பழுதுற்ற நிலையில் உடனடியாக மேம்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இதன் மதிப்பீடு ரூ.600 கோடி. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினை கடன்பத்திரங்கள் வெளியிட்டு, சாலைகளை மேம்படுத்த நிதியினைப் பெருக்கிட தமிழக அரசு ஆணைகள் வழங்கியது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் கடன்பத்திரங்கள் வெளியிட்டு ரூ.400 கோடி நிதி திரட்டியுள்ளது. முதற்கட்டமாக, 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1.53 கோடி மதிப்பில் 4289.81 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளில் மேம்பாட்டுப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. இரண்டாம் கட்டத்தில் ரூ339.27 கோடி மதிப்பில் 8234.09 கி.மீ. சாலைகள் 2000-2001 ஆம் ஆண்டில் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். இவற்றில் ரூ.31.23 கோடி மதிப்புள்ள 623.24 கி.மீ. கரும்புச் சாலைகள் அடங்கும்.



2000 ஏப்ரல் 7]

### IV. சாலைகளும் பாலங்களும்-பகுதி-2 திட்டம் (2000-2001)

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | பணியின் பெயர் | மொத்த மதிப்பீடு | 2000-2001 ஆண்டிற்கான ஒதுக்கீடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **I. மாநில நெடுஞ்சாலைகள்-சாலைகள்** | | |
| 1. | திருச்சி-சிதம்பரம் சாலையில் கி.மீ.113/8-135/4 வரை தேவையான இடத்தில் அகலப்படுத்துதல் (6 கி.மீ.) மா.நெ. 24 | 60.00 | 30.00 |
| 2. | திருச்சி-சிதம்பரம் சாலையில் கி.மீ. 63/8-64/0, 64/0-64/5, 65/0-66/4, 66/8-67/6, 67/7-70/0 வரை அகலப்படுத்துதல் (5.0 கி.மீ.) மா.நெ. 24 | 25.00 | 10.00 |
| 3. | பொள்ளாச்சி-தாராபுரம்-கரூர் சாலையில் கி.மீ. 102/2 - 104/6, 105/0 - 106/6, 107/0 - 107/8, 108/2 - 109/0, 110/0 - 110/4, 111/2 - 113/4 வரை அகலப்படுத்துதல் (8.2 கி.மீ.) மா.நெ. 21 | 30.00 | 15.00 |
| 4. | இராமநாதபுரம்-நைனார்கோயில் அண்டக்குடி-இளையாங்குடி-சிவகங்கை-மேலூர் சாலையில் கி.மீ. 63/0- 69/0 வரை அகலப்படுத்துதல் (6 கி.மீ.) மா.நெ. 34. | 35.00 | 15.00 |
| 5. | பார்த்திபனூர்-கமுதி அருப்புக்கோட்டை சாலையில் கி.மீ. 16/5-20/7 வரை அகலப் படுத்துதல்(4.2 கி.மீ.) மா.நெ. 47. | 25.00 | 10.00 |
| 6. | கடலூர்-விருத்தாசலம் சேலம் சாலையில் கி.மீ. 75/4-93/2 வரை அகலப்படுத்துதல் (17.8 கி.மீ.) மா.நெ. 10. | 70.00 | 30.00 |
| 7. | கடலூர்-விருத்தாசலம்-சேலம் சாலையில் கி.மீ. 93/2-111/0 வரை தேவையான இடத்தில் அகலப்படுத்துதல் (11.0 கி.மீ.) மா.நெ. 10 | 45.00 | 20.00 |
| 8. | மேட்டூர்-பலக்கானத்து-ஒட்டன்சத்திரம்-தாராபுரம் காங்கேயம்-ஈரோடு சாலையில் கி.மீ. 110/755-111/635 வரை அகலப் படுத்துதல்.(0.88 கி.மீ.) மா.நெ.. 37 | 15.00 | 7.00 |
| | மொத்தம் .. .. | **305.00** | **137.00** |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | **II மாநில நெடுஞ்சாலைகள் (பாலங்கள்)** | | |
| 1. | பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் கி.மீ. 25/6-ல் உள்ள வளைவுப் பாலத்தை திரும்பக் கட்டுதல்-மா.நெ. 27 | 15.00 | 8.00 |
| 2. | கடலூர்-சித்தூர் சாலையில் வேலூரில் கி.மீ. 192/0-6 பாலாறு பாலத்தைப் புனரமைத்தல்-மா.நெ. 9. | 50.00 | 20.00 |
| 3. | தொப்பூர் மாநில நெடுஞ்சாலையில் கி.மீ. 163/8-ல் பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 55.00 | 20.00 |
| 4. | ராஜபாளையம்-சங்கரன்கோயில் திருநெல்வேலி சாலையில் கி.மீ. 18/6-ல் பழுதடைந்த முதல் சிறுபாலத்தைத் திரும்பக் கட்டுதல் மா.நெ. 41. | 35.00 | 15.00 |
| 5. | ராஜபாளையம்-சங்கரன்கோயில் திருநெல்வேலி சாலையில் கி.மீ. 18/6-ல் உள்ள பழுதடைந்த இரண்டாவது சிறுபாலத்தைத் திரும்பக் கட்டுதல். மா.நெ. 41 | 20.00 | 10.00 |
| 6. | திருச்செந்தூர்-பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம் தென்காசி-குற்றாலம்-செங்கோட்டை சாலையில் கி.மீ. 116/6-ல் பாலத்தைத் திரும்பக் கட்டுதல். மா.நெ. 40. | 20.00 | 10.00 |
| 7. | மயிலாடுதுறை-திருத்துறைப்பூண்டி சாலையில்(வாளவாய்க்கால்) கி.மீ. 42/0-ல் உள்ள வலுவிழந்த வளைவுப் பாலத்தைத் திரும்பக் கட்டுதல். மா.நெ. 23. | 40.00 | 15.00 |
| | மொத்தம் | **235.00** | **98.00** |

**III மாவட்ட பெரிய சாலைகளில் பழுதடைந்த பாலங்களைப் புனரமைத்தல்/திரும்பக் கட்டுதல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | கடலூர்-திருக்கோயிலூர் அணைக்கட்டு சாலை கி.மீ. 19/6-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 30.00 | 15.00 |
| 2. | கோயம்புத்தூர்-சிறுவாணி சாலை கி.மீ. 6/4-ல் உள்ள சிறுபாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 15.00 | 8.00 |
| 3. | நாகூர் வெட்டார் சாலை கி.மீ. 7/2-ல் உள்ள உயர்மட்ட பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 15.00 | 8.00 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4. | மணப்பாறை குளித்தலை கி.மீ. 34/10-ல் குளித்தலை, காட்டுவாரியின் குறுக்கே அமைந்துள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வளைவுப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலமாகத் திரும்பக் கட்டுதல். | 50.00 | 20.00 |
| 5. | வையம்பட்டி மைலம்பட்டி சாலை கி.மீ. 17/6-ல் அமைந்துள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குழாய் தாம்போகிற்குப் பதிலாக உயர்மட்டப் பாலமாகத் திரும்பக் கட்டுதல். | 15.00 | 8.00 |
| | மொத்தம் | **130.** | **61.00** |

**IV கருவிகளும் தளவாடங்களும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர் (நெ.) (பொது) அலுவலகத்திற்காக ஃப்புல்ஸ்கேப் ஸ்கானர். | 1.00 | 0.50 |
| 2. | ஆறு தொலையச்சு இயந்திரங்கள் கண்காணிப்புப் பொறியாளர் (நெ.) சென்னை, விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி வட்ட அலுவலகங்களுக்காக. | 4.50 | 2.25 |
| 3. | ஏழு படிப்பெருக்கி இயந்திரங்கள் கண்காணிப்புப் பொறியாளர்(நெ.) சென்னை, விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் மதுரை வட்ட அலுவலகங்களுக்காக | 10.00 | 3.00 |
| 4. | தலைமைப் பொறியாளர் (நெ.) (பொது) சென்னை-5 அலுவலகத்திற்காக டி.வி.எஸ்.இ. தமிழ் பிரிண்டர். | 0.50 | 0.25 |
| 5. | கண்காணிப்புப் பொறியாளர்(நெ.) திருநெல்வேலி மற்றும் போக்குவரத்து மற்றும் இயந்திரம் உட்கோட்டம் கோவை அலுவலகங்களுக்காக-உள்ளமைப்பு பேசி வசதிகள் செய்தல். | 2.00 | 1.00 |
| | மொத்தம் | **18.00** | **7.00** |
| | ஆக மொத்தம் | **688.00** | **303.00** |

## V. துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து மேம்பாடு

தமிழ்நாட்டையொட்டியுள்ள சுமார் 1000 கி.மீ. நீளமுள்ள நீண்ட கடற்பகுதியில் சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இரண்டு துறைமுகங்களும், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரு இடைநிலை துறைமுகங்களும், காட்டுப்பள்ளி, எண்ணூர், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப் பகுதி, திருக்கடையூர், பாம்பன், இராமேஸ்வரம், வாலிநோக்கம், புன்னக்காயல், மணப்பாடு, கன்னியாகுமரி, மற்றும் குளச்சல் ஆகிய 12 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள நடுத்தர மற்றும் சிறு துறைமுகங்களை நிர்வகிக்கவும், அதன் செயல்பாடுகளை முறைப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் 1995 ஆம் வருடத்திய தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 4/96) 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தமிழ்நாடு கடல்சார் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு கடல்சார் வாரியம் தொழில் சார்ந்த தேவைக்கு முக்கியத்துவம் அளித்து துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட எண்ணெய்த் தொழிற்சாலைகள்/மின் உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றால் தனியார் துறைமுகங்கள்/தோணித் துறைகள்/மிதவைகள் ஆகியவை நிறுவப்படுவதற்கு ஊக்கம் அளித்து வருகிறது. மற்றும் கட்டுதல் உடைமையாக்குதல்-இயக்குதல் மற்றும் மாற்றுதல் (B.O.O.T) அடிப்படையில் பல்வகைச் சரக்குகளைக் கையாளும் துறைமுகங்களைக் கட்டவும் உத்தேசித்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட 12 சிறு துறைமுகங்களுள் காட்டுப்பள்ளி, எண்ணூர், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப் பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல், மற்றும் மணப்பாடு ஆகியவை தனியார் நிறுவனங்களின் பிரத்தியேக உபயோகத்திற்காக சிறு துறைமுகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான முதலீட்டு வாய்ப்புகளுக்காக துறைமுகக் கொள்கை இவ்வாரியத்தால் உருவாக்கப்பட்டு அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ள காட்டுப்பள்ளி, திருவாளர்கள் வான் ஓமரன் மேக் டாங்க் டெர்மினல் லிமிடெட் (ஓமக்) அவர்களால் திரவ மற்றும் வாயுப் பொருட்கள் அதிக அளவில் கையாளப்படுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் நாகார்ஜீனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் அவர்களால் நிறுவப்படவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளுக்காக



ஆண்டொன்றுக்கு 6.5 மெட்ரிக் டன் குரூட் எண்ணெய் இறக்குமதி செய்வதற்கும் 2.8 மெட்ரிக் டன் சுத்திகரிக்கப்பட்ட பல்வேறு எண்ணெய்ப் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்காகவும் மேற்படி நிறுவனத்தின் பிரத்தியேக உபயோகத்திற்காகக் கடலூர் மாவட்டத்திலுள்ள திருச்சோபுரம் சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனமானது இச்சரக்குகளைக் கையாள இத்துறைமுகத்தில் ஒருமுக நங்கூர மிதவை மற்றும் தோணித்துறை ஆகியவற்றைக் கட்டவுள்ளது. இந்தக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2001 ஆம் ஆண்டு இறுதியில் இத்துறைமுகம் செயல்படத் தொடங்கும். கடலூர் துறைமுகத்தைக் கட்டுதல்-உடைமையாக்குதல்-இயக்குதல் மற்றும் மாற்றுதல் (B.O.O.T.) அடிப்படையில் மேம்பாடு செய்வதற்காக, தலைமைச் செயலாளர் அவர்களால் எதிர்காலத்தில் கையாளப்படவுள்ள சரக்குகளின் போக்குவரத்து விவரங்களை மதிப்பிடுவதற்காகக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு தலைமைப் பொறியாளர் (துறைமுகம்) சிப்காட் அவர்களால் தமிழ்நாடு மின் வாரியத்துடன் கலந்துரையாடி அனைத்து அனல் மின் நிலையங்களுக்காக நிலக்கரியின் தேவை குறித்து மதிப்பீடு செய்யக் கேட்டுக் கொண்டுள்ளது.

திருவாளர்கள் பிள்ளைப்பெருமாநல்லூர் பவர் ஜெனரேட்டிங் கம்பெனி அவர்களின் 330 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு 4.00 இலட்சம் மெட்ரிக் டன் நாப்தா/எல்.என்.ஜி.-யைக் கையாளுவதற்காகத் திருக்கடையூர் சிறு துறைமுகமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துறைமுகம் 2000 ஆம் ஆண்டு இறுதியில் இயங்க ஆரம்பிக்கும்.

திருவாளர்கள் புட்ஸ் பேட்ஸ் மற்றும் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் அவர்களால் நாகப்பட்டினம் துறைமுகத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. முதல் எண்ணெய்க் கப்பல் இத்துறைமுகத்திற்கு 29-5-1999 அன்று வரப்பெற்று 1000 மெட்ரிக் டன் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. மேற்படி நிறுவனம் ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன்கள் சமையல் எண்ணெய்யைக் கையாள உத்தேசித்துள்ளது.

திருவாளர்கள் மெட்ராஸ் ரீபைனரீஸ் லிமிடெட் அவர்கள் பி.ஒய்.3 எண்ணெய் வளப் பகுதியிலிருந்து அவர்களது சுத்திகரிப்பு ஆலைக்கு நேரடியாகக் கச்சா எண்ணெய்யை எடுத்துச் செல்வதற்காக அணுகு

பாலத்துடன் கூடிய தோணித்துறை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர். இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு 4,00,000 மெட்ரிக் டன்கள் கச்சா எண்ணெய்யைக் கையாள உத்தேசித்துள்ளது. ஆரம்பகால கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தோணித்துறை கட்டப்பட்டவுடன் 2001 ஆம் ஆண்டு இறுதியில் இங்கு கச்சா எண்ணெய் கையாளப்படும்.

திருவாளர்கள் நந்து சிப் பிரேக்கிங் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், மும்பை அவர்கள் வாலிநோக்கம் துறைமுகத்தில் 50 கப்பல் உடைப்புத் தளங்களையும், அதன் தொடர்புடைய தொழிற்சாலைகளையும் நிறுவுவதற்காக தமிழ்நாடு கட ல்சார் வாரியம் கொள்கை அளவில் மேற்படி நிறுவனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. சுற்றுப்புறச் சூழல் தடையின்மைச் சான்றிதழ், கிடைக்கப்பெற்றவுடன் மேற்படி நிறுவனத்தால் மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்படும். முதல் 5 வருட காலத்தில் இங்கு உடைக்கப்படும் கப்பல் பாகங்களின் அளவு 3.00 இலட்சம் டன்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குளச்சல் துறைமுகத்தைச் சரக்குப் பெட்டகங்களைக் கையாளுவதற்கான துறைமுகமாக மாற்ற தமிழக அரசு உத்தேசித்துள்ளது. இங்கு சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் துறைமுகம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கு மலேசிய அரசு தங்களது சீரிய ஆர்வத்தினை வெளிப்படுத்தியுள்ளது. மலேசிய அரசின் ஆலோசகர்கள் இதுவரை குளச்சலுக்கு அருகே மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் அறிக்கைகளைச் சேகரித்துச் சென்றுள்ளனர். குளச்சலில் அமைக்கப்படவிருக்கும் துறைமுகத்தின் திறனை மதிப்பிடுவதற்காக அங்குள்ள சாத்தியக்கூறுகளைக் கண்டறிவதற்கான ஆய்வை ஆலோசகர்கள் மூலம் மேற்கொள்ள மலேசிய அரசு பரிந்துரைத்துள்ளது. ஆய்விற்கான செலவு ரூ.4.6 கோடிகள் ஆகும் என்றும் ஆய்வினை முடிக்க ஒன்பது மாத காலம் தேவைப்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2000 மெகாவாட் வேம்பார் பவர் பிராஜக்ட் திட்டத்தின் உபயோகத்திற்காக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் மெட்ரிக் டன் நாப்தா மற்றும் எல்.என்.ஜி. ஆகியவற்றைக் கையாள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்துறைமுகம் 2004 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.



சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம்

பாக் ஜல சந்தியையும் மன்னார் வளைகுடாவையும் கப்பல் போக்குவரத்திற்காக இணைக்கும் வகையில் இராமேஸ்வரத்தில் ஒரு கால்வாய் வெட்டுவதற்கு சேதுசமுத்திரக் கால்வாய் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தை 9ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரு முயற்சி எடுத்து வருகிறார். அதன் பயனாக இத்திட்டத்திற்காக பொது முதலீட்டு வாரியம் (PUBLIC INVESTMENT BOARD) தொழில்நுட்ப பொருளாதார ஆய்வுப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ரூ.10 கோடி வரை செலவாகலாம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மத்திய அரசு ரூ. 4.80 கோடி மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் (2000-2001) நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அத்தியாவசியமான இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு அனைத்து உதவிகளையும் மாநில அரசு அளிப்பதற்கு உறுதியாக உள்ளது.

VI. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வரும் பொறுப்பு தமிழக அரசு நிறுவனமாகிய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குத் தரப்பட்டுள்ளது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின், 40,000 டன் கொள்ளளவுடன் கூடிய குறைந்த ஆழத்தில் செல்லவல்ல பளு தூக்கியுடன் கூடிய பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மூன்று கப்பல்கள் தமிழ்நாடு மின்வாரியத்தின் தேவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. சொந்தமான மூன்று கப்பல்கள் தவிர வேறு பல இந்திய கப்பல் கம்பெனிகளிடமிருந்து வாடைக்குக் கப்பல்கள் பெறப்பட்டு தமிழ்நாடு மின்வாரியத்தின் நிலக்கரித் தேவையை நிறைவேற்றுகிறது.

இக்கழகத்தின் 31-03-1999 முடிய உள்ள மூன்று ஆண்டுகால நிதி நிலை சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | மொத்த இலாபம் (ரூபாய் கோடியில்) | நிகர லாபம்/நஷ்டம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1996-97 | 18.37 | (+) 3.22 |
| 1997-98 | 7.24 | (-) 6.14 |
| 1998-99 | 0.21 | (-) 7.87 |

[2000 ஏப்ரல் 7

1999-2000 ஆம் ஆண்டுகளில் கழகமானது ரூ2.10 கோடி மொத்த இலாபம் ஈட்டும் என்றும் அதில் நிகர நஷ்டம் ரூ.7.08 கோடி இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டு நிகர நஷ்டம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் தமிழ்நாடு மின்வாரியம் கொடுக்க வேண்டிய சரக்குக் கட்டண விகிதத்தில் சொந்தக் கப்பல்களின் தேய்மானத் தொகை மற்றும் வட்டித் தொகையை ஈடு செய்யாததுமேயாகும்.

1999-2000 ஆம் ஆண்டு 1.28 கோடி மெட்ரிக் டன் நிலக்கரியை 16 கப்பல்களின் மூலம் கொண்டுவரப் படவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டதில் கழகமானது 1.004 கோடி மெட்ரிக் டன் நிலக்கரியை 10 முதல் 16 கப்பல்களின் மூலமாக எடுத்து வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடசென்னை மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்களைத் தமிழ்நாடு மின் வாரியம் மேம்பாடு செய்வதால் தேவைப்படும் அதிக அளவு நிலக்கரியினை நிறைவு செய்ய வேண்டி தமிழக அரசால் திரு. எஸ்.வி.எஸ். இராகவன் அவர்கள் தலைமையில் இக்கழகத்தின் செயல்திறன் மற்றும் கழகத்தை மேம்படுத்துவதற்குத் தக்க வழிவகைகளை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவு பாறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தையும் இயக்கிக் கொண்டு வருகின்றது. இப்பொழுது மூன்று படகுகள் இயக்கப்படுகின்றன. அதில் தாமிரபரணி என்ற படகுக்குப் பதிலாக புதிய படகு ஒன்றை வாங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது. ஆண்டுக்கு 15 இலட்சம் பயணிகள் படகுப் போக்குவரத்தில் பயணம் செய்கின்றார்கள்.

*தமிழ்நாடு கடல்சார் பயிற்சிப் பள்ளி*

தமிழ்நாடு கடல்சார் பயிற்சிப் பள்ளியானது, தூத்துக்குடியில் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 16-9-1998 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை இந்தப் பள்ளியில் 2 தொகுதி மாணவர்கள் கடல் மாலுமிகளுக்கான பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். மேலும், சர்வதேச கடல் மாலுமிகளுக்கான தரமான பயிற்சி சான்றிதழ் கண்காணித்தல் 1995 விதிகளின்படி கீழ்க்கண்ட ஒரு வார கால அளவிலான 3 பயிற்சி வகுப்புகள் 24-11-1999 அன்று தொடங்கப்பட்டுள்ளன:



2000 ஏப்ரல் 7]

1. தண்ணீரில் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளப் பயிற்சி
2. தொடக்க முதலுதவிப் பயிற்சி
3. சுயபாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புகள் பற்றிய பயிற்சி

இப்பயிற்சியின் முதல் தொகுதி 30-11-1999 அன்று முடிவுற்றது. மேலும் எண்ணெய்க் கப்பலைப் பற்றி தெரிவித்துக்கொள்ளுதல், தீ தடுப்பு அணைப்பு தொடர்பாக பயிற்சி வகுப்புகள் டைரக்டர் ஜெனரல் ஆப் ஷிப்பிங் அவர்களது ஒப்புதல் கிடைத்ததும் விரைவில் தொடங்கப்படவுள்ளன. கடல்சார் பொறியாளர்களுக்கான வகுப்புகளும் பயிற்சியும் இந்த ஆண்டு தொடங்கப்படவுள்ளன.

## VII. *நிறைவுரை*

ஒரு நாட்டின் அல்லது பகுதியின் முன்னேற்றத்தைக் காண்பதற்கு சாலைகள் கண்கூடான அடையாளமாகும். எனவே, சாலைப் பணிகளின், தரத்தை உயர்த்தி அதன் மூலம் முன்னேற்றப்பாதைக்கு சேவையாக உதவிடும் வகையில் சாலைக் குறித்த கொள்கை வடிவமைப்பில் பல சிறப்பான சீர்த்திருத்தங்களை செய்திட மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. பொதுத் துறை நிறுவனத்தின் முயற்சியிலும், பொது மற்றும் தனியார் இணைந்து செயல்படும் முயற்சியிலும் சாலைக் கட்டமைப்பின் தரத்தை உயர்த்திட மேற்கூறிய கொள்கை முடிவு சிறந்த தூண்டுகோலாகவும் தகுதியை உயர்த்துவதாகவும் அமைந்துள்ளது.

ஒட்டுமொத்த தொழில் துறை மேம்பாட்டிற்கு உகந்த வகையில் மாநில அரசு பல்வேறு திட்டங்களின் மூலம் துறைமுகத் துறையையும் முன்னேற்றிடத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மேற்கூறிய கொள்கைகளை முழுமையாக நிறைவேற்றினால் இப்புத்தாயிரம் ஆண்டில் உன்னத நிலையை நாம் அடைந்திட முடியும்.

சென்னை-600 008